www.tamilarangam.net

# மாபெரும் சதி



மைக்கேல் சேயர்ஸ்

அல்பர்ட் இ. கான்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மாபெரும் சதி

SEELAN BOOKS NORWAY

மைக்கேல் சேயர்ஸ்
அல்பர்ட் இ. கான்

வெளியீடு :

மாநில அமைப்புக் கமிட்டி
இந்தியப் பொதுவுடமைக் கட்சி
(மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்)
தமிழ்நாடு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முதற்பதிப்பு : ஜூலை 1992.

விலை. ரூ: 10-00

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உழைக்கும் மக்களுக்கு வர்க்க உணர்வு ஊட்டி விட்டால், வல்லரசுகளும் அவர்களுக்கு ஒரு தூசு

*அப்பப்பா! எத்தனை வகை பொய்ப் பிரச்சாரங்கள்!!*

முன்னாள் சோசலிச நாடுகள் அப்பட்டமான முதலாளித்துவ நாடுகளாகி பிளவுபட்டுப் போனதால், குதூகலத்தில் இருக்கும் ஏகாதிபத்தியவாதிகளும் அவர்தம் அடிவருடிகளும் செய்கின்ற பித்தலாட்டப் பிரச்சாரங்கள் தான் எத்தனை வகை!

கம்யூனிசம் மனிதனின் சிந்தனையை சிறைப்படுத்துகிறது; மனிதனை நாசப் படுகுழியில் தள்ளுகிறது. ஸ்டாலின் மகா கொடுங்கோலன்; கம்யூனிசம் மரணப் படுக்கையில் வீழ்ந்து விட்டது; முதலாளித்துவமே மனித குலத்தின் ஒரே நம்பிக்கை நட்சத்திரம் என்பது நிரூபணமாகி விட்டது—இவையே இந்தப் பிரச்சாரங்களின் கருப்பொருளாகும்.

ஆனால் பேராசையும் கொலைத் தாகமும் யுத்த வெறியும் பாசிசமும், மனித வாழ்வைச் சூறையாடுவதும், சிந்தனையை சிறை வைக்க அல்ல, சீழே பிடிக்க வைப்பதும் ஏகாதிபத்தியங்கள் தான்; தனியுடைமை சித்தாந்தம்தான். சோசலிசம்தான் மனிதனின் சிந்தனை ஆற்றலையும் உழைப்புத் திறனையும் பன்மடங்கு கட்டவிழ்த்துவிடுகிறது; மார்க்சியம் - லெனினியமே அதன் இயங்கு சக்தி என்ற உண்மைகளை இவ்வரிய நூல் தெளிவாக நிரூபிக்கின்றது.

உலகத்திற்கு சமாதானத்தையும் ஜனநாயகத்தையும் போதிக்கின்ற அமெரிக்காவும் பிற ஏகாதிபத்தியங்களும், இளம் சோசலிச சோவியத் யூனியனை ஒழித்துக் கட்ட என்னென்ன அக்கிரமங்களிலும் இழிதகைமை நடவடிக்கைகளிலும் ஈடுபட்டார்கள் என்பதை புட்டு புட்டு வைக்கிறது கிடைத்தற்கரிய இச்சிறிய நூல்.

ஓர் அயோக்கியனின் அகராதியில் உள்ள அனைத்து நடவடிக்கைகளிலும் ஏகாதிபத்திய சதிகாரர்கள் ஈடுபட்டனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


பத்திரிக்கையாளர், செஞ்சிலுவை சங்கத்தினர் என்ற முகாந்திரங்களில் ஒற்றர்களை சோவியத் நாட்டுக்குள் அனுப்பினார்கள். தூதரகங்கள் சதிக்கூடங்களாக மாற்றப் பட்டன. கம்யூனிஸ்டுக் கட்சிக்குள்ளேயே ஐந்தாம் படை களை உருவாக்கினார்கள். வதந்திகளைப் பரப்பிவிட்டு உள்நாட்டுக் கலகத்தைத் தூண்டினார்கள். பணத்தையும் பதவியையும் காட்டி கூலிப்படைகளை அமைத்து யுத்த பூமியாக்கினர். கலப்படம், கள்ளக்கடத்தல், பதுக்கல், போலி நோட்டுகளை புழங்க விடுதல் ஆகியவைகளை ஊட்டி வளர்த்தார்கள். திடீர் திடீர் என்று சீர்குலைவு களைத் திட்டமிட்டு செய்தார்கள். பத்திரிகைகளிலும் வானொலியிலும் பச்சைப் பொய்களை உண்மைக் கதை களாக உலவ விட்டனர்.

தங்களது பேராசை வெறியையும் ஆக்கிரமிப்பையும், திரைமறைவு சதிகளையும் கபட நாடகங்களையும் நியாயப் படுத்த ஏகாதிபத்திய சதிகாரர்கள் அள்ளித் தெளித்த அவதூறுப் பிரச்சாரங்கள் ஏராளம்!

இரும்புத் திரை நாடு! தீயவர்களின் சாம்ராஜ்யம்! பஞ்சத்தையும் பசியையும் மட்டுமேகம்யூனிசம்வழங்குகிறது! லெனின் ஒரு ஜெர்மன் ஏஜண்டு; சர்வாதிகாரி! மக்கள் மிருகங்களைப் போல பக்குவப்படுத்தப் படுகிறார்கள்! உலகத்திற்கே நாசத்தை விளைவிக்கும் சக்திகள்! இப்படி அடுக்கடுக்கான அவதூறுப் பிரச்சாரங்கள் ஏராளம்! ஏராளம்!!

இத்தனையும் உக்ரைனின் கோதுமை வயல்களையும் சைபீரியாவின் எண்ணெய் வளங்களையும் குறி வைத்து தான்!

ஆனால், இளம் சோசலிச சோவியத் அரசோ, ஏகாதி பத்தியங்கள் ஏவிவிட்ட இந்த ஏவுகணைகளையெல்லாம் தூள் தூளாக்கியது.

ஒன்றா, இரண்டா, பதினான்கு வல்லரசுகள் ஒன்று சேர்ந்து படையெடுத்து வந்தன. ஏற்கெனவே நான்காண்டு களாய் யுத்தத்தில் ஈடுபட்டு களைத்துப் போன ஒரு நாடு, பஞ்சத்தாலும் பசியாலும் வாடி வதங்கிய மக்களைக் கொண்ட ஒரு நாடு, தொழிற்சாலை, நிலங்கள் ஆகிய உற்பத்திச் சாதனங்கள் எல்லாம் ஏகாதிபத்திய யுத்தத்தால்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


பாழடிக்கப்பட்ட ஒரு நாடு பாய்ந்து வந்த ஓநாய்களின் பகடுகளை உடைத்து நொறுக்கியது.

இத்தனைக்குப் பின், ஐந்தாண்டுத் திட்டங்களில் இலக்கிற்கும் மேலாக தொழிலாளர்களும் விவசாயிகளும் உற்பத்தி செய்தார்கள். முணுமுணுப்பின்றி நாட்டுக்காக உற்சாகமாக உழைப்பில் ஈடுபட்டனர்.

டிராட்ஸ்கியவாதிகள், புகாரின்கள் போன்ற ஏகாதிபத்திய உள்நாட்டு ஏஜண்டுகள் செய்த சீர்குலைவு, பிளவு வேலைகளையும் முறியடித்தார்கள்.

இதனூடே, பாசிச இட்லரின் அல்லது பிற ஏகாதிபத்தியங்களின் இன்னுமொரு படையெடுப்பை எதிர்பார்த்து யுத்தத்திற்கு சோவியத் நாட்டைத் தயார் செய்தார்கள்.

'கிரெம்ளினைக் கைப்பற்றுவேன்' என்ற கனவோடு, விரைந்த வெற்றி எனும் எதிர்பார்ப்போடு வந்த இட்லருடைய இராணுவத்தின் இடுப்பொடித்து, பெர்லின் வரை அவர்களை விரட்டிச் சென்று வெற்றிக்கொடி நாட்டியது செஞ்சேனை!

ஆம்! பின்தங்கிய ஒரு விவசாய நாட்டின் பாமர மக்கள்தான், ஐரோப்பா கண்டத்திலேயே பொறுமைக்குப் பேர் போன நாட்டின் மக்கள்தான், இந்த சரித்திர சாதனையை நிகழ்த்தினார்கள்.

இந்தச் சாதனைகளை நிகழ்த்த அம்மக்களை இயக்கிய சக்தி எது?

கம்யூனிச சித்தாந்தமும், போல்ஷ்விக் கட்சித் தலைமையும், லெனின், ஸ்டாலின் ஆகிய தலைவர்களின் அரும்பெரும் ஆற்றலும் அல்லவா அச்சக்தி! பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் வர்க்கப் போராட்டத்தையும் உயர்த்திப் பிடித்ததினால் உருவானதுதான் அச்சக்தி!

'ஏகாதிபத்தியங்கள் காகிதப் புலிகளே,' 'மக்கள், மக்கள் மட்டுமே வரலாற்றை உருவாக்குகிறார்கள்' என்ற மாபெரும் வரலாற்று உண்மைகள் இங்கே நிரூபிக்கப்பட்டன.

உளவாளிகளும், கட்சிக்குள் ஒளிந்து இருந்த ஏஜண்டுகளும் குட்டி முதலாளித்துவ ஊசலாட்டக்காரர்களும் ஈவு இரக்கமின்றி ஒழித்துக் கட்டப்பட்டனர். அதனால்தான், உலக சோசலிச இயக்கத்தின் தளப் பிரதேசம் பாதுகாக்கப்பட்டது. அதனால்தான், உலகெங்கிலும் புரட்சிக் கனல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


மூட்டப்பட்டது; ஏகாதிபத்திய காலனிய ஆதிக்கத்திற்கு சரியான அடி கொடுக்கப்பட்டது.

ஏகாதிபத்திய ஏஜண்டுகளிடமும் கட்சிக்குள் ஒளிந்திருந்த முதலாளித்துவப் பாதையாளர்களிடமும் இரக்கம் காட்டாததற்குத்தான் ஸ்டாலினை கொடுங்கோலன் என்று ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களது எடுபிடிகளும் சித்தரிக்கிறார்கள். ஆனால் அதற்காக நாம் பெருமைப் படுவோம்.

ஸ்டாலின் எப்பேர்ப்பட்ட மகா புருஷன் என்பதை இந்நூலைப் படித்தவர்கள் நிச்சயம் உணருவார்கள். ஏனென்றால் ஏகாதிபத்தியத்தின் மாபெரும் சதியை முறியடித்து, இளம் சோசலிச நாட்டை பாதுகாத்து, வாலிபனாக வளர்த்தது அவரது தலைமையல்லவா?

அன்னா லூயி ஸ்ட்ராங் என்ற அம்மையார் எழுதிய 'ஸ்டாலின் சகாப்தம்' என்ற நூலையும் சேர்த்துப் படிக்க வேண்டுமென்று வாசகர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

மைக்கேல் சேயர்ஸ், அல்பர்ட் இ. கான் என்ற இரு அமெரிக்கர்கள் எழுதிய 'மாபெரும் சதி' எனும் இந்நூல் ஒரு மர்ம நாவல் போல விறுவிறுப்பாக செல்கிறது. ஆனால் இந்நூலில் குறிப்பிடப்பட்டிருக்கும் விபரங்கள் அனைத்தும் வரலாற்று உண்மைகளை அடிப்படையாகக் கொண்டவையே.

சோசலிசத்தைக் கட்டியமைப்பது எப்படிப்பட்ட கடுமையான பணி என்பதையும் அதற்குப் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை எவ்வளவு கறாராக கையாள்வது அவசியம் என்பதையும் புரிந்து கொள்ள இந்த இரு நூல்களும் நிச்சயம் உதவும்!

புரட்சிகர வாழ்த்துக்கள்

இவண்,

மாநில அமைப்புக் கமிட்டி,
இந்தியப் பொதுவுடமைக் கட்சி
(மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்)
தமிழ்நாடு.

ஜூலை, 1992

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பெட்ரோகிராடில் ஒற்றன்

1917-ஆம் ஆண்டு கோடை காலத்தில், ரஷ்யப் புரட்சி என்னும் எரிமலை குமுறிக் கொண்டிருந்தது. அப்பொழுது, மேஜர் ரெயிமாண்டு ராபின்ஸ் என்ற அமெரிக்கன் பெட்ரோகிராடுக்கு வந்தான். வெளிப்படையாக அவன் தன்னை அமெரிக்க செஞ்சிலுவைச் சங்கத் துணைத் தலைவன் என்று சொல்லிக் கொண்டான். ஆனால், உண்மை வேறு. அவன், அமெரிக்க இராணுவ ஒற்றர் படையைச் சேர்ந்தவன். ரஷ்யா, ஜெர்மனியோடு நீடித்துப் போர் புரிந்து கொண்டிருக்க வேண்டும் என்பதே, அமெரிக்க அரசின் கொள்கை. அக்கொள்கையை நிறை வேற்றுவதற்காக, அமெரிக்காவிலிருந்து வந்திருந்த ஒற்றர் களில் ராபின்ஸும் ஒருவன்.

உணவும் போர்க் கருவிகளும் இல்லாமல் நலிந்து கொண்டிருந்த ரஷ்ய இராணுவம், ஜெர்மனியின் தாக்கு தலை எதிர்த்து நிற்கமுடியாமல் திணறியது. ஜார் ஆட்சி, போரில் தாக்குண்டும், உள்ளூரச் செல்லரித்தும் வீழ்ச்சி யுற்றது. மார்ச்சு மாதத்தில் இரண்டாவது ஜார் நிக் கோலஸ் ஆட்சிப் பீடத்திலிருந்து தூக்கி எறியப்பட்டான். இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட்டது. ''சமாதானம், உணவு, நிலம்'' என்ற புரட்சிகர முழக்கங்கள் விண்ணதிர ஒலித்தன. போரில் அடிபட்டு, பஞ்சத்தில் மெலிந்த ரஷ்ய மக்களின் உடனடி விருப்பத்தையும், அவர் களுடைய உள்ளத்தில் உறைந்திருந்த நெடுங்கால விருப்பங்களையும், அம்முழக்கங்கள் எதிரொலித்தன.

ரஷ்ய அணிவகுப்பு எந்நேரத்திலும் நிலைகுலைந்து விடலாமென்று, பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா, ஆகிய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


நாடுகள் எதிர்பார்த்தன. ரஷ்யப் படைகள் தோற்று ஓடிவிட்டால், உக்ரேன் கோதுமையும், டோனட்ஸ் நிலக் கரியும், காக்கேசிய எண்ணெயும், இன்னும் கணக்கில் அடங்காத செல்வங்களும் ஜெர்மனியின் கையில் சிக்கி விடுமே என்று அவை அஞ்சின.

நாற்பத்தி மூன்று வயதுள்ள ராபின்ஸ், சொல் வன்மையும் செயல் திறமையும் அமையப் பெற்றவன். புகழ் பெற்ற அரசியல்வாதி. சிகாகோவில் அவன் நடத்தி வந்த இலாபகரமான தொழிலை உதறித் தள்ளி விட்டு, ''சமூக சேவையை'' மேற்கொண்டவன். ரூஸ்வெல்ட் கட்சியைச் சேர்ந்தவன். தீவிர மிதவாதி. அமெரிக்க செஞ்சிலுவைச் சங்கத் தலைவனாக அப்பொழுது ரஷ்யாவில் இருந்தவன், கர்னல் வில்லியம் பாய்ஸ் தாம்சன். ராபின்ஸ், அவனது பிரதம உதவியாளனாக நியமிக்கப்பட்டான். தாம்சன், ரிப்பப்ளிக் கட்சியைச் சேர்ந்தவன். ரஷ்ய சுரங்கங்களில் அவனுக்கு ஏராளமான பங்குகள் இருந்தன. எனவே, ரஷ்ய விவகாரங்களில் அவனுக்கு மிகுந்த அக்கறை உண்டு. அவன் எதையும் தெளிவாக ஆராய்ந்து அறிபவன். ரஷ்யாவில் தோன்றிய புதிய நிலைமையைச் சமாளிக்க, அமெரிக்கா கையாளும் பழைய முறை பயனளிக்காது என்பதை அவன் நன்றாக உணர்ந்திருந்தான்.

ரஷ்யாவில் அப்பொழுது அமெரிக்கத் தூதனாக இருந்தவன் டேவிட் பிரான்சிஸ். அவன் மிசோரி கவர்ன ராக இருந்தவன். புரட்சிக் கொந்தளிப்பின் மத்தியில் அவன் நரைத்த மயிரும் பழங்காலத்து ஆடைகளும் உடுத்தி, பத்தாம் பசலி ஆசாமியைப் போல காணப் பட்டான். பிரான்சிஸ்க்கு ரஷ்ய அரசியலைப் பற்றி ஒன்றும் தெரியாது. ஆனால் வர்க்க நலனில் மிகுந்த சிரத்தையுள்ளவன். பெட்ரோகிராடில் அமெரிக்கத் தூதரக காரியாலத்தில் தளகர்த்தர்களும் கோடீஸ்வரர்களும் பேசுகிற வெட்டிப் பேச்சிலிருந்து, ரஷ்ய அரசியல் சித்தி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ரத்தை அவன் தன் உள்ளத்திரையில் வரைந்து வைத்திருந்தான். ரஷ்யக் கிளர்ச்சிக்குக் காரணம் ஜெர்மன்சதி என்றும், ரஷ்யப் புரட்சிக்காரர்கள் வெளிநாட்டு ஒற்றர்கள் என்றும், எனவே, கிளர்ச்சி விரைவில் நசித்துப் போகும் என்றும் அவன் நினைத்தான்.

1917 ஏப்ரல் 21-இல், பிரான்சிஸ், அமெரிக்க அரசாங்கக் காரியதரிசி லான்சிங் என்பவருக்குக் கீழ்க்கண்ட தந்தி அடித்தான்:

"தீவிர சோஷலிஸ்ட் அல்லது அனார்கிஸ்ட் என்று சொல்லப்படுகிற லெனின் பலாத்காரச் சொற்பொழிவுகள் செய்கிறார். அரசாங்கம் பலமடைந்து வருகிறது. அவரை வேண்டுமென்றே விட்டு வைத்திருக்கிறேன். தகுந்த சமயத்தில் நாடு கடத்தி விடுவேன்."

ஜார் வீழ்ச்சிக்குப் பின், புரட்சி வெள்ளம் கரைபுரண்டோடத் தொடங்கியது. ஜார் இராணுவம் சிதைந்து கொண்டிருந்தது. பிரதம மந்திரி கெரன்ஸ்கி கிழக்குப் போர் முனையில் சுற்றுப் பிரயாணம் செய்தான். "வெற்றி ஜனநாயகம் சமாதானம் ஆகியவை இதோ நெருங்கி விட்டன" என்று சொல்மாரி பொழிந்தான். பட்டினியையும் குளிரையும் வெறும் பேச்சினால் தவிர்க்க முடியுமா? வெற்றுரைகளால் வீரர்களை ஊக்க முடியுமா? முடியவில்லை. ஆயிரக் கணக்கில் அவர்கள் இராணுவத்தை விட்டு வெளியேறினர்.

வீடு திரும்பிய வீரர்கள் தொழிலாளரையும் விவசாயிகளையும் சந்தித்தனர். அவர்கள் தாங்களாகவே புரட்சிக் கமிட்டிகளை அதாவது சோவியத்துகளை அமைத்தனர். "சமாதானம், உணவு, நிலம்" என்ற கோரிக்கைகளை அரசாங்க அலுவலகத்திற்கு விடுத்தனர். அப்பொழுது ராபின்ஸ் பெட்ரோகிராடை அடைந்தான். வாழ்க்கையில் சலிப்புத் தட்டிய மக்களின் கூட்டம், கரு மேகம் போன்று எங்கும் பரவிக்கிடப்பதைக் கண்டான். போர் முனைகளில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இருந்து வந்த போர் வீரரின் பிரதிநிதிகள், உடனே போர் நிறுத்தப்பட வேண்டுமென்று ஆர்ப்பாட்டம் செய்தனர். லெனின் தலைமை தாங்கி நடத்திய போல்ஷ்விக் கட்சி, கெரன்ஸ்கியால் சட்ட விரோதமாக்கப்பட்டிருந்தது. எனவே, அது தலைமறைவாக வேலை செய்து வந்தது. எனினும், அதன் செல்வாக்கு நாளுக்கு நாள் வளர்ந்தோங்கியது.

ரஷ்யாவைப் பற்றிப் பிரான்சிஸ் கொண்டிருந்த கருத்துக்களை ராபின்ஸ் ஏற்றுக் கொள்ள மறுத்தான். எனவே, அவன் நிலைமையை நேரில் கண்டறிய விரும்பினான். தொழிற் சாலைகளையும், தொழிற் சங்கங்களையும், இராணுவப் பாசறைகளையும், கிழக்குப் போர் முனையின் அகழிகளையும் பரிசீலனை செய்தான். மக்களை நேரில் கண்டு பேசினான். ரஷ்யா முழுவதும் ஒரு வாதக் கழகமாக மாறியிருந்ததைக் கண்டான். தொன்று தொட்டு ஊமையாக இருந்து வந்த மக்கள் பேசத் தொடங்கினர். அரசாங்க அதிகாரிகள், நேசநாட்டுப் பிரச்சாரகர்கள், போல்ஷ்விக்குகள், மார்க்சியவாதிகள், சமூகப் புரட்சிக்காரர்கள், மென்ஷ்விக்குகள் ஆகிய அரசியல் கட்சியினர் ஒரேகாலத்தில் சொற்பொழிவாற்றினர். போல்ஷ்விக்குகளின், அதாவது கம்யூனிஸ்டுகளின் பேச்சுத்தான் மக்களுக்குப் பிடித்திருந்தது. போர் வீரரும் தொழிலாளரும் விவசாயிகளும் போல்ஷ்விக்குகள் சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

''நாங்கள் எதற்காகப் போரிடுகிறோம்? என்பதை விளக்கிக் கூறுங்கள். ஏகாதிபத்தியத்தை நிலை நிறுத்தவா? அல்லது மக்களின் விடுதலைக்காகவா? முதலாளிகளின் கொள்ளை லாபத்திற்காகவா? அல்லது மக்களின் நல்வாழ்வுக்காகவா? போரிடுவதால் மக்கள் வெற்றிக்குப் பாடுபடுகிறோம் என்பதாக நீங்கள் உறுதி கூறினால், உற்சாகத்துடன் உயிருள்ளவரை போரிடுவோம். நிலம் உழுபவர்களுக்கும், ஆலைகள் தொழிலாளருக்கும்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆதிக்கம் சோவியத்துகளுக்கும் என்று நீங்கள் தெளிவாகச் சொல்லுங்கள். அப்படியானால் இப் போர், மக்களின் போர் என்று உணர்ந்து நாங்கள் வீரப் போர் புரிவோம்'' என்று ரஷ்யப் போர் வீரன் ஒருவன் மாபெரும் கூட்டத்தில் பேசியதை ராபின்ஸ் கேட்டான். மேடைப் பேச்சாளன் ராபின்ஸ், கூட்டம் நிறைந்த ஆலைகளிலும் அகழிகளிலும் எழுந்து நின்று பேசுவான். அமெரிக்க ஜனநாயகத்தைப் பற்றியும், பிரஷ்ய இராணுவ ஆட்சியின் ஆபத்தைப்பற்றியும் அவன் அடிக்கடி பேசுவான். அதேசமயத்தில் ராபின்ஸ் செஞ்சிலுவை வேலையையும் கவனித்து வந்தான். பட்டினியால் வாடுகின்ற மக்களுக்கு உணவளிப்பது அவன் வேலை. வால்கா நதிக்கரையில் ஏராளமான தானியம் வீணாகிக்கொண்டிருந்ததைக் கண்டான். போக்குவரத்து வசதி இல்லாததால், அவசியமான இடங்களுக்குத் தானியம் அனுப்ப முடியவில்லை. சீர்குலைந்திருந்த போக்குவரத்துச் சாதனங்களைக் கெரன்ஸ்கி செம்மைப் படுத்தவில்லை. தானியம் கொண்டுபோவதற்காக, ராபின்ஸ் கெரன்ஸ்கி அரசிடம் படகுகள் கேட்டான், பலனில்லை. அந்நிலையில், விவசாய (சங்கத்) தலைவன் படகுகள் கொடுத்து உதவினான். மறுநாள் மாஸ்கோவுக்கும் பெட்ரோகிராடுக்கும் தானியம் படகுகளில் ஏற்றிச் செல்லப்பட்டது. கெரன்ஸ்கி அரசின் பலவீனத்தையும், சோவியத்துகளின் திறமையையும் ராபின்ஸ் நன்கறிந்தான்.

ரஷ்யக் கிராமம் ஒன்றில், அரசாங்க அதிகாரிகளைப் பார்க்க விரும்பினான்.

'' நீங்கள் கிராம சோவியத் தலைவரைப் பார்ப்பது தான் நலம்'' என்றனர் விவசாயிகள்.

''சோவியத் என்றால் என்ன?'' என்று ராபின்ஸ் விவசாயிகளைக் கேட்டான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


"தொழிலாளர், விவசாயிகள், போர் வீரர் ஆகியோரின் பிரதிநிதிகள் அடங்கிய சபை'' என்றனர்.

"அது ஒரு புரட்சி ஸ்தாபனம் அல்லவா? நான் அரசாங்க அதிகாரிகளைத்தான் கண்டு பேசவேண்டும்,'' என்றான்.

"ஓ! அரசாங்கமா? அது உயிரோடிருப்பதாகத் தெரியவில்லையே! நீங்கள் சோவியத் தலைவரைப் பார்ப்பது தான் நலம்'' என்று கூறி விவசாயிகள் சிரித்தனர்.

சுற்றுப் பிரயாணம் முடிந்து, பெட்ரோகிராடு திரும்பியதும், ராபின்ஸ், கர்னலுக்கு ஒரு அறிக்கை சமர்ப்பித்தான்:

"கெரன்ஸ்கி அரசாங்கம், படைபலத்தால் நிற்கும் பொம்மை அரசாங்கம்'' என்று அதில் குறிப்பிட்டிருந்தான்.

நாட்டின் உண்மையான ஆதிக்கம் சோவியத்துகளின் கையிலிருந்தது. ஆனால் கெரன்ஸ்கியோ, ஜெர்மனியோடு தொடர்ந்து போர்புரிய எண்ணினான். எனவே, கெரன்ஸ்கி பதவியிலிருக்க உதவுவதே அமெரிக்க நலனுக்கு உகந்தது என்றும், ரஷ்யா ஜெர்மனியின் ஆதிக்கத்திற்குள்ளாவதை நேச நாட்டினர் தடுக்க விரும்பினால், சோவியத்துகளுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளும்படி கெரன்ஸ்கியை நிர்பந்திக்க வேண்டும் என்றும், இச்செய்தியை உடனடியாக அமெரிக்க அரசாங்கத்திற்குத் தெரிவிக்கவேண்டுமென்றும் ராபின்ஸ் கருதினான்.

புரட்சிக்குப் பேராபத்தாயிருப்பது ஜெர்மனிதான் என்றும், அதனை ஒழிப்பதே முதல்வேலை என்றும் வலியுறுத்த, நாடெங்கும் உடனடியாகப் பிரசாரம் செய்ய ராபின்ஸ் திட்டமிட்டான். தன் அறிக்கையையும் திட்டத்தையும் தாம்சன் அப்படியே ஏற்றுக்கொண்டதைக் கண்ட ராபின்ஸ் மகிழ்ச்சியுற்றான். பிரசார நிதியும் அனுமதியும் பெற வாஷிங்டனுக்குத் தந்தியடிப்பதாக,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தாம்சன் வாக்களித்தான். உடனே வேலையைத் தொடங்கும்படி அவன் சொன்னதும், ''பணம் எங்கிருந்துவரும்?'' என்று ராபின்ஸ் கேட்டான்.

தாம்சன் : ''என் சொத்திலிருந்து பத்து லட்சம் இதற்காக ஒதுக்குகிறேன். ஆனால் இதன் விளைவு என்ன என்பதை நீர் அறிவீரா?''

ராபின்ஸ் : ''அறிவேன். ஆனால் நிலைமையைச் சமாளிக்க இதுதான் ஒரே வழி.''

தாம்சன் : ''உமக்கு இதனால் என்ன நேரிடும் என்பது தெரியுமா?''

ராபின்ஸ் : ''என்ன நேரிடும்?''

தாம்சன் : ''நாம் தோல்வியுற்றால் நீர் சுடப்படுவீர்.''

ராபின்ஸ் : ''மேற்குப் போர்முனையில் ஒவ்வொரு நாளும் எத்தனையோ வாலிபர்கள் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள். நான் சுடப்பட்டால் நீங்கள் தூக்கிலிடப்படுவீர்கள்.''

தாம்சன் : ''நீர் சொல்வது நடக்கக் கூடியதுதான்.''

## எதிர்ப்புரட்சி

ஈரம் தோய்ந்த குளிர்காற்று, பால்டிக் கடலிலிருந்து வீசியது. சூல்கொண்ட கருமேகம் நகரின் மேல் தவழ்ந்து சென்றது. ரஷ்ய அரசியல் நிகழ்ச்சிகள் ஒரு புதிய கட்

---

குறிப்பு : மேஜர் ராபின்ஸ், கர்னல் தாம்சன் ஆகிய இருவருக்கும் நடந்த பேச்சும், மற்றும் இந்நூலில் வரும் பேச்சு வார்த்தைகளும், அரசாங்க ஆவணங்களிலிருந்து எடுக்கப்பட்டவை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


டத்தை நெருங்கின. இடைக்கால அரசாங்கத்தின் பிரதம மந்திரி கெரன்ஸ்கி பயத்தினால் நடுங்கிக்கொண்டிருந்தான்.

''நான் என்ன செய்யவேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்கள். ஒருபுறம் நேச நாட்டினரைத் திருப்தி செய்ய, மேற்கு ஐரோப்பிய மிதவாதத்தைக் கட்டாயமாக மேற்கொள்ள வேண்டியதிருக்கிறது. மறுபுறம், நான் உயிருடனிருக்க ரஷ்ய சோஷலிஸத்தைப் புகழ்ந்து பாட வேண்டியதிருக்கிறது'' என்று கெரன்ஸ்கி ராபின்ஸிடம் கத்தினான். அவன் கலக்கமுற்றதற்குக் காரணம் உண்டு. அவனை ஆதரித்த ஆங்கில, பிரெஞ்சு அதிகாரிகளும், ரஷ்ய கோடீஸ்வரர்களும், அவனைப் பதவியிலிருந்து கீழே தள்ளச் சதி செய்தனர்.

பிரிட்டனும் பிரான்சும், புரட்சியை நசுக்க உதவி செய்ய மறுத்தால், ஜெர்மனியரின் உதவியை நாடப் போவதாக ரஷ்ய முதலாளிகள் வெளிப்படையாகப் பய முறுத்தினர்.

பிரிட்டிஷ் அரசியல் தந்திர இலாகாத் தலைவன், ரஷ்ய முதலாளிகளைச் சந்தித்துப் பேசிவிட்டு, லண்டன் திரும்பினான். இராணுவ சர்வாதிகாரந்தான் ரஷ்யப் பிரச்னையைத் தீர்ப்பதற்குள்ள ஒரே வழி. ரஷ்ய சர்வாதிகாரியாக இருக்கத் தகுதியுள்ளவர்கள் இருவர். ஒருவன் அட்மிரல் கோல்சக். மற்றொருவன் ஜெனரல் கார்னிலோவ் என்று அவன் அறிக்கை சமர்ப்பித்தான்.

ரஷ்யா, போரிலிருந்து விலகாதிருக்கச் செய்யவும், புரட்சியை அடக்கவும், ரஷ்யாவிலுள்ள ஆங்கிலோ—பிரெஞ்சுச் சொத்துக்களைக் காப்பாற்றவும், கார்னிலோவ் தான் தகுதியுள்ளவன் என்பது பிரிட்டிஷ், பிரெஞ்சு அரசாங்கங்களின் கருத்து. எனவே, அவை அவனை ஆதரித்தன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1917 செப்டம்பர் 8-ஆம் தேதி, பிரிட்டிஷ், பிரெஞ்சு உதவியோடு, கார்னிலோவ், இடைக்கால அரசாங்கத்தைக் கவிழ்த்துவிட்டு, கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் நிலை நாட்டப்போவதாகப் பிரகடனம் விடுத்தான். 'ரஷ்ய வீரன் கார்னிலோவ்' என்ற தலைப்பில் ஆயிரக்கணக்கான துண்டுப் பிரசுரங்கள், மாஸ்கோ, பெட்ரோகிராட் வீதிகளில் திடீரென்று தோன்றின. ''இந்த வெளியீடுகள் பிரிட்டிஷ் இராணுவக் கோஷ்டியின் செலவில் அச்சிடப்பட்டு, பெட்ரோகிராடிலுள்ள பிரிட்டிஷ் தூதரக அலுவலகத்திலிருந்து, பிரிட்டிஷ் இராணுவ அதிகாரி, ஜெனரல் நாக்சின் ரயில் வண்டியில் மாஸ்கோவுக்குக் கொண்டு வரப்பட்டன'' என்று, 'நெருக்கடி' என்ற தனது நூலில் கெரன்ஸ்கி குறிப்பிட்டிருக்கிறான்.

இருபதாயிரம் போர்வீரர் பெட்ரோகிராடுமீது படையெடுக்க வேண்டுமென்று கார்னிலோவ் கட்டளையிட்டான். பிரிட்டிஷ், பிரெஞ்சு இராணுவ அதிகாரிகள், ரஷ்ய உடையில் கார்னிலோவ் படையோடு சென்றனர். தான் ஏமாற்றப்பட்டதைக் கண்டு கெரன்ஸ்கி திடுக்கிட்டான். லண்டனிலும் பாரிசிலும் அவனைப் பெரிய ஜனநாயகவாதி என்றும் ரஷ்ய வீரன் என்றும் புகழ்ந்த நேச நாடுகளின் பிரதிநிதிகள் அவனைக் கவிழ்க்கச் சதி செய்தனர் என்பதையுணர்ந்து கெரன்ஸ்கி தத்தளித்தான்.

தாய்நாட்டைப் பாதுகாக்க, பெட்ரோகிராடு சோவியத் ஒரு படை திரட்டியது. பால்டிக் கடற்கரையிலிருந்து விடுபட்ட மாலுமிகளும், போர்க்களத்திலிருந்து திரும்பிய போர்வீரர்களும் திரண்டு வந்து ஆயுதம் தாங்கிய தொழிலாளருடன் சேர்ந்துகொண்டனர். வீதிகளில் பல அரண்கள் தோன்றின. பீரங்கிகளும் இயந்திரத் துப்பாக்கிகளும் சேகரிக்கப்பட்டன. கைக்குண்டுகளையும் துப்பாக்கிகளையும் ஏந்திச் செங்காவலர் சேறுபடிந்த தெருக்களில் காவல் செய்து நின்றனர். கார்னிலோவின் இராணுவம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


நான்கு நாட்களுக்குப் பிறகு நிலைகுலைந்தது. அவனுடைய சேனையில் புரட்சிக்காரர் அமைத்திருந்த இரகசிய இராணுவக் கமிட்டி, அவனைக் கைது செய்தது. அவனுடைய வெற்றிச் செய்தியைக் கேட்கக் காத்திருந்த நாற்பது ரஷ்ய ஜெனரல்கள் ஏமாற்றமடைந்தனர். அவர்களும் கைது செய்யப்பட்டனர். கெரன்ஸ்கியின் உதவி மந்திரி போரிஸ் சாவிங்கோவும், சதியில் கலந்து கொண்டதற்காகப் பதவியிலிருந்து விலக்கப்பட்டான். இடைக்கால அரசாங்கம் சரிந்து விழுந்தது.

''கார்னிலோவ் தோற்றுவிட்டான். காரணம் பிழையான ஆலோசனை, தவறன செய்திகள்; ஒழுங்கீனமான முறைகள்; கால தாமதம் ஆகியவையே. அவன் நல்ல போர் வீரன்; தேச பக்தன். ஆனால், அனுபவமில்லை.........'' என்று பிரான்சிஸ் அமெரிக்க அரசாங்க இலக்காவுக்குத் தந்தி அடித்தான்.

## புரட்சி

மின்னல் வேகத்தில் சம்பவங்கள் நிகழ்ந்தன. தலைமறைவாயிருந்த லெனின் புரட்சிக்கு ஒரு புதிய முழக்கம் கொடுத்தார். ''முழு அதிகாரமும் சோவியத்துகளுக்கே! இடைக்கால அரசாங்கம் ஒழிக!'' என்பதே அப் புதிய முழக்கம்.

''தொழிலாளர், போர்வீரர் காங்கிரசில், தங்கள் செல்வாக்கை நிலைநாட்ட, போல்ஷ்விக்குகள் முயலுகிறார்கள். காங்கிரஸ் இம்மாதம் கூடுகிறது. அவர்கள் கொள்கையைக் காங்கிரஸ் ஏற்றால், புதிய அரசாங்கம் தோன்றுவது, ரஷ்யா ஜெர்மனியோடு சமாதானம் செய்து கொள்வதுபோன்ற பேராபத்துகள் ஏற்படலாம். எங்களால் இயன்றதைச் செய்கிறோம். உடனடியாக உதவி தேவை. இல்லையேல், முயற்சிகள் அனைத்தும் வீணாகும்'' என்று அக்டோபர் 7-ம் தேதி, தாம்சன் வாஷிங்டனுக்குத் தந்தி அடித்தான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ரஷ்யாவிலிருந்த நேச நாட்டு இராணுவத் தலைவர்களின் இரகசியக் கூட்டம், நவம்பர் 3-ம் தேதி, கர்னல் தாம்சன் காரியாலயத்தில் நடந்தது. போல்ஷவிஸத்தைத் தடுக்க என்ன செய்யலாம் என்று அவர்கள் ஆலோசித்தனர். இடைக்கால அரசாங்கம் கையாலாகாதது என்று பிரெஞ்சு ஜெனரல் நீசெல் கோபமாகப் பேசினான். பிரிட்டிஷ் ஜெனரல் ஆல்பிரட் நாக்ஸ், கார்னிலோவை ஆதரிக்காததற்காக அமெரிக்காவைக் கடிந்தான். "கெரன்ஸ்கியையும் அவன் அரசாங்கத்தையும் நிலை நிறுத்துவதில் எனக்குச் சிரத்தை இல்லை. அது திறமையற்றது. ஆனால், நமது நன்மைக்காக நீங்கள் கார்னிலோவுக்கு ஆதரவு அளித்திருக்கவேண்டும்," என்று அவன் ராபின்ஸை நோக்கிக் கத்தினான். "அது சரிதான் ஜெனரல்! நீங்கள் கார்னிலோவை ஆதரித்தீர்களே என்ன ஆயிற்று?" என்றான் ராபின்ஸ்.

ஜெனரல்: "இன்று ரஷ்யாவுக்குத் தேவை இராணுவ சர்வாதிகாரந்தான். இந்த மக்களை வாள் முனையில்தான் ஆளவேண்டும்.

ராபின்ஸ்: "ஜெனரல்! உங்கள் எண்ணத்திற்கு மாறான சர்வாதிகாரம் விரைவில் ஏற்படலாம்."

ஜெனரல்: "இந்த டிராட்ஸ்கி லெனின் போல்ஷ்விக் பித்தலாட்டத்தையா குறிக்கிறீர்கள்! அந்தக் கொடுமைகளையா!"

ராபின்ஸ்: "ஆம், அவற்றைத்தான்."

ஜெனரல்: "ராபின்ஸ்! நீங்கள் போர் வீரனல்ல, இராணுவத்தைப்பற்றி உங்களுக்கு ஒன்றும் தெரியாது. எந்த விசயத்தில் என்னசெய்யவேண்டும் என்பது இராணுவ அதிகாரிகளுக்குத்தான் தெரியும். நாங்கள் அவர்களைச் சுட்டுத் தள்ளுவோம்."

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


ராபின்ஸ்: ''ஆம், அவர்கள் உங்களிடம் சிக்கினால் தானே. ஜெனரல்! எனக்கு இராணுவத்தைப் பற்றி ஒன்றும் தெரியாது என்பது உண்மைதான். ஆனால், மக்களைப் பற்றிக் கொஞ்சம் தெரியும். என் வாழ்நாள் முழுதும் அவர்கள் மத்தியில் உழைத்திருக்கிறேன். ரஷ்யா வைச் சுற்றிப் பார்த்திருக்கிறேன். இது மக்கள் பிரச்சினை என்பதே என் கருத்து.''

கர்னல் தாம்சன் அலுவலகத்தில் நடந்த கூட்டம் முடிவடைந்த நான்காவது நாள், அதாவது, 1917 நவம்பர் 7–ஆம் தேதி போல்ஷ்விக்குகள் ரஷ்ய அதிகாரத்தைக் கைப்பற்றினர்.

உலகை உலுக்கிக் குலுக்கிய போல்ஷ்விக் புரட்சி ஓர் அற்புதம்! உலக வரலாற்றில், அது மிக அமைதியான புரட்சி. போர் வீரர்கள் சிறு சிறு கூட்டங்களாகத் தலை நகரில் சுற்றித் திரிந்தனர். ஒன்றிரண்டு வெடிச் சத்தம் எங்கோ கேட்டது. கடைசியாக வெளிவந்த அரசாங்கப் பிரகடனங்களையும் வேண்டுகோள்களையும், வாசித்துக் கொண்டும், விவாதித்துக்கொண்டும் ஆண்களும் பெண்களும் தெருக்களில் கூடினர். வதந்திகள் உலாவின. கார்கள் அங்குப் இங்கும் ஓடின. பெட்ரோகிராட் பிற்போக்குப் பத்திரிகைகள் கூட புரட்சி நிகழ்ந்ததாகக் கூறவில்லை. எவ்வித எதிர்ப்பும் இல்லாமலே, டெலிபோன், தந்தி, வங்கிகள், அரசாங்க அலுவலகம் ஆகியவற்றின் நிர்வாகத்தை, போல்ஷ்விக்குகள் கை பற்றினர்.

கெரன்ஸ்கியின் அரண்மனை முற்றுகையிடப்பட்டது. அமெரிக்கத் தூதரின் காரில் கெரன்ஸ்கி தப்பி ஓடி விட்டார்.

''எல்லாவற்றையும் போல்ஷ்விக்குகள் கைப்பற்றிக் கொண்டதாகத் தெரிகிறது. மந்திரிகளின் கதி என்ன ஆயிற்றென்றே தெரியவில்லை,'' என்று அன்று மாலை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



6 மணிக்கு பிரான்சிஸ் அமெரிக்க அரசாங்கத்திற்குத் தந்தி கொடுத்தான்.

அன்று நடு நிசியில், டிரக்குகள் தெருக்களில் குளிர் காய்ந்துகொண்டிருந்த காவலாளர் பக்கம் நின்று நின்று அறிக்கைகளை வீசிச் சென்றனர்.

அவ்வறிக்கையின் சுருக்கமாவது:

''ரஷ்ய மக்களே! இடைக்கால அரசாங்கம் கவிழ்ந்து விட்டது. பெட்ரோகிராட் தொழிலாளர்—போர் வீரர் களின் சோவியத் இராணுவக் கமிட்டி அதிகாரத்தைக் கைப்பற்றி விட்டது.

''மக்கள் போரிட்ட நோக்கங்கள்: ஜனநாயக சமா தானத்திற்கு உடனடி ஏற்பாடு, நிலச்சுவான்களுக்கு நிலத்தின் மீதுள்ள உரிமை பறிமுதல்! தொழிலாளரின் ஆதிக்கத்தில் உற்பத்தி; சோவியத் அரசாங்கத்தை அமைத்தல்.

''தொழிலாளர், போர் வீரர், விவசாயிகளின் புரட்சி நீடூழி வாழ்க!''

இராணுவப் புரட்சிக் கமிட்டி,
தொழிலாளர் போர்வீரர் பிரதிநிதிகளின்
பெட்ரோகிராட் சோவியத்.

நவம்பர் 7. இரவு 10—45 மணிக்கு அகில ரஷ்ய சோவியத் காங்கிரஸ் கூடியது. மத்தியக் கமிட்டியின் நிர்வாக உறுப்பினர்கள், ஒருவர்பின் ஒருவராகப் பேசினர். கடைசியில் ஒரு குள்ளமான மனிதர் மேடைமீது எழுந்து நின்றார். மக்கள் கைகொட்டி ஆரவாரம் செய்தனர்.

''நாம் இப்போது சோசலிச அமைப்பை நிறுவு வோம்'' என்று அக் குள்ள மனிதர் தெரிவித்தார். ஆம்; அவர்தான் லெனின். காங்கிரஸ், முதலாவது சோவியத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


அரசாங்கத்தை அமைத்தது. மந்திரிசபைக்கு லெனின் தலைவரானார்.

## அங்கிகாரம் மறுப்பு

சோவியத் அரசாங்கம் அமைக்கப்பட்ட மறுநாள், புதிய சோவியத் சில நாட்களுக்கே நிலைத்திருக்கும் என்பதாகப் பிரான்சிஸ் வாஷிங்டனுக்குச் செய்தி அனுப்பினான், போல்ஷ்விக்குகள் முறியடிக்கப்பட்டு, ரஷ்ய தேசபக்தர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றும் வரை, ரஷ்ய அரசாங்கத்தை அங்கீகரிக்க வேண்டாமென்றும், அவன் அமெரிக்க அரசாங்க இலாகாவைக் கேட்டுக் கொண்டான். அன்று ராபின்ஸ் பேட்ரோகிராடிலிருந்த அமெரிக்க செஞ்சிலுவைச் சங்கத்திற்குச் சென்று தாம்சனைச் சந்தித்தான்.

''நாம் வேகமாக வேலை செய்ய வேண்டும். கெரன்ஸ்கி எங்கிருந்தோ இராணுவத்தைத் திரட்டப் போகிறான்; டான் பகுதியிலிருந்து கஸாக்கர்கள் வரப்போகிறார்கள்; பின்லாந்திலிருந்து வெண் படை வந்துகொண்டிருக்கிறது; என்ற செய்திகள் வெறும் புரளி. அவர்கள் ஒரு போதும் இங்கு வந்து சேரமுடியாது. விவசாயிகள் துப்பாக்கிகளைக் கையிலேந்தி, ஆங்காங்கே போர்க்கோலம் பூண்டு நிற்கின்றனர். சுமால்னி நகரில் ஆட்சிப் பீடத்தை அமைத்திருக்கும் இந்தக் கூட்டம், நீண்ட காலம் ஆட்சி செய்யும்'' என்றான் ராபின்ஸ். லெனினைச் சந்திக்க அவன் தன் தலைவனிடம் அனுமதி கோரினான்.

உடனே வாஷிங்டனுக்குப் புறப்பட்டு வருமாறு வந்திருந்த செய்தியைத் தாம்சன் ராபின்ஸிடம் காண்பித்தான். போல்ஷ்விக்குகள்தான் மக்களின் பிரதிநிதிகள் என்ற உண்மையைத் தான் ஒப்புக் கொள்வதாகவும் அமெரிக்கா சென்றதும், இதை அரசாங்க இலாகாவுக்குத் தெளிவுபடுத்துவதாகவும், அவன் சொன்னான். தாம்ஸனுக்குப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


பதில் ராபின்ஸ் ரஷ்யாவிலுள்ள அமெரிக்க செஞ்சிலுவைச் சங்கத் தலைவனானான்.

சிறிதும் காலம் தாழ்த்தாமல் ராபின்ஸ் சுமால்னி நகருக்கு விரைந்து சென்று, லெனினைப் பேட்டி கண்டான். "நான் கெரன்ஸ்கி பக்கம் நின்றேன். அவருடைய தற்கால சர்க்கார் உயிரற்றதென நான் கருதுகிறேன். எங்களுடைய தேசிய நலன்களுக்குப் பாதகமில்லாத முறையில், அமெரிக்க செஞ்சிலுவைச் சங்கம், ரஷ்ய மக்களுக்குத் தொண்டாற்றலாமா என்பதை அறிய ஆவலாயிருக்கிறேன். உங்கள் உள்நாட்டுத் திட்டம் எனக்கு உடன்பாடல்ல. நான் அதை எதிர்க்கிறேன். ஆனால், ரஷ்ய நாட்டில் என்ன நடந்தபோதிலும், அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. கார்னிலோவ், ஜார், அல்லது வேறு எவராயிருந்தாலும் சரி ஆட்சியிலிருப்பவர்களிடந்தான் எனக்கு வேலை" என்றான் ராபின்ஸ். அந்த அமெரிக்கனின் வெள்ளையான பேச்சைக் கேட்டு, புதிய ஆட்சியின் தன்மையை லெனின் ராபின்ஸுக்கு விவரித்துக் கூறினார்:

"நான் ஒரு சர்வாதிகாரி என்று கூறுகிறார்கள். நான் தற்போது சர்வாதிகாரிதான். ஏனென்றால், தொழிலாளர் விவசாயிகளின் ஆதரவு எனக்கு இருக்கிறது. அவர்களுடைய விருப்பத்தை நிறைவேற்றத் தவறினால், ஒரு நொடியில் அவர்கள் என்னிடமிருந்து அதிகாரத்தைப் பறித்துக் கொள்வர். ஜார் அடைந்த கதிதான் எனக்கும் கிடைக்கும்.

"சோவியத் ஆட்சியின் பொருளாதார நிலைமையைப் பற்றிக் கூறுகிறேன் கேளுங்கள்:

"பொருளுற்பத்தியாளரின் குடியரசை அமைத்து உலகிற்குச் சவால் விடுக்கப் போகிறோம். பொருளுற்பத்திச் சாதனங்களை தங்களுக்குச் சொந்தமாக்கி வைத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


திருப்பவர்களை நாங்கள் சோவியத் ஆட்சியில் வைக்கப் போவதில்லை. உற்பத்தியாளர்களே ஆட்சி செய்வர். நிலக்கரிச் சுரங்கம், போக்குவரத்து, தபால் ஆகிய நிறுவனங்களையும் அந்தந்தத் தொழிலாளர்களே நடத்துவார்கள்.''

போல்ஷ்விக்குகளின் மற்றொரு சிறந்த திட்டத்தை லெனின் ராபின்ஸுக்கு விவரமாகச் சொன்னார்: அதாவது தேசிய இனப் பிரச்னை. ''ஜார் ஆட்சியில் பல தேசிய இனங்களும் கடுமையான அடக்குமுறைக்குள்ளாயின. இது முற்றிலும் மாற வேண்டும். தனது சுரண்டல் முறையை அதிகப்படுத்துவதற்காக, ஒரு தேசிய இனத்தின் மீது மற்றொரு தேசிய இனத்தைத் தூண்டுவதும், பழமையான பகைகளை வளர்ப்பதும் இனி முடியாது. ஒவ்வொரு தேசிய இனமும் முற்று முழுதான விடுதலை அடைந்து, சம உரிமையுடன் வாழ வேண்டும். தேசிய இன ஆராய்ச்சியில் ஸ்டாலின் மிகத் திறமையுள்ளவர். அவரே இதைக் கவனிப்பார்.''

''இந்தப் போரில் ஜெர்மனியை எதிர்த்து ரஷ்யா எவ்வளவு காலம் போரிடமுடியும்?'' என்று ராபின்ஸ் லெனினிடம் கேட்டான்.

''ரஷ்யா போர்க்களத்திலிருந்து வெளியேறி விட்டது. ஒரு புதிய இராணுவம் அதாவது செஞ்சேனையை அமைக்கும்வரை, ரஷ்யா ஜெர்மனியை எதிர்க்காது. சீர் குலைந்து கிடக்கின்ற ரஷ்யத் தொழில் நிறுவனங்களும் போக்குவரத்து வசதிகளும் முற்றிலும் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும்.

''அமெரிக்காவின் நட்பையும் அங்கீகாரத்தையும் சோவியத் அரசாங்கம் விரும்புகிறது. அமெரிக்க அரசாங்கத்திற்கு, சோவியத் மீதுள்ள பகைமை தெரிந்ததுதான். இரு நாடுகளுக்கும் இடையே நல்லுறவு ஏற்பட, ஒரு திட்டம் தருகிறேன். தொழில் துறையில் அமெரிக்கா செய்யும் உதவிக்காக, கிழக்கு முனையில் குவிந்து கிடக்கும்

www.tamilarangam.net


பொருள்கள், ஜெர்மனியரிடம் சிக்காமல், அவற்றைக் காலி செய்துவிடுவதாக உறுதி கூறுகிறேன்'' என்றார் லெனின்.

லெனின் கொடுத்த திட்டத்தை, அமெரிக்க இராணுவத் தலைவன் ஜட்சனிடம் ராபின்ஸ் சமர்ப்பித்தான். ஒப்பந்த விவரங்களைத் தெரிந்து கொள்வதற்காக, ஜட்சன் சுமால்னி நகருக்குச் சென்றான். அமெரிக்கா தன் நலனைக் கருதி, சோவியத் அரசாங்கத்தை அங்கீகரிக்க வேண்டும் என்று அவன் பிரான்சிஸிடம் அறிவித்தான்.

''சோவியத்துதான் சரியான அரசாங்கம்; அதனுடன் உறவு ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்'' என்று ஜட்சன் சொன்னான். ஆனால், பிரான்சிஸ் கருத்து வேறு. அவன் தனது கருத்தை முன்னமேயே வாஷிங்டனுக்குத் தெரிவித்து விட்டான். சில நாட்களுக்குப் பிறகு அமெரிக்க அரசாங்க இலாகா செயலர் லான்சிங், பிரான்சிஸுக்கு ஒரு தந்தி அடித்தான். ''அமெரிக்கப் பிரதிநிதிகள், போல்ஷ்விக் அரசாங்கத்துடன் நேரடியான தொடர்பு எதுவும் வைத்துக் கொள்ளக் கூடாது; இந்த செய்தியை ஜட்சனுக்குச் சொல்லவும்'' என்பதாக அந்தத் தந்தியில் கண்டிருந்தது. அமெரிக்காவுக்கு வருமாறு ஜட்சனுக்கு மற்றொரு தந்தி வந்தது. அரசாங்க இலாகாவின் கொள்கையை எதிர்த்து ராபின்ஸ் தனது வேலையை விட்டுவிட எண்ணினான். அவன் தன் பதவியிலேயே இருக்க வேண்டுமென்றும், சுமால்னியிலுள்ள போல்ஷ்விக் அரசாங்கத்துடன் தொடர்பு வைத்துக் கொள்ளலாம் என்றும் பிரான்சிஸ் கூறினான்.

''நீங்கள் திடீரென்று போல்ஷ்விக் அரசாங்கத்துடன் தொடர்பை அறுத்துக்கொள்வது அறிவுடைமை ஆகாது. மேலும், அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைத்

பெ—2

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


தெரிந்துகொள்ள ஆவலாயிருக்கிறேன். உங்களுக்கு யாதொன்றும் நேரிடாதபடி பார்த்துக்கொள்கிறேன்'' என்றான் பிரான்சிஸ். சோவியத் அரசாங்கத்தைப் பற்றிய முழு விவரங்களையும் அவன் சேகரிக்க விரும்பினான்.

## இரகசிய அரசு தந்திரம்

காசக்கர்களின் தளகர்த்தன் அலெக்ஸி கலடின் சம்பந்தமாகப் பிரான்சிஸ், 1917 டிசம்பர் 2-ம் தேதி, வாஷிங்கடனுக்கு ரகசிய அறிக்கையொன்று அனுப்பினான். கலடின் இரண்டு லட்சம் காசக்கர்களுக்குத் தளகர்த்தன் என்பதாகப் பிரான்சிஸ், அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தான். புரட்சியை எதிர்க்க அவன் ஒரு படை தயாரித்திருந்தான். அதற்கு வெண் படை என்று பெயர். அது தென் ரஷ்யாவிலுள்ள காசக்கர்களடங்கிய படை. அவன் டான் பகுதியைச் சுதந்திர நாடாகப் பிரகடனம் செய்திருந்தான். மாஸ்கோவில் நிறுவப்பட்டிருந்த சோவியத் சர்க்காரைத் தாக்க, ஏற்பாடு செய்துகொண்டிருந்தான். ஜார் அதிகாரிகளில் சிலரைத் தனது ஒற்றர்களாகப் பெட்ரோகிராடிலும், மாஸ்கோவிலும் வைத்திருந்தான். அவர்கள் பிரான்சிஸுடன் தொடர்பு வைத்திருந்தார்கள்.

சில நாட்களுக்குப் பிறகு, பிரான்சிஸ் விருப்பப்படி கலடினுடைய முழுப்பலத்தைப் பற்றி, மாஸ்கோவிலிருந்த அமெரிக்கக் கான்சல் ஜெனரல் மடின் சம்மர்ஸ் என்பவன் அமெரிக்க அரசாங்க இலாகாவுக்கு ஒரு விரிவான அறிக்கை அனுப்பினான். ரஷ்யப் பிரபுக் குடும்பம் ஒன்றில் சம்மர்ஸ் மணம் செய்திருந்தான். எனவே, அவன் சோவியத் ஆட்சி மீது, அமெரிக்கத் தூதனைவிட அதிக வெறுப்புக்கொண்டிருந்தான். தெற்கு ரஷ்யாவிலுள்ள அரச விசுவாசிகளைக் கலடின் இராணுவத்தில் சேர்த்து விட்டதாகச் சம்மர்ஸ், தன் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


லண்டனிலிருந்த அமெரிக்கத் தூதனுக்கு அமெரிக்க அரசாங்க செயலர் லான்சிங் ஒரு தந்தி கொடுத்தான். கலடினுக்குக் கடன் கொடுக்கும்படியும், அந்தக் கடனைப் பிரிட்டிஷ் அல்லது பிரெஞ்சு அரசாங்க ஏஜண்டு மூலம் ரகசியமாகக் கொடுக்கும்படியும், தந்தியில் குறிப்பிட்டிருந்தான். விரைவில் காரியத்தை முடிக்கவேண்டிய அவசியத்தையும், அமெரிக்கா, கலடின் விஷயத்தில் அனுதாபத்துடனிருப்பது பிறருக்குத் தெரியக்கூடாதென்பதின் அவசியத்தையும் தான் தெளிவுபடுத்த வேண்டியதில்லை என்றும், போல்ஷ்விக்குகள் சந்தேகப்படாத முறையில் கலடினுடன் தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டுமென்றும், அவன் பிரான்சிஸுக்கு அறிவுறுத்தினான்.

எவ்வளவு முன்னெச்சரிக்கையுடன் செயல்களைச் செய்தபோதிலும், அந்தச் சதிகளை எல்லாம் சோவியத் அரசாங்கம் கண்டுகொண்டது. ரஷ்ய உள்நாட்டு விவகாரங்களில், நேச நாடுகள் தலையிடக்கூடும் என்ற உண்மை சோவியத் அரசாங்கத்திற்குத் தெரிந்ததுதான். அமெரிக்க தூதனும், கலடினும் திட்டமிட்டிருந்த சதியை, டிசம்பர் மத்தியில் சோவியத் பத்திரிகைகள் வெளிப்படுத்தின. பிரான்சிஸ் அதை மறுத்தான். ''ரஷ்ய உள்நாட்டு விவகாரங்களில் தலையிடக்கூடாதென்று தாங்கள் அனுப்பிய உத்தரவுப்படி, கலடினுக்கும் எனக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்று, பத்திரிகைக்கு ஒரு அறிக்கை தயாரித்துக்கொண்டிருக்கிறேன்'' என்று பிரான்சிஸ், லான்சிங்குக்குத் தந்தி கொடுத்தான்.

நேச நாடுகளின் பகைமையால் தனித்து நின்றதாலும், ஜெர்மன் இராணுவத்தை எதிர்த்துப் போர் புரியப் போதிய பலம் இல்லாததாலும், சோவியத் அரசாங்கம் தன்னைப் பாதுகாத்துக்கொள்வது சிரமமாயிருந்தது. ஜெர்மனியினால்தான் உடனடியான ஆபத்து என்பதை உணர்ந்து, புதிய ரஷ்யாவைக் காப்பதற்காகவும், செஞ்சேனையை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


அமைப்பதற்காகவும், கிழக்குப் போர் முனையில் சமாதான உடன்படிக்கை செய்துகொள்ள லெனின் விரும்பினார்.

''எப்படியாவது நாம் சமாதான உடன்படிக்கை செய்தாக வேண்டும். நாம் பலம் அடையப் போதியகாலம் வேண்டும். ஜெர்மன் இராணுவம் முன்னேறினால் இதைவிட மோசமான உடன்படிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டியதேற்படும்'' என்றார் லெனின்.

ஜெர்மனியின் சமாதான நிபந்தனைகளைத் தெரிந்து வர, கிழக்குப் போர்முனையிலுள்ள பிரஸ்ட் லிட்டோவ்ஸ்க் நகருக்கு சோவியத் தூதுக்கோஷ்டி ஒன்று புறப்பட்டது.

பிரஸ்ட் லிட்டோவ்ஸ்க் சமாதான மகாநாட்டின் முதலாவது கூட்டம் முடிந்த மறுநாள், அதாவது 1918 டிசம்பர் 23-ஆம் தேதி, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய இரு நாடுகளின் பிரதிநிதிகள் பாரிஸ் நகரில் கூடி, சோவியத் ரஷ்யாவைக் கூறுபோட ரகசிய உடன்பாடு செய்தார்கள். அதன்படி, காக்கசஸ் எண்ணெயும் பால்டிக் மாகாணங்களின் மீது ஆதிக்கமும் இங்கிலாந்து பெறவேண்டும்; டோனட்ஸ் பகுதியிலுள்ள இரும்பும் நிலக்கரியும், கிரிமியா மீது ஆதிக்கமும், பிரான்சு பெறவேண்டும்.

இந்த ரகசிய ஆங்கிலோ-பிரெஞ்சு உடன்படிக்கை, அந்த இரண்டு நாடுகளும் பல ஆண்டுகளுக்கு ரஷ்யாவிடம் கொள்ளவேண்டிய உறவின் தன்மையை முடிவு செய்தது.

□

## அத்தியாயம் 2

# பிரிட்டிஷ் ஏஜண்டு

1918 ஜனவரி 18-ஆம் தேதி, நடுநிசி. பின்லாந்துக்கும் ரஷ்யாவுக்கும் மத்தியில், சிர்குலைந்திருந்த ஒரு பாலத்தின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மீது, ஸ்காட்லாந்தைச் சேர்ந்த ஒரு வாலிபன் போய்க் கொண்டிருந்தான். அப்பொழுது பின்லாந்தில் உள்நாட்டுக் கலகம் நடந்துகொண்டிருந்தது. அந்த வாலிபனைச் சோவியத் பகுதிக்குக் கொண்டுசெல்ல, பின்லாந்து அரசாங்கம் ஏற்பாடு செய்திருந்தது. பெட்ரோகிராடுக்குப் போய்க்கொண்டிருந்த அந்தப் பிரயாணி, பிரிட்டிஷ் போர் மந்திரி சபையின் ஏஜண்டு. அவன் பெயர் புரூஸ் லோக்கார்ட். பிரிட்டிஷ் உதவித் தூதனாக, மாஸ்கோவில் இருந்தவன். போல்ஷ்விக் புரட்சிக்கு ஆறு வாரங்களுக்கு முன்புதான், அவன் லண்டனுக்குத் திரும்பினான்.

ரஷ்யாவிலிருந்து திரும்பிய தாம்சன் மூலம், பிரிட்டிஷ் முதல் மந்திரி, ரஷ்யாவில் நடக்கும் செயல்களைத் தெளிவாக அறிந்திருந்தார். எனவே ரஷ்யாவுக்கு மீண்டும் போய், சோவியத் அரசாங்கத்துடன் தொடர்பு வைத்துக் கொள்ளும்படி அவனைக் கேட்டுக் கொண்டார். சோவியத் அரசாங்கத்திற்கு உள்நாட்டில் தோன்றியுள்ள எதிர்ப்பு இயக்கத்தை, தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்ளும்படி அவனுக்கு ரகசியமாக அறிவிக்கப்பட்டது.

லெனினுக்கு எதிரான இயக்கத்தை டிராட்ஸ்கி, தலைமை தாங்கி நடத்தினான். டிராட்ஸ்கி சோவியத் அன்னியநாட்டு இலாகா மந்திரியாக இருந்தான். லெனினுக்குப் பிறகு, தானே தலைவனாக வேண்டுமென்ற ஆசை, அவனைப் பிடித்தாட்டியது. அவன், போல்ஷ்விக் புரட்சிக்குச் சில மாதங்களுக்கு முன் அதாவது, 1917 ஆகஸ்டு மாதத்தில் லெனின் கட்சியில் சேர்ந்து பதவிக்கு வந்தான். போல்ஷ்விக் கட்சிக்குள் லெனினுக்கு எதிராகக் குழு ஒன்றை அமைத்தான்.

1978-ஆம் வருட ஆரம்பத்தில் லோக்கார்ட் பெட்ரோகிராடுக்கு வந்தபோது, சோவியத் சமாதான தூதுக் குழுவின் தலைவனாக டிராட்ஸ்கி பிரஸ்ட் லிட்டோவஸ்கில் இருந்தான். ஜெர்மனியுடன் சமாதான உடன்படிக்கை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செய்துகொள்வதற்காக லெனின் அவனை அங்கு அனுப்பி யிருந்தார். ஆனால், அவன் லெனின் விருப்பப்படி, சமா தான உடன்படிக்கை செய்யவில்லை. தங்கள் தங்கள் அரசாங்கங்களைக் கவிழ்க்கும்படி, ஐரோப்பாவிலுள்ள பாட்டாளி மக்களுக்குத் தீக்கனல் கக்கும் வேண்டுகோள் களை விடுத்துக்கொண்டிருந்தான். முதலாளித்துவ அரசாங் கங்களுடன் சோவியத் அரசாங்கம் எக்காரணத்தையிட்டும் சமாதான உடன்படிக்கை செய்யாதென்று கூறினான். சமாதானமும் இல்லை, சண்டையும் இல்லை என்று அவன் கொக்கரித்தான். இனி, ரஷ்யப்படை போரிடாது அது கலைக்கப்படும் என்று, அவன் ஜெர்மனியரிடம் சொன் னான். போரை நிறுத்துவதும், சமாதான உடன்படிக்கை யில் கையெழுத்துச் செய்ய மறுப்பதும், படையைக் கலைப் பதும் பைத்தியக்காரத் தனமென்று லெனின் கண்டித் தார்.

லெனின், டிராட்ஸகி ஆகிய இருவருக்கும் இடையே ஏற்பட்ட கருத்து மாறுபாட்டினால், தங்களுக்குச் சாதக மான நிலைமை ஏற்படும் என்று, பிரிட்டிஷ் அரசாங்கம் மிகவும் நம்பிக்கையுடன் இருந்தது. பிரிட்டிஷ் ஏஜண்டு லோக்கார்ட் பின்னால் வெளியிட்ட செய்தியிலிருந்து இந்த உண்மை வெளியாயிற்று. டிராட்ஸ்கியின் நடத்தை யால், பிரஸ்ட் லிட்டோவ்ஸ்க் சமாதானப் பேச்சு முறிந்தது. டிராட்ஸ்கியின் போக்கு, ஜெர்மன் ஏகாதிபத்தியவாதி களுக்கு அனுகூலமாயிருந்தது. சோவியத் தூதுக் குழு வினைத் திரும்பிப் போகும்படி ஜெர்மன் தளகர்த்தன் அறிவித்தான்.

டிராட்ஸ்கி பெட்ரோகிராடு திரும்பியதும் ஜெர்மன் இராணுவம் முன்னேறத் துணியாது என்று கூறினான்.

சமாதானப் பேச்சு முறிந்த பத்து நாட்களுக்குப் பிறகு, கிழக்குப் போர் முனையில் பால்டிக்கிலிருந்து கருங்கடல் வரை, பெரிய தாக்குதலை ஜெர்மனி துவக்கியது. தெற்கே உக்ரேன் வழியாக ஜெர்மன் இராணுவம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உள்ளே நுழைந்தது. மத்திய பாகத்தில் போலந்து வழியாக மாஸ்கோவுக்குச் செல்ல முயற்சித்தது. வடக்கே நார்வே வீழ்ச்சியுற்றது. பெட்ரோகிராடு ஆபத்தான நிலையிலிருந்தது. எல்லாப் போர்முனைகளிலும், ரஷ்யப் படை பின்வாங்கிச் சிதறியது. புதிய ரஷ்யா அழிவை எதிர்நோக்கி நின்றது. ஜெர்மானியப் படையின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்த போல்ஷ்விக் தலைவர்கள், ஆயுதம் தாங்கிய தொழிலாளிகளையும் செங்காவலர்களையும் ஒன்று திரட்டினர். புதிதாக அமைக்கப்பட்ட செஞ்சேனை பிப்ரவரி 23-ஆம் தேதி, ஜெர்மன் இராணுவத்தின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தியது. பெட்ரோகிராடு தற்காலிகமாகக் காப்பாற்றப்பட்டது.

சோவியத் சமாதானத் தூதுக் குழு, இரண்டாவது முறையாகப் பிரஸ்ட் லிட்டோவ்ஸ்க்குக்கு விரைந்தது. இந்தத் தடவை டிராட்ஸ்கி போகவில்லை.

சமாதானம் செய்துகொள்ள வேண்டுமானால், உக்ரேன், பின்லாந்து, போலந்து, காக்கஸஸ் நாடுகளில் ஆதிக்கமும், ஏராளமான பொன்னும், கோதுமையும், எண்ணெயும், இதர உலோகங்களும் ரஷ்யா கொடுக்க வேண்டுமென்று ஜெர்மனி கேட்டது.

ஜெர்மன் ஏகாதிபத்தியக் கொள்ளைக் கூட்டத்தாரின் சமாதான உடன்படிக்கையின் நிபந்தனைகளைக் கேட்டதும், சோவியத் மக்கள் கோபம் கொண்டார்கள். ஜெர்மன் அதிகார வர்க்கம், சோவியத் ஆட்சியை அழித்து விட எண்ணம் கொண்டிருப்பதாக லெனின் கூறினார்.

அப்பொழுதிருந்த நிலைமையில் நேசநாடுகள் ஜெர்மனிக்கு எதிராக, ரஷ்யாவுக்கு உதவுவதுதான் நல்லதென்று லோக்கார்ட் கருதினான். பிரஸ்ட் லிட்டோவ்ஸ்க் சமாதான உடன்படிக்கையை நிறைவேற்ற விருப்பமில்லையென்று, சோவியத் அரசாங்கம் காட்டிக்கொண்டது. ''நேச நாடுகள் என்ன செய்யும்? சோவியத் அரசாங்கத்தை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அங்கீகரித்து, அதற்கு உதவ முன்வருமா? அல்லது ஜெர்மன் படைகள் ரஷ்யாமீது படையெடுக்க அனுமதிக்குமா?'' என்று, போல்ஷ்விக்குகள் லோக்கார்ட்டிடம் கேட்டார்கள்.

லெனினுடைய எதிரியான டிராட்ஸ்கியுடன் ஒப்பந்தம் செய்துகொள்வது, பிரிட்டிஷ் நலனுக்குப் பொருத்தமாகு மென்று லோக்கார்ட் கருதினான். சமாதானக் கொள்கை, புரட்சிக்குத் துரோகம் செய்ததாகும் என்று, டிராட்ஸ்கியும் அவனுடைய சகாக்களும் லெனின் மீது குற்றம் சாட்டினர். டிராட்ஸ்கி அமைத்த குழு ஒன்று நேச நாடுகளின் உதவியால், லெனினுடைய ஆதிக்கத்திற்கு உலைவைக்கும் என்று லோக்கார்ட் கனவு கண்டான். பிரிட்டிஷ் ஏஜெண்டும், டிராட்ஸ்கியும் நண்பராயினர் என்றாலும், லெனினைத் தள்ளிவிட்டுத் தலைவனாவதற்குரிய வல்லமை டிராட்ஸ்கியிடம் இல்லையென்ற முடிவுக்கு லோக்கார்ட் வந்துவிட்டான்.

'பிரிட்டிஷ் ஏஜண்டு' என்ற நூலில் லோக்கார்ட் எழுதியதாவது :

''டிராட்ஸ்கி ஸ்தாபன அமைப்பில் வல்லவன், உறுதியுள்ளவன். ஆனால், நேர்மையில் அவன் லெனினை எதிர்த்து நிற்கமுடியாது. மந்திரி சபையிலுள்ள ஒவ்வொருவரும் தம்மை டிராஸ்கிக்குச் சமமாகக் கருதினர். ஆனால், லெனினை அவதார புருஷனாகவும், அவருடைய சொற்களை வேதமாகவும் மதிக்காதவர் யாரும் இல்லை.''

ரஷ்யாவில் ஏதாவது ஆகவேண்டுமானால், அது லெனின் மூலமாகவே நடக்கவேண்டும் என்பது, லோக்கார்ட்டுக்கும் ராபின்ஸனுக்கும் தெரிந்தது.

''டிராட்ஸ்கியின் தற்பெருமையினாலும், செருக்கினாலும், அவன்மேல் எனக்கு எப்பொழுதுமே சந்தேகந்

www.tamilarangam.net



தான். அவன் எந்தச் சமயத்தில் எதைச் செய்வான், எங்கே இருப்பான் என்று சொல்ல முடியாது'' என்று ராபின்ஸ் சொன்னான். லோக்கார்ட், பெட்ரோகிராடுக்கு வந்த சில நாட்களில், ராபின்ஸைச் சந்தித்தான். ராபின்ஸ், சோவியத் அரசாங்கத்தை அங்கீகரிக்க வேண்டுமென்ற கருத்துக் கொண்டவன். அதை அங்கீகரிக்கக் கூடாதென்ற நேச நாடுகளின் பல்வேறு வாதங்களில், அவனுக்கு நம்பிக்கை கிடையாது. ஜெர்மனி வெற்றிபெற வேண்டு மென்று போல்ஷ்விக்குகள் விரும்பினார்கள் என்று ஜாரின் ஏஜண்டுகள் கூறினர். இது முட்டாள் தனமான கொள்கை என்று ராபின்ஸ் இகழ்ந்தான். ஜார் காலத்தி லிருந்த கொடிய நிலைமையையும், ஒடுக்கப்பட்டுக் கிடந்த லட்சக்கணக்கான மக்கள், போல்ஷ்விக் கட்சியின் தலைமையில் வீறிட்டெழுந்த அற்புதத்தையும், லோக் கார்ட்டிடம் புகழ்ந்து பேசினான். தான் சித்தரித்துக் காட்டிய புதிய ஆட்சியை நேரில் காண, ராபின்ஸ், லோக் கார்ட்டை சுமால்னி நகருக்கு அழைத்துச் சென்றான். இருவரும் பெட்ரோகிராடுக்குத் திரும்பும்போது, ''சோவியத் ரஷ்யாவுக்கு விரோதமாகச் சதிசெய்வதன் மூலம், ஜெர்மனியின் நோக்கத்திற்கு ஆதரவளித்ததாக முடியும்'' என்று ராபின்ஸ் வெறுப்புடன் சொன்னான்.

சோவியத் அரசாங்கம் நிலைத்துவிட்டால், நேச நாடு கள் விரைவில் அங்கீகரிக்க வேண்டுமென்பது அவர்கள் கருத்து. இருவரும் இணைபிரியா நண்பராயினர். சோவியத் அரசாங்கத்தை ஏற்கும்படி, தங்கள் அரசாங்கங்களைத் தூண்டி, கிழக்குப் போர்முனையில் ஜெர்மனிக்கு வெற்றி கிடைக்காமல் தடுக்க வேண்டுமென்பது அவ்விருவரின் பொது நோக்கு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## நெருக்கடியின் உச்ச நிலை

1918-ஆம் ஆண்டு, வசந்த காலத் தொடக்கத்தில், சோவியத் அரசாங்கம் நெருக்கடியான நிலைமையைச் சமாளிக்க வேண்டியதாயிற்று. பிரஸ்ட் லிட்டோவஸ்க் சமாதான நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ள மறுத்ததால், ஜெர்மனி, சோவியத் அரசாங்கத்தைப் படை பலத்தால் அழித்துவிட முயன்று கொண்டிருந்தது. ஆர்ச் ஏஞ்சல், மர்மன்ஸ்க், டான் பகுதிகளில் கூடியிருந்த எதிர்ப் புரட்சி சக்திகளைப்பிரிட்டனும் பிரான்சும் ரகசியமாக ஆதரித்தன. ஜப்பான், நேச நாடுகளின் அங்கீகாரத்தின் பேரில் விலாடிவாஸ்டக் பட்டினத்தைக் கைப்பற்றி, சைபீரியாவில் நுழையத் திட்டமிட்டது.

ஜெர்மனி பெட்ரோகிராடைத் தாக்கலாம் என்ற நிலைமை இருந்ததால், சோவியத் அரசாங்கத்தை மாஸ்கோவுக்கு மாற்ற நினைத்ததை லெனின் பிரிட்டிஷ் ஏஜண்டிடம் சொன்னார். "அவசியம் ஏற்பட்டால், போல்ஷ்விக்குகள் வால்காவுக்கும் யூரலுக்கும் பின்னடைந்து கடைசிவரை போர் புரிவர். அவர்களுடைய திட்டப்படி போரிடுவார்களே தவிர, நேச நாடுகளின் கைப்பாவைகளாக இருக்கமாட்டார்கள். நேச நாடுகள் இதை அறிந்து கொண்டால், கூட்டுறவுக்கு ஓர் அரிய வாய்ப்பு. ஜெர்மனியைத் தடுத்து நிறுத்த சோவியத் ரஷ்யாவுக்கு உதவி அவசியம். உங்கள் அரசாங்கம் இத்தகைய நோக்குடன் செயல்களைக் கவனிக்காது. ஏனென்றால், அது பிற்போக்கு அரசாங்கம். அது ரஷ்யப் பிற்போக்காளர்களுடன்தான் கூட்டுறவு வைத்துக் கொள்ளும் என்பதை நான் நன்கறிவேன்" என்றார் லெனின்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்தச் செய்தியைப் பிரிட்டிஷ் வெளிநாட்டு இலாகாவுக்கு லோக்கார்ட் தெரிவித்தான். சில நாட்களுக்குப் பிறகு பதில் வந்தது:

"ரஷ்யாவுக்கு வேண்டியதெல்லாம், அரச விசுவாசிகளான ரஷ்யர்களுக்குத் தலைமை தாங்கி நடத்தும் பிரிட்டிஷ் அதிகாரிகள்தான். இந்தத் தேவை நிறைவேற்றப்பட்டால், ரஷ்யர்கள் போல்ஷ்விஸத்திற்குச் சாவுமணி அடித்துவிடுவார்கள்" என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. பிரான்சிஸ் தன் மகனுக்குப் பிப்ரவரி 23இ-ல், ஒரு கடிதம் எழுதினான்:

"எவ்வளவு காலம் ரஷ்யாவில் இருக்க முடியுமோ, அவ்வளவு காலம் இருக்கத் திட்டமிட்டிருக்கிறேன். சமாதான உடன்படிக்கை ஏற்பட்டால், என்னை ஜெர்மனி கைது செய்யாது. சமாதான உடன்படிக்கையை ஏற்க மறுத்தால், நான் அந்தப் பகுதியிலிருந்து சோவியத் எதிர்ப்புக்கு ஆதரவு அளிப்பேன்."

இந்தக் கடிதம் எழுதிய பிறகு பிரான்சிஸ், பிரெஞ்சு தூதன் நோலின்ஸ், பிற நாடுகளின் இராஜதந்திரிகள் ஆகியோர், மாஸ்கோவுக்கும் ஆர்ச் ஏஞ்சலுக்கும் மத்தியிலுள்ள ஓலக்டா என்ற நகருக்குச் சென்றார்கள். சோவியத் ஆட்சிக்கு எவ்வகையிலும் ஆதரவு கொடுக்கக் கூடா தென்று நேச நாடுகள் முடிவு செய்திருந்தன என்பது அப்போது தெளிவாயிற்று.

ராபின்ஸின் வேண்டுகோளுக்கு இணங்கி, லெனின் அமெரிக்காவுக்குக் கடிதம் எழுதினார். பலன் ஒன்றும் ஏற்படாதென்பது அவருக்குத் தெரியும்.

அக் கடிதத்தில் சொல்லியதாவது:—

"அகில ரஷ்ய சோவியத்துகளின் காங்கிரஸ், ஜெர்மனியுடன் செய்துகொள்ளும் சமாதான உடன்படிக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கையை ஏற்க மறுத்தால், அல்லது ஜெர்மனி உடன்படிக் கையைக் காற்றில் பறக்கவிட்டு, மீண்டும் தாக்கத் தொடங்கினால், ஜெர்மனியை எதிர்த்து நடத்தும் போரில் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகள், சோவியத் அரசாங்கத்திற்கு உதவி செய்ய முன்வருமா?

"விரைவில் எத்தகைய உதவி கிடைக்கும்? இராணு வம், போக்குவரத்து, உணவுப் பொருள்கள் ஆகிய உதவிகள் கிடைக்குமா? என்ன நிபந்தனையில்? அமெரிக்கா மட்டும் என்ன உதவி செய்ய முடியும்?........."

1918 மார்ச் 5-ஆம் தேதி, லோக்கார்ட், பிரிட்டிஷ் வெளிநாட்டு இலாகா அலுவலகத்திற்குத் தந்தி கொடுத் தான்:

"ஜெர்மனி, ரஷ்யா மீது தாங்க முடியாத நிபந்தனை களைச் சுமத்துவதால், ரஷ்யாவில் நேச நாடுகளுக்கு ஒரு அரிய வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. ஜெர்மனி, ரஷ்யாவில் ஆதிக்கம் வகிப்பதை மாட்சிமை தங்கிய மன்னர் அரசாங்கம் விரும்பவில்லையானால், இச்சந்தர்ப்பத்தை நழுவவிடக் கூடாதென்று, நான் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று அந்தத் தந்தியில் குறிப்பிட்டிருந் தான்.

லண்டன் அலுவலகத்திலிருந்து பதில் இல்லை. "லோக்கார்ட் கம்யூனிஸ்டு ஆகிவிட்டான் என்று வதந்தி உலாவுகிறது" என்று அவன் மனைவி முன் அறிவிப்புச் செய்தாள். மார்ச் 14-ஆம் தேதி, அகில ரஷ்ய சோவியத் காங்கிரஸ் மாஸ்கோவில் கூடியது. பிரஸ்ட் லிட்டோவ்ஸ்க் சமாதான உடன்படிக்கையை ஏற்பது பற்றி, இரண்டு நாட்கள் இராப்பகலாக, விவாதம் நடந்தது. அரசியல் தலைமை பெறுவதற்காக டிராட்ஸ்கியின் கோஷ்டியினர் சமாதானத்தை முழு மூச்சுடன் எதிர்த்தனர். ஆனால், அவர்கள் தலைவன் பெட்ரோகிராடில் மறைந்திருந்தானே தவிர, காங்கிரஸில் கலந்து கொள்ளவில்லை. இரண்டாம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


நாள் இரவு, லெனின் ராபின்ஸைக் கூப்பிட்டு, "உங்கள் அரசாங்கத்திடமிருந்து ஏதாவது பதில் வந்ததா?" என்று கேட்டார்.

"இல்லை."

"லோக்கார்ட்டுக்கு ஏதாவது தகவல் வந்ததா?"

"இல்லை."

"சமாதான ஒப்பந்தத்தை அங்கீகரிக்க வேண்டுமென்று நான் இப்போது பேசப்போகிறேன். அது ஏற்கப்படும்" என்று கூறி, லெனின் ஒரு மணி நேரம் பேசினார். சமாதானம் ரஷ்யாவுக்குத் தீங்கிழைக்காது என்று சொல்ல, அவர் முயற்சிக்கவில்லை. சோவியத் அரசாங்கம் தனித்து நிற்பதையும், ஒவ்வொரு பக்கத்திலிருந்தும் அதற்கு நேரிடக்கூடிய தீங்கையும் எடுத்துக் காட்டினார். ரஷ்யாவுக்குச் சிறிது ஓய்வு இன்றியமையாதது என்பதையும் அவர் குறிப்பிட்டார். பிரஸ்ட் லிட்டோவ்ஸ்க் உடன்படிக்கை ஏற்கப்பட்டது. காங்கிரஸ் கீழ்கண்ட அறிக்கையை விடுத்தது. "தற்கால நிலைமையில் ரஷ்யக் குடியரசின் சோவியத் அரசாங்கம், ஜெர்மன் ஏகாதிபத்தியத் தாக்குதலை எதிர்த்து நிற்கச் சக்தியற்றிருக்கிறது. ரஷ்யாவைக் காப்பதற்காக, ஜெர்மனியின் நிபந்தனைகள் ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது."

## தூது முடிவு

"ராபின்ஸும் லோக்கார்ட்டும் சோவியத் அரசாங்கத்தை அங்கீகரிக்க வேண்டுமென்று கருதுகிறார்கள். நேச நாடுகளின் நோக்கம் சோவியத்தை அங்கீகரிக்கக்கூடாது என்பதே. எனது கருத்தும் அதுவே. என் கருத்துச் சரியென்றே இன்னமும் எண்ணுகிறேன்" என்று அமெரிக்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


அரசாங்க இலாகாவுக்கு 1918 மே 2-ஆம் தேதி, பிரான்சிஸ் தந்தி கொடுத்தான்.

''நாம் நேரில் பேசவேண்டும். உடனே புறப்பட்டு வரவும்'' என்று சில வாரங்களுக்குப்பின் செயலாளர் லான்சிங் ராபின்ஸுக்குச் செய்தி அனுப்பினான். ராபின்ஸ் அவ்வாறே புறப்பட்டுச் சென்றான். அமெரிக்காவுக்குப் போகும் வழியில் ராபின்ஸ் எவ்வித அறிக்கையும் வெளியிடக் கூடாதென்று, அமெரிக்க அரசாங்க அலுவலகத்திலிருந்து அவனுக்குக் கண்டிப்பான உத்திரவு வந்தது. அமெரிக்கா சென்றவுடன், ராபின்ஸ் அறிக்கை ஒன்றை அரசாங்கத்தினிடம் சமர்ப்பித்தான். சோவியத் அரசாங்கத்திற்கு எதிரான செயல்களில் நேச நாடுகள் இறங்கக் கூடாதென்று அவன் எச்சரித்தான். ரஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே வியாபார உறவு சம்பந்தமாக லெனின் ராபின்ஸிடம் கொடுத்திருந்த விரிவான திட்டம் ஒன்றை அவன் அறிக்கையுடன் சேர்த்திருந்தான். லெனினுடைய திட்டம் வில்சனிடம் போய்ச் சேராதபடி அமெரிக்க அரசாங்க அலுவலகம் தடுத்து விட்டது.

ராபின்ஸ், வில்சனை நேரில் சந்திக்க விரும்பினான். முடியவில்லை. அவன் கொடுத்த செய்தியைப் பத்திரிகைகள் வெளியிட மறுத்தன. சில செய்திகளைத் திரித்துக் கூறின. ''அவன் போல்ஷ்விக், ஜெர்மனியின் நலனுக்காகப் பிரசாரம் செய்பவன்'' என்றெல்லாம் குற்றம் சாட்டின. தான் குற்றவாளி அல்ல என்பதாக அவன் செனட் கமிட்டியின் முன் நிரூபிக்க வேண்டியதாயிற்று. ''போல்ஷ்விக்குகள், கொலைகாரர், கொள்ளைக்காரர், ஜெர்மனியின் கையாட்கள் என்று பச்சைப்பொய் சொல்லாமல் உண்மையைக் கூறினால், என்னை ஒரு போல்ஷ்விக் என்று சொல்லுகிறார்கள். நான் நிலை தடுமாறாமல், நேச நாட்டுப் பிரதிநிதிகளைவிட, தெளிவாக ரஷ்ய நிலைமையை ஆராய்ந்திருக்கிறேன். என் கருத்து எதுவாயிருந்த

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


போதிலும், எந்த இயக்கத்தைப் பற்றியும், எந்த மக்களைப் பற்றியும் விருப்பு வெறுப்பின்றி உண்மையைக் கண்டறிந்து சொல்ல விரும்புகிறேன். எனக்கு உகந்ததாயினும், இல்லையாயினும், என் கொள்கைக்குப் பொருத்தமாயினும் இல்லையாயினும், ரஷ்ய மக்கள் விரும்புகிற அரசாங்கத்தை அமைக்க அவர்களுக்கு உரிமை உண்டு என்று நான் கருதுகிறேன். உண்மையில், ரஷ்யாவில் நடந்திருக்கும் நிகழ்ச்சியை அறிந்து அதற்கேற்ப நியாயமாக நடந்து கொள்ள வேண்டுமே தவிர, உணர்ச்சிப் போக்கிலும் வெறுப்பின் காரணமாகவும் பொய்யான அறிக்கைகளின் அடிப்படையிலும் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பது என் கருத்து. வாள் முனையில் கருத்துக்களை நசுக்கி விடலாம் என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை. ஒரு உன்னத மனிதவாழ்வு வேண்டும் என்ற ஆசைக்குப் பரிகாரம், அத்தகைய வாழ்வை அமைப்பதுதான்'' என்று ராபின்ஸ் கூறினான்.

பொய்யும் வெறுப்பும் மலிந்திருந்த அமெரிக்க அரசியல் அரங்கில், அவனது குரல் கேட்கவில்லை. 1918-ஆம் ஆண்டு கோடைகாலம், அமெரிக்கா ஜெர்மனியுடன் போரிட்டுக் கொண்டிருந்தது; ரஷ்யாவோடு போரிடவில்லை. எனினும், ''போல்ஷ்விக்குகள் நமது விரோதிகள்'' என்று அமெரிக்க முதலாளித்துவப் பத்திரிகையான நியூயார்க் டைம்ஸ் எழுதியது. லெனினையும் அவருடைய கூட்டத்தினரையும் ''கொலைகாரர், கொள்ளைக்காரர், பைத்தியக்காரர், இரத்தவெறியர், மனிதப் பதர், ஜெர்மனியின் கையாட்கள்'' என்று அமெரிக்கப்பத்திரிகைகள் திட்டின.

★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


அத்தியாயம் 3

## ஒற்றன் மாசினோ

1918-இல், பெட்ரோகிராடு அமைதி இழந்தது. உள் நாட்டில் எதிர்ப் புரட்சிச் சக்திகள், அரசாங்கத்தைச் கவிழ்க்கச் சதிசெய்தன. அன்னிய நாடுகள் முற்றுகை யிட்டன. உடல் மெலிந்த ஆண்களும், பெண்களும், உண வுக்காகக் குளிரில் காத்து நின்று அவதியுற்றனர். இர வெல்லாம் துப்பாக்கிச் சப்தம். கொள்ளைக் கூட்டத்தார் நகரில் சுற்றித் திரிந்து கொள்ளையடித்தார்கள். ஆயுதம் தாங்கிய தொழிலாளர், வீடு வீடாகச்சென்று பதுக்கி வைத்திருந்த பொருள்களை வாரிவாரி மக்களுக்கு வழங் கினர்; கொள்ளைக் கூட்டத்தாரையும் பயங்கரவாதிகளை யும் கைது செய்தார்கள்.

எம். மாசினோ என்பவன் பெட்ரோகிராடுக்கு வந் தான். தன்னைத் துருக்கி நாட்டு வியாபாரி என்று சொல்லிக்கொண்டான். வயது நாற்பது இருக்கும். பணக் காரன் போல் காணப்பட்டான். பெண்களின் உள்ளத் தைக் கொள்ளை கொள்ளும் அழகன். குழப்ப நிலைமையி லிருந்த பெட்ரோகிராடு நகரில், மிக சாவதானமாக வியாபாரம் செய்து கொண்டிருந்தான். பல்கோவ் என்ற விடுதியில், சோவியத் விரோதிகள் கூடுவது வழக்கம். மாலையில் மாசினோ அவ்விடுதிக்குப் போவான். விடுதிக் காரன் செர்சி, அவனை மரியாதையுடன் வரவேற்பான். மாசினோ சந்தேகப்படத்தக்க, ஆண்களையும் பெண்களை யும் சந்திப்பான். அவர்கள் அவனிடம் தாழ்ந்த குரலில் பேசுவார்கள். சிலர் ரஷ்ய மொழியிலும், சிலர் பிரெஞ்சு அல்லது ஆங்கில மொழியிலும் பேசுவர். மாசினோவுக்குப் பல மொழிகள் தெரியும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


நாட்டின் குழப்பமான நிலைமையை மாற்றி, ஒரு ஒழுங்கான நிலைக்குக் கொண்டுவர, சோவியத் அரசாங்கம் முயற்சித்துக் கொண்டிருந்தது. எதிர்ப் புரட்சியின் காரணமாக, ஸ்தாபன அமைப்பு மேலும் மேலும் சிக்கலாகியது. ''முதலாளிகள், நிலச்சுவான்கள், பணக்காரர்கள் ஆகியோர் புரட்சியை ஒழித்துக்கட்ட, கடுமையான முயற்சி செய்தார்கள்'' என்று லெனின் குறிப்பிட்டார். சோவியத்துக்கு விரோதமான எதிர்ப்புரட்சிகளை அடக்கி ஒடுக்க, லெனின் ஒரு அமைப்பை நிறுவினார். அதற்குச் 'செக்கா' என்று பெயர்.

1918 கோடைகாலம், ஜெர்மன் தாக்குதல் ஏற்படலாம் என்ற பயத்தினால், சோவியத் அரசாங்கத்தின் அலுவலகம் மாஸ்கோவுக்கு மாற்றப்பட்டது. மாசினோவும் அங்கு சென்றான். அவன் தொழிலாளி உடை தரித்து, கிரெம்லின் அரண்மனைக்குப் போனான். வாயில் காவலாளியான கம்யூனிஸ்டு வாலிபன், அவனைத் தடுத்து நிறுத்தினான். சோவியத் அரசாங்கச் சீட்டு ஒன்றை மாசினோ காவலாளியிடம் காட்டினான். ''செக்கா ஏஜண்டு சிட்னி சார்ச்விச் ரெலின்ஸ்கி'' என்று, அந்தச் சீட்டில் குறிப்பிட்டிருந்தது.

''தோழர் ரெலின்ஸ்கி! நீங்கள் உள்ளே போகலாம்'' என்றான் அந்தக் காவலாளி.

பெட்ரோகிராடு செக்காவைச் சேர்ந்த தோழர் ரெலின்ஸ்கி என்றும், எம். மாசினோ என்றும், தனக்குப் புனைபெயர் சூடிக்கொண்ட அவன், மாஸ்கோவில் டக்மரா என்னும் புகழ்பெற்ற நடிகையின் உல்லாச மாளிகையில் தங்கியிருந்த பொழுது, தன்னை மான்சியர் கான்ஸ்டன்டைன் என்று சொல்லிக் கொண்டான். இவ்வாறு பல பெயர் கொண்டு திரிந்த அவன் ரெயிலி என்ற கைதேர்ந்த ஒற்றன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


## சிட்னி ரெயிலி

போல்ஷ்விஸத்தை எதிர்க்க ரஷ்யாவில் நுழைந்த இரகசிய அரசியல் வாதிகளில், மிகத் திறமை வாய்ந்தவன் ரெயிலி. அவன் எப்படி பிரிட்டிஷ் இரகசிய இலாகாவில் சேர்ந்தான் என்பது ஒரு புதிர். அவன் ரஷ்யாவில் பிறந்த வன். தந்தை அயர்லாந்து கடற்படை கேப்டன். தாய் ரஷ்யப் பெண். அவன் ஒடைசா பட்டினத்தில் வளர்ந்த வன். முதலாவது உலகப் போர் தொடங்கு முன், ரஷ்யா வில் போர்த் தளவாட உற்பத்திச் சாலையில் வேலை பார்த் தான். பிறகு ஜெர்மன் மூலதனத்தினால் நடத்தப்பட்ட ரஷ்யத் தொழிற்சாலையில் வேலைபார்த்தான். முதலாவது உலகப் போர் தொடங்குவதற்கு சற்று முன்பு, ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல்கள் கட்டப்படுவதைப் பற்றிய செய்திகள் லண்டனுக்கு ஒழுங்காகக் கிடைத்தன. அதற்குக் காரண மாக இருந்தவன் சிட்னி ரெயிலி.

1914-இல், ரெயிலி ரஷ்ய-ஆசிய பாங்கியின் அந்தரங்க பிரதிநிதியாக ஜப்பானில் தோன்றினான். அங்கிருந்து அமெரிக்கா சென்றான். பாங்கர்களையும், போர்க் கருவி களை உற்பத்தி செய்யும் முதலாளிகளையும் சந்தித்துப் பேசினான். இதற்குள் பிரிட்டிஷ் இரகசிய இலாகா ரிக்கார்டுகளில், 'எஸ்டி' என்ற இரகசியப் பெயரில், சிட்னி ரெயிலி, மிகத் தீரமும் அறிவாற்றலும் படைத்த ஒற்றன் என்று குறிப்பிடப்பட்டான்.

ஏழு மொழிகளில் பயிற்சியுள்ள ரெயிலி, அமெரிக்காவி லிருந்து ஐரோப்பாவுக்கு அழைக்கப்பட்டான். 1916-இல், அவன் சுவிஸ் எல்லையைக் கடந்து, ஜெர்மனிக்குச் சென்றான். ஜெர்மன் கடற்படை அதிகாரியைப் போல் நடித்து, கடற்படை அலுவலகத்தில் நுழைந்தான். ஜெர்மன் கடற்படை ஒற்றரின் மர்மமொழிகள் அடங்கிய பிரதி ஒன்றை வாங்கி லண்டனுக்கு அனுப்பினான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முதலாவது உலகப் போரின் மிகப் பெரிய வேவு வேலை இதுதான்.

1918-இல், ரெயிலி பிரிட்டிஷ் இரகசிய இலாகா டைரக்டராக ரஷ்யாவுக்கு மாற்றப்பட்டான். எதிர்ப் புரட்சிக்காரர்களில் பலர் அவனுடைய நண்பர்கள். எனவே, அந்த வேலைக்கு அவன் மிகப் பொருத்தமானவன். அவன் போல்ஷ்விக் எதிரி, தனது எதிர்ப் புரட்சிக் கொள்கையின் நோக்கத்தைத் தெளிவாகக் கூறினான்.

''ஜெர்மானியர் மனிதர்கள், அவர்களிடம் நாம் அடி படலாம். ஆனால், மாஸ்கோவில் வளர்ச்சியுறும் கொள்கை மனித வர்க்கத்திற்கு விரோதமானது. நாகரிகம் முன்னின்று அந்தக் கொடிய பூதத்தை வெட்டி வீழ்த்தவில்லையானால், அது நாகரிகத்தை அழித்து விடும்.''

போல்ஷ்விக் வெள்ளத்தைத் தடுப்பதற்காக, ஜெர்மனியோடும் கெய்சரோடும் சமாதான உடன்படிக்கை செய்து கொள்ளும்படி, லண்டனுக்கு அனுப்பிய தனது அறிக்கைகளில் அவன் குறிப்பிட்டதாவது:

''ரஷ்யாவில் பிறந்த இந்த நாற்றம் பிடித்த நோயை எப்படியும் தொலைத்தாக வேண்டும். ஜெர்மனியுடன் சமாதானம்! ஆம், ஜெர்மன்யுடன் சமாதானம்! எவருடனும் சமாதானம்! உலகில் ஒரே ஒரு எதிரிதான்! போல்ஷ்விக் அரக்கனை ஒழித்துக் கட்டுவதற்கான புனிதப் போரில், மனித வர்க்கம் ஒன்று படவேண்டும்!'' சோவியத்துக்கு எதிரான சதியில் அவன் முழு மூச்சுடன் வேலை செய்தான். சோவியத் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதே அவனது திடமான குறிக்கோள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## பணமும் கொலையும்

ரஷ்யாவில் போல்ஷ்விக் எதிர்ப்புக் கட்சிகளில் மிகப் பெரியது சமூகப் புரட்சிக் கட்சி. விவசாய சோஷலிசம் என்ற கொள்கையை அது பிரச்சாரம் செய்து வந்தது. கெரென்ஸ்கியின் போர் மந்திரியாக இருந்த போரிஸ் சாவிங்கோவ் அதன் தலைவன். தலைமுறை தலைமுறையாக ஜார் அடக்குமுறையில் அவதிப்பட்டுக் கிடந்த மக்களை அந்தக் கட்சியின் தீவிரமான முழக்கங்கள் கவர்ந்தன. சமூகப் புரட்சிக்காரர்கள் பயங்கர முறைகளைக் கையாண்டார்கள்.

பிரெஞ்சு இரகசிய இலாகாவிலிருந்து சமூகப் புரட்சிக்காரர்களுக்குப் பண உதவி கிடைத்தது. பிரெஞ்சுத் தூதன் நோலென்ஸ் கொடுத்த பணத்தினால், சாவிங்கோவ் ''ரஷ்ய மறுமலர்ச்சிச் சங்கம்'' என்ற பயங்கர இயக்கத்தின் மத்திய அமைப்பை மாஸ்கோவில் நிறுவினான். லெனினையும், மற்ற சோவியத் தலைவர்களையும் கொலை செய்வதே அதன் நோக்கம். பயங்கர இயக்கப் பயிற்சிக்காகவும்; ஆயுதங்களுக்காகவும் ரெயிலியின் சிபாரிசுப்படி, பிரிட்டிஷ் இரகசிய இலாகா, சாவிங்கோவுக்குப் பொருளுதவி செய்தது.

ரெயிலி ஜார் அபிமானி. சமூகப் புரட்சிக் கட்சி சோவியத் ஆட்சிக்குப் பதிலாக, புதிய ரஷ்ய அரசாங்கத்தை அமைப்பதை அவன் விரும்பவில்லை. ரெயிலி, சாவிங்கோவை நம்பியபோதிலும், இடதுசாரி சமூகப் புரட்சிக்காரர்கள் ஆபத்தான முற்போக்கு சக்தி என்று அவன் எண்ணினான். எனினும் ரெயிலி, அவர்களைப் பயன் படுத்திக் கொள்ளக் கருதினான். அதே பொழுது, ரஷ்யாவில் முற்போக்கு சக்திகளை ஒழித்துக் கட்டுவதென்று முடிவு செய்தான். ஜார் ஆட்சியை மீண்டும் நிலை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



திருத்தும் நோக்கத்தோடு இராணுவ சர்வாதிகாரத்தை நிலைநாட்டுவதையே முதல் வேலையாகக் கொண்டான். சமூகப் புரட்சிக்காரர்களுக்கும், மற்றுமுள்ள சோவியத் எதிரிகளுக்கும் பண உதவி செய்து, அவர்களுக்கு ஊக்கம் கொடுத்தான். அதே காலத்தில், தனியாக ஒரு சதி செய்து வந்தான். சோவியத் எதிரிகள் அவனுடைய சதியில் கலந்து கொண்டதால், அது வளர்ச்சியுற்றது. இச் சதிகாரர்கள், சோவியத் அரசாங்கத்திலும் செஞ்சேனையிலும் புகுந்து, ரெயிலிக்கு இராணுவ, அரசாங்க இரகசியங்களைச் சொன்னார்கள். செஞ்சேனையின் உத்தரவுகள் முத்திரையிடப் பட்டிருந்த போதிலும், மாஸ்கோ அலுவலகத்தில் பிரித்துப் பார்ப்பதற்கு முன் அவை லண்டன் நகரில் படிக்கப் படுகின்றன என்று, பெருமை பாராட்டினான் அந்தப் பிரிட்டிஷ் ஒற்றன்.

ரெயிலி தங்கியிருந்த இடத்தில் லட்சக் கணக்கான ரூபிள்கள் பூட்டி வைக்கப்பட்டிருந்தன. லோக்கார்ட் நிதி திரட்டி பிரிட்டிஷ் இலாகாவைச் சேர்ந்த 'ஹிக்ஸ்' என்பவன் மூலம் ரெயிலிடம் சேர்ப்பித்தான். லோக்கார்ட் எழுதிய பிரிட்டிஷ் ஏஜண்டு என்ற நூலில் பணம் திரட்டியதைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறான். சோவியத் அரசாங்கத்தைக் கவிழ்த்த பிறகு, புதிய அரசாங்கம் அமைக்க, பிரிட்டிஷ் ஒற்றன் ஒரு திட்டம் தயாரித்தான். சோவியத் எதிர்ப்பு நடவடிக்கையின் முதல் அடி, சாவிங் கோவினால் கொடுக்கப்பட்டது.

1918 ஜூன் 21-இல், சோவியத் பத்திரிகை இலாகா மந்திரி வொலோடார்ஸ்கி, பெட்ரோகிராடிலுள்ள ஒபுகோவ் ஆலையில் நடந்த தொழிலாளர் கூட்டத்திலிருந்து வெளியேறும்போது, சமூகப் புரட்சிக்காரன் ஒருவனால் கொல்லப்பட்டார். இரண்டு வாரங்களுக்குப் பிறகு, ஜூலை 6-இல், மாஸ்கோவிலிருந்த ஜெர்மன் தூதன் மிர்பக், சமூக புரட்சிக்காரன் புளும்கின் என்பவனால் கொல்லப்பட்டான். இதனால், போல்ஷ்விக்குகளிடையே பீதியைக்

www.tamilarangam.net



கிளப்புவதும், ஜெர்மன் தாக்குதலைத் துரிதப்படுத்து வதும், போல்ஷ்விசத்தை அழித்து விடுவதுமே, சமூகப் புரட்சிக்காரர்களின் நோக்கம். ஜெர்மன் தூதன் கொலை செய்யப்பட்ட அன்று, அகில ரஷ்ய சோவியத்துகளின் ஐந்தாவது காங்கிரஸ், மாஸ்கோவில் கூடியது. நேச நாடு களின் தூதர்கள், சோவியத் பிரதிநிதிகளின் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். ரெயிலி உள்ளே நுழைந் தான். ஏதோ நிகழ்ந்திருக்கிறதென்று, லோக்கார்ட் எண்ணினான். ரெயிலி லோக்கார்ட்டிடம் என்ன நடந்த தென்பதை, ரகசியமாகச் சொன்னான்: ''மிர்பக் என்ற ஜெர்மன் தூதனைச் சுட்டுக் கொன்றது, நாடு முழுவதும் சமூகப் புரட்சிக்காரர்களும், வெறுப்புற்றிருந்த போல்ஷ்விக்குகளும், புரட்சி செய்வதற்கான அறிகுறி, சமூகப் புரட்சிக்கட்சிப் போர் வீரர், சோவியத் பிரதிநிதி களைக் கைது செய்திருக்க வேண்டும்.'' ஆனால், ஏதோ தவறு ஏற்பட்டு விட்டது. தெருக்களில் துப்பாக்கிகள் முழங்கின.சோவியத் அரசாங்கம் நிலைமையைச் சமாளித்து விட்டது என்பது தெளிவாயிற்று.

ரெயிலி, பேசிக்கொண்டிருக்கும் பொழுது, தன் சட்டைப் பைக்குள்ளிருந்த ஒரு கடிதத்தை எடுத்து, துண்டு துண்டாகக் கிழித்து வாயில் போட்டு விழுங்கினான். லோக்கார்ட்டின் பக்கத்திலிருந்த பிரெஞ்சு இரகசிய இலாகா ஏஜண்டும் அப்படியே செய்தான். சில மணி நேரத்திற்குப் பிறகு, சோவியத் பிரதிநிதி ஒருவர் பேசினார். ''சோவியத் அரசைக் கவிழ்க்க முயற்சித்த ஆயுதம் தாங்கிய தாக்குதலைச் செம்படையும் செக்காவும் அடக்கிவிட்டது. அந்தக் கிளர்ச்சிக்காரர்களுக்குப் பொது மக்களின் ஆதரவு இல்லை. சமூகப் புரட்சிக் கட்சியைச் சேர்ந்த சில பயங்கரவாதிகள், வெடிகுண்டுகள், துப்பாக்கி கள், இயந்திரத் துப்பாக்கிகள் சகிதம் கைது செய்யப் பட்டார்கள். தலைவர்களில் சிலர் இறந்து போனார்கள். சிலர், தலைமறைவாகச் சென்றுவிட்டார்கள். சிலர், ஓடிப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போய்விட்டார்கள். தெருக்களில் கலகம் ஒய்ந்துவிட்ட தால், நேச நாட்டுத் தூதர்கள் இருப்பிடங்களுக்குப் போக லாம்'' என்று அவர் அறிவித்தார்.

எரஸ்லோவில் எழுந்த கிளர்ச்சியும் செஞ்சேனையால் அடக்கப்பட்டது. அதைத் தலைமை தாங்கி நடத்திய சாவிங்கோவ், பிடிபடாமல் தப்பிவிட்டான். ரெயிலி ஏமாற்றம் அடைந்ததால், மிகுந்த கோபத்துடன் இருந்தான். சமூகப் புரட்சிக்காரர்கள் முட்டாள் தனமாக நடந்துகொண்டார்கள் என்று அவன் கூறினான். தலைவர்கள் எல்லோரும் ஒரே இடத்தில் கூடியிருந்த பொழுது, திடீரென்று கிளம்பித் தாக்கியதில் தவறொன்று மில்லை என்று, அவன் தன்னைத் தானே சமாதானப் படுத்திக் கொண்டான். ஒரே அடியாக சோவியத் தலைவர் களைப் பிடித்துவிட வேண்டுமென்று, அவன் கருதினான். அதற்கான திட்டத்தை வகுத்துக் கொண்டிருந்தான்.

## சதி

நேச நாடுகள் ரஷ்யாவில் தலையிடப் போகின்றன என்ற செய்தி, 1918 ஆகஸ்டு மாதத்தில் வெளியாகியது. ஆகஸ்டு 2-இல், பிரிட்டிஷ் படை ஆர்ச் ஏஞ்சலில் இறங்கியது. ஜெர்மன் இராணுவத்திற்குப் போர்க் கருவிகள் கிடைக்காதபடி தடுப்பதே, அதன் திட்டம் என்று சொல்லப்பட்டது. ஆகஸ்டு 4-இல், காக்கஸஸ் பகுதியில் ஏராளமான எண்ணெய் கிடைக்கக்கூடிய பாகு நகரத்தைப் பிரிட்டிஷ், பிரெஞ்சுப் படை கைப்பற்றியது. சில நாட் களுக்குப் பின், பிரிட்டிஷ், பிரெஞ்சுப் படைகள், விலாடி வாஸ்டாக்கில் இறங்கின. 12-ஆம் தேதி, ஜப்பான் படை வந்திறங்கியது. 15, 16-ஆம் தேதிகளில் அமெரிக்கப் படையும் வந்தது.

சைபீரியாவில் பெரும் பகுதியைச் சோவியத் எதிரிகள் கைப்பற்றிக் கொண்டார்கள். உக்ரேனில் தளகர்த்தன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கிராஸ்நோவ், ஜெர்மனியின் உதவியால் சோவியத்தை எதிர்த்துத் தாக்கினான். கீவ் நகரில் ஜெர்மன் கைப்பாவையான ஹெட்மன் ஸ்குரோபட்ஸ்கி, யூதர்களையும் கம்யூனிஸ்டுகளையும் கொன்று குவித்தான்.

புதிய ரஷ்யாவின் எதிரிகள், மாஸ்கோவை வளைத்துக் கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தார்கள். மாஸ்கோவில் எஞ்சியிருந்த சில நேச நாட்டுப் பிரதிநிதிகள், அங்கிருந்து புறப்பட்டார்கள். சோவியத் அரசாங்கத்திடம் அறிவிக்காமலே வெளிக்கிளம்பினர்.

'பிரிட்டிஷ் ஏஜண்டு' என்ற தனது நூலில் லோக்கார்ட் குறிப்பிட்டிருப்பதாவது :—

''அது ஒரு நூதன நிலைமை. யுத்தப் பிரகடனம் இல்லாமலே, 'வீனா'விலிருந்து காக்கஸஸ் வரை, போர் நடந்துகொண்டிருந்தது. ரெயிலியுடன் பல தடவை நான் விவாதித்தேன். நாங்கள் மாஸ்கோவிலிருந்து சென்ற பிறகும், அவன் அங்கேயே தாமதிக்கப் போகிறதாகத் தீர்மானித்தான்.''

1918 ஆகஸ்டு முடிவில், நேச நாட்டுப் பிரதிநிதிகள் மாஸ்கோவில் அமெரிக்கப் பிரதிநிதியின் இருப்பிடத்தில், ரகசிய மகாநாடு கூடினர். மற்ற பிரதிநிதிகளின் இருப்பிடங்களில், சோவியத் கண்காணிப்பு அதிகமாக இருந்ததால், அமெரிக்கப் பிரதிநிதியின் இருப்பிடத்தில் அவர்கள் கூடினர். அமெரிக்கா, சைபீரியாவைத் தாக்கின போதிலும் சோவியத் அரசாங்கம் அமெரிக்காவுடன் நேசப் பான்மையாக நடந்துகொண்டது. மாஸ்கோ எங்கும் வில்சனுடைய பதினான்கு அம்சத் திட்டங்கள் பொறிக்கப்பட்ட அட்டைகள் காணப்பட்டன ''போல்ஷ்விக்குகளை எப்படி மரியாதையுடன் நடத்த வேண்டுமென்பதை அமெரிக்கர்கள் மட்டும் அறிந்திருக்கிறார்கள்'' என்று 'இஸ்வெஸ்தியா'

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தலையங்கம் எழுதியது. ரெய்மாண்டு ராபின்ஸின் வேலை முழுவதும் வீண் போகவில்லை. அந்த மாநாட்டிற்குப் பிரெஞ்சு பிரதிநிதி தலைமை வகித்தான். நேச நாட்டுப் பிரதிநிதிகளும் ஏஜண்டுகளும், மாஸ்கோவிலிருந்த பிரெஞ்சுப் பத்திரிகை நிருபரும் கூடியிருந்தனர்.

சோவியத் எதிர்ப்பு இயக்கம் எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறது என்பதைச் சொல்லவே ரெய்லி அக்கூட்டத்தைக் கூட்டினான். கிரெம்லின் தளகர்த்தன் பெர்சின் என்பவனை இரண்டு லட்சம் டாலர்களுக்கு விலைக்கு வாங்கிவிட்டதாக ரெயிலி சொன்னான். மேலும் அவன் கூறியதாவது :

''நமது அமைப்பு இப்போது மிகப் பலம் பொருந்தியதாகிவிட்டது, லெட்டிஷ் மக்கள் நமது பக்கம் இருக்கிறார்கள். சோவியத் அரசாங்கத்திற்கு முதல் அடி கொடுத்ததும், மக்கள் நம் பக்கம் வந்துவிடுவார்கள். போல்ஷ்விக் மத்தியக் கமிட்டியின் கூட்டம் விரைவில் மாஸ்கோவில் நடைபெறும். ஒரே இடத்தில் சோவியத் தலைவர்கள் எல்லோரும் கூடுவர். அப்பொழுது திடீரென்று தாக்கி அனைவரையும் கைது செய்துவிட வேண்டும்'' என்று ரெயிலி அறிவித்தான்.

''மத்தியக் கமிட்டி கூடியிருக்கும் கட்டிடத்தை, நம் மீது அனுதாபமுள்ள காவலாளர் காவல் காத்து நிற்பார்கள். முழுவதும் நம்பத் தகுந்தவர்களையே, பெர்சின் காவலாளராகப் பொறுக்கி எடுப்பான். அவன் குறித்த நேரத்தில் கட்டிடத்தின் கதவுகள் அடைக்கப்படும். ரெயிலியின் தலைமையில், ஆயுதம் தாங்கிய வீரர்கள், அதே விநாடியில் கட்டிடத்திற்குள் பாய்ந்து, போல்ஷ்விக் கட்சியின் மத்தியக் கமிட்டி உறுப்பினர்களைக் கைது செய்வர்.

''லெனினும் அவரது கூட்டாளிகளும் சுடப்படுவர். பிறகு சோவியத் ஆட்சி அழிந்துவிடும். மாஸ்கோவில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



60,000 அதிகாரிகள் இருக்கிறார்கள். ஒரு விநாடியில் அவர்கள் படை திரட்டிவிடுவர். நேச நாட்டு இராணுவம் வெளியிலிருந்து தாக்கும்போது, அவர்கள் பட்டணத்திற்குள்ளிருந்து சோவியத் அரசாங்கத்தைத் தாக்குவார்கள். இந்த இரகசிய இராணுவத்தை, ஜார் தளபதி 'யுடெனிச்' நடத்துவார். தளகர்த்தன் சாவிங்கோவ், மற்றொரு இராணுவத்தை வட ரஷ்யாவில் திரட்டுவார். இத்திட்டத்தினால் போல்ஷ்விக்குகள் அழிக்கப்படுவர்.'' இதுவே ரெயிலியின் சதி. பிரிட்டிஷ், பிரெஞ்சு இரகசிய இலாகாக்கள் இச்சதிக்கு ஆதரவு தந்தன. பிரிட்டன் யுடெனிச்சுக்கு உதவி செய்தது. பிரான்சு சாவிங்கோவுக்கு உதவியளித்தது.

அங்கு கூடியிருந்த நேசநாட்டு பிரதிநிதிகள், சதியை நிறைவேற்றத் திட்டம் வகுத்தார்கள். சோவியத் அரசாங்கத்தைப் பாதுகாக்கும் பொருட்டு, நாட்டின் பல பாகங்களிலிருந்தும் உதவி திரட்ட செஞ்சேனை முயற்சி செய்யும். அந்த உதவியைத் தடுக்க, குறிப்பிட்ட பாலங்களையும், ரயில் ரோடுகளையும் தகர்த்தெறிவதென்று, அவர்கள் திட்டமிட்டார்கள்.

ஆயுதம் தாங்கித் தாக்கும் நாள் நெருங்கியதும், ரெயிலி பெர்சினை அடிக்கடி சந்தித்து, சதியின் ஒவ்வொரு அம்சத்தையும் நுணுக்கமாக விவாதித்தான். சதி இயந்திரம் ஒழுங்காக அமைக்கப்பட்டிருக்கிறதா என்பதைச் சரிபார்ப்பதற்காக, அவன் பெட்ரோகிராடு போகத் தீர்மானித்தான்.

செக்கா ஸ்தாபனத்தின் ஏஜண்டு 'சர்செவிச் ரெலின்ஸ்கி' என்று கள்ளத்தனமாக பாஸ்போர்ட் தயாரித்துக்கொண்டு, ரெயிலி மாஸ்கோவிலிருந்து பெட்ரோகிராடுக்கு ரயிலில் பிரயாணமானான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ரெயிலியின் வெளியேற்றம்

ரெயிலி பெட்ரோகிராடு போனவுடன், பிரிட்டிஷ் கடற்படைக், கேப்டன் குரோமியைச் சந்தித்தான், தாக்குதல் திட்டத்தை அவனிடம் சொன்னான். ''மாஸ்கோ நமது கையில்!'' என்று ரெயிலி சொன்னதும், குரோமி மகிழ்வுற்றான். லண்டனுக்கு இரகசிய அறிக்கை ஒன்று தயாரிப்பதாக, ரெயிலி குரோமியிடம் சொன்னான்.

மறுநாள் காலையில், பெட்ரோகிராடிலிருந்த சதிகாரர்களைச் சந்தித்தான். மத்தியானம் கிரமட்டிகோவ் என்பவனிடம் டெலிபோனில் பேசினான்.

கிரமட்டிகோவ் கம்மிய குரலில் ''யார் அது?'' என்று கேட்டான்.

''நான்தான், ரெலின்ஸ்கி'' என்று ரெயிலி பதில் சொன்னான்.

''யார்?''

ரெயிலி திரும்பவும் அதே பதிலைச் சொன்னான். ''ஒருவன் மோசமான செய்தி கொண்டு வந்திருக்கிறான். வைத்தியர்கள் ரண சிகிச்சையை முன்கூட்டியே ஆரம்பித்துவிட்டார்கள். நோயாளியின் நிலைமை ஆபத்தில் இருக்கிறது. நீங்கள் என்னைப் பார்க்க விரும்பினால், உடனே புறப்பட்டு வாருங்கள்'' என்றான் கிரமட்டிகோவ்.

ரெயிலி விரைந்து சென்றான். அவன் வீட்டை அடைந்ததும், கிரமட்டிகோவ் மேஜையிலிருந்த தாள்களைப் பரபரப்புடன் தீயிலிடுவதை ரெயிலி கண்டான்.

''அந்த மடையர்கள் காலம் தவறித் தொடங்கிவிட்டார்கள். யுர்ட்ஸ்கி இறந்து போனான். அவன், இன்று காலை அவனது அலுவலகத்தில் கொல்லப்பட்டான்''

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்று கிரமட்டிகோவ் அலறினான், பேசிக்கொண்டே, காகிதங்களைத் துண்டு துண்டாக்கித் தீயில் போட்டுக் கொண்டிருந்தான்.

''நாம் இங்கிருப்பது மிகவும் ஆபத்து. என்மீது முன்னமே சந்தேகம் ஏற்பட்டு விட்டது. ஏதாவது விவரம் வெளியானால், முதலாவது பிடிபடுபவர்கள் நீங்களும் நானும்தான்'' என்றான் கிரமட்டிகோவ்.

ரெயிலி மீண்டும் பிரிட்டிஷ் தூதனைச் சந்திக்கப் போனான். தெருவில் ஆண்களும் பெண்களும் தலைவிரி கோலமாக, அங்குமிங்கும் ஓடுவதைக் கண்டான். செஞ் சேனை வீரர்களை ஏற்றிக்கொண்டு, கார்கள் ஒன்றன்பின் ஒன்றாகப் பறந்தன. ரெயிலி பிரிட்டிஷ் தூதன் இருந்த இடத்திற்கு ஓடோடியும் சென்றான். அலுவலகத்தில் பல பிணங்கள் கிடந்தன. அதன் எதிரே நான்கு கார்கள் நின்றன. தெருவை மறித்து செஞ்சேனை வீரர்கள் இரு வரிசையாக நின்றார்கள்.

''தோழர் ரெலின்ஸ்கி எங்களுடைய திருநாளைப் பார்க்க வந்தீர்களா?'' என்று ஒரு குரல் கேட்டது. ரெயிலி சட்டென்று திரும்பிப் பார்த்தான். செஞ்சேனை வீரன் ஒருவன் நிற்பதைக் கண்டான். ரெலின்ஸ்கி அவனை அதற்குமுன் பன்முறை சந்தித்ததுண்டு.

''தோழனே! நடந்ததென்ன?'' என்று விரைவாகக் கேட்டான் ரெயிலி.

''சிட்னி ரெயிலி என்பவனைச் செக்கா தேடிக் கொண்டிருக்கிறது'' என்று அந்தப் போர்வீரன் பதிலுரைத்தான்.

என்ன நடந்ததென்பதை ரெயிலி பிறகு தெரிந்து கொண்டான். யுரிட்ஸ்கியைக் கொலை செய்தவன் சமூகப் புரட்சிக்காரன் என்பதும், அவனுக்குச் சிட்னி ரெயிலி என்ற ஆங்கில ஏஜண்ட் உதவியளித்தான் என்பதும்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செக்கா தலைவனுக்குத் தெரிந்ததும், பெட்ரோகிராடு சோவியத் அரசாங்கம் பிரிட்டிஷ் தூதரக அலுவலகத்தை மூடும்படி, செக்கா ஏஜெண்டுகளை அனுப்பியது.

கேப்டன் குரோமியின் கட்டளைப்படி, பிரிட்டிஷ் அலுவலகத்திலிருந்த காகிதங்களை அதிகாரிகள் தீயில் போட்டுக் கொண்டிருந்தார்கள். சோவியத் இரகசிய போலீஷ், அலுவலகத்திற்குள் புகுந்ததும், குரோமி மாடியிலிருந்து கீழே ஓடிவந்து கதவைச் சாத்தினான். சோவியத் போலீஸ், கதவை உடைத்து உள்ளே புகுந்ததும், குரோமி தன் கையிலிருந்த சுழல் துப்பாக்கியால் போலீஸ்காரர் மீது சுட்டான். ஒரு மந்திரியும் பல அதிகாரிகளும் சுடப்பட்டுக் கீழே சாய்ந்தார்கள். செக்கா ஏஜண்டுகள் குரோமியைக் குறிவைத்துச் சுட்டனர். அவன் நெற்றியில் குண்டு பாய்ந்து இறந்து போனான்.

செர்சிடார்னோஸ்கி என்ற சமூகப் புரட்சிக்காரன் வீட்டில், ரெயிலி இராப்பொழுதைக் கழித்தான். காலையில் நிலைமையைத் தெரிந்துவர ரெயிலி, டார்னோஸ்கியை வெளியே அனுபினான். அவன், கம்யூனிஸ்டுக் கட்சிப் பத்திரிகை 'பிரவ்டா' பிரதி ஒன்றை வாங்கிக் கொண்டு திரும்பி வந்தான். ''எவனோ லெனினை நோக்கிச் சுட்டான். துரதிர்ஷ்டவசமாகக் குறி தவறி விட்டது'' என்று சொல்லிக் கொண்டே, அவன் ரெயிலிடம் பத்திரிகையைக் கொடுத்தான். லெனினுக்குத் தீங்கு விளைவிக்க முயற்சித்த அந்தத் துணிகரச் செயல், கொட்டை எழுத்துக்களில் காணப்பட்டது. முந்தியநாள் மாலையில் லெனின். மிக்கெல்சன் ஆலையில் ஒரு கூட்டத்தில் பேசிவிட்டு வெளியேறிய பொழுது, பன்யா கப்ளன் என்ற பெண் அவரைச் சுட்டாள். அவள் சமூகப் புரட்சிக் கட்சி உறுப்பினர். சோவியத் தலைவர் மீது அவள் இருமுறை சுட்டாள், ஒரு குண்டு அவர் மார்பில் பாய்ந்தது. மற்றொன்று கழுத்தில் பாய்ந்தது. ஆனால், லெனின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


சாகவில்லை. அவர் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்ததாகச் சொல்லப்பட்டது.

லெனினைச் சுட்ட துப்பாக்கி, கப்ளனுக்குச் சாவிங் கோவ் கொடுத்தது. இந்த உண்மையை 'பயங்கரவாதியின் குறிப்புகள்' என்ற நூலில் சாவிங்கோவ் தெளிவாக்கியிருக் கிறான்.

ரெயிலி மாஸ்கோவுக்குத் திரும்பும்போது, இளின் என்ற ஸ்டேஷனில் பத்திரிகை வாங்கினான். லெனினையும் மற்ற சோவியத் தலைவர்களையும் சுட்டுக் கொன்றுவிட்டு, மாஸ்கோவையும் பெட்ரோகிராடை - யும் கைப்பற்றி சாவிங்கோவ், யுடெனிச் ஆகிய இருவர் தலைமையில், இராணுவ சர்வாதிகாரத்தை அமைக்க, ரெயிலி செய்த சதியின் முழு விவரமும் அதில் சொல்லப்பட்டிருந்தது. ரெயிலி மிகுந்த கலவரத்துடன் செய்தியைப் படித்தான். நேச நாட்டுப் பிரதிநிதிகள் அமெரிக்கப் பிரதிநிதியின் அலுவலகத்தில் கூடி, சதி செய்த பொழுது, அங்கிருந்த பிரெஞ்சுப் பத்திரிகாசிரியனான ''ரெனிமர்ச்சண்டு'' என் பவன் சதியின் முழு விவரத்தையும் போல்ஷ்விக்குகளிடம் சொல்லிவிட்டான்.

சோவியத் தலைவர்களைக் கொல்வதற்காக, சிட்னி ரெயிலி தனக்கு லஞ்சம் கொடுத்த விவரத்தை, லெட்டின் காவல்படையின் தலைவனான பெர்சின் சொல்லிவிட்டான் ஆர்ச் எஞ்சலிலுள்ள பிரிட்டிஷ் பகுதிக்குச் செல்ல, பெர்சி னுக்கு லோக்கார்ட் கொடுத்த அனுமதிக் கடிதமும், பத்திரிக்கையில் வெளியாகியது.

செக்கா அமைப்பு லோக்கார்ட்டை மாஸ்கோவில் கைது செய்தது. மற்ற நேச நாட்டு அதிகாரிகளும் ஏஜண்டு களும் காவலில் வைக்கப்பட்டார்கள். ரெயிலியைப் பிடிக்கக் கடுமையான முயற்சி செய்யப்பட்டது. மாசினோ, கான்ஸ்டன்டைன், ரெலின்ஸ்கி என்ற புனை பெயர்களும்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


அங்க அடையாளங்களும் மாஸ்கோ எங்கும் விளம்பரப் படுத்தப்பட்டன. இத்தகைய சூழ்நிலையிலும் ரெயிலி, மாஸ்கோ சென்றான், லெனினைச் சுட்ட கப்ளனின் கூட்டாளியான வெராபெட் ரோவ்னா வீட்டில், டக்மரா என்ற நடன மாதை ரெயிலி கண்டான்.

பன்முறை தன் அறையைச் செக்கா சோதனையிட்ட தாக, டக்மரா ரெயிலியிடம் சொன்னாள். ஆனால், ரெயிலி சதிக்காகத் திரட்டிய நிதியில் இருபது லட்சம் ரூபிள்கள் அவளிடமிருந்தது. அவை செக்காவிடம் சிக்கவில்லை. அவள் கைது செய்யப்படவுமில்லை. அவள் மூலமாக ரெயிலியைப் பிடிக்க செக்கா திட்ட மிட்டிருந்ததோ என்னவோ, தெரியாது. ரெயிலி அந்தப் பணத்தைக் கையில் வைத்துக் கொண்டு. கிரேக்க வணிகன் போலவும், வேலை இழந்த ஜார் அதிகாரி போலவும், சோவியத் அதிகாரி போலவும், கம்யூனிஸ்டும் போலவும் சமயத்துக் கேற்ப மாறு வேடங்கள் பூண்டு, செக்காவிடம் சிக்காமல் தப்பித்துக் கொண்டான்.

ரெயிலி, ரஷ்யாவில் பல வாரங்கள் தாமதித்து, சோவியத் எதிரிகளுக்கு ஊக்கமளித்தான். பன்முறை மயிரிழையில் தப்பினான். கள்ளத்தனமாக, ஜெர்மன் பாஸ்போர்ட் தயாரித்துக் கொண்டு, நார்வே வழியாக இங்கிலாந்து சென்றான். லண்டன் போனவுடன், நடந்த நிகழ்ச்சிகள் அனைத்தையும் பிரிட்டிஷ் இரகசிய இலாகா வுக்குத் தெரிவித்தான். இழந்துவிட்ட வாய்ப்புகளை நினைத்து வருந்தினான்.

ஜெர்மனியை எதிர்த்து, இங்கிலாந்து போர் புரிந்து கொண்டிருந்தது தவறு; மேற்கு முனையில் போர் நிறுத்தப் படவேண்டும்; போல்ஷ்விசத்திற்கு எதிராகக் கூட்டு முன்னணி நிறுவவேண்டும் என்று ரெயிலி திடமாக எண்ணினான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


''சமாதானம்! எவ்வித நிபந்தனையிலும் சமாதானம் !! அதன் பிறகு, மனித வர்க்கத்தின் உண்மையான விரோதிக்கு எதிராக ஐக்கிய முன்னணி!'' என்று ரெயிலி கதறினான்.

O

அத்தியாயம் 4

# சமாதானமும் போரும்

முதலாவது உலகப் போருக்குப் பிறகு, பெர்லின், ஹாம்பர்க், பவேரியா பகுதிகளில் சோவியத்துகள் தோன்றின. 'சமாதானம்' 'ஜனநாயகம்' என்ற முழக்கங்கள், பாரிஸ், லண்டன், ரோம் நகரங்களில் எழுந்தன. ஹங்கேரியிலும் புரட்சி வெடித்தது. நான்கு ஆண்டுகளாகக் கொடிய போரில் அவதியுற்ற மக்கள், போரை வெறுத்தனர்.

''ஐரோப்பா முழுதும் புரட்சி மனப்பான்மை நிரம்பியிருக்கிறது. தொழிலாளரிடையே வெறுப்பும் கோபமும் கொந்தளிப்பும் காணப்படுகின்றன. தற்காலச் சமூக அமைப்பின் அடிப்படையாக இருக்கும் பொருளாதாரக் கொள்கைகளை மக்கள் சந்தேகிக்கத் தொடங்கிவிட்டனர்'' என்று, 1919 மார்ச் மாதம் நடந்த பாரிஸ் சமாதான மகாநாட்டிற்குச் சமர்ப்பித்த இரகசிய அறிக்கையில் லாயட் ஜார்ஜ் குறிப்பிட்டிருந்தார்.

1919 ஜனவரியில், உட்ரோவ் வில்சன், டேவிட் லாயட் ஜார்ஜ், ஜார்செஸ் கிளமன்சோ, விக்டோரியா ஓர்லண்டோ ஆகிய நால்வர், உலக சமாதானத்தைப் பற்றிப் பேச, பாரிசில் கூடினர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


உலகில் ஆறில் ஒரு பகுதியான ரஷ்யாவுக்குச் சமாதான மகாநாட்டில் இடமில்லை. அது நடைபெறும் போது, சோவியத் ரஷ்யாவுக்கு எதிராகக் கொடிய போரை நடத்திக்கொண்டிருந்த கோல்ச்சாக், டெனிகின் ஆகியவர்களுக்கு நேச நாடுகள் உதவி செய்தன. அது மட்டுமல்ல, அவை சோவியத்திற்கு விரோதமாகப் பிரச் சாரமும் செய்தன. ''இராணுவ வீரர்கள் ரஷ்யப் பணக் காரப் பெண்களைத் தங்கள் இருப்பிடங்களுக்குப் பலவந்த மாகக் கடத்திச் செல்லுகிறார்கள்'' என்பது போன்ற போய்ச் செய்திகளை, 1919-இல் அமெரிக்க, ஐரோப்பியப் பத்திரிகைகள் பரப்பின. ஜட்சன்கிரேவ்ஸ் போன்ற தளகர்த்தர்கள், ரஷ்யாவைப் பற்றிக் கூறிய உண்மைகள் இருட்டடிப்புச் செய்யப்பட்டன.

''சோவியத் எதிர்ப்புப் போர் நியாயமானதுதானா'' என்று கேட்கத் துணிந்தவன், போல்ஷ்விக் என்று பட்டம் சூட்டப்பட்டான்.

''ஜெர்மன் போரை விரைவில் முடிக்கவேண்டும்; நேச நாடுகளின் படைகளை ஒன்றுதிரட்டிச் சோவியத் ரஷ்யாவைத் தாக்க வேண்டும்'' என்று, பிரெஞ்சுத் தளகர்த்தன் மார்ஷல் போக் சமாதான மகாநாட்டின் இரகசியக் கூட்டத்தில் பேசினான்.

''ஜெர்மனியில் சோவியத் இயக்கம் வேகமாகப் பரவு கிறது. ஆதலால், அது நேச நாடுகளின் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளும். சமாதானத்தினால்தான் ஜெர்மன் சர்க்கார் நெருக்கடியைச் சமாளிக்கமுடியும்'' என்று சோவியத் விரோதியான பிரெஞ்சுத் தளகர்த்தன் ஜெர் மனிக்காக வக்காலத்து வாங்கினான். ஜெர்மன் இராணுவத் தளகர்த்தன் மாக்ஸ் ஹாப்மன் அதுவரை ஜெர்மனிக்கு விரோதமாகப் போர்புரிந்த மார்ஷல் போக் என்பவனைச் சந்தித்து, ''மாஸ்கோ மீது படையெடுத்து, போல்ஷ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


விசத்தை அழித்துவிட வேண்டும்'' என்ற திட்டத்தைக் குறித்து அவனுடன் விவாதித்தான். போக் அதை ஏற்றுக் கொண்டான்.

''தற்போது ரஷ்யாவில் போல்ஷ்விசமும், அராஜகமும் தலைவிரித்தாடுகின்றன. மேற்குப் போர்முனையில் முக்கியப் பிரச்னைகளை முடிவு செய்துவிட்டு, முழு ஆற்றலையும் கிழக்கில் பயன்படுத்தி, புரட்சியை நசுக்கி விடலாம் என்பது எனது திட்டம். போலிஷ் துருப்புகளுக்கு நவீனப் போர்க் கருவிகள் கொடுத்தால், ரஷ்யர்களை எதிர்த்துப் போர் புரிவார்கள். ருமேனியர்கள், கிரேக்கர்கள், நேச நாடுகளிடம் பற்றுள்ள ரஷ்யர்கள், ஆகியோரை எதிர்ப்பு அணியில் திரட்டலாம். இப்படிச் செய்தால், 1919-இல், போல்ஷ்விசம் மாண்டுவிடும்'' என்று, போக் பாரிஸ் மகாநாட்டில் கொக்கரித்தான்.

## சமாதான மகாநாடு

சோவியத் எதிர்ப்புத் திட்டத்தை, பிரிட்டிஷ் பிரதமர் லாயட் ஜார்ஜ் பாரிஸ் சமாதான மகாநாட்டில் எதிர்த்தார்.

''மேற்குப் போர்முனையில் துருப்புகள் தேவையிருந்த காலத்தில், ஜெர்மனி பத்து லட்சம் போர் வீரர்களை ரஷ்ய மாகாணங்கள் சிலவற்றில் வைத்திருந்தது. அதுமட்டுமல்ல, அப்பொழுது போல்ஷ்விசம் வலுவுறவில்லை. தற்போது மேற்கு நேசநாடுகளில் எந்த ஒரு நாடாவது, பத்து லட்சம் போர் வீரர்களை ரஷ்யாவுக்கு அனுப்பத் தயாராயிருக்கிறதா? ஒரு ஆயிரம் பிரிட்டிஷ் போர் வீரர்களை மேற்கொண்டும் அனுப்பினால், பிரிட்டிஷ் இராணுவம் கலகம் செய்யும். அதே போன்று, சைபீரியாவிலுள்ள அமெரிக்கா, கனடா, பிரெஞ்சுப் போர் வீரர்களும் கலகம் செய்வார்கள். இராணுவத்தினால் போல்ஷ்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


விசத்தை அடக்கி விடலாம் என்ற எண்ணம், பைத்தியக்காரத்தனமானது. அடக்க முடியுமென்று வைத்துக் கொண்டாலும், ரஷ்யாவை யார் ஆட்சி செய்வது?'' என்றார் லாயட் ஜார்ஜ். மேலும் ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் புரட்சி கிளம்பும் என்று அவர் பயந்தார். ரஷ்யாவில் தலையிடுவதைப் பிரிட்டிஷ் மக்கள் வெறுத்தார்கள். அவர் போக் திட்டத்தை எதிர்த்ததற்கு. வேறு சிறந்த காரணமும் உண்டு. ஹென்ரி வில்சன், போர் மந்திரி சபைக்கு ஒரு இரகசிய அறிக்கை அனுப்பியிருந்தார். அதில் அவர் குறிப்பிட்டிருந்ததாவது :

''ஐரோப்பாவிலும் ரஷ்யாவிலும் இருக்கின்ற நமது துருப்புகளைக் கொண்டு வந்து, இனி புரட்சி வெடிக்கக் கூடிய இங்கிலாந்து, அயர்லாந்து, எகிப்து, இந்தியா ஆகிய இடங்களைப் பலப்படுத்த வேண்டும்.'' இதுவே அச் சிறந்த காரணம். மேலும் பிரிட்டன் வேறு இடத்தில் கவனம் செலுத்தும்பொழுது, போக், கிளமன்சோ ஆகிய இருவரும், ரஷ்யாவில் பிரெஞ்சு ஆதிக்கத்தை நிலை நாட்ட முயற்சிப்பார்கள் என்றும், லாயட் ஜார்ஜ் அச்சமுற்றார்.

ரஷ்யாவில் தலையிடாதிருந்தால், தன் விருப்பத்தை நிறைவேற்றலாம் என்றும், அவர் எண்ணினார். எனவே, போல்ஷ்விக்குகளுக்கு நீதி வழங்க வேண்டுமென்று, அமெரிக்கத் தலைவர் சொன்னதை அவர் ஆதரித்தார். பாரிஸ் இரகசிய மகாநாட்டில், அவர் தனது கருத்தைத் தெளிவாக வெளியிட்டார் :

''பிரெஞ்சுப் புரட்சி மக்களுக்கு நிலம் தந்தது. எனவே பிரெஞ்சு மக்கள் அதை ஆதரித்தார்கள். அதே காரணத்தால், ரஷ்ய விவசாயிகள் போல்ஷ்விக் கொள்கையை ஏற்றுக் கொண்டார்கள். போல்ஷ்விக் அரசாங்கமே உண்மையான அரசாங்கம். முன்னர், ஜார் அரசாங்கம் முற்றிலும் செல்லரித்துப் போய் விட்டது என்ற உண்மை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


நமக்குத் தெரிந்திருந்தும், நாம் அதையே ஏற்றுக் கொண்டோம். இப்போது போல்ஷ்விக் அரசாங்கத்தை நாம் அங்கீகரிக்க மறுக்கிறோம். மக்களின் பிரதிநிதிகளை நாமே தேர்ந்தெடுக்க வேண்டும் என்று கூறுவது, எந்தக் கொள்கைகளுக்காகப் போரிட்டோமோ அவற்றிற்கு முரணானது.''

லாயட் ஜார்ஜ் கூறியதை எவரும் மறுக்கமுடியாது என்றார் அமெரிக்க ஜனாதிபதி வில்சன். ரஷ்யாவில் சமாதானம் நிலைபெற, பிரிங்கிபோ தீவில் அல்லது வேறு இடத்தில் தனி மகாநாடு ஒன்று கூட்டவேண்டும். சோவியத் பிரதிநிதியையும். சோவியத் எதிர்ப்புக் கூட்டத்தாரின் பிரதிநிதியையும் மகாநாட்டுக்கு அழைக்க வேண்டும் என்று, அவர் தனது கருத்தைத் தெரிவித்தார்.

''போல்ஷ்விக்குகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதை நான் ஒப்புக்கொள்ள முடியாது. அவர்கள் குற்றவாளிகள் என்பதற்காக அல்ல, அவர்களை நம்மோடு சம நிலைமைக்கு உயர்த்தக் கூடாது என்பதற்காகத்தான். தற்போது போல்ஷ்விச ஆபத்து மிகுந்துள்ளது. போல்ஷ்விசம் (கம்யூனிசம்) காட்டுத் தீபோல் பரவுகிறது. அது பால்டிக் பகுதிகளிலும் போலந்திலும் புகுந்துவிட்டது. புடாபெஸ்ட், வீயன்னா ஆகிய இடங்களிலும் பரவுகிறது என்ற செய்தி, இன்று காலை கிடைத்தது. இத்தாலியும் ஆபத்தில் இருக்கிறது. பிரான்சைக் காட்டிலும் அங்கே ஆபத்து அதிகம். போல்ஷ்விசம் ஜெர்மனியில் பரவிய பிறகு, ஆஸ்திரியா, ஹங்கேரி, இத்தாலி ஆகிய நாடுகளிலும் பரவுமானால், ஐரோப்பா . ஆபத்துக்குள்ளாகும். போல்ஷ்விசத்தைத் தடுக்க ஏதாவது செய்தாக வேண்டும்'' என்று, கிளமென்சோ அலறினான். போக், கிளமென்சோ ஆகிய இருவரின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல், உட்ரோவ் வில்சனும், லாயட் ஜார்ஜும் சமாதான முயற்சியில் இறங்கினர். சமாதான நிபந்தனைகளைத் தயாரித்து, சோவியத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அரசாங்கத்துக்கும், சோவியத் எதிர்ப்பாளருக்கும் வில்சன் அனுப்பினார். பிரிங்கிபோ மகாநாட்டுக்குப் பிரதிநிதியை அனுப்ப, சோவியத் சம்மதித்தது. சோவியத் ஆட்சி விரைவில் கவிழ்ந்துவிடும் என்று நேச நாடுகளின் பிரதிநிதிகள் கருதினர். எனவே, அவர்கள் சொற்படி சோவியத் எதிரிகள் பிரிங்கிபோ மகாநாட்டுக்குப் பிரதிநிதிகளை அனுப்ப மறுத்தார்கள்.

ஒரு முடிவுக்கும் வர முடியாதென்பதை உணர்ந்த லாயட் ஜார்ஜ், லண்டனுக்குத் திரும்பினார். போல்ஷ்விசத்தை முழு மூச்சுடன் எதிர்ப்பதற்காக பிரிட்டிஷ் யுத்த இலாகா செயலாளர் சர்ச்சில், பாரிஸ் நகருக்கு ஓடினார். 1919 பிப்ரவரி 14 இல், அதாவது வில்சன் அமெரிக்காவுக்குப் புறப்பட்டுப் போவதற்கு முதல் நாள், சர்ச்சில் அவரைச் சந்தித்தார். வில்சனின் பிரிங்கிபோ சமாதானத் திட்டத்தைச் சர்ச்சில் எதிர்த்தார்.

"நேற்று லண்டனில் மந்திரி சபை கூடியது. ரஷ்ய நிலைமையையும், பிரிங்கிபோ மகாநாட்டையும் பற்றிப் பேச்சு நடந்தது. போல்ஷ்விக்குகள் மகாநாட்டுக்கு வருவதாயிருந்தால் நன்மை எதுவும் ஏற்பட முடியாது என்பது மந்திரி சபையின் கருத்து......" என்றார் சர்ச்சில்.

"நான் புறப்படுவது தெரிந்து, தாங்கள் இங்கு வந்திருப்பதால், என் சொந்தக் கருத்தைத் தெரிவிக்கிறேன். ரஷ்யாவில் நடப்பதென்ன என்பது தெளிவாகத் தெரியவில்லை. நேச நாடுகளின் படைகள் ரஷ்யாவில் எவ்வித நற்செயலையும் செய்யவில்லை. எதற்காக, யாருக்காக, அவர்கள் போர் புரிகிறார்கள் என்பது அவர்களுக்கே தெரியாது. ரஷ்யாவில் ஒழுங்கை நிலைநாட்டும் முயற்சிக்கு அவர்கள் உதவி செய்யவில்லை. ஆதலால் நேசநாடுகளின் படைகளை ரஷ்யாவிலிருந்து வெளியேற்ற வேண்டும்" என்றார் வில்சன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''நேசநாடுகளின் துருப்புகளை ரஷ்யாவிலிருந்து வாபஸ் பெறவேண்டும என்பது விவாதத்திற்குப் பொருத்த மானதுதான். தெளிவான திட்டமும் அதுதான். ஆனால் விளைவு என்னவாகும்? போல்ஷ்விக் அல்லாத இராணு வம் முற்றிலும் அழிந்து போகும். தற்போது போல்ஷ்விக் அல்லாத போர் வீரரின் எண்ணிக்கை சுமார் 500,000. அது மேலும் பெருகுகிறது. தங்களுடைய திட்டம், பெரிய இயந்திரத்தின் அச்சாணியைக் கழற்றி எறிவதை ஒக்கும். ரஷ்யாவில், போல்ஷ்விக்குகளுக்கு இராணுவ எதிர்ப்பே இல்லாது போய்விடும். பலாத்காரமும் துன்பமும் ரஷ்யா வில் தாண்டவமாடும்'' என்றார் சர்ச்சில்.

''சில இடங்களில் நமது இராணுவம் பிற்போக் காளர்களை ஆதரிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. ரஷ்யாவில், நேச நாடுகள் எதை ஆதரிக்கின்றன என்று கேட்டால், ஒன்றும் தெரியாது என்று தானே சொல்ல வேண்டியதிருக்கும்'' என்று வில்சன் சொன்னார்.

''பிரிங்கிபோ மகாநாடு தோல்வியுற்றால், சோவியத் எதிர்ப்பு சக்திகளுக்குப் போர்க்கருவிகள் கொடுப்பதைக் கவுன்சில் அங்கீகரிக்குமா?'' என்று சர்ச்சில் கேட்டார்.

லாயட் ஜார்ஜின் பக்கபலம் தனக்கில்லை. தன்னைச் சூழ்ந்திருந்த இதர நாட்டுப் பிரதிநிதிகள் தாம் நினைத் ததை முடிப்பதிலே உறுதி பூண்டு விட்டனர். இத்தகைய சூழ்நிலையில் தனது கருத்திற்கு மகாநாட்டில் மதிப்பில்லை என்பதை உணர்ந்து, ''நான் தனியாயிருந்தால் என்ன செய்வேன் என்பதை கவுன்சிலில் கூறிவிட்டேன். ஆயினும் மற்றவர்களின் தீர்மானத்திற்கு நான் உடன்படுகிறேன்'' என்று, வில்சன் பதில் சொன்னார்.

வில்சனின் திட்டம் அமெரிக்கப் பிற்போக்காளர்களிடம் தோல்வியுற்றது. அரசாங்க செயலாளர் லான்சிங் பாரிஸ் மகாநாட்டிற்குப் போனார். விவாதத்தின் போக்கு குறிப்பிடத்தக்க மாறுதலை அடைந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


"போல்ஷ்விக்குகளின் போக்கு தவறு என்ற எண்ணத்தைப் பொதுமக்களிடையே பரப்ப வேண்டும். போல்ஷ்விசம் சிறந்த நோக்கங்களைக் கொண்டது எனவும், ஆனால் அது நேர்பாதையிலிருந்து விலகிச் செல்லும் ஜனநாயகம் எனவும் சிலர் கருதுகிறார்கள். அவர்களுக்குப் போல்ஷ்விசம் தவறானது என்று எடுத்துக் கூறவேண்டும்" என்று மகாநாடு முடிவு செய்தது.

சோவியத் அரசாங்கத்துக்கு எதிராக வெள்ளை இராணுவத்திற்கு உதவி செய்வதற்கான வழிகள் மகாநாட்டில் ஆலோசிக்கப்பட்டன. சோவியத் அரசாங்கத்தைத் தாக்க இராணுவத் திட்டம் ஒன்று தயாரிக்கப் பட்டது. சோவியத் எதிர்ப்பு இராணுவத்திற்குச் சர்ச்சில் அதிகாரபூர்வமான தளகர்த்தரானார். வெள்ளை ரஷ்ய இராணுவ ஒற்றர்கள், பிரிட்டிஷ் அலுவலகங்களில் தோன்றித் தோன்றி மறைந்தனர். தளகர்த்தர் கோல்ச்சாக், டெனிகின் ஆகியோரின் பிரதிநிதிகளே அவர்கள். சோவியத்தைத் தாக்குவதற்கான இறுதி ஏற்பாடுகளைச் செய்யவே, அவர்கள் அங்கு சென்றார்கள். சர் சாமுவேல் ஹோரையும், சர்ச்சிலையும் கலந்தே, இரகசிய நடவடிக்கைகள் செய்யப்பட்டன. சர்ச்சில், யுத்த இலாகா காரியதரிசி என்ற நிலைமையில் போர்க் கருவிகள் அனுப்புவதைக் கவனிக்க வேண்டும்; அரசியல் தந்திரங்களை, ஹோரர் கவனிக்க வேண்டும் என்று முடிவு கட்டப்பட்டது.

★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அத்தியாயம் 5

# பிற நாடுகளின் தாக்குதல்

1919 கோடைகாலம். போர் அறிவிப்பு இல்லாமலே, பதினான்கு நாடுகளின் இராணுவங்கள் சோவியத் ரஷ்யா மீது படையெடுத்தன. அந்நாடுகளாவன: பிரிட்டன், பிரான்சு, ஜப்பான், ஜெர்மனி, இத்தாலி, அமெரிக்கா, செக்கோஸ்லோவேகியா, செர்பியா, சீனா, பின்லந்து, கிரீஸ், போலந்து, ருமேனியா, துருக்கி; பழைய நிலப் பிரபுத்துவ ஆதிக்கத்தை மீண்டும் நிலைநிறுத்த நின்ற வெள்ளை இராணுவமும், அவற்றுடன் சேர்ந்து சோவியத் அரசாங்கத்தைத் தாக்கிற்று. மாஸ்கோவை நான்கு பக்கங் களிலும் முற்றுகையிட்டு, அதைக் கைப்பற்றுவதென்பது அவற்றின் திட்டம்.

நேச நாடுகளின் இராணுவங்கள், ரஷ்யாவில் இறங்கிய தற்கு, பல காரணங்கள் சொல்லப்பட்டன. 1918-இல், மர்மான்ஸ்க், ஆர்ச்ஏஞ்சல், நகரங்களில் இராணுவம் நுழைந்தபொழுது, பொருள்களும் போர்க் கருவிகளும். ஜெர்மன் இராணுவத்திடம் சிக்கிவிடாமல் காப்பாற்ற, துருப்புகள் அங்கே இறங்கி இருப்பதாக நேச நாடுகள் அறிவித்தன. பிறகு செக்கோஸ்லோவேகியா துருப்புகள், ரஷ்யாவிலிருந்து வெளியேறுவதில் உதவி செய்ய, அவை சைபீரியாவில் இருப்பதாகத் தெரிவித்தன. பிறகு அமைதியை நிலைநாட்டுவதில் ரஷ்யர்களுக்கு உதவி செய்யச் சென்றிருப்பதாகச் சொல்லப்பட்டது.

சோவியத் அரசாங்கத்துக்கு எதிராக, ஆயுதம் தாங்கிப் போர் புரியும் நோக்கம் தமக்கு இல்லை என்று, நேச நாடுகளின் அரசியல் தந்திரிகள், அடிக்கடி பறைசாற் றினர். ரஷ்ய உள்நாட்டு விவகாரங்களில் தலையிடப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போவதில்லை என்றும் பிதற்றினர். ''ரஷ்ய உள்நாட்டு ஏற்பாடுகளில், நாங்கள் தலையிட விரும்பவில்லை. அதுவே, அதன் காரியங்களைக் கவனித்துக் கொள்ள வேண்டும்'' என்று; பிரிட்டிஷ் வெளிநாட்டு இலாகா செயலாளர் ஆர்தர் பால்பர், 1918 ஆகஸ்டில் சொன்னார்.

சோவியத் மீது பிற நாடுகள் தொடுத்த தாக்குதலை, நேரடியாகக் கவனித்த சர்ச்சில், ''போருக்குப்பின் உலக நெருக்கடி'' என்ற நூலில் குறிப்பிடுவதாவது :

''அவை (நேச நாடுகள்) ரஷ்யாவுடன் போரிட்டனவா? உறுதியாக இல்லை. ஆனால். அவை சோவியத் ரஷ்யர்களைக் கண்டதும் சுட்டுத் தள்ளின. அவை ரஷ்ய மண்ணில் நுழைந்தன. சோவியத் அரசாங்கத்தின் விரோதிகளுக்குப் போர்க்கருவிகள் தந்தன. துறைமுகங்களை முற்றுகையிட்டுக் கப்பல்களை மூழ்கடித்தன. சோவியத் வீழ்ச்சியுற வேண்டுமென்று கருதி அதற்கான சூழ்ச்சிகளைக் கையாண்டன. ஆனால், போர் கொடியது! தலையீடு வெட்கம்! இதுதான் நடுநிலைமை!'' இளம் சோவியத் உயிருக்காகப் போராடியது. உலகப் போரில் அது களைத்திருந்தது. லட்சக்கணக்கான மக்கள் பட்டினியால் பரிதவித்தனர். ஆலைகள் இயங்கவில்லை. நிலம் தரிசாய்க் கிடந்தது. போக்குவரத்துகள் நின்றுவிட்டன. அந்நிலையில், பெரிய இராணுவத் தாக்குதலிலிருந்து சோவியத் தப்பிப் பிழைக்க முடியாதென்று தோன்றியது. எல்லாப் பக்கங்களிலும் அன்னிய நாடுகளின் படைகள் தாக்கியதாலும், உள்நாட்டில் ஓயாத சதிகள் நடைபெற்றதாலும், செஞ்சேனை மெதுவாக, கிராமங்களின் வழியாக பின்வாங்கியது. மாஸ்கோவின் ஆட்சிக்குள்ளிருந்த பகுதி, ரஷ்யப் பரப்பில் ஆறில் ஒரு பங்காகக் குறைந்தது.

1919 செப்டம்பர் 5-இல், அமெரிக்க செனட் சபையில் போரா என்ற அங்கத்தினர், ''தலைவர் அவர்களே! நமக்கும் ரஷ்யாவுக்கும் போர் இல்லை. ரஷ்ய அரசாங்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மீதாவது, அல்லது ரஷ்ய மக்கள் மீதாவது போர் தொடுக்கும்படி காங்கிரஸ் அறிவிக்கவில்லை. ரஷ்யாவுடன் போர் புரிவதை, அமெரிக்க மக்கள் விரும்பவில்லை. எனினும், ரஷ்யாவில் நமது இராணுவம் இருக்கிறது. வெடி மருந்துகளையும், பொருள்களையும், அந்நாட்டிலுள்ள அயல்நாட்டு இராணுவங்களுக்குக் கொடுக்கிறோம். போர்ப் பிரகடனம் செய்து, போரில் குதிப்பதைப் போன்றே நாம் இந்தத் தகராறில் ஈடுபட்டிருக்கிறோம். மக்களைப் பலியிடுவதில், ஒழுங்கோ, நீதியோ இல்லை. அப்படிச் செய்வது, சுதந்திர அரசாங்கத்தின் உரிமைகளில் தலையிடுவதாகும்'' என்று பேசினார். எனினும்,முன் அறிவிப்பின்றி ரஷ்யா மீது தொடுக்கப்பட்ட போர் நடந்து கொண்டிருந்தது, அது, இரண்டரை ஆண்டுகள் நடந்தது. ரஷ்யாவில் இறந்தவர்களின் எண்ணிக்கை எழுபது லட்சம். பொருள் அழிவு ஆயிரம் கோடி டாலர்கள். ஜார் அரசாங்கம் நேச நாடுகளுக்குக் கொடுக்கவேண்டிய தொகையைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு அதிகம். இவ்வாறு வீணாக்கப்பட்ட பொருள் எவ்வளவு என்பது அந்நாடுகளின் வரி செலுத்தவோருக்குத் தெரியாது. 1919 செப்டம்பர் 15–இல், சர்ச்சில் விடுத்த அறிக்கையினால்தான் ரஷ்ய மக்களின் இரத்தத்தைச் சிந்துவதற்காகப் பிரிட்டன், பிரான்சு, ஜப்பான் முதலிய நாடுகள் கோடிக்கணக்கான பணத்தை விரயம் செய்ததாகத் தெரிய வந்தது.

எவ்வித முன் அறிவிப்பும் இல்லாத போரில், நேச நாடுகள் இவ்வளவு பெரும் தொகையைச் செலவிட்டதற்குக் காரணம் என்னவோ! வெள்ளைத் தளகர்த்தர்கள் தங்களுடைய ஆதிக்கத்தை மீண்டும் நிலைநாட்ட போரிட்டார்கள். அதாவது, தங்களுடைய பண்ணைகளுக்காகவும், கொள்ளை லாபத்திற்காகவும், வர்க்க உரிமைகளுக்காகவும் போர் புரிந்தார்கள். அவர்களில் சிலரே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நாட்டுப் பற்றுள்ளவர்கள். பலர் நாஜி மனோபாவமுள்ள வர்கள்.

1920-இல், பிரிட்டிஷ் பார்லிமெண்டின் உறுப்பினன் மெலோன், அச்சபைக் கூட்டத்தில் கீழ்க்கண்ட விவரங் களை வெளியிட்டான்:

"நேச நாடுகள் ரஷ்யாவில் போரிடுவதின் நோக்கங் களைத் தெளிவுபடுத்தவில்லை. போல்ஷ்விசத்தை (கம்யூ னிசத்தை) எதிர்ப்பதற்காக ரஷ்யாவைத் தாக்கியதாக உலகிற்கு அறிவிக்கப்பட்டது. ஆனால் உண்மை வேறு, ரஷ்ய மரம், டோனட்ஸ் நிலக்கரி, சைபீரியாத் தங்கம்' காக்கேசிய எண்ணெய் ஆகிய செல்வங்களின் மீது கண் வைத்தே இந்நாடுகள் ரஷ்யாவைத் தாக்கின.

"இங்குள்ளவர்களில் சிலருக்கு ரஷ்யாவில் பணமும் பங்குகளும் இருக்கின்றன. அவர்கள்தான் போல்ஷ்விக் ஆட்சியைக் கவிழ்க்கச் சூழ்ச்சி செய்கிறார்கள். பழைய ஆட்சியில் தொழிலாளர் விவசாயிகளின் உழைப்பைச் சுரண்டியதால் அவர்களுக்குக் கொள்ளை லாபம் கிடைத்தது. சோஷலிச ஆட்சியில் லாபம் கிடைக்காது. இந்நாட்டிலுள்ள ஒவ்வொரு பெரிய கம்பெனிக்கும் அநேக மாக சோவியத் ரஷ்யாவில், ஏதாவது ஒரு வகையில் வியாபாரத் தொடர்பு இருக்கிறது."

சோவியத் எதிர்ப்புப் போரில் பெரும் பங்கெடுத்துக் கொண்ட அமெரிக்கப் பிரபுக்களில் ஒருவர், எதிர்காலத் தலைவர் ஹெர்பர்ட் ஹூவர். அவர் அப்பொழுது உணவு இலாகாத் தலைவர். முதலாவது உலகப் போருக்கு முன், பிரிட்டனுக்குச் சொந்தமான நிலக்கரிச் சுரங்கத்தில் இஞ்சினீயராக இருந்தார். ரஷ்ய எண்ணெய் கம்பெனி களிலும், நிலக்கரிச் சுரங்கங்களிலும், அவருக்குப் பங்குகள் இருந்தன. ஜார் ஆட்சியின் ஊழல் காரணமாக ஏராளமான செல்வங்களைப் பிறநாடுகள் கொள்ளை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொண்டு போயின. ஒரே ஆண்டுக்குள் ரஷ்யாவில் பதினொரு எண்ணெய்க் கம்பெனிகளில் ஹூவருக்குப் பங்குகள் கிடைத்தன. 1914-இல், அவர் கூட்டுக் கம்பெனி அமைத்து கோடீஸ்வரர் ஆனார். நூறுகோடி டாலர் பெருமதியுள்ள சொத்துக்கு அவர் அதிபரானார்.

1917-இல், சுரங்கங்களையும் எண்ணெய்க் கிணறு களையும் சோவியத் அரசாங்கம் பறிமுதல் செய்தது. ஆனால், அதற்கு முன்பே ஹூவர் தனது ரஷ்ய சொத்துக்கள் அனைத்தையும் விற்றுவிட்டார்.

''போரைக் காட்டிலும் போல்ஷ்விஸம் மிகக் கொடியது'' என்று, ஹூவர் பாரிஸ் மாநாட்டில் கூறினார். அவர் உயிரோடிருந்த காலம்வரை சோவியத்தின் பரம விரோதியாக இருந்தார். ரஷ்ய உள்நாட்டுக் கலகத்தில் அவர் வெள்ளை இராணுவத்திற்கு ஏராளமான உணவுப் பொருள்களை அனுப்பினார். அமெரிக்கா, சோவியத்துடன் உறவு கொள்வதைத் தடுக்க, அவர் ஓயாது உழைத்தார். ஆயினும், சோவியத் ஆட்சியைக் கவிழ்க்க, வெளிநாடுகள் எடுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியுற்றன. இறுதியில் சோவியத் அரசாங்கம் வெற்றி அடைந்தது. ரஷ்ய மக்களின் கட்டுப்பாடும், தியாகமும், உலக மக்களின் ஆதரவும், வெற்றிக்குக் காரணங் களாகும். இங்கிலாந்து, பிரான்சு, அமெரிக்கா ஆகிய நாடுகளில், மக்கள், சங்கங்கள் அமைத்து ''ரஷ்யாவில் தலையிடாதே'' என்று கிளர்ச்சி செய்தார்கள். தொழி லாளர் வேலை நிறுத்தம் செய்தனர். போர் வீரர்கள் கலகம் செய்தார்கள். ஜனநாயக அரசியல் வாதிகளும், பத்திரிகாசிரியர்களும், வியாபாரிகளும், ஆசிரியர்களும் சோவியத்துக்கு எதிராகப் போர் புரிவதைக் கண்டித் தார்கள். செஞ்சேனை வெற்றிமேல் வெற்றியடைந்து முன்னேறிற்று. அவை உலக ஜனநாயகத்தின் வெற்றி களாகக் கருதப்பட்டன. சோவியத் யூனியனைத் தாக்கிய துணைவர்களுக்குள் உண்மையான கூட்டுறவு இல்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஏகாதிபத்தியப் போட்டி, கூட்டுறவைப் பிளவு படுத்தியது. ரஷ்யாவில் கொள்ளையடித்த பொருள்களைப் பங்கிடுவதில், வெள்ளை ரஷ்யத் தளகர்த்தர்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டனர்.

சோவியத் ரஷ்யா மீது அநீதியாகவும், இரகசியமாகவும் தொடுக்கப்பட்ட தாக்குதல், சோவியத் எதிர்ப்பாளர் வெட்கித் தலை குனியும்படியான தோல்வியில் முடிந்தது. அந்தப் போர், வித்திட்ட வெறுப்பும், அவநம்பிக்கையும், அடுத்த கால்நூற்றாண்டுக்கு ஐரோப்பிய அரசியல் நிலைமையைக் குழப்பிற்று.

○

## அத்தியாயம் 6

# வெள்ளை ரஷ்யரது போர் :

## பிற்காலக் கொந்தளிப்பு

சோவியத்துக்கு எதிராக நடந்த போரின் முதல் கட்டம், எவ்வித முடிவுமின்றி நின்றது. மிகுதியான ரஷ்யப் பகுதி சோவியத் அரசாங்க வசம் இருந்தது. சுற்றியுள்ள நாடுகள், அதைத் தீண்டத் தகாத நாடாகக் கருதின. பிறநாடுகளின் அரசியல், பொருளாதாரத் தொடர்பின்றி, ரஷ்யா தனித்து நின்றது. உலகில் ஆறில் ஒரு பங்கான சோவியத் நாட்டின் அரசாங்கத்தைப் பிற நாடுகள் ஏற்றுக் கொள்ளவில்லை.

முதலாவது உலகப் போரினாலும், உள்நாட்டுக் கலகத்தினாலும், வெளிநாடுகளின் தாக்குதலினாலும், சோவியத் ரஷ்யா பாழ்பட்டிருந்தது. கல்வி அறிவின்றி மக்கள் மூடப் பழக்க வழக்கங்களில் ஆழ்ந்திருந்தனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


போரில் அலுத்துச் சலித்த உலக மக்கள் சமாதானத்தை விரும்பினார். ஆனால், அதை அடையும் வழி தெரியாது தவித்தனர்.

போல்ஷ்விச எதிர்ப்பின் பெயரால், பாசிசம், தேசிய வெறி, இராணுவ ஆட்சி ஆகிய அசுர சக்திகள், ஐரோப்பாவில் தலைவிரித்தாடின. சோவியத் ரஷ்யாவைத் தாக்கப் புதிய திட்டங்கள் வகுக்கப்பட்டன. சோவியத் எதிர்ப்புப் பிரச்சாரம் தோன்றியது. போரே தோன்றா திருப்பதற்காகத் தொடுக்கப்பட்ட போர், நான்கு ஆண்டு களுக்குப் பின் முடிவுற்றது. எனினும், போல்ஷ்விச எதிர்ப்பின் பெயரால், உலக ஜனநாயகத்தை அழிக்கும் இரண்டாவது உலகப் போர் தோன்றுவதற்கான வித்துகள் நிலைத்திருந்தன.

## ரோசன்பெர்க் பிரபு

1921, ஜூன். ஜார் அதிகாரிகள், முதலாளிகள், பிரபுக்கள் ஆகியோர், சோவியத் எதிர்ப்புச் சர்வதேச மகாநாடு ஒன்றை, பவேரியாவில் கூட்டினர். சோவியத் எதிர்ப்புப் பிரச்சாரத் திட்டம் தயாரிக்கப்பட்டது. சங்கம் ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது. மீண்டும் முடியாட்சியை நாட்ட வேண்டியது அதன் வேலை. ஜெர்மன்தேசிய சோஷலிஸ்டுக் கட்சி, ஆல்பிரட் ரோசன் பெர்க் என்பவனைத் தனது பிரதிநிதியாக மாநாட்டுக்கு அனுப்பியது.

ரோசன்பெர்க் போல்ஷ்விக் விரோதி. அவன் யூதர் களை வெறுத்தான். ஒவ்வொரு யூதனும் ஒரு போல்ஷ்விக் என்று அவன் சொல்வது வழக்கம்.

போருக்குப் பிறகு, ஜெர்மனி கடுமையான பொருளா தார நெருக்கடிக் குள்ளாகியது. வேலையில்லாத் திண்டாட்

www.tamilarangam.net



டமும், பணவீக்கமும், பட்டினியும் என்றுமில்லாத அளவுக்குப் பெருகின.

சோவியத்துகளை அடக்கிவிட்டு, ஜனநாயகத்தின் பெயரால் அமைக்கப்பட்ட வீமார் குடியரசு என்னும் இரும்புத்திரை மறைவில் இராணுவ ஆதிக்கம் நிறுவப் பட்டது. ஜெர்மன் ஏகாதிபத்தியத்தை மீண்டும் பிறப் பிக்கத் திட்டம் வகுக்கப்பட்டது. நூற்றுக்கணக்கான தொழில் நிபுணர்களின் மேற்பார்வையில், போர்க்கருவிகள் உற்பத்தியாகின. இவ்வாறு, ஜெர்மனி புதிய போருக்கு விரிவான ஏற்பாடு செய்தது. ஜெர்மன் ஏகாதிபத்தியத்தை உயிர்ப்பிக்கும் இரகசிய ஏற்பாடுகளுக்கு, தொழில் தலைவன் ரெக்பெர்க் பண உதவி செய்ய முன் வந்தான். அந்த இயக்கத்திற்கு, நாஷனல் சோஷலிசம் அல்லது தேசிய சோஷலிசம், அதாவது நாஜிஸம் என்று பெயர். அடால்ப் ஹிட்லர் அக்கட்சியின் தலைவன். கட்சிக்கு ஆதரவாகப் பத்திரிகை ஒன்று தொடங்கப்பட்டது. அதன் ஆசிரியன் ரோசன்பெர்க்.

## ஹாப்மன் திட்டம்

ரோசென்பெர்க், நாஜிக் கொள்கையைப் பரப்ப வேண்டும்; மாக்ஸ் ஹாப்மன், இராணுவத் திட்டம் வகுக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

1919-ஆம் வருட பாரிஸ் மகாநாட்டில் ஹாப்மன் ஒரு திட்டம் சமர்ப்பித்தான். அதன் முதலாவது அம்சம், போல்ஷ்விக் ஆபத்திலிருந்து ஐரோப்பாவைக் காப்பது. இரண்டாவது, ஜெர்மன் இராணுவத்தைக் கலைக்காமல் வைத்திருப்பது. சிறிது மாறுதலுடன் மார்ஷல் போக் அத்திட்டத்தை ஒப்புக்கொண்டான்.

சோவியத் ரஷ்யாவை ஒழித்துக்கட்ட எடுத்துக் கொண்ட முயற்சிகள் அனைத்தும் தோல்வியுற்ற பிறகு,

www.tamilarangam.net


ஹாப்மன் புதிய திட்டம் ஒன்று தயாரித்தான். ஐரோப்பாவிலுள்ள இராணுவ அதிகாரிகளுக்கும், பாசிச வெறியர்களுக்கும், அது இரகசியமாக அனுப்பப்பட்டது. அவர்கள் அதை ஏற்றுக் கொண்டார்கள். அத் திட்டத்தின்படி, ஜெர்மனியின் தலைமையில் ஐரோப்பா முழுவதையும் சோவியத் யூனியனுக்கு எதிராகத் திரட்ட வேண்டும்; விஸ்டுலா, டுவினா ஆகிய இடங்களில் படைகளைக் குவிக்க வேண்டும், ஜெர்மனியின் தலைமையில் ரஷ்யா மீது மின்னல் தாக்குதலைத் தொடுக்கவேண்டும்; சில வாரங்களில் லெனின் கிராடு, மாஸ்கோ ஆகிய இரு நகரங்களையும் கைப்பற்ற வேண்டும். சோவியத் ஆட்சியை கவிழ்த்து, ''அடிமைப்பட்டிருக்கும் ஐரோப்பியப் பகுதியை'' விடுவிக்க வேண்டும். இதுவே, ஹாப்மனின் புதிய திட்டம்.

○

## அத்தியாயம் 7

# பயங்கார வாதியின் அதிசய வாழ்க்கை : சிட்னி ரெயிலி திரும்புகிறான்

1922 டிசம்பர், பெர்லினில் ஜெர்மன் கடற்படை அதிகாரியும், பிரிட்டிஷ் இரகசிய இலாகா அதிகாரியும் 'நாகரிக' உடையணிந்த நங்கையுடன் வம்பளந்துகொண்டிருந்தார்கள். அவள் ஒரு நடிகை. பெயர் பெபீதா போபதில்லா. ஒற்றர்களைப்பற்றி அவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். பிரிட்டிஷ் இரகசிய ஏஜண்டு ஒருவன், சோவியத் ரஷ்யாவில் செய்கின்ற அதிசயவேலைகளை ஆங்கிலேயன் குறிப்பிட்டான் பிரிட்டிஷ் ஏஜண்டின் பெயர், 'ஸீ' அவன் பெருமை ஜெர்மானியனுக்குத் தெரியும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


அவனுடைய வீரச் செயல்களைக் குறித்து, இருவரும் மகிழ்ச்சியுற்றனர். அத்தகைய பெருமை பொருந்திய 'ஸி' என்பவனைப்பற்றித் தெரிந்துகொள்ள அப்பெண் ஆவலுற்றாள்.

''அவன் யார்?'' என்று அந்த நடிகை கேட்டாள்,

''ஐரோப்பாவில் ஒரு அதிசய மனிதன். அவரை உயிருடன் அல்லது பிணமாகக் கொடுப்பவனுக்குப் போல்ஷ்விக்குகள் ஒரு மாகாணத்தையே பரிசளிப்பார்களாம், அவனுக்கு எப்பொழுது தீங்கு நேரிடும் என்று சொல்ல முடியாது. மேற்கு ஐரோப்பாவில் போல்ஷ்விசம் மிகுதியாகப் பரவாமல் இருப்பதற்கு, அவனே காரணம்'' என்று ஆங்கிலேயன் பதில் சொன்னான். அந்த அற்புதமனிதனைக் குறித்து அவள் மேலும் தெரிந்துகொள்ள விரும்பினாள். அவள் கூட்டாளியின் முகத்தில் புன்முறுவல் தவழ்ந்தது. ''இன்று பிற்பகல் அவனைப் பார்த்தேன். அவன் இவ்விடுதியில் தான் தங்கியிருக்கிறான்'' என்று ஆங்கிலேயன் சொன்னான்.

அன்று மாலை. 'ஸி' என்பவனை அவள் பார்த்தாள். கண்டதும் காதல் கொண்டாள். இருவரும் அறிமுகப் படுத்தப் பட்டனர். தன் பெயர் கேப்டன் சிட்னி ரெயிலி என்று அவன் கூறினான்.

பிரிட்டிஷ் போர் இலாகாக் காரியதரிசி சர்ச்சில், அவனை மீண்டும் ரஷ்யாவுக்கு அனுப்பி, தளகர்த்தன் டெனிகினின் ஒற்றர்களுக்கு உதவி செய்ய ஏற்பாடு செய்தார். ஐரோப்பாவிலுள்ள சோவியத் எதிரிகளுக்கும் டெனிகினுக்கும் இடையே அவன் தூதனாக வேலை செய்தான். 1919, 1920-ஆம் ஆண்டுகளில்,பாரிஸ்,வார்சா, பிரேக் ஆகிய நகரங்களில் சோவியத்துக்கு விரோதமான இராணுவங்களைத் திரட்டினான். ஜார் காலத்திலிருந்த

பெ—5

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தொழில் முதலாளிகளை ஒன்று சேர்த்து, 'கார்ட்டல்" அதாவது முதலாளிகளின் கூட்டுக் கம்பெனி ஒன்று அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டான். அதன் விளைவாக, அவன் பெரிய பணக்காரன் ஆனான். அதுமட்டுமல்ல, எல்லா நாடுகளிலுமுள்ள பெரிய மனிதர்களின் நட்பைப் பெற்றான்.

சோவியத் ரஷ்யா மீது அவனுக்கிருந்த பகைமை சிறிதும் குறையவில்லை. போல்ஷ்விசத்தை அழிப்பதையே தனது வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டிருந்தான். நெப்போலியனைப் போல், புகழ்பெற விரும்பினான். ''ஒரு கார்சிகனால் பிரஞ்சுப் புரட்சியை நசுக்க முடிந்தது என்றால், பல வசதிகளுள்ள ஒரு பிரிட்டிஷ் ஒற்றன் ஏன் மாஸ்கோவின் தலைவனாக முடியாது?'' என்று ரெயிலி எண்ணினான்.

1923 மே 18-இல், நடிகை போபதில்லாவை ரெயிலி மணம் செய்துகொண்டான். அது முதல் அவளும் கணவனுடைய சதி வேலைகளில் பங்கெடுத்துக் கொள்ளத் தொடங்கினாள். ஒருநாள் ஒரு அற்புத மனிதன் சிட்னியைச் சந்திக்க வந்தான். தன் பெயர் 'வார்னர்' என்றான். அடையாளச் சீட்டு ஒன்றை, அவன் காண்பித்தான். போரிஸ் சாவிங்கோவ், அதில் கையெழுத்திட்டிருந்தான். பிரிட்டிஷ் அரசியல் தந்திரி ஒருவன், அவனை அறிமுகப் படுத்தி ஒரு கடிதம் கொடுத்திருந்தான்.

வார்னரின் உண்மையான பெயர் டெரப்கோவ்.

''ரஷ்ய நாட்டின் துரோகிகளை ஒழித்துக்கட்ட, ஒரு சர்வாதிகாரி வேண்டும்'' என்றான் டெரப்கோவ்.

''சாவிங்கோவ் எப்படி? அவன் பாரிசில் இருக்கிறான். அவன் மிகத் திறமையுள்ளவன்'' என்று ரெயிலி பதில் சொன்னான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ஒரு நல்ல தொழில்

போரிஸ் சாவிங்கோவ், வருங்காலத்தில் ரஷ்யாவின் சர்வாதிகாரி ஆவான் என்று, 1924-இல், பிரிட்டிஷ் அதிகார வர்க்கம் எண்ணியது. சாவிங்கோவ் பாங்கி மானேஜரைப் போல் தோற்றம் அளித்தான். ''அரசியல் நிபுணனுக்குள்ள அறிவும், தளகர்த்தனுக்குரிய ஆற்றல்களும், வீரனுக்குரிய மனோ வலிமையும், சகிப்புத் தன்மையும் உள்ளவன்'' என்று சர்ச்சில் சாவிங்கோவைப் புகழ்ந்திருக்கிறார். சாவிங்கோவின் வாழ்க்கை, சூழ்ச்சி செய்வதிலேயே கழிந்தது. அவன் ஜார் காலத்தில், சமூகப்புரட்சிக் கட்சியின் தலைவனாக இருந்தான். ஜார் அரசாங்க அதிகாரிகளைக் கொலை செய்வதற்காக ஐவர் அடங்கிய கமிட்டி ஒன்று நிறுவப்பட்டது. சாவிங்கோவ் அதன் தலைவன். 1900-ஆம் ஆண்டில், அச்சங்கத்தினரால் இரு முக்கிய அதிகாரிகள் கொலை செய்யப்பட்டார்கள். ஒருவன், ஜார் குடும்பத்தைச் சேர்ந்த செர்சி பிரபு' மற்றொருவன், உள்நாட்டு மந்திரி வி.கே. பிளேவ்.

1905-இல், ஜார் ஆட்சியைக் கவிழ்க்க மேற்கொண்ட முதல் முயற்சி தோல்வியுற்ற பிறகு, சாவிங்கோவ் தனது புரட்சி வாழ்க்கையில் தளர்ச்சியுற்றான். அவன் இலக்கியத் துறையில் இறங்கினான். தனது வாழ்க்கை வரலாற்றை ஒரு கதையாக எழுதினான். பிளெவ், செர்சி ஆகிய இருவரையும் கொலை செய்ததை அவன் அதில் குறிப்பிட்டான். அவர்கள் கொலையான சில ஆண்டுகளுக்குப் பின், அதாவது முதலாவது உலகப் போரில், சாவிங்கோவுடன் தொடர்பு வைத்துக் கொள்வதற்காக பிரிட்டிஷ் இரகசிய இலாகா, சாமர்செட் மௌகாம் என்ற எழுத்தாளனை, ரஷ்யாவுக்கு அனுப்பியது. ''இந்தக் கொலைகளைச் செய்ய மிகுந்த மன வலிமை வேண்டுமல்லவா'' என்று சாமர்செட், சாவிங்கோவைக் கேட்டான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


''இல்லை, மற்ற தொழில்களைப்போல் அதுவும் ஒரு தொழில்தான். அது சகஜமாய்ப் போய்விடும்'' என்று சாவிங்கோவ் பதில் சொன்னான்.

1917 ஜுலை. நேச நாடுகளின் ஆலோசனையாளரின் சொற்படி, சாவிங்கோவ் 7-வது படையின் தலைவனானான். சாவிங்கோவின் வற்புறுத்தலினால், கெரன்ஸ்கி, தளகர்த்தன் கார்னிலோவை ரஷ்யஇராணுவத்தின் தலைவனாக்கினான். சாவிங்கோவ் போர் உதவி மந்திரியானான். கெரன்ஸ்கி ஆட்சியைக் கவிழ்த்துவிட்டு, கார்னிலோவ் தலைமையில் இராணுவ ஆட்சியை அமைக்க, பிரெஞ்சு அரசாங்க இரகசிய ஏஜண்டாக ஏற்கனவே வேலை செய்து கொண்டிருந்தான். மாஸ்கோ சோவியத்தைக் கவிழ்க்க, சிட்னி திட்டமிட்டிருந்த அதே வேளையில், சோவியத்தை எதிர்த்து யராஸ்லோவில் புரட்சி செய்ய, ஒரு படைக்குத் தலைமை தாங்கிச் சென்றான். செஞ்சேனை அந்தப் படையைச் சின்னா பின்னமாக்கியது. சாவிங்கோவ் பிடிபடாமல் தப்பித்துக்கொண்டான்.

1920-இல், அவன் போலந்துக்குச் சென்றான். தன் நண்பன் மார்ஷல் பில்சுட்ஸ்கியின் உதவியால் 0,000 போர் வீரர்களைத் திரட்டி சோவியத் ரஷ்யாவைத் தாக்குவதற்குத் தயாரானான்.

பிறகு தன் தலைமை அலுவலகத்தை பிரேக் நகருக்கு மாற்றினான். செக் நாட்டிலுள்ள பாசிஸ்டுகளுடன் தொடர்பு கொண்டான். அங்கு ஒரு படையைத் திரட்டினான். அது சோவியத் எல்லையைத் திடீர் திடீரென்று தாக்கிக் கொள்ளையடிப்பதும், சோவியத் தொழிலாளரையும் விவசாயிகளையும் கொலை செய்வதும், பண்ணைகளை அழிப்பதுமான நாச வேலைகளைச் செய்தது. அவனுடைய செயல்களுக்கு ஐரோப்பாவிலுள்ள அயல் நாட்டு இரகசிய இலாக்காக்கள் உதவி செய்தன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவனுடைய வசீகரத் தோற்றமும் தனிப்பட்ட ஆற்றலும், சோவியத் அரசை வீழ்த்த உதவியாக இருக்கும் என்று, சோவியத் எதிரிகள் கனவு கண்டார்கள்.

1919–இல், பாரிஸ் நகரில் ஜாரின் முதல் மந்திரியாக இருந்த சாசினோவைச் சந்தித்தபொழுது, ''சாவிங்கோவ் எப்படி இருக்கிறான்?'' என்று சர்ச்சில் கேட்டார்.

''அவன் கொலைகாரன்! அவனுடன் வேலை செய்வது சங்கடந்தான், ஆனால் என்ன செய்வது? அவன் ஊக்கமும் புரட்சி மனோபாவமும் உள்ளவன். மிகுந்த ஆற்றலுள்ளவன். அத்தகைய ஆற்றல் படைத்தவன் வேறு எவனுமில்லை'' என்று சாசினோவ் பதிலுரைத்தான். பெரிய அலுவல்களை சாவிங்கோவிடம் ஒப்படைக்கலாம் என்பது சர்ச்சில் கருத்து. எனவே, அவனை பிரிட்டிஷ் முதல் மந்திரியான லாயட் ஜார்ஜிடம் அறிமுகப்படுத்தினார். சாவிங்கோவை ஆதரிக்க வேண்டுமென்ற சர்ச்சிலின் யோசனைக்கு, லாயட் ஜார்ஜ் இடங் கொடுக்கவில்லை.

''ரஷ்யாவில் எவ்வளவு கொடுமைகள் நடைபெற வேண்டுமோ அவ்வளவும் நடந்துவிட்டன. தொழில்களைப் பொது உடைமையாக்கி, போல்ஷ்விக்குகள் (கம்யூனிஸ்டுகள்) செய்யும் போல்ஷ்விசப் பரீட்சை தோல்வியுறும். அரசாங்கத்தை நடத்தும் பொறுப்பை போல்ஷ்விக் தலைவர்கள் ஏற்றிருப்பதால், அவர்கள் கம்யூனிசக் கொள்கையைக் கைவிடுவர். அல்லது அவர்களுக்குள் சண்டையிட்டு ஆட்சிப் பீடத்திலிருந்து சரிந்து விழுவர். சர்ச்சிலும் பிரிட்டிஷ் இரகசிய இலாகாவும் அஞ்சி நடுங்குகிற உலக கம்யூனிசப் பேராபத்து வெறும் பயங்கரக் கனவுதான்'' என்று லாயட் ஜார்ஜ் சொல்லி முடித்ததும், ''பிரதமரே! ரோம் சாம்ராஜ்யம் வீழ்ச்சியுற்ற பிறகு குழப்பமான நிலைமை தோன்றியதென்பதைத் தங்களுக்கு ஞாபகப் படுத்த விரும்புகிறேன்'' என்று சாவிங்கோவ் கூறினான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## மாஸ்கோ விசாரணை 1924

1924 ஜனவரி 21-இல் லெனின் இறந்தார். இந் நிகழ்ச்சி ரெயிலிக்கு நம்பிக்கை தந்தது. சோவியத் எதிரிகள் ஆட்சியைக் கைப்பற்ற உள்நாட்டில் கடுமையான முயற்சி செய்வதாகவும், போல்ஷ்விக் கட்சியில் பிளவு ஏற்படலாம் என்றும் ரஷ்யாவிலிருந்த அவனுடைய ஏஜண்டுகள் செய்தி அனுப்பினர், சோவியத் அரசாங்கத்துக்கு வேட்டு வைக்க அது சரியான சமயமென்று ரெயிலி கருதினான். ஜார் ஆட்சியை மீண்டும் நிலைநாட்டுவது சாத்தியமில்லை என்றும் அவன் முடிவு செய்தான். எனவே, சோவியத் அரசாங்கத்துக்கு விரோதமான பணக்கார நிலச்சுவான்கள் இராணுவ அதிகாரிகள் ஆகியோரின் சர்வாதிகாரத்தை அமைக்க அவன் விரும்பினான்.

இத்தாலியின் சர்வாதிகாரி முசோலினியைப் போல், ரஷ்ய சர்வாதிகாரி ஆவதற்கு போரிஸ் சாவிங்கோவ் தகுதியுள்ளவன் என்று அவன் கருதினான். சாவிங்கோவ் வுக்கு ஆதரவு திரட்ட, ஐரோப்பாவின் தலை நகரங் களுக்குச் சென்றான்.

சோவியத் எதிர்ப்புப் பணியில் தலை சிறந்தவர்களில் ஒருவன் ஹென்ரி டெட்டர்டிங், அவன் 'ராயல் டச் ஷெல்' என்ற எண்ணெய் டிரஸ்டின் தலைவன். போல்ஷ்விக் எதிர்ப்புக்குப் பண உதவி செய்த முதலாளிகளில் அவன் ஒருவன்.

ஜார் கால ரஷ்யாவிலிருந்து வெளியேறிய கோடீஸ்வரரின் தொழில் நிறுவனத்துடன், பிரிட்டிஷ் எண்ணெய் மன்னனான டெட்டர்டிங், ரெயிலியின் மூலம் தொடர்பு கொண்டான். சோவியத் ரஷ்யாவிலுள்ள சிறந்த எண்ணெய் வயல்களை விலைக்கு வாங்கினான். அவற்றை அனுபவிக்கும் உரிமையை அடைய முடியாததால்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சோவியத் அரசாங்கம் சட்ட விரோதமானதென்று பறை சாற்றினான். காக்கஸஸ் எண்ணெய் வயல்களைச் சொந்த மாக்கிக் கொள்வதற்காக தனது பண பலத்தினாலும், இரகசிய ஏஜண்டுகளின் உதவியினாலும் ரஷ்யா மீது போர் தொடுத்தான்.

பிரிட்டிஷ் ஒற்றன் ரெயிலியும், சோவியத் ரஷ்யாவைத் தாக்கப் புதிய திட்டம் வகுத்தான். அதை ஐரோப்பாவி லுள்ள இராணுவ அதிகாரிகளுக்கெல்லாம் அனுப்பினான்.

பிரான்ஸ், போலந்து; பின்லந்து, ருமேனியா ஆகிய நாடுகளிலுள்ள சோவியத் விரோதிகள், ரெயிலியின் திட்டத்தை ஏற்றுக்கொண்டார்கள். காக்கசஸ் பகுதியை ரஷ்யாவிலிருந்து பிரிக்கும் திட்டத்திற்கு, பிரிட்டிஷ் அன்னிய நாட்டு இலாகா ஆதரவளித்தது.

''ரஷ்ய சர்வாதிகாரி'' என்று வேடம் போட்ட சாவிங்கோவை, இத்தாலிய சர்வாதிகாரி முசோலினி ரோம் நகருக்கு அழைத்தான். தனது இரகசிய இலாகா வின் மூலம் உதவி செய்ய முசோலினி ஒப்புக்கொண்டான். 1924 ஆகஸ்டு 10இல் ரெயிலியுடன் முடிவாக விவாதித்த பிறகு, சாவிங்கோவ் ரஷ்யாவுக்குப் புறப்பட்டான். அவன் சோவியத் எல்லையைக் கடந்ததும், புரட்சிக்கான ஏற்பாடுகள் நடைபெற வேண்டுமென்று திட்டம் வகுக்கப் பட்டிருந்தது.

ரெயிலி பாரிசில் மிகுந்த ஆவலுடன் சாவிங்கோவிட மிருந்து இரகசியத் தூதனை எதிர்பார்த்திருந்தான். ஒரு வாரம் கழிந்தது; இரண்டு வாரங்கள் கழிந்தன. செய்தி ஒன்றுமில்லை. சாவிங்கோவுக்கு என்ன நேரிட்டதென்பது ரெயிலிக்குப் பின்னால்தான் தெரியவந்தது.

''பயங்கரவாதியும், விரோதியுமான சாவிங்கோவ், சோவியத் எல்லையைக் கடக்க இரகசியமாக முயற்சித்த தால் கைது செய்யப்பட்டான்'' என்று சோவியத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செய்தித்தாள் ''இஸ்வெஸ்டியா'' 1924 ஆகஸ்டு, 29-இல், அறிவித்தது.

சாவிங்கோவும் அவனுடைய சதிகாரக் கூட்டத்தாரும் போலந்திலிருந்து எல்லையைக் கடந்து செல்ல முயன்றபொழுது, சோவியத் போர் வீரர்களால் கைது செய்யப்பட்டார்கள். சதி தோல்வியுற்றது. ரெயிலியும் அவனுடைய நண்பர்களும் ஏமாற்றம் அடைந்தார்கள். சாவிங்கோவ் சோவியத் அதிகாரிகளிடம் உண்மையைச் சொன்னான் :

''என்னைப் பிடிக்கப் பொறி வைக்கப்பட்டிருக்குமென்று நான் ஐயமுற்றேன். ஆனால், எப்படியும் ரஷ்யாவுக்கு வந்துவிட வேண்டுமென்று முடிவு செய்தேன். உங்களை எதிர்த்துப் போர் புரிவதை நிறுத்திவிட வேண்டுமென்று முடிவு செய்துவிட்டேன்.'' மேலும், தான் உண்மையான தேசபக்தன் என்றும், தன் கூட்டாளிகளால் தவறான வழியில் சென்றதாகவும், அவன் நீதிமன்றத்தில் கூறினான்.

ரஷ்ய எண்ணெய்க் கிணறுகளையும், மற்றும் உலோகங்களையும், அந்நிய முதலாளிகளும் உள்நாட்டு முதலாளிகளும் கைப்பற்ற வேண்டுமென்பதே சோவியத் எதிர்ப்பின் உண்மையான நோக்கமென்று சாவிங்கோவ் நீதிபதியிடம் குறிப்பிட்டான்.

மேலும் அவன் கூறியதாவது :

''ஒரு சமயம் சர்ச்சில் தெற்கு ரஷ்யப் படத்தை எனக்குக் காட்டினார். டெனிகின் இராணுவ நிலைமையைப் படத்தில் சுட்டிக்காட்டி, இதுதான் என் இராணுவம் என்றார். நான் திடுக்கிட்டேன். ஒன்றும் பேசாமல் மரக்கட்டையைப் போல் நின்றேன். வெளியே போய்விடலாமா என்று எண்ணினேன். நான் வெளியே போயிருந்தால், எங்கள் போர் வீரருக்கு உடை கிடைத்திராது.''

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''பிரிட்டனும் பிரான்சும் உங்களுக்கு வெடிகுண்டுகளும், துப்பாக்கிகளும், உடையும் கொடுத்துதவக் காரணம் என்ன?'' என்று நீதிபதி கேட்டார்.

'ரஷ்யர்கள் தங்களுக்குள் அடித்துக்கொண்டு மடிந்தால், ரஷ்ய எண்ணெய் வயல்களைப் பிரான்சும் பிரிட்டனும் கைப்பற்றிக் கொள்ளலாம் என்பதுதான் நோக்கம்'' என்று சாவிங்கோவ் பதிலுரைத்தான். அவன் தேசத் துரோகி என்று குற்றம் சாட்டப்பட்டான். உண்மை உரைத்ததால், மரண தண்டனைக்குப் பதில் பத்து ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

சாவிங்கோவ் உண்மையைச் சொல்லிவிட்டான் என்ற செய்தி பாரிசுக்கு எட்டியது. உடனே ரெயிலி லண்டனுக்கு விரைந்தான். 1924 செப்டம்பர் 8-இல், ''மார்னிங் போஸ்ட்'' பத்திரிகையில், ரெயிலி ஒரு அறிக்கை வெளியிட்டான் :

''மாஸ்கோவில் சாவிங்கோவ் மீது விசாரணை நடத்துவதாகச் சொல்லப்படுவது பொய். விசாரணை நடக்கவே இல்லை. சோவியத் எல்லையைத் தாண்டும்போது அவன் சுட்டுக் கொல்லப்பட்டான்'' என்று அவன் அறிக்கையில் குறிப்பிட்டதோடு,

''ஐயா! உங்கள் செய்தித்தாள் கம்யூனிச எதிர்ப்பில் பெயர் பெற்றது. எனவே, போரீஸ் சாவிங்கோவின் பெருமையை நிலைநாட்டுவதில் எனக்குப் பக்க பலமாக நிற்கும்படி தங்களை வேண்டிக் கொள்கிறேன்'' என்று அவன் பத்திரிகாசிரியருக்கு வேண்டுகோளும் விடுத்தான். ரெயிலி, சர்ச்சிலுக்கு ஒரு கடிதம் அனுப்பினான் :

''அன்புள்ள சர்ச்சில்,

போரீஸ் சாவிங்கோவ் கைது செய்யப்பட்டதனால், நீங்கள் மிகவும் வருந்தலாம். அவன் என்ன

www.tamilarangam.net


ஆனான் என்பது எனக்கோ, அவனுடைய நெருங்கிய நண்பர்களுக்கோ தெரியாது. செக்காவின் சூழ்ச்சிக்கு அவன் பலியாகி இருக்கலாமென்று நாங்கள் கருதுகிறோம். இன்றைய ''மார்னிங் போஸ்டு'' செய்தித்தாளுக்கு அனுப்புகிற அறிக்கையில், எங்கள் கருத்து தெளிவாக்கப்பட்டிருக்கிறது. அறிக்கையின் நகல் ஒன்று தங்களுக்கு அனுப்பியிருக்கிறேன்.

உங்கள் அன்பன்,

சிட்னி ரெயிலி.''

மாஸ்கோ விசாரணை உண்மையில் நடந்ததென்பதை மறுக்க முடியாமற்போனதும், ரெயிலி மார்னிங் போஸ்டுக்கு மற்றொரு கடிதம் அனுப்பினான் :

''சாவிங்கோவ் விசாரணை உண்மைதான். அவன் துரோகம் வெளியாகிவிட்டது. அவன் நண்பர்களையும், சங்கத்தையும், நோக்கத்தையும் காட்டிக் கொடுத்துவிட்டான். விரோதிகளிடம் போய்விட்டான். பெருமைப்படத் தகுந்த கம்யூனிச எதிர்ப்பு பட்டியலிலிருந்து அவன் பெயரை அழித்துக் கொண்டான். அவன் நண்பர்கள் மனம் வருந்துகிறார்கள். அணியை ஒழுங்கு படுத்திக்கொண்டு, அவர்கள் வேலையில் முன்னேறுவார்கள்.

தங்கள் அன்புள்ள,

சிட்னி ரெயிலி.''

சர்ச்சில், ரெயிலிக்கு ஒரு குறிப்பு அனுப்பினான் :

''பிரியமுள்ள ரெயிலி,

உங்கள் கடிதம் கிடைத்தது. தொடக்கத்தில் நான் எதிர்பார்த்ததே நிகழ்ந்துவிட்டது. சாவிங்கோவ் மீது மிகுந்த கோபம் கொள்ளமாட்டீர்கள் என்று நினைக்கிறேன். அவன் தப்பமுடியாத நிலைமை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யில் சிக்கிக்கொண்டான். அத்தகைய நிலைமையை வெற்றிகரமாக சமாளித்தவர்களுக்குத்தான், அவனைக் கண்டிக்க உரிமை உண்டு. சாவிங்கோவின் கதை முழுவதும் தெரிவதற்குமுன், அவனைப்பற்றி நான் கொண்டுள்ள கருத்தை மாற்றிக்கொள்ள விரும்பவில்லை.

தங்கள் உண்மையுள்ள,

சர்ச்சில்.''

இங்கிலாந்தில் ரெயிலியை ஆதரித்தவர்கள் வெட்கித் தலைகுனிந்தார்கள். ரெயிலி அமெரிக்காவுக்கு அனுப்பப் பட்டான். சர்ச்சில் ஓய்வுக்காக கெண்ட் நகருக்குச் சென்றான். பிரிட்டிஷ் வெளிநாட்டு இலாகா வாயடைத்துப் போயிற்று.

1924 அக்டோபர் இறுதியில், அதாவது பிரிட்டிஷ் பொதுத் தேர்தலுக்கு முன், 'டெயிலி மெயில்' பத்திரிகையில் ஒரு செய்தி வெளியாகியது. ''பிரிட்டனுக்கு எதிராக சோவியத் சதி'' என்பதே அச்செய்தி. தேர்தலில் டோரிக் கட்சியை எப்படி எதிர்ப்பதென்று, ரஷ்யக் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் கிரிகோரி சினோவீவ், பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுகளுக்கு எழுதிய கடிதத்தைப் பற்றி அதில் குறிப்பிட்டிருந்ததாகச் சொல்லப்பட்டது.

போல்ஷ்விக் எதிர்ப்பைப் பயன்படுத்தி, டோரிக் கட்சி தேர்தலில் வெற்றி அடைந்தது.

சினோவீவ் ஒருபோதும் அக்கடிதம் எழுதவில்லை என்று, ஸ்காட்லந்துயார்டு விண்ட்காம்சில்ஸ் என்பவர் பல ஆண்டுகளுக்குப் பிறகு சொன்னார். அது ஒரு பொய்க் கடிதம். பல நாடுகளின் ஏஜண்டுகள் கூடி அதைத் தயாரித்தார்கள். அது வால்தர் நிக்கோலாயின் அலுவலகத்திலிருந்து வெளியாகியது. அவர் ஜெர்மன் ஏகாதிபத்தியத்தின் இரகசிய இராணுவ இலாகாத் தலைவராக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இருந்தவர். பின்னால் நாஜிக் கட்சியோடு நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார். சோவியத்துக்கு எதிராகப் பொய்யான அறிக்கைகளைத் தயாரித்து, விரிந்த அளவில் பரப்புவதற்காக ஜெர்மனியின் தலை நகரில் அமைக்கப் பட்டிருந்த அலுவலகத்தை அவர் மேல் பார்த்து வந்தார்.

பிரிட்டிஷ் வெளிநாட்டு இலாகா அலுவலகத்திலிருந்து வெளியான ''சினோவீவ் கடிதம்'' என்ற கள்ளக் கடிதம், சார்ச் பெல் என்பவனால் தயாரிக்கப்பட்டது. அவன் டெட்டர்டிங் என்ற எண்ணெய் மன்னனின் கையாள்.

○

## அத்தியாயம் 8

# பின்லந்து எல்லை

## பிராட்வேயில் போல்ஷ்விச எதிர்ப்பு

1924–இல், சிட்னி ரெயிலியும் அவன் மனைவியும் அமெரிக்கா சென்றார்கள். வெள்ளை ரஷ்யர், போல்ஷ்விக் எதிர்ப்பு வீரனான ரெயிலியைத் துன்ற முகத்தில் வரவேற்றார்கள். ரெயிலி பிராட்வேயில் ஒரு காரியாலயத்தைத் திறந்தான். அமெரிக்காவில் சோவியத் எதிர்ப்பு வேலை செய்வதற்கு, அது தலைமைக் காரியாலய மாகியது.

சோவியத் எதிர்ப்புச் சங்கக் கிளை ஒன்றை, அமெரிக் காவில் அமைப்பதே ரெயிலியின் நோக்கம். பெர்லின், லண்டன், பாரிஸ், ரோம், பால்டிக், பால்கன், ஹார்பின், மஞ்சூரிய ஆகிய இடங்களில் ரெயிலியின் சங்கங்கள் தோன்றி வேலை செய்தன, மஞ்சூரியக் கிளைக்கு ஜப்பான் பண உதவி செய்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


சோவியத் எதிர்ப்பு இயக்கத்திற்குப் பண உதவி செய்யக்கூடிய அமெரிக்கச் செல்வந்தரிடம், வெள்ளை ரஷ்யர் ரெயிலியை அறிமுகப்படுத்தினர்.

ஐரோப்பாவிலிருந்த ஏஜண்டுகளில் ஒருவனுக்கு ரெயிலி கீழ்க்கண்ட இரகசியக் கடிதம் அனுப்பினான்:

''இத்தகைய வேலைக்கு இங்கு வேண்டிய அளவு பணம் திரட்டலாம். ஆனால், ரஷ்யாவில் தலைமறைவாயிருக்கும் சோவியத் எதிர்ப்பு இயக்கம் வளர்ச்சியுற்று, சோவியத் அரசாங்கத்தை கவிழ்த்துவிடும் என்ற நம்பிக்கைக்கு ஏற்ற திட்டம் இருந்தால், எவ்வளவு பணம் வேண்டுமானாலும் திரட்டலாம்.

''திட்டம் வெறும் எழுத்தளவில் இல்லாமல், செயலாற்றக் கூடியது என்பதை உறுதிப்படுத்தினால், மோட்டார் மன்னன் ஹென்ரி போர்டு ஏராளமான பணம் தருவார்.''

இங்கிலாந்தில் ஹென்ரி டெட்டர்டிங், ஜெர்மனியில் பிரிட்ஸ் திசன் ஆகிய சீமான்களைப் போல், அமெரிக்காவில் ஹென்ரி போர்டும், போல்ஷ்விக் எதிர்ப்பின் ஆதரவாளராகவும் பாசிசத்தின் நண்பராகவும் இருந்தார். ஹிட்லருக்குப் பண உதவி செய்தவர்களில் ஹென்ரி போர்டும் ஒருவர். ஹிட்லர் அவரைப் புகழ்ந்தான். மியூனிச் நகரில் கார்னிலியஸ் தெருவிலிருந்த ஹிட்லரின் தலைமைக் காரியாலயத்தின் கவர்ச்சியற்ற சிறிய அறையின் சுவரில் ஒரு படம் மாட்டப்பட்டிருந்தது. அது ஹென்ரி போர்டின் உருவப்படம்!

## ரெயிலின் முடிவு

1925-இல், போல்ஷவிக் (கம்யூனிச) எதிர்ப்பு என்னும் திரை மறைவில், உலகம் முழுவதும் பாசிசத்தைப் பரப்ப,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஏற்பாடுகள் செய்யப்பட்டன. சோவியத் எதிர்ப்புக் கிளைகள் அமைக்கப்பட்டிருந்த ரெவல், ஹெலன்ஸ்கி, ரோம், பெர்லின் நகரங்களிலிருந்து ரெயிலிக்குக் கடிதங்கள் வந்தன. அவை ரகசிய மொழியில் அல்லது கண்ணுக்குப் புலனாகாத மையால் எழுதப்பட்டிருந்தன. வசந்த காலத்தில் ரெவல் நகரிலிருந்து அவனுக்கு ஒரு கடிதம் வந்தது. அவன் மிகுந்த பரபரப்புடன் அதைப் பிரித்துப் பார்த்தான். அது அவனுடைய பழைய நண்பன் கமாண்டர் 'இ' என்பவனால் ரகசிய மொழியில் எழுதப் பட்டிருந்தது. அவன் உலகப்போர் நிகழ்ந்த காலத்தில் பிரிட்டிஷ் இரகசிய இலாகாவில், ரெயிலியுடன் வேலை செய்தவன். அப்போது பால்டிக் பகுதியில் பிரிட்டிஷ் தூதர் இலாகாவில் இருந்தான். 1925 ஜனவரி 24-இல், அந்தக் கடிதம் எழுதப்பட்டது. அதில் காணப்பட்ட செய்தி:

''பிரியமுள்ள சிட்னி!

கிரஸ் நோஸ்டனேவ் என்பவனும், அவன் மனைவியும் பாரிசில் உங்களைச் சந்திக்க வருகிறார்கள். கலிபோர்னியா விலிருந்து செய்தி கொண்டு வந்திருப்பதாக அவர்கள் உங்களிடம் சொல்வார்கள். உமர்கயாம் பாடல் ஒன்றை அவர்கள் உங்களிடம் கொடுப்பார்கள். அவர்களை நம் வேலைக்கு உபயோகித்துக் கொள்ள விரும்பினால், அவர் களைத் தாமதிக்கும்படி சொல்லுங்கள். இல்லையேல், 'வணக்கம், போய் வாருங்கள்' என்று சொல்லி அனுப்பி விடுங்கள்.''

கடிதத்தில் கண்ட 'கிரஸ் நோஸ்டனோவ்' என்பது ஷுல்ட்ஸ் என்ற ஜெர்மன் ஒற்றன். 'கலிபோர்னியா' என்பது சோவியத் யூனியன்.

1925 ஆகஸ்டு 6. சிட்னி ரெயிலியும் அவன் மனைவி யும், பாரிசில், ஷுல்ட்ஸை சந்தித்தார்கள். ரஷ்யாவில் ஸ்டாலினுடைய எதிரிகளை விரைவில் சந்திக்க, ரெயிலி

www.tamilarangam.net



ஆவலுற்றான். சோவியத் எதிர்ப்பு இயக்கத்தின் முக்கிய பிரதிநிதி ஒருவனை, ரெயிலி சோவியத் எல்லையில் சந்திப்பதென்று முடிவாகியது. ஏன்?

''ரஷ்யாவில் புதிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனவே, அங்கே போக வேண்டியது அவசியம்'' என்று ரெயிலி தன் மனைவிக்கு எழுதினான்.

புதிய நிலைமை யாது?

லெனின் இறந்தது முதல், சோவியத் எதிர்ப்பாளர் டிராட்ஸ்கியுடன் கூட்டுறவு கொண்டிருப்பதாயும், ஸ்டாலின் ஆட்சியைக் கவிழ்க்க விரிவான ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாயும் ஷுல்ட்ஸ் ரெயிலிக்குச் சொன்னான். இதுவே புதிய நிலைமை. எனவே, பின்லந்து இராணுவத் தளகர்த்தனைப் பார்ப்பதற்காக. ரெயிலி ஹெல்சிங்கி நகருக்குச் சென்றான். அத்தளகர்த்தன் ரெயிலியின் நண்பன். போல்ஷ்விக் எதிர்ப்புச் சங்கத்தில் அவனும் ஓர் உறுப்பினன். ரெயிலி சோவியத் எல்லையைக் கடந்து செல்வதற்கு, அவன் உதவி செய்தான்.

ஒரு வாரத்திற்குப் பின், 1925 செப்டம்பர் 25-இல் ரெயிலி தன் மனைவிக்குப் பின்லந்திலிருந்து ஒரு கடிதம் எழுதினான்:

''நான் மூன்று நாட்களுக்குப் பெட்ரோகிராடுக்கும் மாஸ்கோவுக்கும் போகவேண்டியது அவசியம். நான் இன்றிரவு புறப்படுகிறேன். செவ்வாயன்று காலை திரும்புவேன்.''

இதுவே ரெயிலியின் கடைசிக் கடிதம்.

வாரங்கள் பல கழிந்தன. சிட்னி ரெயிலியைப் பற்றி ஒரு செய்தியும் இல்லை. அவன் சோவியத் குண்டுக்கு இரையானான் என்று சோவியத் செய்தியால் தெரிய வந்தது. அச் செய்தியின் சுருக்கம்: —

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


''ரெயிலி சோவியத் எதிர்பாளர்களைச் சந்தித்துப் பேசிவிட்டுத் திரும்பும் பொழுது, பின்லந்து எல்லையில் சோவியத் எல்லைப்புறக் காவலாளிகளால் சுட்டுக் கொல்லப்பட்டான்.''

○

*அத்தியாயம் 9*

# போர்க்கோலம்

ரஷ்யப் புரட்சி, ஏகாதிபத்திய அடிப்படையை ஆட்டி அசைத்தது. காலனி நாடுகளிலுள்ள மக்கள் விடுதலை வேட்கையில் வீறிட்டெழுந்தனர். 1926-இல், புரட்சிப் புயல் முழு வேகத்துடன் வீசியது. சீனாவில் புரட்சித் தீ மூண்டெழுந்தது. கோமிண்டாங், கம்யூனிஸ்டு ஆகிய இரு சக்திகளும் ஒன்றுபட்டு, மேற்கு ஏகாதிபத்தியத்தின் கைப்பாவையான பீக்கிங் சர்வாதிகாரத்தைத் தூக்கி எறிந்துவிட்டு, சுதந்திர சீனாவை அமைத்தன.

ஆசியாவிலும் மேலை நாடுகளிலும் சோவியத் எதிர்ப்புப் பிரசாரம், கடுமையாக நடைபெற்றது. அடக்கி ஒடுக்கப்பட்டுக் கிடந்ததன் காரணமாகக் கிளர்ந்தெழுந்த மக்களின் புரட்சி, மாஸ்கோ சதியின் விளைவு என்று பறைசாற்றப்பட்டது. சீன மக்கள் கடுமையாகத் தாக்கப் பட்டார்கள். ஆசியாவில் போல்ஷ்விசத்தை எதிர்ப்பதற் கான இரும்புக் கோட்டையாகத் தான், விளங்குவதாய், ஜப்பான் சக்கரவர்த்தி பெருமையடித்துக் கொண்டான்.

ஜப்பான், பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளின் ஆதரவினால், கோமிண்டாங் இராணுவம், ஐக்கிய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


முன்னணியைச் சிதைத்தது. அது, சியாங்-கே-ஷேக் தலைமையில், புரட்சிச் சக்திகளைத் தாக்கியது. எங்கும் ஒரே படுகொலை. சாங்காய், பீக்கிங் முதலிய இடங்களில் கம்யூனிசப் பற்றுள்ளவர் என்று சந்தேகிக்கப்பட்ட தொழிலாளர், விவசாயிகள், மாணவர்கள், ஆயிரக் கணக்கில் சுட்டுத் தள்ளப்பட்டார்கள். பலர் சிறைகளில் சித்திரவதைக்குள்ளாயினர். உள்நாட்டுப் போர் தொடங்கியது. சீன மக்களின் வீரச் செயல், ஆசிய மக்களைத் தட்டிஎழுப்பியது. இந்தோனேசியா, இந்தோசீனா, பர்மா, இந்தியா ஆகிய அடிமை நாடுகளிலும் விடுதலை வேட்கை பொங்கி எழுந்தது. ஏகாதிபத்தியத் தளையை அறுத்தெறிய மக்கள் கொதித்தெழுந்தார்கள், ஏகாதிபத்தியங்கள் கிடுகிடுத்தன. போல்ஷ்விசத்திலிருந்து தம்மைப் பாதுகாக்க, ஜப்பானை எதிர்நோக்கின. கம்யூனிசத்தை எதிர்ப்பதற்காகத் தாங்கள் தயாரித்த பழைய திட்டங்களை, ஐரோப்பிய இராணுவ அதிகாரிகள் எடுத்தார்கள்.

போல்ஷ்விசத்தை குழிதோண்டிப் புதைக்க சரியான காலம் வந்துவிட்டதென்று, ஜெர்மன் ஏகாதிபத்தியச் செய்தி நிலையம் பறைசாற்றியது. நாஜி இராணுவ அதிகாரிகளுடனும், தொழில் முதலாளிகளுடனும், தொடர்ச்சியாகப் பல மகாநாடுகள் கூடிய பிறகு, தளகர்த்தன் மாக்ஸ் ஹாப்மன் லண்டனுக்கு விரைந்தான். புகழ் பெற்ற தனது திட்டத்தைப் பிரிட்டிஷ் அன்னிய இலாகா அலுவலகத்தில் சமர்ப்பித்தான். டோரிக் கட்சியைச் சேர்ந்த சட்டசபை உறுப்பினர்களில் சிலரையும், இராணுவ அதிகாரிகளையும் கொண்ட ஒரு குழு அமைப்பதே அவன் லண்டனுக்குச் சென்றதன் நோக்கம்.

சர்.ஹென்ரி டெட்டர்டிங் கையெழுத்திட்ட கடிதம் ஒன்று, 1926 ஜனவரி 5-இல் லண்டன் மார்னிங் போஸ்ட் பத்திரிகையில் வெளியாகியது:



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''சில மாதங்களில் ரஷ்யா மீண்டும் நாகரிகம் அடையும். ஜார் ஆட்சியைக் காட்டிலும் சிறந்த ஆட்சி ஏற்படும். இவ்வாண்டிற்குள், ரஷ்யாவில் (கம்யூனிசம்) போல்ஷ்விசம் மாண்டு விடும். உலகிலுள்ள மூலதனம் ரஷ்யாவில் குவியும். வேலை செய்ய விருப்பமுள்ள எல்லோரும், அங்கு வருவார்கள். உழைப்பு மேன்மையுறும்.''

1927 மே27-இல், லண்டனில் சோவியத் தூதர் அலுவலகத்தைப் பிரிட்டிஷ் இரகசியப் போலீஸ் சோதனையிட்டது. குறிப்பிடத் தகுந்த ஏடுகள் எதுவும் கிடைக்கவில்லை. எனினும் பிரிட்டனுக்கு எதிராக சோவியத் செய்யும் சதிகளுக்கு ஆதாரம் கிடைத்திருப்பதாக, ''மார்னிங் போஸ்ட்'', ''டெயிலி மெயில்'' ஆகிய சோவியத் எதிர்ப்புப் பத்திரிகைகள் திடுக்கிடும் கட்டுக் கதைகளை வெளியிட்டன. பிரிட்டிஷ் அரசாங்கம், சோவியத் யூனியனுடன் வைத்திருந்த அரசியல், வாணிகத் தொடர்புகளை அறுத்துக்கொண்டது.

பெர்லின், பாரிஸ் நகரங்களிலும் சோவியத் அலுவலகங்களைப் போலீஸ் சோதனையிட்டது.

போலந்தின் சோவியத் பிரதிநிதி, வார்சாவில் கொலை செய்யப்பட்டார்.

லெனின் கிராடில் நடந்த போல்ஷ்விக் கூட்டத்தில், வெடிகுண்டுகள் எறியப்பட்டன.

இத்தகைய பலாத்கார நிகழ்ச்சிகள் ஏன் என்ற கேள்விக்குப் பதில், மார்ஷல் போக், அர்னால்டு ரெக்பெர்க் என்ற நாஜி தலைவனுக்கு எழுதிய கடிதத்தின் மூலம் தெளிவாகியது. கடிதத்தின் விவரம்:

''போல்ஷ்விக் கொலைகாரர்கள், ஐரோப்பாவில் பாதிக்கு அதிகமாகவும், ஆசியாவில் மிகுதியான பகுதியையும், ஆட்சி செய்வதை நாகரிகமுள்ளவர்கள் அனுமதிக்க மாட்டார்கள். ஆனால், பிரான்சும் ஜெர்மனியும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒற்றுமைப்படாமல் இருக்கும்வரை, ரஷ்யாவுக்கு எதிராக ஒன்றும் செய்யமுடியாது. போல்ஷ்விச எதிர்ப்பு முன்னணியில் நிற்கும் தளகர்த்தன் ஹாப்மானுக்கு என் வணக்கத்தைத் தெரிவிக்கவும்.''

போருக்கான எல்லா ஏற்பாடுகளும் தயாராகிக் கொண்டிருந்தன.

1930-ஆம் ஆண்டு கோடை காலம்வரை, வெளிப்படையான திட்டம் ஒன்றும் தயாராகவில்லை என்பது தெளிவாகியது. விடுவிக்கப்பட்ட பகுதிகளில் ஆட்சி நடத்துவதில், வல்லரசுகளுக்குள் மாறுபட்ட கருத்துக்கள் எழுந்தன. பிரிட்டிஷ், பிரெஞ்சு முதலாளிகள், காக்கஸஸ், டோனட்ஸ் நிலக்கரிச் சுரங்கங்களுக்காக தங்களுக்குள் சண்டையிட்டனர். உக்ரேன் மீது ஜெர்மனி ஆதிக்கம் செலுத்த ஆசைப்பட்டதை அவ்விரு நாடுகளும் எதிர்த்தன. எனினும், சோவியத் எதிர்ப்பு வீரன் சர் ஹென்றி டெட்டர்டிங் சிறிதும் தளர்ச்சியுறவில்லை. வல்லரசுகளுக்குள் தோன்றிய பிணக்குகள் விரைவில் தீர்ந்துவிடும்; 1930-ஆம் ஆண்டு கோடை காலத்தில் போர் தொடங்கலாம் என்ற நம்பிக்கையுடன் இருந்தான். பாரிசில் நடந்த மகாநாட்டில் ரஷ்யாவிலிருந்து வெளியேறிய இளவரசர்கள், மதக் குருக்கள், தளகர்த்தர்கள் ஆகியோர் கூடியிருந்தார்கள். ''சமீபத்தில் ரஷ்யர்களின் தாய்நாடு விடுதலையடையும்'' என்று டெட்டர்டிங் மகாநாட்டில் குறிப்பிட்டான்.

போருக்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும்பொழுது, உலகப் பொருளாதார நெருக்கடி குறுக்கிட்டது.

வேலையில்லாத் திண்டாட்டம், பசி, பட்டினி ஆகிய கேடுகள் உலகைக் கவ்வியது. போல்ஷ்விசத்தை எதிர்ப்பதற்காக ஏற்பட்ட புனிதக் கூட்டுறவில் கலந்திருந்த நாடுகளைப் பொருளாதார நெருக்கடி பிடித்தாட்டியது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒவ்வொரு நாளும், பெரிய பாங்கிகளும், தொழில் நிலையங்களும் வீழ்ச்சியுற்றன. சிறிய முதலாளிகள் அழிந்து போயினர். தொழிலாளர் வேலையின்றி வீதிகளில் திரிந்தார்கள். லட்சக்கணக்கான மக்கள், பட்டினியால் பரிதவிக்கும்பொழுது, தானியம் நிலத்தில் புதைக்கப்பட்டது. காப்பிக் கொட்டை எரிக்கப்பட்டது. பொருள்களை வாங்க மக்களிடம் பணம் இல்லை. பொருளாதாரம் சீர்குலைந்தது.

கடுமையான நடவடிக்கைகள் எடுக்கத் தவறினால், ஒரு ஆண்டுக்குள் உலகில் முதலாளித்துவம் அழிந்துவிடும் என்று, 1931-இல் இங்கிலாந்து பாங்கிக் கவர்னர் மாண்டேக் நார்மன், பிரான்ஸ் கவர்னர் மாரட் என்பவருக்கு எழுதினார்.

நல்ல வாய்ப்புக்காக பதுங்கியிருந்த ஜப்பான், 1931 செப்டம்பர் 18-இல் மஞ்சூரியாவில் நுழைந்தது. கோமிண்டாங் இராணுவம் கம்யூனிஸ்டுகளுடன் போர் புரிந்துகொண்டிருந்ததால், ஜப்பானை எதிர்த்து நிற்க முடியவில்லை. ''போல்ஷ்விச ஆபத்திலிருந்து சீனாவைக் காப்பாற்ற'', ஜப்பான் மஞ்சூரியாவைக் கைப்பற்றிக் கொண்டது. இரண்டாவது உலகப்போர் ஆரம்பித்துவிட்டதெனவே கூறலாம்.

○

அத்தியாயம் 10

## சகாப்தம் முடிவு

போல்ஷ்விசப் பூச்சாண்டி காட்டி, நாஜிசம் ஆட்சிக்கு வந்தது. ஜெர்மனியைக் கம்யூனிச ஆபத்திலிருந்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காப்பாற்றப்போவதாகப் பசப்பி, ஹிட்லர் அதிகார பீடத்தில் அமர்ந்தான். ஜெர்மன் சட்டசபையைத் தீக்கிரையாக்கினான். பழியைக் கம்யூனிஸ்டுகளின் மீது சுமத்தினான். கம்யூனிஸ்டுப் புரட்சியின் ஒத்திகை என்று பறைசாற்றினான். பாசிச எதிரிகளை கொலை செய்தான். தொழிற் சங்கங்களுக்கு வாய்ப்பூட்டிட்டான். ஜெர்மனியின் சர்வாதிகாரி ஆனான், போல்ஷ்விச எதிர்ப்பு என்ற வேடத்தில் உலகப் பிற்போக்குச் சக்திகளும் ஏகாதிபத்யமும் ஹிட்லரை ஆதரித்தன. சோவியத் ரஷ்யாவுக்கு எதிராகச் சதி செய்து வந்த சக்திகள் அனைத்தும் நாஜிசத்துக்கு ஆதரவு தந்தன.

1933 நவம்பர் 28-இல், டெயிலி மெயில் பாடிய பல்லவி பிரிட்டிஷ் அன்னிய நாட்டுக் கொள்கையை வெளியாக்கியது;

''பலம் பொருந்திய நாஜி ஜெர்மனி, கம்யூனிசத்தின் எதிரியாக விளங்குகிறது. ஜெர்மனிக்குச் சற்று இடம் தரவேண்டும். அதன் கவனம் போல்ஷ்விக் ரஷ்யா மீது திரும்பினால், ரஷ்ய மக்கள் மீண்டும் நாகரிகமடைவர். உலக வாணிகம் மீண்டும் ஓங்கும்.''

ஐரோப்பிய ஜனநாயகத்தை அழிப்பதற்காகவும், சோவியத் ஆட்சியைக் கவிழ்ப்பதற்காகவும், சிதறிக் கிடந்த சோவியத் எதிர்ப்புச் சக்திகள் நாஜிகளின் தலைமையில் ஒன்று திரட்டப்பட்டன.

ஹிட்லரின் படைகள் வீதியில் அணிவகுத்துச் செல்லும் பொழுது, ''நமதே உலகம்'' என்று முழங்கிய குரலைக் கேட்ட சர்ச்சில்.

''இந்த இளங்காளைகள் ஜெர்மன் வீதிகளில் போகும் போது, போர்க் கருவிகளைத் தேடுகிறார்கள். அவை கிடைத்தவுடன் இழந்த நாடுகளைக் கேட்பார்கள். அப்பொழுது ஒவ்வொரு நாட்டின் அடிப்படையும் கிடுகிடுக்கும்'' என்று எச்சரித்தான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


உலக வரலாற்றின் ஒரு சகாப்தம் முடிவுற்றதென் பதை ஒருவர் கண்டார். அவர் அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்ட். அவருக்கு முன்னால் தலைவராயிருந்த ஹூவர் கையாண்டுவந்த சோவியத் எதிர்ப்புக் கொள்கையை ரூஸ்வெல்ட் கைவிட்டார். 1939 நவம்பர் 16-இல், சோவியத் யூனியனுடன் அவர் உறவு ஏற்படுத்தினார். அன்றே மாக்சிம் லிட்விேைவுக்குக் கீழ்க்கண்டவாறு கடிதம் எழுதினார் :

''நம் மக்களிடையே ஏற்பட்டிருக்கிற தொடர்பு என்றென்றும் நேசப் பான்மையுடன் நிலைத்திருக்கும் என்று நம்புகிறேன். இரு நாடுகளின் நலனுக்காகவும், உலக சமாதானத்தை நிலைநாட்டுவதற்காகவும் கூட்டுறவு அவசியம்.''

ஆனால் ஒரு ஆண்டு முடிவதற்குள், நாஜி ஜெர்மனி சர்வதேச சங்கத்திலிருந்து விலகியது. சோவியத் யூனியன் அந்த இடத்தில் அமர்ந்தது.

புதிய சகாப்தம் தொடங்கியது. அது கொலை, சதி, கலகம் ஆகிய கொடிய நிகழ்ச்சிகளைக் கொண்டது. இரண்டாவது உலகப் போருக்கு, புதிய சகாப்தம் வித்திட்டது.

O

## அத்தியாயம் 11

# துரோகப் பாதை : கலகக்காரர்கள்

ஹிட்லர் அதிகாரத்திற்கு வந்தது முதல் சோவியத் எதிர்ப்பு, நாஜிக் கட்சியின் உலக ஆதிக்கத் திட்டத்தில் ஒரு பகுதி ஆயிற்று. பதினைந்து ஆண்டுகளாக உலகில் உருவாகி வந்த எதிர்ப்புரட்சிச் சக்திகளை எல்லாம்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


ஹிட்லர் ஒன்று சேர்ந்தான். இந்த சக்திகள் ஜெர்மனியின் ஐந்தாம்படையாக மாற்றி அமைக்கப்பட்டன. மிகத்திறமையுள்ள ஐந்தாம்படை ரஷ்யாவில் வேலை செய்து வந்தது. அதன் தலைவன் லியோன் டிராட்ஸ்கி.

மூன்றாவது 'ரீச்' தோன்றியபொழுது, டிராட்ஸ்கி சோவியத்துக்கு எதிரான சர்வதேச சதிக்கூட்டத்திற்குத் தலைவனாக இருந்தான். தனது ஐந்தாம் படையின் உதவியால் சோவியத் அரசைக் கவிழ்த்துவிட்டு, தான் அதிகாரத்தைக் கைப்பற்ற விரும்பினான்.

1919—20-இல், டிராட்ஸ்கி போர் மந்திரி ஆனான். செஞ்சேனையின் வெற்றிக்கு ''டிராட்ஸ்கியின் தலைமை'' தான் காரணம் என்று, ஐரோப்பிய, அமெரிக்கப் பத்திரிகைகள் புகழ்ந்தன.

1929-இல், ரஷ்யாவிலிருந்து டிராட்ஸ்கியை நாடு கடத்தியதும். சோவியத் எதிரிகள் டிராட்ஸ்கியை பற்றிக் கட்டுக் கதைகள் புனைந்தனர்.

''ரஷ்யப் புரட்சியின் சிறந்த போல்ஷ்விக் தலைவர்; லெனினுக்கு ஊக்கம் அளிப்பவர்; லெனினுடைய நெருங்கிய கூட்டாளி; லெனினுக்குப் பின் தலைவராவதற்குத் தகுதியுடையவர்;'' என்று புகழ்மாலை சூட்டினர்.

''ஒலிப்பது புரட்சி முழக்கங்கள்; கைகோர்த்துச் செல்வது வலதுசாரிகளுடன்; எதிர்ப்பது இடதுசாரியை'' என்று, லெனின் டிராட்ஸ்கியைப்பற்றித் தனது கருத்தை வெளியிட்டார்.

அவர் டிராட்ஸ்கியை 'சூடாஸ்' *என்றழைத்தார்.

---

*சூடாஸ்– ஏசுநாதரின் சீடர்களில் ஒருவன். அவன் ஏசுநாதரை, அவரது விரோதிகளிடம் காட்டிக் கொடுத்தான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1917 மார்ச்சு மாதத்தில் ஜார் ஆட்சி வீழ்ச்சியுற்ற பொழுது, டிராஸ்ட்கி 'புது உலகம்' என்னும் ரஷ்யப் பத்திரிகையின் ஆசிரியனாக நியூயார்க் பட்டணத்தில் இருந்தான். லெனினுடைய எதிரியும், டிராட்ஸ்கியின் நண்பனுமான புகாரின் என்ற அரசியல் வாதியும் அவனுடன் இருந்தான். டிராட்ஸ்கி ரஷ்யாவுக்கு விரைந்தான். கனடா அதிகாரிகள் அவனை ஹாலிபாக்ஸ் என்னும் இடத்தில் கைது செய்தார்கள். ஒரு மாதம் சிறையில் இருந்தான். ரஷ்யத் தற்காலிக அரசின் வேண்டுகோளின் படி அவன் விடுதலையாகி, பெட்ரோகிராடு சென்றான்.

''லெனினுக்கும் டிராட்ஸ்கிக்கும் இடையே கருத்து வேறுபாடு ''என்று, பிரிட்டிஷ் ஏஜண்டு புரூஸ்லோக்கார்ட் தனது குறிப்பில் குறித்திருந்தான். எனவே, டிராட்ஸ்கியை பயன்படுத்திக் கொள்ளலாம் என்று, பிரிட்டிஷ் இரகசிய இலாகா நம்பியது. எனவே, அவன் ரஷ்யாவுக்குத் திரும்பிப் போக அது அனுமதித்தது.

டிராட்ஸ்கி பெட்ரோகிராடுக்கு மே மாதம் போனான். புரட்சிகரமான கட்சி ஒன்றை அமைக்க முயன்றான். ஆனால், டிராட்ஸ்கீய இயக்கத்திற்கு வருங்காலத்தில் இடம் இல்லை என்பது தெளிவாயிற்று. மக்கள் போல்ஷ்விக் கட்சியை ஆதரித்தனர். எனவே டிராட்ஸ்கி 1917 ஆகஸ்டில், பெரிய அரசியல் கரணம் அடித்தான். பதினான்கு ஆண்டுகளாக லெனினையும், போல்ஷ்விக் கட்சியையும் எதிர்த்து வந்த அவன் போல்ஷ்விக் கட்சியில் அங்கத்தினன் ஆக, அனுமதி கோரினான். டிராட்ஸ்கியின் போக்கைக் கண்டித்து, லெனின் பன்முறை எச்சரித்திருந்தார்; பயனில்லை- லெனின் நீங்கலாக, ஏனைய ரஷ்யப் புரட்சித் தலைவர்களைக் காட்டிலும், ரஷ்யாவுக்கு வெளியே டிராட்ஸ்கியின் பெயர்தான் நன்கு தெரியும். மேலும், அவனுடைய ஆற்றலைப் போல்ஷ்விக் கட்சி பயன் படுத்திக் கொள்ளலாம், எனவே அவன் போல்ஷ்விக் கட்சியில் சேர்த்துக் கொள்ளப்பட்டான். அவனுடைய பல

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



திறப்பட்ட கூட்டம் முழுவதும், அவனுடன் போல்ஷ்விக் கட்சியில் சேர்ந்தது.

முதலாவது சோவியத் அரசாங்கம் அமைக்கப்பட்டபொழுது, போல்ஷ்விக்குகள் - சமூகப் புரட்சிக்காரர்கள் ஆகியோரைக் கொண்ட கூட்டு அரசாங்கம் தோன்றியது. டிராட்ஸ்கி வெளிநாட்டு இலாகா மந்திரியானான்.

## இடதுசாரி எதிர்ப்பு

டிராட்ஸ்கி முதலில், வெளிநாட்டு மந்திரியாக இருந்தான். பிறகு, போர் மந்திரி ஆனான். போல்ஷ்விக் கட்சிக்குள் இடதுசாரி என்று ஒரு குழு அமைத்தான். அவன் அதன் தலைவன். அக்கூட்டத்தார் எண்ணிக்கையில் குறைந்திருந்த போதிலும், திறமையான பேச்சாளராகவும், ஸ்தாபன அமைப்பாளராகவும் இருந்தனர். ரஷ்ய மென்ஷ்விக்குகளுடனும், சமூகப் புரட்சிக்காரர்களுடனும் வெளிநாடுகளுடனும் அவர்கள் தொடர்பு கொண்டிருந்தார்கள். புரட்சிக்குப்பின், ராணுவத்திலும், அரசாங்கத்திலும் தலைசிறந்த பதவிகள் வகித்தனர்.

டிராட்ஸ்கியின் இடதுசாரிக் குழுவில் புகாரின் சினோவீவ், காமனேவ் என்ற மூன்று தலைவர்கள் இருந்தார்கள். தலைமைப் பதவிக்காக அவர்கள் அடிக்கடி தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டார்கள். ஆனால் சோவியத் அரசாங்கத்தைக் கைப்பற்றும் முயற்சியில் அவர்கள் ஒன்றுபட்டார்கள். டிராட்ஸ்கி குழுவினரில் பயாட்டக்கோவ். கால்ராடக், கிரஸ்டின்ஸ்கி, சோக்கோல்நிக்கோவ், ஆகியோர் குறிப்பிடத்தகுந்தவர்கள், ஜார் அதிகாரிகளில் சிலரையும்.|இராணுவத்தில் உயர் பதவிகளில் டிராட்ஸ்கி வைத்திருந்தான்,

அவன் போல்ஷ்விக் கட்சிக்குள் இடதுசாரிக் குழு அமைத்திருந்ததின் நோக்கம், லெனினைத் தள்ளிவிட்டுத் தான் அதிகாரத்திற்கு வரவேண்டும் என்பதுதான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சோவியத் ரஷ்யாவுக்கு வெளியேயிருந்த டிராஸ்ட்கியின் நண்பர்கள், லெனினுடைய ஆட்சி கவிழ்ந்துவிடும். டிராட்ஸ்கியும் அவனுடைய இடதுசாரிக் கூட்டத்தினரும் ஆதிக்கத்திற்கு வந்துவிடுவர் என்று கருதினர். ''கம்யூனிஸ்டு வாலிபர்களும், பல அதிகாரிகளும், செம்படை வீரர்களும் டிராட்ஸ்கிக்குப் பக்கபலமாயிருக்கிறார்கள்'' என்று அமெரிக்க நிருபர் ஐசக் அறிவித்தான். டிராட்ஸ்கி தன் ஆற்றலையும், செல்வாக்கையும் மிகைபட எண்ணியது போல வெளி உலகமும் அவனைப்பற்றி மிகைபடக் கருதியது.

மாபெரும் மக்கள் கூட்டத்தைத் தன் பக்கம் திரட்ட, டிராட்ஸ்கி முயற்சித்தான். நாடு முழுவதும் சுற்றினான். ''பழைய மக்களைக் கூட்டித் தீப்பொறி பறக்க பேசினான். ''பழைய போல்ஷ்விக்குகள் பிற்போக்காளராகி விட்டனர். வாலிபர்களே! என் பக்கம் வாருங்கள்'' என்று பிதற்றினான். உள்நாட்டுப் போரில் புதிய வெற்றியுடன் திரும்பி வந்த மக்கள் அவனுடைய பேச்சில் மயங்கவில்லை.

டிராட்ஸ்கியின் போக்கும் வழிகளும் புரட்சிக் காலத்திற்கு முன்னர்தான் பொருத்தம் என்று, சர். பெர்னார்டு பாரஸ் 'ரஷ்ய வரலாறு' என்னும் நூலில் குறிப்பிட்டிருக்கிறார்.

''கட்சிக்குள் கட்சி ஏற்படுவதானது, புரட்சிக் கட்சிக்குக் கேடு விளைவிக்கும். இன்று முதல் கட்சித் தலைவர்கள், பெரும்பான்மையோரால், நிறைவேற்றப் படும் தீர்மானங்களுக்கும், பெரும்பான்மையினர் ஆட்சிக்கும் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். தவறி நடப்பவர்கள் கட்சியிலிருந்து நீக்கப்படுவர்'' என்ற தீர்மானத்தை, 1921 மார்ச்சு மாதம் போல்ஷ்விக் கட்சியின் பத்தாவது காங்கிரசில், லெனின் தலைமையில் நடந்த மத்தியக் கமிட்டி நிறைவேற்றியது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''டிராட்ஸ்கி விளைவிக்கும் குழப்பத்தைப் பயன் படுத்திக் கொண்டு, சோவியத் விரோதிகள் 'டிராட்ஸ்கீய வாதிகள்' என்ற பெயரால் கட்சிக்குள் நுழைந்துவிடு கிறார்கள்'' என்று மத்தியக் கமிட்டி டிராட்ஸ்கியை எச்சரித்தது. பல டிராட்ஸ்கீய வாதிகளும், இடதுசாரி களும் கட்சியிலிருந்து வெளியே தள்ளப்பட்டார்கள்.

1922 மார்ச்சு மாதத்தில் ஜோசப் ஸ்டாலின், கட்சியின் பொதுச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார். லெனினுடைய திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பு அவருக்குக் கொடுக்கப்பட்டது.

கட்சியின் எச்சரிக்கையாலும், டிராட்ஸ்கீய வாதிகளில் சிலர் விலக்கப்பட்டதாலும், டிராட்ஸ்கிக்கு இருந்த ஆதரவு குறைந்தது. ஸ்டாலின் பொதுச் செயலாள ரானதும், கட்சிச் சண்டைக்கு முடிவு கட்டப்பட்டது. டிராட்ஸ்கியின் ஆதிக்கம் குறைந்தது.

## துரோகப் பாதை.

டிராட்ஸ்கியும் அவனுடைய தோழர்களும், வெளிப் படையாகவும் இரகசியமாகவும் சோவியத் அரசாங்கத்துக்கு விரோதமாக வேலை செய்து வந்தார்கள். இடதுசாரி எதிர்ப்பு இயக்கத்தின் பெயரால் டிராட்ஸ்கி ரஷ்யாவில் சதிகார அமைப்பு ஒன்று அமைத்தான். ரெயிலியும் சமூகப் புரட்சிக்காரர்களும் மற்ற சோவியத் விரோதிகளும் ஏற் படுத்திய சதிகார அமைப்பின் அடிப்படையில் அது கட்டப் பட்டது.

1923–ஆம் ஆண்டுக்குள், அது வலிமையுள்ள இரகசிய இயந்திரமாக வளர்ச்சியடைந்து விட்டது. நாடு முழுவதும் இரகசிய அச்சகங்கள் நிறுவப்பட்டன. இராணுவத்திலும், சோவியத் அரசாங்கத்திலும், கட்சியிலும், டிராட்ஸ்கியின் கையாட்கள் புகுந்து கொண்டார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



டிராட்ஸ்கியின் மகன் லியோன் செடோவும், சதிகாரக் கும்பலில் ஒருவனாக இருந்தான். போல்ஷ்விக் கட்சியில், இடதுசாரி எதிர்ப்புக் கூட்டமாக இருந்து வந்த டிராட்ஸ்கி குழுவினர் சோவியத் அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதி செய்துவந்த கூட்டத்தாருடன் கலந்து கொள்ளும் தருவாயில் இருந்தார். டிராட்ஸ்கி 1938-இல், எழுதிய நூலில் குறிப்பிட்டிருப்பதாவது: ''1923இல் லியோன் எதிர்ப்பு இயக்கத்தில் ஈடுபட்டான். பதினேழு வயதிலேயே அவன் புரட்சிக்காரனானான். சதிவேலை, இரகசியக் கூட்டங்கள், பிரசுரங்களை வழங்குதல் ஆகிய கலைகளைக் கற்றுக் கொண்டான். காம்சமால் அதாவது கம்யூனிஸ்டு வாலிபர்கள் சங்கத்திலும், சோவியத் எதிர்ப்பாளர்களைத் தயாரித்தான்.'' அந்த நூலின் பெயர், லியோன் செடோவ்: மகன்—நண்பன்—போர்வீரன்.

சோவியத் ரஷ்யாவுக்குள் சதி செய்ததுடன் டிராட்ஸ்கி நிற்கவில்லை. 1921—1922 குளிர்காலத்தில், டிராட்ஸ்கீயத் தலைவர்களில் ஒருவனான கிரஸ்டின்ஸ்கி சோவியத் தூதனாக ஜெர்மனிக்குச் சென்றான். ஜெர்மன் தளபதி ஹன்ஸ்வான் சீக்ட் என்பவனை, அவன் பெர்லினில் சந்தித்தான். போர் மந்திரி டிராட்ஸ்கி நடத்தும் எதிர்ப்பை ஜெர்மனி ஆதரிப்பதாகத் தளகர்த்தன், கிரஸ்டின்ஸ்கியிடம் மறைமுகமாகத் தெரிவித்தான். சில மாதங்களுக்குப்பின், கிரஸ்டின்ஸ்கி மாஸ்கோ திரும்பி வந்தபொழுது, ஜெர்மன் தளகர்த்தன் சொன்னதை அவன் டிராஸ்ட்கியிடம் தெரிவித்தான். சோவியத் எதிர்ப்பு இயக்கத்தை நடத்த டிராட்ஸ்கிக்குப் பணம் மிகவும் அவசியமாயிருந்தது. ''ஜெர்மனி ரஷ்யாவின் விரோதியல்ல. இரு நாடுகளுக்கும் இடையே சமீபத்தில் போர் மூளும் என்று சொல்வதற்கில்லை. ஜெர்மனியின் கவனம் மேல் திசையில்தான் இருக்கிறது. பிரான்சு, இங்கிலாந்து ஆகிய இரு நாடுகளையும் பழிவாங்கக் கருது கிறது. சோவியத் ரஷ்யாவை எதிர்க்கும் அரசியல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வாதிகள் இந்த நிலைமையைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்'' என்று டிராட்ஸ்கி சொன்னான்.

1922-இல்; கிரஸ்டின்ஸ்கி பெர்லின் போனதும், தளகர்த்தனைச் சந்தித்தான். டிராட்ஸ்கியின் செய்தியைச் சொன்னான். தளகர்த்தன் சோவியத் எதிர்ப்பு இயக்கத்தை நடத்தப் பண உதவி செய்ய இசைந்தான். பிற்காலத்தில் மாஸ்கோவில் நடந்த சதி வழக்குகளில், ஜெர்மன் தளகர்த்தனுக்கும் தனக்கும் நடந்த பேச்சு வார்த்தையைப் பற்றி கிரஸ்டின்ஸ்கி கூறியதாவது :

''ஜெர்மன் தளகர்த்தனிடம் செய்தியைத் தெரிவித்து, 250,000 தங்க மார்க்குகள் (ஜெர்மன் நாணயம்) வேண்டுமென்று கேட்டேன். அவன் ஒப்புக்கொண்டான். அவன் சில கோரிக்கைகளை என் முன் வைத்தான்; இரகசியமானதும் முக்கியமானதுமான சில இராணுவத் தகவல்களை அவனுக்குத் தெரிவிக்கவேண்டும்; சோவியத் யூனியனுக்கு வருகிற ஜெர்மன் ஒற்றர்களுக்கு உதவி செய்யவேண்டும்.''

தளகர்த்தனின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1923-இல், ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்தது.

## ஆதிக்கத்திற்காகப் போர்

போல்ஷ்விக் கட்சியின் கர்த்தாவும் தலைவருமான லெனின் 1924 ஜனவரி 21-இல், மரணமானார்.

லெனின் இறந்ததும், டிராட்ஸ்கி அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சித்தான். 1924, மே மாதத்தில் நடந்த கட்சிக் காங்கிரஸில் டிராட்ஸ்கி, லெனினுக்குப் பிறகு அதிகாரத்திற்கு உரிமையுள்ளவர் ஸ்டாலின் அல்லவென்றும், தன்னையே லெனினுக்குப் பின் வாரிசாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டான். அவனுடைய நண்பர்களின் சொல்லைக் கேட்காமல், அவன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஸ்டாலினுடன் போட்டியிட்டான். கூட்டத்திற்கு வந்திருந்த 748 போல்ஷ்விக் பிரதிநிதிகளும் ஒருமுகமாக ஸ்டாலினுக்கே வாக்களித்தார்கள். ஸ்டாலின் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். எனவே, டிராட்ஸ்கியின் எதிர்ப்பும் சூழ்ச்சியும் அதிகரித்தது. சோவியத் அரசாங்கம் மீது பகைமை கொண்டிருந்த அனைவரும் ஒன்றுபட்டுப் புதிய எதிர்ப்புக் கூட்டம் ஒன்றைத் தோற்றுவித்தனர். அந்தக் கூட்டம் போர்க் கருவிகளைத் திரட்டியது. சோவியத் பூமியில் டிராட்ஸ்கியின் படை ஒன்று உருவாகியது.

பிரிட்டிஷ் இரகசிய இலாகாவைச் சேர்ந்த 'கேப்டன் சிட்னி ஜார்ஜ் ரெயிலி' அப்போது ரஷ்யாவுக்கு வெளியே இருந்தான். சோவியத் ரஷ்யாவைத் தாக்க அதுவே சரியான காலம் என்று அவன் நினைத்தான். பிரிட்டிஷ் கைப்பாவையான போரிஸ் சாவிங்கோவ் ரஷ்யாவுக்கு அனுப்பப்பட்டான். சோவியத் ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக நடந்த சூழ்ச்சியில் சர்ச்சிலும் ஈடுபட்டிருந்தார். அவருடைய நூல் ஒன்றில் அவர் குறிப்பிட்டிருப்பதாவது: "1924 ஜூன் மாதத்தில், காமனேவும் டிராட்ஸ்கியும் அவனைத் (சாவிங்கோவ்) திரும்பி வரும்படி அழைத்தார்கள்."

சாவிங்கோவ் கைது செய்யப்பட்டான். ரெயிலி இறந்துபோனான். அவ்விரு நிகழ்ச்சிகளை அடுத்து, டிராட்ஸ்கி சோவியத் தலைமையை எதிர்த்து முழு மூச்சுடன் பிரச்சாரம் செய்தான். "கட்சிச் சண்டை வலுத்தது. 1926-ஆம் ஆண்டு வசந்த காலத்தில் எதிர்க் கட்சி, வெளிப்படையாகக் கட்சிக் கூட்டத்தில் கலவரம் செய்தது. எதிர்ப்புப் பின்வாங்க நேரிட்டது." என்று டிராட்ஸ்கி 'என் வாழ்க்கை' என்ற நூலில் குறிப்பிட்டிருக்கிறான். அவன் தந்திரங்கள் தோல்வியுற்றன. தொழிலாளர், டிராட்ஸ்கீய வாதிகளை வெறுத்தார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1927 கோடை காலத்தில், ரஷ்யா மீது போர் தொடுக்கப்படுமோ என்ற அச்சம் நிலவியபொழுது, டிராட்ஸ்கி மீண்டும் சோவியத் சர்க்காரைத் தாக்க முயன்றான். அப்பொழுது அவன் நடத்திய சதியைப் பற்றி, 'என் வாழ்க்கை' என்ற நூலில் குறிப்பிட்டிருப்பதாவது :

''மாஸ்கோ, லெனின்கிராடு ஆகிய இரு நகரங்களின் பல இடங்களில் இரகசியக் கூட்டங்கள் நடந்தன. தொழிலாளரும், மாணவர்களும், மாணவிகளும் இருபது முதல் இருநூறு நபர்கள் வரை, கூட்டங்களுக்கு வந்திருந்தார்கள். ஒரே நாளில் நான்கு கூட்டங்களுக்கு நான் போனதுண்டு.''

போல்ஷ்விக் புரட்சியின் பத்தாவது ஆண்டு விழாவான 1927 நவம்பர் 7-ஆம் நாளன்று, எதிர்ப் புரட்சிக்கான ஏற்பாடுகளை டிராட்ஸ்கி செய்திருந்தான், டிராட்ஸ்கியின் முயற்சி முறியடிக்கப்பட்டது. மாஸ்கோ வீதிகளில் வந்த தொழிலாளரின் அணிவகுப்பின் முன்னால், டிராட்ஸ்கீயக் கும்பல் நிற்க முடியாமல் சின்னாபின்னமாகியது.

சோவியத் அதிகாரிகள் சுறுசுறுப்பாக வேலை செய்யத் தொடங்கினர். டிராட்ஸ்கீய வாதிகளின் அச்சகங்களும் போர்க் கருவிகளும் கண்டுபிடிக்கப்பட்டன. மாஸ்கோவில் எதிர்ப் புரட்சி தொடங்கும் அதே வேளையில், லெனின் கிராடிலும் எதிர்ப்புரட்சி ஏற்பாடுகளைச் செய்யச் சென்றிருந்த சினோவீவ், ராடெக் ஆகிய இரு டிராட்ஸ்கீய வாதிகளும் கைது செய்யப்பட்டனர். ரஷ்யத் தூதனாக ஜப்பானுக்குப் போயிருந்த டிராட்ஸ்கீய வாதியான ஜோபி தற்கொலை செய்து கொண்டான். பழைய வெள்ளை இராணுவ அதிகாரிகளும், சமூகப் புரட்சிக்காரர்களும், அன்னிய நாடுகளின் ஏஜண்டுகளும், டிராட்ஸ்கீயவாதிகளுடன் பல இடங்களில் கைது செய்யப்பட்டார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


டிராட்ஸ்கி போல்ஷ்விக் கட்சியிலிருந்து விலக்கப்பட்டான். அவன் சீன எல்லைக்கு அருகிலுள்ள கசாக் சோவியத் குடியரசின் தலைநகரான அல்மா அட்டாவுக்கு அப்புறப்படுத்தப்பட்டான். அங்கே அவனுக்கு வீடு கொடுக்கப்பட்டது. அவனுடைய மனைவி, மகன், சில மெய்க்காவலர் ஆகியோர் அவனுடன் இருக்க, சோவியத் அரசு அனுமதி கொடுத்தது.

அங்கு சென்ற பிறகும், டிராட்ஸ்கி தனது சதி வேலையை நிறுத்தவில்லை. எனவே, 1928 டிசம்பர் மாதத்தில், சோவியத் பிரதிநிதி ஒருவர், டிராட்ஸ்கியைச் சந்திக்க, அல்மா அட்டாவுக்கு அனுப்பப்பட்டார். அவர் டிராட்ஸ்கியிடம் கூறியதாவது :

''உங்கள் கூட்டாளிகள், நாடு முழுவதிலும் சோவியத்துக்கு எதிரான சதிவேலையை மீண்டும் தொடங்கி விட்டனர். அல்மா அட்டாவில் உங்களைச் சில வசதிகளுடன் வைத்ததினால், அந்த வேலையை நடத்த, நல்ல வாய்ப்புக் கிடைத்திருக்கிறது......'' (டிராட்ஸ்கி எழுதிய ''என் வாழ்க்கை'')

சோவியத்துக்கு விரோதமான செயல்களை மேலும் செய்தால், துரோகச் செயலுக்காக அவன் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று சோவியத் அரசாங்கம் டிராட்ஸ்கியை எச்சரித்தது. அவன் அதைப் பொருட்படுத்தவில்லை. எனவே, அவன்மீது வழக்குத் தொடரப்பட்டது.

1929 ஜனவரி 22-இல் அவன் சோவியத் யூனியனிலிருந்து நாடு கடத்தப்பட்டான். அன்று முதல் டிராட்ஸ்கியின் வாழ்க்கையில் விநோதக் கட்டம் தொடங்கியது.

''பொதுவாக நாடு கடத்தப்படுதல் என்றால், மங்கி மறைந்துபோவது என்பது பொருள். ஆனால், டிராட்ஸ்கியின் நிலைமை நேர்மாறாக இருந்தது. மனிதத் தேனாகிய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவன் ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் இருந்த போதிலும், அவனுடைய கொடுக்கு சோவியத் யூனியனைக் கொட்டிக்கொண்டே இருந்தது. அவன் அதன் முதல் எதிரி. பிலிப்ஸ் ஆப்பன்ஹிம் எழுதிய மர்மக் கதையின் ஒரு பாத்திரம்போல், அவன் சர்வதேச சதியில் வாழ்ந்து வந்தான்'' என்று ஐசக் எப் மாகாசன் 'கொந்தளிப்பான ஆண்டுகள்'* என்ற நூலில் எழுதியிருக்கிறார்.

### அத்தியாயம் 12

## ஐந்தாம்படை தோன்றிய கதை:

## எல்பாவில் டிராட்ஸ்கி

1929 பிப்ரவரி 13-இல் லியோன் டிராட்ஸ்கி கான்ஸ்டாண்டிநோபிள் போய்ச் சேர்ந்தான். நாடு கடத்தப்பட்டு மதிப்பிழந்த அரசியல்வாதியைப்போல், அவன் போக வில்லை. ஒரு மன்னனைப்போல் அங்கே சென்றான். பத்திரிகைகள் அவன் வரவைக் கொட்டை எழுத்துக்களில் வெளியிட்டன. அவனைப் பேட்டி காண அயல்நாட்டு நிருபர்கள் காத்திருந்தனர். அவன் அவர்களைப் பொருட் படுத்தவில்லை.

அழகிய பிரிங்கிபோ தீவில், அவன் தனது தலைமை அலுவலகத்தை அமைத்தான். ரஷ்யா, ஜெர்மனி, ஸ்பெயின் போன்ற நாடுகளிலிருந்து பலர் அவனைச் சந்திக்க அங்கு வந்தார்கள்.

---

* Turbulont Years.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


கொலைகாரனான புளூம்கின் அவனுடைய முதல் மெய்க்காவலன். 1930-இல். சோவியத் யூனியனுக்குள் திருட்டுத்தனமாகப் போர்க்கருவிகளை அனுப்பின குற்றத்திற்காக, அவன் சுட்டுக் கொல்லப்பட்டான். பிறகு, ரெய்மாண்டு மோலினீர் என்ற பிரெஞ்சுக்காரனும், செல்டன் ஹார்ட்டி என்ற அமெரிக்கனும் மெய்க்காவலராயினர்.

தற்காலிகமாக நாடு கடத்தப்பட்டிருக்கும் ''மாபெரும் புரட்சிக்காரன்'' என்ற பெருமையை நிலைநாட்ட டிராட்ஸ்கி முயற்சித்தான். புருதான் என்ற பிரெஞ்சு அராஜகனின் வார்த்தைகளை அவன் அடிக்கடி சொல்வது வழக்கம். ''விதியா? அதைக்கேட்டு நான் சிரிக்கிறேன். மனிதர்களா? அவர்கள் அறிவிலிகள்'' என்று டிராட்ஸ்கி கூறுவான். அவன் பிரிங்கிபோவில் இருந்தபொழுது, ஜெர்மன் எழுத்தாளர் எமில் லட்விக் அவனைச் சந்தித்தார்.

''ரஷ்யா மிகுந்த நெருக்கடிக்குள்ளாயிருக்கிறது: ஐந்தாண்டுத் திட்டம் வெற்றி பெறவில்லை; வேலையில்லாத் திண்டாட்டமும் பொருளாதார சீர்குலைவும் ஏற்படும்; கூட்டு விவசாயம் படுதோல்வி; ஸ்டாலின் நாட்டைப் பாழ்படுத்துகிறான். எதிர்ப்புப் பெருகி வருகிறது'' என்று அவன் லட்விக்கிடம் சொன்னான்.

''ரஷ்யாவில் உங்களைப் பின்பற்றுகிறவர்கள் எத்தனை பேர்?'' என்று லட்விக் கேட்டார்.

''அதை மதிப்பிட முடியாது. பலர் தலைமறைவாக வேலை செய்கிறார்கள்'' என்று டிராட்ஸ்கி பதில் சொன்னான்.

''நீங்கள் எப்பொழுது வெளிப்படையாக வேலை செய்ய முடியும்?''

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''வெளியிலிருந்து வாய்ப்புக் கிடைக்கும்பொழுது; போர் ஏற்படவேண்டும்; அல்லது அரசாங்கத்தின் பலவீனத்தைப் பயன்படுத்திக்கொண்டு, ஐரோப்பிய நாடுகள் புதிய தாக்குதல் தொடுக்க வேண்டும்'' என்று டிராட்ஸ்கி அமைதியாகப் பதில் சொன்னான். அதே காலத்தில், அமெரிக்க நிருபர் ஜான்குந்தர், டிராட்ஸ்கியையும் அவனுடைய கூட்டாளிகளையும் சந்தித்தார்.

''அவர் நாடு கடத்தப்பட்டவரைப்போல் நடந்து கொள்ளவில்லை. மணிமுடி தரித்த மன்னன் அல்லது சர்வாதிகாரி என்றே அவரைச் சொல்லலாம்'' என்று ஜான்குந்தர் குறிப்பிட்டார். மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

''ஐரோப்பா முழுவதும் டிராட்ஸ்கீய இயக்கம் வளர்ச்சியுற்றிருக்கிறது, ஒவ்வொரு நாட்டிலும் டிராட்ஸ்கீயக் கிளர்ச்சிக்காரர்களின் சங்கங்கள் இருக்கின்றன, அவை ஒன்றுக்கொன்று தொடர்பு வைத்திருக்கின்றன. பெர்லினிலுள்ள சர்வதேசத் தலைமைச் சங்கத்துடன் அவை இணைக்கப்பட்டிருக்கின்றன.''

நான்காவது அகிலத்தின் குறிக்கோளையும், அது செய்த வேலையையும் அவர் டிராட்ஸ்கியிடம் கேட்டார். டிராட்ஸ்கி பதில் ஒன்றும் சொல்லவில்லை. தன்னிடமிருந்த இரகசிய ஏடுகளை அவன் குந்தரிடம் காண்பித்தான். அமெரிக்காவிலும், மற்ற நாடுகளிலும் தனக்கு மிகுந்த ஆதரவு இருப்பதாகச் சொன்னான்.

''டிராட்ஸ்கி ரஷ்யாவை இழந்துவிட்டான். அல்லது சிறிது காலத்திற்காவது அவன் அதை இழந்து விட்டான் என்றே சொல்லலாம். பத்து அல்லது இருபது ஆண்டுகளிலாவது அவன் அதைத் திரும்பப் பெறமுடியுமா என்று எவராலும் சொல்ல முடியாது. ஸ்டாலின் வீழ்ச்சியுறுவார் என்ற நம்பிக்கை அவனுக்கு இருக்கிறது. எனவே, கம்யூ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விச எதிர்ப்புச் சங்கங்களை அமைக்கும் வேலையில் அவன் சலியாது உழைத்து வருகிறான்.

''ஒன்றே ஒன்றுதான் டிராட்ஸ்கியை ரஷ்யாவிற்கு உடனே செல்ல வைக்க முடியும். அது ஸ்டாலின் மறைவு'' என்று கூறி, குந்தர் தனது குறிப்பை முடித்திருக்கிறார்.

## பெர்லினில் கூடுமிடம்

கிரஸ்டின்ஸ்கி டிராட்ஸ்கியின் கையாள். அவன் சோவியத் அரசைக் கவிழ்க்கச் சதி செய்து வந்தான். 1930-ஆம் ஆண்டுவரை, ஜெர்மன் சர்க்கார் 20,00,000 தங்க மார்க்குகளைச் சதிவேலைக்காக அவனுக்குக் கொடுத்தது. அந்த உதவிக்காக, அவன் ரஷ்யாவில் நடைபெறுகின்ற இராணுவ நடவடிக்கைகளை ஜெர்மனிக்குச் சொல்ல வேண்டும். 1930-இல், அவன், உதவி வெளிநாட்டு இலாகா மந்திரியாகப் பெர்லினிலிருந்து மாஸ்கோ வந்தான். அப்பொழுது ஜெர்மனியில் நாஜிசம் வளர்ச்சியுற்றதால், ஜெர்மன் அரசாங்கத்தில் நெருக்கடி ஏற்பட்டது. எனவே சோவியத் எதிர்ப்புக்காக டிராட்ஸ்கி கும்பலுக்குச் செய்து வந்த பண உதவி தற்காலிகமாக நின்றது. டிராட்ஸ்கி ஜெர்மன் இராணுவ வேவு இலாகாவுடன் புதிய ஒப்பந்தம் செய்ய இருந்தான்.

1931 பிப்ரவரி மாதத்தில், அவனுடைய மகன் லியோன் செடோவ் பெர்லினுக்குப் போனான். அவனுடைய பிரயாணச் சீட்டில், அவன் ஒரு மாணவன் எனக் குறிப்பிட்டிருந்தது. ஜெர்மன் விஞ்ஞானக் கழகத்தில் சேரப் போவதாகச் சொல்லப்பட்டது. ஆனால், அவன் அந்த ஆண்டில் ஜெர்மனியின் தலைநகரில் இருந்ததற்குச் சிறந்த காரணங்கள் இருந்தன; சதிவேலைகளுக்காக அவன் பெர்லினில் இருந்தான்.

சோவியத் வெளிநாட்டு வர்த்தகக் கமிஷனில் இடம் பெற்ற டிராட்ஸ்கியவாதிகளில் பலர், பெர்லினில் இருந்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தார்கள். அவர்களில் சுமிர்நோவ், பயாட்டக்கோவ் ஆகிய இருவரும் குறிப்பிடத் தகுந்தவர்கள். செடோவ் அவர்களுடன் தொடர்பு வைத்திருந்தான். பயாட்டக்கோவும் செடோவும் சந்தித்ததைப் பற்றி, பயாட்டக்கோவின் குறிப்பு:—

"செடோவை நான் ஒரு விடுதியில் சந்தித்தேன். நீண்ட காலமாக நாங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் நன்கறிவோம். டிராட்ஸ்கியின் பிரதிநிதியாக அவன் பேசுவதாகச் சொன்னான். ஸ்டாலின் தலைமையை எதிர்க்கும் போராட்டம் முடியவில்லை; டிராட்ஸ்கி ஒவ்வொரு நாடாக நாடு கடத்தப்படுவதால், போராட்டம் தற்காலிகமாகத் தடைப்பட்டிருக்கிறது; மீண்டும் அந்தப் போராட்டம் தொடங்கப்பட்டிருப்பதாயும், செடோவ் என்னிடம் சொன்னான். இந்தப் போரில் கலந்துகொள்ள முடியுமா என்று ஒளிவு மறைவின்றி என்னைக் கேட்டான், நான் சம்மதித்தேன்."

பலாத்கார வழிகளால் ஸ்டாலினைத் தலைமைப் பதவியிலிருந்து நீக்க டிராட்ஸ்கி உறுதி கொண்டிருக்கிறான் என்று, செடோவ் பயாட்டக்கோவிடம் சொன்னான். பயாட்டக்கோவ் சோவியத் பிரதிநிதி என்ற நிலைமையில் போர்சிக், டெமாக் என்ற இரு ஜெர்மன் கம்பெனிகளிலிருந்து ஏராளமான சாமான்கள் வாங்க வேண்டும். அவற்றிற்குக் கூடுதல் விலை கொடுத்து, அந்தக் கூடுதல் தொகையை சோவியத் எதிர்ப்புக்குப் பயன்படுத்த வேண்டும் என்று, தன் தந்தையின் ஏற்பாட்டை, செடோவ் பயாட்டக்கோவிடம் தெரிவித்தான். பயாட்டக்கோவ் மாஸ்கோ திரும்பியதும் டிராட்ஸ்கியிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதன்படி முதலாவது செய்ய வேண்டிய வேலை; ஸ்டாலினையும் அவருடைய கூட்டாளிகளையும் ஒழிப்பது — அதாவது பலாத்காரம்.

இரண்டாவது, ஸ்டாலினுக்கு விரோதமான சகல சக்திகளையும் ஒன்று திரட்டுவது. ஜெர்மன் இராணுவ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


இரகசிய இலாகாவுடனும், சோவியத்துக்கு எதிரான எல்லா சக்திகளுடனும் கூட்டுறவு கொள்வது. மூன்றாவது. சோவியத் அரசாங்கத்தின் முன்னேற்றத்தைத் தடுப்பது. சோவியத் ரஷ்யாவுக்கு எதிராக, டிராட்ஸ்கி செய்யும் சதி வேலைக்கு பயாட்டக்கோவ் தலைவனாக இருக்க வேண்டும்.

## மூன்று அடுக்குகள்

1932-ஆம் ஆண்டு முழுவதும் சோவியத் எதிர்ப்பு மறைமுகமாக உருப்பெற்றது. புதிய சதி, வேலை செய்யத் தொடங்கியது. டிராட்ஸ்கியின் பயங்கரத் திட்டம் கார்ல் ராடெக் போன்ற சில டிராட்ஸ்கீயவாதிகளைத் திடுக்கிடச் செய்தது.

''கடந்த காலத் திட்டத்தை, நாம் இனிக் கையாள்வதில் பயனில்லை என்பது நாம் பெற்ற அனுபவம். எனவே, இனி நாம் புதிய முறையைக் கையாள வேண்டும். ஒன்று, சோவியத் யூனியனும் நாமும் அழிய வேண்டும்; அல்லது தலைமைப் பதவி ஒழிய வேண்டும்'' என்று டிராட்ஸ்கி ராடெக்குக்கு இரகசியமாக எழுதினான்.

டிராட்ஸ்கியின் கடிதமும், பயாட்டக்கோவ் வற்புறுத்தலும் ராடெக்குக்குத் தைரியம் அளித்தன. பயங்கர இயக்கம், பொருளாதார முன்னேற்றத்தைத் தடுத்தல், அன்னிய வல்லரசுகளுடன் கூட்டுறவு ஏற்படுத்தல் ஆகிய புதிய வழியை அவன் ஏற்றுக்கொண்டான்.

சுமிர்னோவ், மிராக்கோவ்ஸ்கி, டிரீட்சர் ஆகிய மூவரும் பயங்கர இயக்க அமைப்பாளர்களில் தலைசிறந்தவர்கள். ''கட்சியின் திட்டம் முறிந்துவிடும் என்ற நம்பிக்கையுடன் இருந்தோம். அதில் நாம் தோல்வியுடைந்துவிட்டோம். நாம் இதுவரை பின்பற்றிய போராட்டத் துறைகளினால் பலன் எதுவும் கிட்டவில்லை. இனி ஒரே ஒரு போராட்டப் பாதைதான் இருக்கிறது; பலாத்காரத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தினால் கட்சியின் தலைமையை அகற்றுவது; ஸ்டாலினை யும் மற்றத் தலைவர்களையும் ஒழித்துவிடவேண்டும். அதுவே முதல் வேலை'' என்று மிராக்கோவ்ஸ்கி 1932-இல் மாஸ்கோவில் இருந்த பயங்கர இயக்கக் கும்பலிடம் சொன்னான்.

டிராட்ஸ்கீயவாதிகளுக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்து வேறுபாடுகளை ஒதுக்கிவிட்டு, சோவியத் எதிர்ப்புத் தலைவர்களின் ஐக்கிய முன்னணி அமைக்கப்பட்டது. அதன் பெயர் ''வலது சாரிகள், டிராட்ஸ்கீயவாதிகள் ஆகியோரின் குழு.'' மூன்று செயல்முறைக் கமிட்டிகள் அமைக்கப்பட்டன. சினோவீவ், பயாட்டக்கோவ் ஆகிய இருவரும் இரு கமிட்டிகளுக்கும், புகாரினும், கிரஸ்டின்ஸ்கி யும் மூன்றாவது கமிட்டிக்கும் தலைவர்களாக அமர்ந் தனர்.

தொடக்கத்திலிருந்தே மேற்சொன்ன குழுவில் ஜெர்மனி, பிரிட்டன், ஜப்பான் ஆகிய நாடுகளின் ஏஜண் டுகள் இடம்பெற்று வேலை செய்தார்கள். டிராட்ஸ்கீய வாதிகளும் வலதுசாரிகளும் அமைத்த சதிக் குழு. உண்மையில் சோவியத் ரஷ்யாவில் அச்சு நாடுகளின் ஐந்தாம் படை.

★

## அத்தியாயம் 13

# துரோகமும் கொலையும்

1933, 34-ஆம் ஆண்டுகளில், ஐரோப்பா முழுவதும் துரோகமும், கொலையும் தாண்டவமாடின. கிளர்ச்சி களுக்கும் பலாத்காரங்களுக்கும் நாஜி ஜெர்மனி தலைமை நிலையமாக விளங்கியது. ஐரோப்பாவை அடிமைப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


படுத்தி, சோவியத் யூனியனைத் தாக்க நாஜிக் கட்சி இரகசியச் சங்கங்களை அமைத்தது. உலகில் பல நாடுகளிலும், ஜெர்மனியின் ஐந்தாம் படைகள் வேலை செய்யத் தொடங்கின. ஆல்பிரட் ரோசன்பெர்க், ருடால்ப் ஹெஸ் ஆகிய இருவரும் சதி வேலைகளை நடத்தினர்.

1933 செப்டம்பர் மாதம், அடால்ப் ஹிட்லர் ஜெர்மனியின் சர்வாதிகாரியான எட்டு மாதங்களுக்குப்பின், நிக்கோலாய் கிரஸ்டின்ஸ்கி ''ஓய்வு''க்காக சிசின்சென் நகருக்குச் சென்றான். சில நாட்கள் பெர்லினில் தங்கினான். அவன் சோவியத் வெளிநாட்டு இலாகா உதவி மந்திரியாக இருந்தான்.

செர்சி பெஸ்ஸாநோவ் என்ற டிராட்ஸ்கீயவாதியை கிரஸ்டின்ஸ்கி பெர்லினில் சந்தித்தான். ''ஜெர்மன் நாஜிக்கட்சியின் அன்னிய இலாகாத் தலைவனான ரோசன் பெர்க், ரஷ்ய டிராட்ஸ்கீயவாதிகளுக்கும் ஜெர்மன் நாஷனல் சோசலிஸ்டுகளுக்கும் (நாஜிக் கட்சிக்கும்) கூட்டுறவு ஏற்படுத்த விரும்புகிறான்'' என்று கிரஸ்டின்ஸ்கி, பெஸ்ஸாநோவிடம் பரபரப்புடன் சொன்னான். எனவே, டிராட்ஸ்கியும், கிரஸ்டின்ஸ்கியும் சந்திக்க ஏற்பாடாகியது. மெரானோ நகரில் கிரஸ்டின்ஸ்கியை டிராட்ஸ்கி சந்தித்தான். சோவியத் ரஷ்யாவில் நடைபெறவேண்டிய சதி வேலைகளைப் பற்றி, இருவரும் விரிவாக உரையாடினர். பலாத்காரத்தினால்தான் ரஷ்யாவில் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியும். அதற்கு வெளி உதவி இன்றியமையாததாகும். எனவே சோவியத் சர்க்காருக்கு விரோதமாக, டிராட்ஸ்கீய வாதிகளுக்கு உதவக் கூடிய மற்ற நாடுகளுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.

டிராட்ஸ்கி கிரஸ்டின்ஸ்கியிடம் சொன்னதாவது :

''அத்தகைய ஒப்பந்தம் முதன்முதலாக நாஜிக் கட்சியோடு நடந்தது. அது டிராட்ஸ்கீயவாதிகளுக்கோ ஜெர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மனிக்கோ ஆறுதல் அளிக்கவில்லை. அதற்கு இரு காரணங்கள் உண்டு. ஒன்று அந்த ஒப்பந்தம் நாஜிக் கட்சியோடு செய்யப்பட்டதே தவிர, ஜெர்மன் அரசாங்கத்துடன் அல்ல. இரண்டாவது நாஜிகளுடன் நாம் செய்த ஒப்பந்தம் யாது? ஜெர்மனியிலிருந்து நமக்குக் கிடைப்பது சொற்பப் பணம். சோவியத் ரஷ்யாவைத் தாக்குவதற்கு அவசியமான இராணுவ விவரங்களை, நாம் ஜெர்மனிக்குக் கொடுக்கவேண்டும். ஹிட்லருக்கு வேண்டியது அந்த விவரங்கள் மட்டுமல்ல; காலனி நாடுகளும் அவனுக்கு வேண்டும். அதற்காக அவன் இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய நாடுகளுடன் போரிட வேண்டும். எனவே, சோவியத் ரஷ்யா கிடைத்தால் போதுமென்று அவன் எண்ணுகிறான். நமக்கு வேண்டியது அதிகாரம். அந்த அதிகாரத்தைக் கைப்பற்ற இராணுவ உதவி வேண்டும். முதலாவது ஜெர்மன் அரசாங்கத்துடன் ஒப்பந்தம், பிறகு ஜப்பானுடன். வெளிநாட்டு இலாகா மந்திரி செக்கோல் நிக்கோலை இதற்குப் பயன்படுத்தலாம்.........

''ஜெர்மனி சோவியத் யூனியனைத் தாக்கினாலும், தற்போதைய நிலைமையில் அதிகாரத்தைக் கைப்பற்ற இயலாது. செஞ்சேனைத் தளகர்த்தர்களின் உதவி அவசியம். அது மட்டுமல்ல, நமது சக்திகளை எல்லாம் ஒன்று திரட்டி, சோவியத் அரசைக் கவிழ்த்து அதற்குப் பதிலாக நம்முடைய அரசை நிறுவ நாம் முன்னேற்பாடு செய்ய வேண்டும்.''

மாஸ்கோவுக்குப் போனதும், தளகர்த்தன் துக்காசெவ்ஸ்கியைச் சந்திக்கும்படி, டிராட்ஸ்கி கிரஸ்டின்ஸ்கியிடம் சொன்னான். மாஸ்கோவில் டிராட்ஸ்கியவாதிகளின் இரகசியக் கூட்டம் ஒன்றில், டிராட்ஸ்கியின் சதித் திட்டத்தை அவன் விவரித்தான்.

வெளிநாட்டுக் கொள்கையைத் தெளிவுபடுத்தும்படி கார்ல் ராடெக் டிராட்ஸ்கிக்குத் தூது அனுப்பினான். டிராட்ஸ்கியின் பதில் :-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''ஜெர்மனியில் பாசிசம் ஆதிக்கத்திற்கு வந்தது முதல், நிலைமையில் முழு மாறுதல் உண்டாகி இருக்கிறது. விரைவில் போர் வெடிக்கும். சோவியத் யூனியன் போரில் தோல்வியுறும். அதிகாரத்தைக் கைப்பற்ற நல்ல வாய்ப்பு ஏற்படும். தூரக்கிழக்கு அரசாங்கத்தோடும், மத்திய ஐரோப்பிய அரசாங்கத்தோடும் தொடர்பு கொண்டிருக்கிறோம். அவற்றிற்குச் சில சலுகைகள் தருவதாகவும் வாக்களித்திருக்கிறோம். வெளிநாடுகளின் பிரதிநிதிகள் சிலர் விரைவில் அங்கு வருவார்கள். டிராட்ஸ்கியிடம் நம்பிக்கை இருப்பதாக, டிராட்ஸ்கிய வாதிகள் அவர்களிடம் உறுதி கூறவேண்டும்.

ஒருநாள், சோவியத் உதவி மந்திரியும் டிராஸ்கிய வாதியுமான செக்கோல் நிக்கோவ், ராடக்கின் காரியாலயத்திற்குள் புகுந்ததும், ''இதைக் கேளுங்கள். நான் வெளிநாட்டு இலாகா அலுவலகத்தில் ஒரு கூட்டத்தில் பேசி முடிந்ததும், டிராட்ஸ்கி தன் அரசாங்கத்துக்கு அனுப்பிய திட்டங்களை எனக்குச் சொல்லமுடியுமா?'' என்று ஜப்பான் தூதன் என்னிடம் கேட்டான், என்றான் ராடக்.

''சோவியத் உதவி மந்திரியாகிய நான் இதை எப்படிச் செய்வது? இது முடியாத செயல்'' என்று செக்கோல் நிக்கோவ் பரபரப்புடன் சொன்னார்.

''ஆத்திரப்பட வேண்டாம். இங்குள்ள நிலைமை டிராட்ஸ்கிக்குத் தெரியாது. இனி இம்மாதிரி நேரிடாது. ஒற்றர்கள் விழித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, ஜெர்மனி அல்லது ஜப்பானுடன் ஒப்பந்தம் செய்ய முடியாது என்று, நான் டிராட்ஸ்கிக்கு முன்னமே எழுதியிருக்கிறேன்'' என்றான் ராடக்.

## கொலை

சோவியத் அரசாங்கத்தைக் கவிழ்க்க ரஷ்யச் சதிகாரர்கள், ஜெர்மனியோடும் ஜப்பானோடும் அந்தரந்தப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


பிரதிநிதிகள் மூலம் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டிருந்த காலத்தில், பயங்கர கொலைகளுக்கான ஏற்பாடுகளும் நடைபெற்று வந்தன. சோவியத் யூனியனின் மந்திரி சபைத் தலைவரான மாலட்டோவைக் கொலை செய்ய, சதி செய்யப்பட்டது. அவர் கஸ்நட்ஸ்க் நிலக்கரிச் சுரங்கத்தைப் பார்த்துவிட்டுக் காரில் திரும்பி வந்தார். கார் பாதையிலிருந்து விலகி, ஒரு பள்ளத்தை நோக்கி ஓடியது. அடுத்த விநாடியில் கார் பள்ளத்தாக்கில் விழுந்திருக்கும். ஆனால் அது திடீரென்று கவிழ்ந்தது. மாலட்டோவ் உயிர் தப்பினார்.

கார் ஓட்டியவன் வாலண்டைன் அர்னால்டு. அவன் டிராட்ஸ்கியவாதிகளின் பயங்கர இயக்கத்தில் ஈடுபட்டவன். செஸ்டோவ், மாலட்டோவைக் கொலை செய்யும்படி, அவனிடம் சொல்லியிருந்தான். அர்னால்டு மாலட்டோவைக் கொல்வதற்காகவே, பாதையிலிருந்து விலக்கிப் பள்ளத்தாக்கை நோக்கிக் காரை ஓட்டினான். கடைசி நேரத்தில் அர்னால்டு மனோதிடத்தை இழந்து விட்டான். எனவே, காரை நிறுத்தினான். மாலட்டோவ் பிழைத்தார்; சதி தோல்வியுற்றது. 1934-இல், டிராஸ்கீய வாதிகளும், வலதுசாரி பயங்கரக் கூட்டத்தாரும், சோவியத் யூனியன் முழுவதிலும் வேலை செய்யத் தொடங்கினர். பல இடங்களில் நாஜி ஏஜண்டுகளும், ஜப்பானிய ஏஜண்டுகளும், கொலைத் தொழில்களை மேல் பார்த்தார்கள். கொலை செய்யப்பட வேண்டிய சோவியத் தலைவர்களின் பட்டியல் ஒன்று தயாரிக்கப் பட்டது. அவர்களில் முதன்மையானவர்கள், ஸ்டாலின், வாரோஷிலோவ், மாலட்டோவ், ஜடானோவ், கிரோவ், மாக்ஸிம் கார்க்கி.

தனது மெய்க்காவலனாக இருந்த டிரீட்செர் என்பவனுக்கு டிராட்ஸ்கி ஒரு கடிதம் எழுதினான். கண்ணுக்குப் புலனாகாத மையினால் அது எழுதப்பட்டிருந்தது. அந்தக் கடிதத்தில் கீழ்க்கண்ட செய்தி காணப்பட்டது:

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


பிரியமுள்ள நண்பனே!

இப்போது நாம் நிறைவேற்ற வேண்டிய அவசர-அவசிய வேலைகளாவன:

1. ஸ்டாலின் - வரோஷிலோவ் ஆகிய இருவரையும் அகற்றுவது.
2. இராணுவத்தில் ஒரு குழுவை அமைப்பது.
3. போர் மூண்டால், அதிகாரத்தைக் கைப்பற்ற அந்நிலைமையைப் பயன்படுத்துவது.

1934-டிசம்பர் 1. லெனின்கிராடு கட்சிக் காரியதரிசியும், ஸ்டாலினின் கூட்டாளியுமான கிரோவ், முதல் பலியானார். சுமால்னியில் டிராஸ்கீயவாதியான ஒரு கொலைகாரன் அவரைத் துப்பாக்கியால் சுட்டு வீழ்த்தினான்.

○

## அத்தியாயம் 14

# கிரெம்லினில் கொலை

மே 1934, கிரோவின் படுகொலைக்கு ஆறு மாதங்களுக்கு முன், சோவியத் இரகசிய இலாகாத் தலைவனான மென்ஷின்ஸ்கி, மாரடைப்பினால் மாண்டான். துணைத் தலைவனாயிருந்த எகோடா தலைவனானான்.

எகோடா, டிராட்ஸ்கியின் கொலைகாரச் சங்கத்தில் ஒரு உறுப்பினன். 1929-இல், சதிக்கூட்டத்தில் சேர்ந்தான். டிராட்ஸ்கி அல்லது புகாரின் திட்டத்தில் நம்பிக்கை இருந்ததனால் அல்ல; ரஷ்யாவில் டிராட்ஸ்கி கும்பல் அதிகாரத்திற்கு வரும் என்ற எண்ணத்தினால்தான் அவன் அந்தச் சதிகாரச் சங்கத்தில் உறுப்பினன் ஆனான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவன் சோவியத் எதிர்ப்புக் கும்பலுக்குப் பாதுகாப்பு அளித்து வந்தான். வெளிநாடுகளின் இரகசிய இலாகா வைச் சேர்ந்த பலர், சோவியத் இரகசிய இலாகாவில் புகுந்து கொள்ள அவன் இடமளித்தான். 1934-இல், கிரோவ் கொலையாவதற்கு முன், கொலைகாரனான நிக்கோலயேவ், சோவியத் இரகசியப் போலீசால், லெனின் கிராடில் கைது செய்யப்பட்டான். கிரோவ் ஒவ்வொரு நாளும் போய் வருகின்ற நடைபாதையைக் காட்டக்கூடிய படமும், துப்பாக்கியும் அவனிடம் இருந்தன. லெனின் கிராடில் உதவித் தலைவனாயிருந்த சர்ப்பரோ செட்ஸ், எகோடாவுக்கு வேண்டியவன். எனவே, நிக்கோலயேவ் விடுதலையானான்.

சில வாரங்கள் கழித்து, அவன் கிரோவைக் கொலை செய்தான். சோவியத் எதிர்ப்பு முகாமில், மிகவும் செல்வாக்குள்ளவனாக ஆகவேண்டுமென்ற பேரவாவினால் எகோடா கொலைத் தொழிலில் இறங்கினான்.

ஸ்டாலினை அப்புறப்படுத்திய பின், எத்தகைய அரசாங்கம் அமைப்பதென, எகோடா திட்டமிட்டிருந் தான். அது நாஜி ஜெர்மனியைப் போன்றிருக்கும். எகோ டாவே அதன் தலைவன். ''வேதாந்தி'' புகாரின், 'கோய பெல்ஸ்' ஆக வேண்டும் என்பதாக, அவன் புலானோவி னிடம் சொன்னான். சதிகாரர்கள் கையாண்ட பயங்கர இயக்கம், பழமையும் ஆபத்தும் நிறைந்ததென்று எகோடா கருதினான். வெடி குண்டுகளாலும், கத்தி களாலும் கொலை செய்வதைக் காட்டிலும், நுட்பமான வேறு வழிகளைப் பின்பற்ற எண்ணினான்,

விஷப் பரீட்சையில் இறங்கினான். இரசாயன சாலையை இரகசியமாக அமைத்தான். விஞ்ஞானிகள் அதில் வேலை செய்யத் தொடங்கினர். இந்த வழியும் பழமையானதென்பது எகோடாவின் கருத்து. எனவே, நூதன முறையொன்றைச் சிந்தித்தான். டாக்டர்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நினைத்தால், நோயாளிகளைச் சாகடிக்கலாம். இந்த யோசனையே சரியானதென்று எகோடா முடிவு செய்தான்.

## மென்ஷின்ஸ்கி கொலை

தனது கொலைத் தொழிலுக்கு எகோடாவால் முதன் முதலாகத் தெரிந்தெடுக்கப்பட்டவர் டாக்டர் லெவின். எகோடாவின் மேலதிகாரியான மென்ஷின்ஸ்கிக்கு லெவின்தான் வைத்தியம் செய்து வந்தான். ''சோவியத் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காக, இரகசிய இயக்கம் வளர்ச்சியுறுகிறது. அந்தத் தலைவர்களில் நானும் ஒருவன். அந்த எதிர்ப்பு இயக்கத்தார்தான் சோவியத் யூனியனில் ஆதிக்கம் வகிக்கப் போகிறவர்கள். நீங்கள் வைத்தியம் செய்து வருகிற தலைவர்கள் சிலரை, எங்கள் பாதையிலிருந்து விலக்கியாக வேண்டும்'' என்று எகோடா டாக்டர் லெவினிடம் சொன்னான். எகோடாவின் செய்தி டாக்டரைத் திடுக்கிடச் செய்தது.

நடுக்கமுற்றிருந்த டாக்டரைப் பார்த்து. எகோடா மேலும் சொன்னான்:

''நீங்கள் என் கோரிக்கையைத் தள்ளி விட முடியாது. நான் உங்களிடம் நம்பிக்கை வைத்திருக்கிறேன். நீங்கள் அதைச் செய்துதான் ஆக வேண்டும். நீங்கள் அதை ஒருவரிடமும் சொல்லக்கூடாது. நீங்கள் சொன்னாலும், அதனால் பலனொன்றும் ஏற்படாது. என் வார்த்தையை எவரும் நம்புவார்களேயன்றி, உங்கள் வார்த்தையை யாரும் நம்பமாட்டார்கள். இந்தப் பேச்சை இத்துடன் முடித்துக் கொள்வோம். நீங்கள் வீட்டுக்குப் போனதும், மீண்டும் சிந்தித்துப் பாருங்கள். இன்னும் சில நாட்களுக்குப் பின் உங்களைப் பார்ப்பேன்.''

வீடு சென்றதும் டாக்டரின் சிந்தனைச் சக்கரம் சுழலத் தொடங்கியது. ''நீ யாருடன் பேசுகிறாய் என்பதை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நினைவில் கொள்ள வேண்டும். எந்த இலாகாவின் தலைவனுடன் பேசுகிறாய் என்பதை அணுவளவும் மறந்துவிடக் கூடாது'' என்று டாக்டர் தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டான். ''இந்த வேண்டுகோளை மறுத்தால், நானும் என் குடும்பமும் அழிந்து போக வேண்டியதைத் தவிர, வேறு வழியில்லை. எனவே, எகோடாவின் கட்டளைக்குத் தலைவணங்க வேண்டியதுதான்'' என்று டாக்டர் தனக்குள்ளேயே முடிவு செய்தார். இந்தப் புனிதத் தொண்டில், கசாக்கோவ் என்ற டாக்டரையும் லெவின் ஈடுபடச் செய்தார். கசாச்கோவும் மென்ஷின்ஸ்கிக்கு வைத்தியம் செய்துவந்தார்.

எகோடாவின் சொற்படி லெவின் கசாக்கோவைச் சந்தித்துப்பேசினார்:

லெவின் : ''மென்ஷின்ஸ்கி நடைப்பிணம். உண்மையில் நீங்கள் நேரத்தை வீணாக்குகிறீர்கள்.''

தன் கூட்டாளியின் வார்த்தைகளைக் கேட்டு, டாக்டர் கசாக்கோவ் வியப்புற்றார்.

லெவின் : ''ஒரு விஷயத்தைப்பற்றி உங்களிடம் பேச வேண்டும்.''

கசாக்கோவ் : ''எதைப்பற்றி?''

லெவின் : ''மென்ஷின்ஸ்கியின் உடல் நலத்தைக் குறித்து......''

சிறிது நேரத்திற்குப் பிறகு, டாக்டர் லெவின் விஷயத்திற்கு வந்தார். ''நீங்கள் மிகத் திறமையுள்ளவர்கள் என எண்ணினேன். நீங்கள் இன்னும் என்னை அறிந்துகொள்ளவில்லை. மென்ஷின்ஸ்கியைச் சற்று குணப்படுத்தியிருக்கிறீர்கள். அவர் மீண்டும் வேலைக்குப் போகாமலிருக்கும்படி செய்யவேண்டும்'' என்றார் லெவின்.

லெவின் மேலும் சொன்னார்: ''மென்ஷின்ஸ்கி உண்மையில் ஒரு பிணம், அவரைக்குணப்படுத்தித் திரும்பவும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வேலை பார்க்கத் தகுதியுள்ளவராகச் செய்தால், எகோடாவின் கோபத்திற்கு ஆளாவீர். மென்ஷின்ஸ்கி, எகோடாவின் பாதையில் தடைக் கல்லாக நிற்கிறார். அவரை அப்புறப்படுத்துவதில், எகோடா மிகுந்த கவலை கொண்டிருக்கிறார். எகோடாவின் போக்கை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது. ஒரு வார்த்தைகூட மென்ஷின்ஸ்கியிடம் சொல்லக்கூடாது. சொன்னால், எகோடா உங்களை அழித்துவிடுவார். எங்கே போய் ஒளிந்தாலும், அவரிடமிருந்து தப்ப முடியாது. தலைமறைவாயிருந்தால்கூட அவர் உங்களை விடப்போவதில்லை.''

நவம்பர் 6—1933 எகோடா டாக்டர் கசாக்கோவைச் சந்திக்க விரும்பினான். கார் வந்தது. டாக்டர், எகோடாவின் காரியாலத்திற்குச் சென்றார். எகோடா தனியாக இருந்தான்.

''மென்ஷின்ஸ்கி எப்படி இருக்கிறார்?'' என்று எகோடா டாக்டரிடம் கேட்டான்.

''கவலைக்கிடமான நிலைமை'' என்று டாக்டர் பதிலவித்தார்.

''லெவினைச் சந்தித்துப் பேசினீர்களா?''

''ஆம்.''

எகோடா இருப்பிடத்திலிருந்து திடீரென எழுந்தான். அங்கு மிங்கும் உலாவினான்.

''அப்படியானால், ஏன் காலத்தை வீணாக்குகிறீர்? ஏன் வேலையை முடிக்கக்கூடாது? பிறர் காரியத்தில் நீர் ஏன் தலையிடுகிறீர்?'' என்று கத்தினான்.

''நான் என்ன செய்ய வேண்டுமென்று சொல்லுகிறீர்கள்?''

''மென்ஷின்ஸ்கிக்கு உம்மை யார் வைத்தியம் செய்யச் சொன்னது? அவன் உயிர் வாழ்வதால் யாருக்காவது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பலனுண்டா? இல்லை. அவன் எல்லோருக்கும் இடையூறாக இருக்கிறான், லெவினுடன் சேர்ந்து அவனுடைய உயிரைப் போக்க விரைவில் வழிதேட வேண்டும். என் கட்டளைக்குக் கீழ்ப்படியாதிருந்தால் உமக்கு இவ்வுலகில் இடம் கிடையாது. நீர் என்னிடமிருந்து ஒருபோதும் தப்ப முடியாது.........''

எகோடாவைச் சந்தித்த நாளிலிருந்து, டாக்டர் கசாக்கோவ் நடுக்கமுற்றிருந்தார். இரவில் நல்ல தூக்கம் கிடையாது. கனாக்கண்டு திடுக்கிட்டெழுவார். அந்தச் செய்தியைச் சோவியத் அதிகாரிகளிடம் சொல்வதா, வேண்டாமா? என்பது பற்றி, அவர் மனம் புயலில் சிக்கிய படகுபோல் தத்தளித்தது. அப்படிச் சொல்வதாயினும், யாரிடம் சொல்வது? ஒருவன் எகோடாவின் ஒற்றனா? இல்லையா? என்பது எப்படித் தெரியும்? இந்நிலையில் அவர் ஒரு முடிவுக்கும் வரமுடியாமல் தயங்கினார். சோவியத் அரசைக் கவிழ்க்க நடைபெறும் சதி இயக்கம்; எகோடா, ரைகோவ், பயாட்டக்கோவ் போன்ற அரசாங்க அதிகாரிகள் சதியில் சிறந்தவர்களாக விளங்குவது; திறமையுள்ள எழுத்தாளர்களும், தத்துவ ஞானிகளும் அதில் கலந்திருப்பது; செம்படை வீரர்கள் இரகசியமாக அதை ஆதரிப்பது; ஆகிய விவரங்களை டாக்டர் லெவின் கசாக்கோவுக்குச் சொன்னார். பலன் தரத்தக்க தொண்டு எதுவாகிலும் கசாக்கோவ், எகோடாவுக்குச் செய்தால், எகோடா அதிகாரத்திற்கு வந்ததும் அந்தத் தொண்டை மறக்கமாட்டார், சோவியத் யூனியனுக்குள் இரகசியப் போர் நடைபெறுகிறது; மற்றவர்களைப்போல், டாக்டர்களும் தங்களுடைய கட்சி எது என்பதை முடிவு செய்தாக வேண்டும் என்று, லெவின் கசாக்கோவுக்கு விளக்கினார். எகோடாவின் கட்டளையை நிறைவேற்றுவதாகக் கசாக்கோவ் ஒப்புக் கொண்டார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



லெவினும். ககாக்கோவும் சேர்ந்து, வைத்திய முறையினால் மென்ஷின்ஸ்கியின் இதயத்தைப் பலவீனப்படுத்தினர். 1934 மே 10-இல் மென்ஷின்ஸ்கி இறந்துபோனார். அவருக்குப் பதில் எகோடா இரகசிய இலாகாத் தலைவனானான்.

## உத்தரவாதக் கொலை

1934 ஆகஸ்டு மாதம் முடிவில் வலதுசாரி இரகசிய சங்கத்தைச் சேர்ந்த அங்கத்தினன் ஒருவன் கிரெம்லினுக்கு வந்தான். அவன் பெயர் மாக்ஸிமோவ். அவன் புகாரினிடம் ''மார்க்கஸீயபோதம்'' பெற்றவன். பொலிட் பீரோ உறுப்பினரும் ஸ்டாலின் கூட்டாளியுமான குயுபிஷேவின் செயலாளர் மாக்ஸிமோவ், கிரெம்லின் அலுவலகத்தில் எனுகிட்ஸ் என்ற பயங்கரவாதியைச் சந்தித்தான். ''சோவியத் எதிர்ப்புச் சக்திகளை ஒன்று திரட்டுவதன் மூலம், சோவியத் அரசாங்கத்தைக் கவிழ்க்கத் திட்டமிட்டனர் வலதுசாரிகள். இப்போது நிலைமை மாறி விட்டது. எனவே, அதிகாரத்தைக் கைப்பற்ற வேறு வழிகளைப் பின்பற்றவேண்டும். தலைவர்களின் உடல் நலத்தைப் பாழ்படுத்தி, அவர்களைச் சாகடிப்பதே புதிய முறை'' என்றான் எனுகிட்ஸ். குயுபிஷேவை அகற்றும் வேலையில் மாக்ஸிமோவ் ஈடுபட்டான்.

1935 ஜனவரி 25-இல், மாஸ்கோ அலுவலகத்தில் இருந்த குயுபிஷேவ், மார்பு அடைப்பு நோயினால் பீடிக்கப்பட்டார். அப்பொழுது அவர் படுக்கையில் படுத்து ஓய்வு எடுத்திருக்கவேண்டும், அதற்கு மாறாக வீட்டுக்கு நடந்து போகும்படி மாக்ஸிமோவ் அவரைத் தூண்டினான். எனவே, அவர் தன் இருப்பிடத்திற்கு கால்நடையாகச் சென்றார். வீட்டினுள் புகுந்ததும் வைத்திய உதவி கோரினார். டாக்டர் வருமுன், குயுபிஷேவின் கடைசி மூச்சு நின்றது.

★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அத்தியாயம் 15

# தீர்ப்பு நாட்கள்

சோவியத் யூனியன் மீது ஜெர்மன், ஜப்பான் ஆகிய நாடுகளின் கூட்டுத் தாக்குதல் திட்டங்கள், 1935-இல் வலுப்பெற்றன. மஞ்சூரியாவிலிருந்த ஜப்பானியப் படைகள், சோவியத் யூனியனின் கிழக்கு எல்லையை அடிக்கடி தாக்கின.

1935 பிப்ரவரி 3, பிரெஞ்சு பிரதமர் லவாலும் பிரிட்டிஷ் அன்னிய நாட்டிலாகாச் செயலாளர் சர். ஜான் சைமனும் சந்தித்துப் பேசினர். பிரெஞ்சு அரசும், பிரிட்டிஷ் அரசும் ஒரு கூட்டு ஒப்பந்தம் செய்தன. அந்த ஒப்பந்தத்தின்படி, வெர்செயில்ஸ் உடன்படிக்கையின் ஆயுதப் பரிமாற்றப் பிரிவுகளில் சில, ஜெர்மனிக்கு ஆதரவாக மாறின. சோவியத் ரஷ்யாவுக்கு விரோதமான நடவடிக்கைகளுக்கு உதவி செய்யும் நோக்கத்துடனேயே அந்தச் சலுகைகள் காட்டப்பட்டன.

போர் மேகங்கள் விரைவாகச் சூழ்வதைக் கண்ட ரஷ்யா, ஜெர்மன் பாசிச ஆக்கிரமிப்புத் திட்டத்தை எதிர்ப்பதற்காக, மற்ற நாடுகளின் ஒற்றுமையைக் கூட்ட முயற்சித்தது. 1935 மே2-இல் பிரெஞ்சு அரசாங்கத்தோடும், மே 16-இல் செக்கோஸ்லோவேகியாவோடும், சோவியத் ஒன்றுக்கொன்று உதவி உடன்படிக்கை செய்தது.

1935 அக்டோபர் மாதத்தில் லவால், சர். சாமுவேல் ஹோர் ஆகிய இருவரின் நல்வாழ்த்துடன், இத்தாலியப் போர் வீரர் எதியோப்பியாவில் நுழைந்தனர்.

இரண்டாவது உலகப்போர் மேற்கே பரவியது. ரஷ்ய வலதுசாரிகளும், டிராஸ்கீயவாதிகளும் ஜெர்மன்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஜப்பான் ஏஜண்டுகளுடன் உறவு கொண்டு, ரஷ்யப் பாதுகாப்பைச் சீர்குலைத்தனர். தொழில், விவசாயம், போக்குவரத்து ஆகியவற்றின் வளர்ச்சிக்குக் கேடு விளை வித்தார்கள். அந்தச் சீர்குலைவு வேலை, பயாட்டக்கோவ் மேற்பார்வையில் நடந்தது.

## டிராட்ஸ்கியின் கடிதம்

1935-ம் ஆண்டு முடிவில், போர்மேகம் குமுறியது. அப்பொழுது மாஸ்கோவிலிருந்த ராடெக்குக்கு, டிராட்ஸ்கி நார்வேயிலிருந்து ஒரு கடிதம் அனுப்பினான். ஜெர்மனி, ஜப்பான் ஆகிய இருநாடுகளுடன், அவன் செய்யப் போகிற இரகசிய ஒப்பந்தத்தின் விவரங்கள் அதில் காணப் பட்டன. உலகப் போர் தடுக்கமுடியாதது. அது வந்தே தீரும். ஜெர்மன் பாசிசம் வெற்றியுறும். சோவியத் யூனியன் தோல்வியுறும். டிராட்ஸ்கி குழுவினர் அதிகாரத் திற்கு வரலாம். இரும்பு, தங்கம், எண்ணெய் போன்ற மூலப் பொருள்களையும் குறைந்த விலைக்கு ஜெர்மனிக்கு நாம் கொடுக்க இணங்க வேண்டும். மேலும், அமூரி பகுதியை ஜப்பானுக்கும், பொன் கொழிக்கும் உக்ரேனை ஜெர்மனிக்கும் வழங்க வேண்டும்.

''ஜெர்மனியும் ஜப்பானும், வெற்றிபெற்ற பிறகு, நாடுகளையும் கொள்ளைப் பொருள்களையும் பங்கிட்டுக் கொள்வதில், இரு நாடுகளும் மோதிக்கொள்ளும். அந் நிலைமையை நாம் பயன்படுத்திக் கொள்ளலாம்'' என்பது அக்கடிதத்தின் சுருக்கம்.

ராடெக் அந்தக் கடிதத்தைப் பயாட்டக்கோவிடம் காண்பித்துவிட்டு, பயாட்டக்கோவ், டிராட்ஸ்கியை பெர்லினில் சந்திப்பான் என்று டிராட்ஸ்கிக்கும் செய்தி அனுப்பினான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ஒஸ்லோவுக்கு ஓட்டம்

பயாட்டக்கோவ் நார்வேயிலுள்ள ஒஸ்லோ நகரில் டிராட்ஸ்கியைச் சந்தித்தான். ரஷ்ய நிலைமையை விளக்கிக் கூறினான். "ஸ்டாலின் அமைப்பு சோசலிச அமைப்பென்றா நினைக்கிறீர்கள்? அது அழிவது உறுதி. சோவியத் ஆதிக்கம் வளர்ச்சியுறுவதைப் பாசிசம் அனுமதிக்காது. இந்நிலைமையில் நமக்கு இரண்டே வழிகள்தான் உண்டு. ஒன்று ஸ்டாலினுடைய அரசாங்க அழிவில் நாமும் மடிந்து போவது; மற்றொன்று நமது முழு ஆற்றலையும் ஒன்று திரட்டி சோவியத் ஆட்சியைக் கவிழ்ப்பது. இந்த நெருக்கடியான போராட்டத்தில், ஜெர்மன் - ஜப்பான் உதவியை ஏற்றுக்கொள்ளச் சிறிதும் தயங்கக்கூடாது. சோவியத் யூனியனுக்கும் பாசிசத்துக்குமிடையே போர் தடுக்க முடியாததாகும். 1937-ல், போர்நிகழும்" என்றான் டிராட்ஸ்கி. இது யூகமல்ல; ஜெர்மன் நாஜிக் கட்சியின் துணைத் தலைவரான ஹெஸ் என்பவருக்கும் டிராட்ஸ்கிக்கும் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் பலன்.

ரஷ்யாவில் டிராட்ஸ்கியவாதிகள் அதிகாரத்திற்கு வருவதற்கு ஜெர்மனி உதவவேண்டும்; அதற்குப் பதிலாகக் கீழ்கண்ட சலுகைகளை, டிராட்ஸ்கியவாதிகள் ஜெர்மனிக்கு அளிக்கவேண்டும் என்று இருதரப்பினரும் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டனர். அதன் நிபந்தனைகளாவன:

1. சர்வதேச விவகாரங்களில் ஜெர்மன் அரசாங்கத்துக்கு ஆதரவு காட்ட வேண்டும்.

2. உக்ரேன் பகுதியை ஜெர்மனிக்குக் கொடுக்க வேண்டும்.

3. ஜெர்மன் தொழில்களுக்குச் சோவியத் யூனியனில் வசதி அளிக்க வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


4. ஜெர்மன் வியாபாரத்திற்குச் சோவியத் ரஷ்யாவில் சலுகை தரவேண்டும்.

5. போர்க் காலங்களில் ஜெர்மனிக்கு உதவியளிக்க வேண்டும்.

''விரைவில் நாம் செயலாற்றத் தவறினால் கிடைத்திருக்கிற வாய்ப்பை இழந்தவர்களாவோம். டிராஸ்ட்கிய வாதிகள் ஒழிக்கப்படுவர். மிருகத்தனமான ஸ்டாலின் அரசாங்கம் நிலைத்துவிடும். மக்கள் அதைத்தான் சோஷலிச அரசாங்கம்; சோவியத் அரசாங்கம் எனக் கருதுவர். வேறு அரசாங்கத்தைப் பற்றி அவர்கள் சிந்திக்க மாட்டார்கள். எனவே, நமது வேலை முழு மூச்சுடன் அந்த அரசாங்கத்தை எதிர்ப்பதே.

''முதலாளித்துவம் முற்போக்குள்ளது என்று சோஷலிஸ்டுகளாகிய நாம் ஒரு காலத்தில் எண்ணினோம். அதே காலத்தில், அதை எதிர்த்துப் போர் புரிய அதன் விரோதிகளை (பாட்டாளி மக்களை) தயாரித்தோம். அதைப் போல் இப்போது ஸ்டாலின் அரசாங்கத்திற்குத் தொண்டு செய்யவேண்டும், அதைக்கட்டும் பணியில் அல்ல; அதற்குச் சவக்குழி தோண்டும் பணியில்தான்'' என்று டிராட்ஸ்கி தன் கருத்தைப் பயாட்டக்கோவிடம் தெரிவித்தான்.

இரண்டு மணிநேரம் பேசிய பிறகு, பயாட்டக்கோவ் ஒஸ்லோவிலிருந்து பெர்லினுக்குப் புறப்பட்டான்.

## நெருக்கடியான நேரம்

1937இல், இரண்டாவது உலகப்போர் ஐரோப்பாவில் தோன்றியது. சோவியத் யூனியனைத் தாக்க, டிராட்ஸ்கி எதிர்பார்த்திருந்த வாய்ப்பு அதுதான். முசோலினி எத்தியோப்பியாவில் நுழைந்தது முதல், நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக நடந்தன. 1936 ஜூன் மாதத்தில்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


ஹிட்லர் ரைன்லந்துப் பகுதியைப் போர்க்களமாக்கினான். ஜூலை மாதத்தில், பாசிஸ்டுகள், அதிகாரிகளின் கூட்டுறவால் ஸ்பெயின் குடியரசை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தார்கள். பாசிசத் தலைவன் பிராங்கோ, மாட்ரிட் நகரை முற்றுகையிட்டான். கம்யூனிசப் புரட்சியை அடக்கப் போவதாகச் சொல்லி, ஜெர்மன், இத்தாலியப் படைகள் கிளர்ச்சிக்காரர்களுக்கு உதவி செய்தன.

செப்டம்பர் 12இல், நூரம்பெர்க்கில் நாஜிக் கட்சியின் காங்கிரஸ் நடைபெற்றது. அப்பொழுது ஹிட்லர் வெளிப்படையாகச் சொன்னதாவது :

''நாம் எந்த நேரத்திலும் தயாராக இருக்கிறோம். நமது அரசாங்கம் சிதைந்துகிடப்பதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. யூரல் மலைகளில் புதைந்திருக்கும் மூலப் பொருள்களாலும், உக்ரேன் கோதுமையினாலும், சைபீரியா மரங்களாலும் ஜெர்மனியைப் பொன் கொழிக்கும் நாடாக்கலாம்.''

1936 நவம்பர் 25. நாஜி வெளிநாட்டு இலாகா மந்திரி ரிப்பன் டிராப், ஜெர்மனியிலிருந்த ஜப்பானியத் தூதன் மூசகோசி ஆகிய இருவரும் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்கள். உலக கம்யூனிசத்தை எதிர்ப்பதே அதன் நோக்கம்.

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய ஆபத்தைச் சோவியத் அரசாங்கம் அறிந்தது. எனவே, ரஷ்யாவில் இருந்த நாஜி ஒற்றர்கள், டிராட்ஸ்கீயவாதிகள், பயங்கரவாதிகள், சோவியத் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையா யிருந்தவர்கள் ஆகியோர் மீது அதன் கவனம் சென்றது. ரஷ்யச் சதிக் கூட்டம் நடுங்கியது. சோவியத் விசாரணைகளைக் கட்டுப்படுத்த எகோடா எடுத்த முயற்சி வீணாயிற்று.

எகோடாவின் கையாளான போரிசோவ், விசாரணைக்காக லெனின்கிராடுக்கு வரவேண்டுமெனக் கட்டளை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


பிறந்தது. அவன் போகும் வழியில் கார் விபத்தால் இறந்து போனான்.

ஆகஸ்டு மாதத்திற்குள் டிராட்ஸ்கீயத் தலைவர் பலர் கைது செய்யப்பட்டனர். சினோவீவ், காமனேவ் போன்ற தலைவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டது.

வழக்கு. மாஸ்கோ நகரில் நடந்ததால் அதற்கு "மாஸ்கோ விசாரணை" என்று பெயர். விசாரணையிலிருந்து ஒரு புதிய கருத்து வெளியாயிற்று. டிராட்ஸ்கீய வாதிகள், சோவியத் அரசைக் கவிழ்க்க, உள்நாட்டில் சதி செய்ததுடன் நின்றுவிடவில்லை. நாஜி ஜெர்மன் தலைவர்களுடன் டிராட்ஸ்கி கொண்டுள்ள நெருங்கிய தொடர்பும் அம்பலமாகியது.

ஆகஸ்டு 23. சினோவீவ், காமனேவ், சுமிர்னோவ் முதலிய பதின்மூன்று நபர்கள் மீது இராணுவக் கோர்ட் தீர்ப்புக் கூறியது. கொலை, துரோகம், சதி ஆகிய குற்றங்களுக்காக அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

ஒரு வாரத்திற்குப் பிறகு, பயாட்டகோவ், ராடெக், செக்கோல் நிக்கோவ், செர்பிரியாகோவ் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். செப்டம்பர் 27-ல் எகோடா பதவியிலிருந்து விலக்கப்பட்டான். எஷோவ் என்பவன் அவனுக்குப் பதிலாக நியமிக்கப்பட்டான். அவனைத் தன் வழிப்படுத்த எகோடா முயற்சித்தான். ஆனால், அவன் முயற்சி தோல்வியுற்றது.

ரஷ்யச் சதிகாரர்களுக்கு அது நெருக்கடியான காலம். புகாரின், ரைகோவ், டாம்ஸ்கி ஆகியோர் எந்த நிமிடத்திலும் கைதியாகலாம். வெளிநாடுகளின் தாக்குதலை எதிர்பாராமல், உடனடியாகக் கிரெம்ளினைத் தாக்க வேண்டுமென்று துடிதுடித்தார்கள். அச்செய்கை மிக ஆபத்தானது என்று கைவிடப்பட்டது. பயாட்டக்கோவும், ராடெக்கும் கைது ஆவதற்கு முன் வலதுசாரி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


களும், டிராட்ஸ்கியவாதிகளும் கூடிக் கலந்து பேசினர். பொறுப்பு முழுவதும் கிரஸ்டின்ஸ்கியிடம் ஒப்புவிக்கப் பட்டது. அவன் மற்றவர்களைப் போல் வெளிப்படையாகத் தெரிந்தனவல்ல. அவன் டிராட்ஸ்கியோடும், ஜெர்மனி யோடும் தொடர்பு கொண்டிருந்தான். ரோசென் கோல்ட்ஸ் என்பவனைத் துணைத் தலைவனாகக் கிரஸ்டின்ஸ்கி ஏற்றுக் கொண்டான். அவன் 1923 முதல் டிராட்ஸ்கியவாதி. ஜெர்மன் இராணுவ இரகசிய இலாகாவைச் சேர்ந்தவன். கிரஸ்டின்ஸ்கியும், ரோசென் கோல்ட்ஸும் ஜெர்மன் ஏஜண்டுகளாக வேலை செய்து வந்தார்கள். ரஷ்யாவில் ஐந்தாம்படை வேலையைத் தொடங்கக் காலம் வந்து விட்டதாக அவர்கள் கருதினார் கள்.

மார்ஷல் துக்காசெவ்ஸ்கி என்பவன் சோவியத் பாதுகாப்பு இலாகா உதவிக் கமிசன், அவன் தலைமையில் இராணுவத் தாக்குதலைத் தொடங்குவதெனத் தீர்மா னிக்கப்பட்டது.

○

## அத்தியாயம் 16

# சூழ்ச்சிகளின் முடிவு

சோவியத் அரசும் செயலில் இறங்கியது. நாட்டிலுள்ள சதிக் குழு, "இடதுசாரி" எதிர்ப்புடன் நின்று விட வில்லை; சதியின் உண்மையான உயிர்நாடி, பெர்லினிலும் டோக்கியோவிலும் இருந்தது என்ற உண்மையும், அச்சு நாட்டின் ஐந்தாம் படையின் தன்மையும் விசாரணையின் போது வெளியாயின.

ஜனவரி 23, 1937. பயாட்டக்கோவ், ராடெக், செக்கோல் நிக்கோவ், ஷெஸ்டோவ், முரலோவ் மற்றும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


பன்னிரண்டு சதிகாரர்களும், ஜெர்மன், ஜப்பான் இரகசிய இலாகா ஏஜண்டுகளும் மாஸ்கோ நீதி மன்றத்தில் விசாரணை செய்யப்பட்டார்கள்.

அவர்கள், தங்கள் மீது சுமத்தப்பட்ட குற்றங்களைத் தொடக்கத்தில் மறுத்தார்கள். ஆனால், சாட்சிகள் அவர்கள் குற்றவாளிகள் என்று உறுதிப்படுத்தியதால், தங்களுடைய கொலைக் குற்றங்களையும், டிராட்ஸ்கியின் சொற்படி அவர்கள் ஜெர்மன் — ஜப்பானுடன் தொடர்பு கொண்டிருந்ததையும் ஒப்புக் கொண்டார்கள். ஜெர்மன் பாசிஸ்டு 'ஹெஸ்' என்பவனுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தையும், சோவியத் ஆட்சியைக் கவிழ்த்த பிறகு பாசிச சர்வாதிகாரத்தை அமைப்பதற்கான திட்டத்தையும் செக்கோல் நிக்கோவ் சிறையில் ஒப்புக் கொண்டான்.

''திறமையாக அமைக்கப்பட்ட முதலாளித்துவம்தான் பாசிசம்; அது ஐரோப்பாவில் வெற்றி பெற்று, எங்களை அழித்துவிடும்; எனவே, அதனுடன் சமரசம் செய்து கொள்வதே மேல் என்று நாங்கள் கருதினோம். எல்லாவற்றையும் இழந்துவிடுவதைக் காட்டிலும், சில தியாகங்கள் செய்வது நலமெனப்பட்டது. கிடைக்கின்ற சில வாய்ப்புகளைப் பயன்படுத்துவதே எங்கள் நோக்கம்'' என்று அவன் நீதி மன்றத்தில் வாக்குமூலம் கொடுத்தான். தேசிய — பொருளாதாரச் சங்கத்தில் உறுப்பினராயிருந்த பயாட்டக்கோவ் மீதும் கொலை, சதி, துரோகம் முதலிய குற்றச்சாட்டுகள் உறுதிப் படுத்தப்பட்டன.

''குற்றவாளிகள் எல்லோரும் ஒரே கதையைச் சொன்னார்கள்! நாய்போல் குழைந்து நின்றார்கள்! வெட்டக் கொண்டுபோகும் ஆடுகளைப்போல் விழித்தார்கள் என்று, எங்கும் நிலவிய எண்ணம் முற்றிலும் சரியல்ல. அவர்கள் பிடிவாதமாக விவரதித்தார்கள்'' என்று, 'ஐரோப்பாவில்' என்ற நூலில் ஜான் குந்தர் குறிப்பிட்டிருக்கிறார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


பயாட்டக்கோவின் இறுதி வாக்குமூலம் வருமாறு :

''ஆம். பல ஆண்டுகளாக டிராட்ஸ்கியவாதியாக இருந்து வருகிறேன். ஆனால், ஹெஸ் ஒப்பந்தத்தை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. நாங்கள் குருட்டுத்தனமாக நேச உடன்படிக்கை செய்து கொண்டோம். அதிலிருந்து விடுபட வழி தேடிக் கொண்டிருந்தேன்......''

கார்ல் ராடெக்கும் தான் குற்றவாளி என்று ஒப்புக் கொண்டான். நாஜி ஜெர்மனியோடும், ஜப்பான் அரசரோடும் டிராட்ஸ்கி செய்த ஒப்பந்தம் தனக்குப்பிடிக்க வில்லை என்றும், அந்தச் சதியை வெளிப்படுத்தத் தான் உறுதி கொண்டிருந்ததாகவும், அவன் கூறினான். ஒரு முடிவுக்கும் வரமுடியாமல், பல வாரங்கள் அவன் மனம் ஊசலாடியதாகவும் சொன்னான்,

அரசாங்கத் தரப்பு வக்கீல் விஷின்ஸ்கி அவனை விசாரித்தார் :

விஷின்ஸ்கி : ''என்ன முடிவுக்கு வந்தீர்?''

ராடெக் : ''கட்சியின் மத்தியக் கமிட்டிக்குப் போய் எல்லோருடைய பெயர்களையும் குறிப்பிட்டு, ஒரு அறிக்கை கொடுக்கலாமென முதலாவதாக எண்ணினேன். அதை நான் செய்யவில்லை. நான் இரகசிய இலாகாவிடம் போக வில்லை. ஆனால் அது என்னிடம் வந்தது.''

விஷின்ஸ்கி ; ''திறமையான பதில்.''

ராடெக் : ''துக்கமான பதில்.''

1937 ஜனவரி 30-இல். நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஜெர்மன், ஜப்பான் பாசிஸ்டுகள் சோவியத் யூனியனைக் கைப்பற்றுவதற்காகத் திட்டமிட்ட சதிக்கு உதவியளித் தார்கள் என்ற குற்றத்திற்காகப் பயாட்டக்கோவ், முரலோவ், செஸ்டோவ் மற்றும் பத்துப் பேர்கள் சுடப்படவேண்டும் என்றும், ராடெக்கும், செக்கோல் நிக்கோஷும் நெடுங்காலச் சிறைத் தண்டனையை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அநுபவிக்க வேண்டும் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. தீர்ப்பு நீதியானது என மாஸ்கோவிலிருந்த எல்லா நிருபர்களும் ஒப்புக் கொண்டார்கள். அரசைக் கவிழ்ப்பதற்காகச் செய்யப்பட்ட சதி உறுதியாகிவிட்டது என்பதாக அமெரிக்கத் தூதர் டேவிஸ், அரசாங்கச் செயலாளர் கார்டெல்ஹல் என்பவருக்கு 1937 பிப்ரவரி 17-இல், கடிதம் எழுதினார். ஆனால், இந்த உண்மைகள் மக்களுக்குத் தெரியப்படுத்தப்படவில்லை. சோவியத் ரஷ்யாவிலுள்ள ஐந்தாம் படையைப் பற்றிய உண்மைகளைப் பலம் பொருந்திய சில சக்திகள் மறைத்துவிட்டன.

தூதர் டேவிஸ், தனது டைரியில் கீழ்க்கண்டவாறு குறித்திருந்தார் :

''மற்றொரு இராஜ தந்திரி, மந்திரி......, நேற்று மிகத் தெளிவான செய்தியைச் சொன்னார். விசாரணையைப் பற்றி விவாதிக்கையில். பிரதிவாதிகள் குற்றவாளிகள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. விசாரணையைக் கவனித்த எல்லோரும் அதே முடிவுக்குத்தான் வந்தோம். வழக்கு; சோடிக்கப்பட்டதென, பத்திரிகைச் செய்திகளிலிருந்து வெளி உலகம் எண்ணுகிறது. அது அப்படி அல்ல என்பது அவருக்குத் தெரியும். ஆனால், வெளி உலகம் அப்படி நினைப்பது ஒருவகையில் நல்லதுதான்.''

## மேல் நடவடிக்கை

சதிக் குழு முற்றிலும் அழிந்துவிடவில்லை. பயாட்டக் கோவ், ராடெக் போன்றவர்கள் முக்கியமான விவரங்களை சோவியத் அதிகாரிகளுக்குத் தெரிவிக்காமல் மறைத்து வைத்திருந்தார்கள். இறுதித் தாக்குதலைத் தாமதப் படுத்துவது தற்கொலை என்று கருதினர். எஞ்சியுள்ள சதிகாரர் கிரஸ்டின்ஸ்கி, ரோசென்கோல்ட்ஸ், துக்கா செவ்ஸ்கி, கமார்னிக் ஆகியோர் தொடர்ச்சியாகப் பல

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இரகசிய மாநாடு கூடினர். 1937 மே 1ம் தேதிக்கு முன் இராணுவம் நடவடிக்கையில் இறங்குவதென முடிவு செய்யப்பட்டது.

அதிகாரத்தை எப்படிக் கைப்பற்றுவதென்பதைக் குறித்து, இராணுவக் குழுவினரிடையே பலத்த விவாதம் நடந்தது. செயல் திட்டங்கள் பல வகுக்கப்பட்டன, அவற்றில் துக்காசெவ்ஸ்கி வகுத்ததுதான் சிறந்ததாகும் என்று பிற்காலத்தில் ரோசன்கோல்ட்ஸ் குறிப்பிட்டான். அந்தத் திட்டமாவது: ''அவனைச் சேர்ந்த சில இராணுவ அதிகாரிகள் ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லி அவனுடைய அறையில் கூடி, கிரெம்லின் மாளிகைக்குள் புகுந்து, டெலிபோனைக் கைப்பற்றி, கட்சித் தலைவர்களையும், அரசுத் தலைவர்களையும் கொன்று விடுவது; அதே காலத்தில் காமார்னிக்கும் அவனுடைய ஆட்களும், மந்திரி சபையையும், அந்நிய நாட்டிலாகாவையும் கைப்பற்றிக் கொள்வது.''

இராணுவ நடவடிக்கை தொடங்கியதும் கைதாக வேண்டியவர்கள்; வேலையிலிருந்து நீக்கப்பட வேண்டியவர்கள்; பதிலாக ஏற்படுத்தப்பட வேண்டியவர்கள் ஆகியோரின் அட்டவணையை, கிரஸ்டின்ஸ்கி தயாரித்தான். காமார்னிக் தலைமையிலுள்ள துப்பாக்கி வீரர்கள் மாலட்டோவையும், வரோஷிலோவையும் கொல்ல வேண்டும்; ரோசென்கோல்ட்ஸ், அன்னிய நாட்டு வியாபார இலாகா மந்திரி என்ற நிலைமையில், ஸ்டாலினைக் கிரெம்லின் காரியாலயத்தில் சந்தித்து, அவரைக் கொலை செய்துவிட வேண்டும், என்ற திட்டம் உருவாகியது.

1937 மே இரண்டாவது வாரம் சோவியத் அரசாங்கம் விரைவில் செயலாற்றத் தொடங்கியது. துக்காசெவ்ஸ்கி, காமார்னிக் ஆகிய இருவரும் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டார்கள். நாஜி ஜெர்மனியுடன் தொடர்பு கொண்டிருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட சில தளகர்த்தர்கள் சிறையிலிடப்பட்டனர். புகாரின், ரைகோவ் ஆகிய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இருவரும் துரோகச் செயலுக்காகக் கைது செய்யப் பட்டார்கள். டாம்ஸ்கி தற்கொலை செய்துகொண்டான். மே 31-இல் காமார்னிக், டாம்ஸ்கி வழியைப் பின்பற்றி னான். துக்காசெவ்ஸ்கி, ரோசன் கோல்ட்ஸ் உள்பட ஐந்தாம் படையினர் யாவரும் சோவியத் அரசால் கைது செய்யப்பட்டார்கள்.

ஜுன் 11, 1937. துக்காசெவ்ஸ்கியும் செஞ்சேனை தளகர்த்தர்களில் ஏழு நபர்களும், இராணுவக் கோர்ட்டுத் தீர்ப்புப்படி, சோவியத் விரோதிகளுடன் சேர்ந்து சதி செய்த குற்றத்திற்காகச் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

மீண்டும் சோவியத் எதிர்ப்புப் புரளிகளும் பிரச் சாரங்களும் உலகமெங்கும் பரவின. ''செஞ்சேனை சோவியத் அரசிற்கு விரோதமாகக் கிளம்பிவிட்டது. ''வரோஷிலோவ், மாஸ்கோ மீது படையெடுத்துச் செல் கிறார்.'' ''சோவியத் ரஷ்யா முழுவதிலும் மக்கள் சுட்டுத் தள்ளப்படுகிறார்கள்.'' ''சிறந்த தளகர்த்தர்களைச் செஞ்சேனை இழந்துவிட்டதால், இனி அது சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்ததல்ல'' என்பன போன்ற வதந்தி கள் பல கிளம்பின.

1937 ஜுலை 4-ல், மாஸ்கோவிலிருந்து அமெரிக்கத் தூதர் டேவிஸ், சோவியத் அன்னிய நாட்டிலாகா மந்திரி மாக்சிம் லிட்வினோவ் என்பவரைச் சந்தித்தார். மாஸ்கோ விசாரணையில் டிராட்ஸ்கீயவாதிகளுக்கும் சில சேனைத் தலைவர்களுக்கும் கொடுக்கப்பட்ட தண்டனை அமெரிக் காவில் பரபரப்பை உண்டாக்கியிருப்பதாக டேவிஸ் சொன்னார்.

''துரோகச் செயலிலிருந்து, சோவியத் அரசை நாங்கள் பாதுகாத்தோம் என்ற உண்மையை என்றாவது ஒருநாள் உலகம் அறியும். நாஜி ஹிட்லரின் ஆபத்தைத் தடுத்து நிறுத்துவதற்காக, சோவியத்யூனியனை மாபெரும் கோட்டை ஆக்கியிருக்கிறோம். அதன் மூலம் எங்களுக் குள்ள ஆபத்தைத் தவிர்ப்பது மட்டுமல்ல, நாஜியின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உலக ஆதிக்க வெறியை எதிர்த்துத் தாக்குவதின் மூலம், உலகத்திற்கே ஒரு சிறந்த தொண்டாற்றுகிறோம்'' என்று லிட்வினோவ் பதிலுரைத்தார்.

சோவியத் ரஷ்யாவிலுள்ள நிலைமையை நேரில் கண்டபிறகு, டேவிஸ் 28-7-1937-இல், அரசாங்கக் காரிய தரிசியான கார்டெல் ஹல் என்பவருக்கு ஒரு இரகசிய அறிக்கை அனுப்பினார். அதன் எண் 457. சோவியத் அரசு மீது மக்களுக்கு வெறுப்புணர்ச்சியோ, அல்லது அது கவிழ்ந்துவிடக் கூடிய ஆபத்தோ இல்லை; பத்திரிகைகள் கதை அளப்பதைப்போல, காசக்கர்கள் கிரெம்லின் மாளிகையையோ அல்லது செஞ்சதுக்கத்தையோ முற்றுகையிடவில்லை என்று குறிப்பிட்டார்.

## இறுதி விசாரணை

மார்ச்சு 2, 1948. புகழ்பெற்ற மூன்று வழக்குகளில் கடைசி வழக்கின் விசாரணை தொடங்கியது. அதில் சம்பந்தப்பட்டவர்கள் இருபத்தொரு நபர்கள். அவர் களில் குறிப்பிடத் தகுந்தவர்கள் எகோடா, புலானோவ், புகாரின், ரைகோவ், கிரஸ்டின்ஸ்கி, ரோசென்கோல்ட்ஸ், பெஸ்ஸானோவ், டாக்டர் லெவின், டாக்டர் கஸாக்கோவ். இவர்கள் அச்சுநாடுகளின் ஐந்தாம்படையாகச் சோவியத் அரசில் செயலாற்றி வந்தார்கள். இராணுவக் கோர்ட் இவர்களைக் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளித்தது. பிளட் னோவ், பெஸ்ஸானோவ், ராக்கோவ்ஸ்கி ஆகிய மூவருக்கும் நெடுங்காலச் சிறைத் தண்டனை கொடுக்கப் பட்டது. மற்றவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

1941 கோடைகாலத்தில் நாஜி அரக்கன் ஹிட்லர், சோவியத் யூனியன் மீது படையெடுத்த பிறகு, அமெரிக்கத் தூதராயிருந்த டேவிஸ் கீழ்க்கண்டவாறு எழுதினார்:

''செக்கோஸ்லோவேகியா முதலிய நாடுகளில் ஹிட்ல ருக்கு ஐந்தாம் படைகள் ஆங்காங்கே வேலை செய்ததைப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போல், சோவியத் யூனியனில் இல்லை. அதற்குக் காரணம் மாஸ்கோ விசாரணையும் கடுமையான தண்டனையும் தான்.

''அந்தத் தண்டனைகளைக் கேட்டு, உலகம் திடுக்கிட்டது. உள்நாட்டுப் புரட்சியிலிருந்தும் வெளிநாடுகளின் தாக்குதலிலிருந்தும் சோவியத் அரசைக் காக்க ஸ்டாலின் எடுத்துக்கொண்ட உறுதியான முயற்சிகளில் அதுவும் ஒரு பகுதி. அரசாங்கத்தின் செய்கை நீதியின்பாற்பட்டதென்பது இப்போது தெளிவாயிற்று.''

சோவியத் ரஷ்யாவில் வேலை செய்த அச்சு நாடுகளின் ஐந்தாம்படை முற்றிலும் ஒழிக்கப்பட்டது.

○

அத்தியாயம் 17

## மெக்ஸிகோ கொலை

மாஸ்கோவில் நடைபெற்ற மூன்று வழக்குகளிலும் தொடர்புள்ள ஒருவன் ஆறாயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்தான். சினோவீவ் போன்ற டிராட்ஸ்கிய வாதிகள் கைதியாகி வழக்கு நடைபெறும்போது, டிராட்ஸ்கி நார்வேயிலிருந்து வெளியேற வேண்டியதாயிற்று. 1937 ஜனவரி 13-இல், அவன் மெக்ஸிகோ போய்ச் சேர்ந்தான். அங்கே ஒரு கிராமப் புறத்தில் தங்கியிருந்தான். அங்கிருந்து அவன் சோவியத் எதிர்ப்பு அலுவல்களை நடத்தினான். டிராட்ஸ்கியின் நான்காவது அகிலத்துக்கும், அச்சு நாடுகளின் ஐந்தாம் படைக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது. அச்சு நாடுகளின் இரகசிய இலாகா, தொழிலாளர் இயக்கங்களில் புகுந்து வேலை செய்ய டிராட்ஸ்கிய வாதிகள் உதவி செய்தார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


1939 செப்டம்பர் மாதத்தில் பிராங் சாக்சன் என்ற டிராட்ஸ்கியவாதி ஐரோப்பாவிலிருந்து அமெரிக்காவுக்கு வந்தான். சில்வியா ஏஜ்லாப் என்ற அமெரிக்க டிராட்ஸ்கிய வாதி, அவனை டிராட்ஸ்கியின் காரியதரிசியாகத் தொண் டாற்றும்படி, மெக்ஸிகோவுக்கு அனுப்பினான்.

சாக்சன் கீழ்க்கண்ட செய்தியை மெக்ஸிகோ போலீஸிடம் சொன்னான்:

''சோவியத் யூனியனுக்குப் போகும்படி டிராட்ஸ்கி எனக்குக் கட்டளையிடுகிறார். முதலாவது, நான் ஷாங் காய்க்குப் போகவேண்டும். அங்கு டிராட்ஸ்கிய ஏஜண்டு களைச் சந்தித்து அவர்களுடன் ரஷ்யா போகவேண்டும். செஞ்சேனையிடையே சீர்குலைவை உண்டாக்கி, போர்க் கருவிகள் உற்பத்தியாகும் ஆலைகளில் முட்டுக்கட்டை போடவேண்டும். இதுவே நாங்கள் ரஷ்யாவில் ஆற்ற வேண்டிய பணி,''

ஆனால். அவன் அந்தப் பயங்கரச் செயலில் ஈடுபடச் செல்லவில்லை. 1940 ஆகஸ்டு 20-இல் சாக்சன் டிராட்ஸ் கியின் மண்டையைக் கோடாரியால் உடைத்து, அவனைக் கொன்றுவிட்டான்.

மெக்ஸிகோ போலீஸ், சாக்சனைக் கைது செய்தது. சாக்சனின் வாக்குமூலமாவது:—

''நான் சில்வியா ஏஜ்லாப் என்ற பெண்ணை மணம் செய்ய விரும்பினேன். டிராட்ஸ்கி அந்தக் கல்யாணத்தைத் தடுத்தான். அதன் காரணமாக எங்கள் இருவருக்குள்ளும் பகைமை ஏற்பட்டது. எனவே, அவளுக்காக என்னையே தியாகம் செய்யத் தீர்மானித்தேன்.

''தொழிலாளி வர்க்கத்தின் விடுதலைத் போருக்குத் தலைமை தாங்கும் உத்தமனைப் பார்க்க நினைத்தேன். ஆனால் பழிவாங்க வேண்டுமென்ற தனது இச்சையை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


நிறைவேற்றிக் கொள்வதற்காகவும், தன் அற்பத்தனத்தையும் வெறுக்கத்தக்க திட்டங்களையும் மறைப்பதற்காகவும், தொழிலாளி வர்க்கத்தின் போராட்டத்தைப் பயன்படுத்தக் கருதும் சுயநலவாதியின் முன் நிற்பதைக் கண்டேன். அவன் தங்கியிருக்கின்ற மாளிகை யாருடைய பணத்தினால் கட்டப்பட்டிருக்கலாம் என்ற கேள்வியை என்னையே கேட்டுக்கொண்டேன். அவரை அடிக்கடி பார்க்கவந்த ஒருபெரிய அன்னிய வல்லரசின் பிரதிநிதியே அக்கேள்விக்கு விடை தரமுடியும்.

''டிராட்ஸ்கிதான் என் இயற்கையையும், என் வருங் காலத்தையும், என் ஆசைகளையும் சீர்குலைத்தான். என் பெயரும்-புகழும் மங்கி மடியச் செய்தான். என்னை அவனுடைய கைப்பாவையாக்கிவிட்டான்- நான் குருட்டுத் தனமாக அவனைப் பின்பற்றினேன்.''

டிராட்ஸ்கி இறந்தபிறகு, நெப்போலியனைக் காப்பியடிக்க, ஒரே ஒருவன்தான் உயிருடன் இருந்தான். அவன் தான் 'அடால்ப் ஹிட்லர்.'

O

## அத்தியாயம் 18

# இரண்டாவது உலகப் போர்

இரண்டாவது உலகப் போர் 1931–லேயே தொடங்கி விட்டது. ''கம்யூனிச பூதம்'' ஆசியாவை விழுங்கிவிடாமல் பாதுகாக்கப் போவதாகச் சொல்லி, ஜப்பான் மஞ்சூரியா மீது படையெடுத்தது.

1933-இல், ஹிட்லர் ''கம்யூனிசப் பூச்சாண்டி'' காட்டி ஜெர்மன் குடியரசைக் கவிழ்த்தான், போல்ஷ்விசத்தி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



லிருந்தும், காட்டு மிராண்டித்தனத்திலிருந்தும் காப்பாற்றப் போவதாகப் பாசாங்கு செய்து, இத்தாலி எத்தியோப்பியாவை விழுங்கியது. 1936-இல் ஹிட்லர் ரைன்லந்துப் பகுதியை இராணுவத் தளமாக்கினான். மூன்றாவது அகிலத்திற்கு விரோதமாக, ஜெர்மனியும். ஜப்பானும் உடன்படிக்கை செய்தன. ''கம்யூனிசப் பேராபத்திலிருந்து'' காப்பாற்றப்போவதாகச் சொல்லி, ஜெர்மன், இத்தாலியப் படைகள் ஸ்பெயின்மீது பாய்ந்தன. 1937-இல், மூன்றாவது அகிலத்தின் எதிர்ப்பு அணியில் இத்தாலியும் சேர்ந்தது. ஜப்பான் சீனாவில் பாய்ந்து பீப்பிங், டின்சின், ஷாங்காய் முதலிய இடங்களைக் கைப்பற்றியது. அடுத்த ஆண்டில், ஜெர்மனி ஆஸ்திரியாவைக் கைப்பற்றியது. ''கம்யூனிசத்திலிருந்து உலகைக் காப்பாற்ற'' பெர்லின்-ரோம்-டோக்கியோ அச்சு ஏற்பட்டது.

''மூன்று நாடுகள் மற்ற நாடுகளைத் தாக்கியதை நாம் அறிவோம். கொள்கையிலும் ஆட்சியிலும் பண்பாட்டிலும் எவ்வளவோ வேறுபாடுகள் அவற்றிற்கிடையே இருப்பினும், கம்யூனிசத்தை எதிர்ப்பதாகக்கூறி, அவை தமது ஆக்கிரமிப்பை நீதியின்பாற் பட்டதெனக் கூறுகின்றன. ''கம்யூனிச எதிர்ப்பு'' என்னும் மந்திரத்தை உச்சரித்தால் அவற்றின் துரோகமும், குற்றமும் மன்னிக்கப்படுமென அவை கருதுகின்றன!'' என்று, சோவியத் வெளியுறவு மந்திரி லிட்வினோவ் 1937 செப்டம்பர் மாதத்தில் சர்வதேச சங்கத்தில் சொன்னார்.

மூன்றாவது அகிலத்தின் எதிர்ப்பு ஒப்பந்தம் என்னும் முகமூடியை அணிந்து, ஜெர்மனி, ஜப்பான், இத்தாலி ஆகிய மூன்றுவல்லரசுகளும் ஐரோப்பாவையும், ஆசியாவையும் அடிமைப்படுத்தும் புனிதத் தொண்டில் இறங்கின.

பாசிஸ்டு ஆக்கிரமிப்பைத் தடுப்பதற்காகச் செய்த ஒற்றுமையான முயற்சி ''கம்யூனிஸ்டு பிரச்சாரம்'' என்று கூறப்பட்டது. சோவியத் ரஷ்யாவைத் தாக்குவதற்காக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எல்லா நாடுகளையும் ஒன்று திரட்ட நாஜி ஜெர்மனி முயற்சித்தது. பாசிச நாடுகளைத் திருப்தி செய்யும் கொள்கையை, மற்ற நாடுகள் கையாண்டன.

பாசிச நாடுகளைத் திருப்தி செய்யும் கொள்கை, 1938 செப்டம்பர் மாதத்தில் உச்ச நிலையை அடைந்தது. நாஜி ஜெர்மனி, பாசிச இத்தாலி, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய வல்லரசுகள் ஒரு ஒப்பந்தம் செய்தன. அதுதான் உலகப் புகழ்பெற்ற மூனிச் ஒப்பந்தம்; சோவியத்துக்கு எதிரான புனிதக் கூட்டுறவு. அதைத்தான், 1919-ம் ஆண்டு முதல் உலகப் பிற்போக்கு சக்திகள் எதிர்பார்த்திருந்தன.

அந்த ஒப்பந்தத்தின் மூலம், சோவியத் ரஷ்யா தன்னந் தனியாக விடப்பட்டது. ஐரோப்பாவின் கூட்டுப் பாதுகாப்புக்கு அடிப்படையாக இருந்த பிரெஞ்சு சோவியத் உடன்படிக்கை செத்துப் போயிற்று. செக்—சுடேட்டென் பிரதேசம் நாஜி ஜெர்மனியின் பகுதியாகியது. கிழக்கு வாசல் ஜெர்மனிக்குத் திறக்கப்பட்டது.

''பிரஸ்-லிட்டோவ்ஸ்க் உடன்படிக்கைக்குப் பிறகு, சோவியத் யூனியனை இழிவுபடுத்திய செயல்களில் மிக இழிந்த செயல் மூனிச் ஒப்பந்தம்'' என்று வால்டர் துராந்தி, 'கிரெம்லினும் மக்களும்' என்ற நூலில் எழுதியிருக்கிறார்.

நாஜி—சோவியத் போரை உலகம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. ஹிட்லரின் கையெழுத்துள்ள ஒரு துண்டு காகிதத்துடன், சேம்பர்லேன் இங்கிலாந்து திரும்பி, ''நம் காலத்தில் சமாதானம் என்பதற்கு இதுதான் அத்தாட்சி'' என்று பிதற்றினார்.

''ஒற்றுமை மிக மிக அவசியம். உலகிற்கு ஆபத்து ஜெர்மனியினாலோ அல்லது இத்தாலியினாலோ அல்ல... ரஷ்யாவிலிருந்துதான்'' என்று சேம்பர்லேன் கட்சியைச் சேர்ந்த சர் அர்னால்டு வில்சன் கீழ்சபையில் பேசினான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆனால், சோவியத்துக்கு விரோதமான மூனிச் ஒப்பந்தத்திற்கு முதல்பலி சோவியத் மக்களல்ல; ஜனநாயக பிரியர்களான ஐரோப்பிய மக்களே. திரும்பவும் சோவியத் எதிர்ப்பு முன்னணி, ஜனநாயகத்தைக் காட்டிக் கொடுத்தது.

பாசிஸ்டு சர்வாதிகாரியான பிராங்கோவின் அரசாங்கம் தான் ஸ்பெயின் நாட்டின் உண்மையான அரசாங்கம் என்று 1939 பிப்ரவரி மாதத்தில் பிரிட்டிஷ், பிரெஞ்சு அரசுகள் ஒப்புக்கொண்டன. இரண்டரை ஆண்டுகள் மக்கள் வீரப்போர் புரிந்த பிறகு, 1939 பிப்ரவரி மாதத்தில் ஸ்பெயின் குடியரசு, பாசிஸ்டு நிலைக்களமாக மாறியது.

மார்ச்சு 15-இல் ஜெர்மன் படைகள் செக்கோஸ் லோவேகியாவில் புகுந்தன. அங்கிருந்த முதல்தரமான போர்க் கருவிகளும் உற்பத்திச் சாலைகளும் ஹிட்லருக்குச் சொந்தமாயின. மார்ச்சு 20-இல், லிதுவேனியா ஜெர்மனிக்கு அடிபணிந்தது.

ஏப்ரல் 7-இல் முசோலினி அல்பேனியா மீது படையெடுத்தான். ஐந்து நாட்களுக்குப் பிறகு, இத்தாலிய மன்னன் எமானுவேல் அல்போனியாவின் மன்னன் ஆனான். பாசிச வெறியர்களைத் திருப்தி செய்யும் கொள்கையைக் கையாண்ட பிரிட்டிஷ் —பிரெஞ்சு அரசியல் வாதிகளை, ஹிட்லர் செக் பகுதியில் புகுந்த காலத்திலேயே ஸ்டாலின் எச்சரித்தார். அவர்களுடைய சோவியத் எதிர்ப்புக் கொள்கை, அவர்களுக்கே கேடு விளைவிக்கும் என்பதே அவருடைய எச்சரிக்கை.

அவருடைய எச்சரிகைக்கு முதலாளித்துவம் செவி சாய்க்கவில்லை.

1939 ஏப்ரல் மாதத்தில் பிரிட்டனில் எடுக்கப்பட்ட வாக்குப்படி, நூற்றுக்கு எண்பத்தேழு மக்கள், நாஜி ஜெர்மனிக்கு எதிராக, ஆங்கிலோ - சோவியத் கூட்டுறவை ஆதரித்தார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


அவர்களுடைய குரலும் புறக்கணிக்கப்பட்டது. ''ரஷ்யக் கூட்டுறவு, மற்ற நாடுகளுடன் ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு இடையூறாக இருக்கும்'' என்று லண்டன் டைம்ஸ் எழுதியது.

நாஜி ஜெர்மனியின் தாக்குதலுக்கு இலக்காக சோவியத் ரஷ்யாவைத் தனிமைப்படுத்த வேண்டுமென்பதே மூனிச் பேர்வழிகளின் நோக்கம். ஹிட்லருக்கு எதிராக, ஐரோப்பிய நாடுகளின் ஐக்கிய முன்னணியை அமைக்க, சோவியத் யூனியன் எவ்வளவோ முயற்சித்தும், பயன்படாது போயிற்று. ஐரோப்பாவிலுள்ள அரசியல் தலைவர்கள், சோவியத் எதிர்ப்புக் கொள்கையைக் கையாண்டதால், சோவியத் யூனியன் தற்காப்பை முன்னிட்டு 1939 ஆகஸ்டு 24-இல், நாஜி ஜெர்மனியுடன், தான் விரும்பாத அனாக்கிரமிப்பு ஒப்பந்தம் செய்து கொள்வது அரசியமாயிற்று.

## இரண்டாவது உலகப் போர்

1939 செப்டம்பர் 1-இல், நாஜிப்படை போலந்து மீது படை எடுத்தது. இரண்டு நாட்களுக்குப் பின், பிரிட்டனும் பிரான்சும் ஜெர்மனி மீது போர் தொடுத்தன. நாஜி ஜெர்மனியுடன் தொடர்பு கொண்டிருந்ததால், போலந்து இரண்டு வாரங்களில் வீழ்ச்சியுற்றது. போலந்து அரசாங்கம், தன் மக்களுக்குத் துரோகம் செய்துவிட்டு, ஓட்டம் பிடித்தது. எனவே, நாஜி ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்தும் நோக்கத்துடன், செப்டம்பர் 17-இல், செஞ்சேனை போலந்துக்குள் புகுந்தது. 1920-ஆம் ஆண்டுக்குமுன், சோவியத் ரஷ்யாவிடமிருந்து போலந்து கைப்பற்றிய பகுதியைச் செஞ்சேனை வளைத்துக் கொண்டது.

''நாஜி ஆபத்திலிருந்து ரஷ்யாவைப் பாதுகாக்க ரஷ்யச்சேனை அந்த இடத்தில் அணிவகுத்து நிற்கவேண்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



டியது அவசியம்...'' என்று அக்டோபர் 1-இல், சர்ச்சில் ரேடியோ மூலம் பேசினான். எஸ்தோனியா, லாட்வியா, லிதுவேனியா முதலிய நாடுகளுடன் அக்டோபர் முதல் வாரத்தில்,சோவியத் அரசாங்கம் பரஸ்பர உதவி ஒப்பந்தம் செய்து கொண்டது.

அந்த ஒப்பந்தத்தின்படி சோவியத் யூனியன் பால்டிக் நாடுகளில் இராணுவத் தளங்கள் அமைத்துக்கொள்ளலாம். பின்லந்து, ஜெர்மனியின் கூட்டாளியாக நின்றது. பின்லந்தின் இராணுவத் தலைவன் மானர்ஹீம் ஜெர்மன் மேலிடத்துடன் தொடர்பு வைத்திருந்தான். ஜெர்மன் அதிகாரிகள், இஞ்சினீயர்கள் ஆகியோரின் உதவியால் பின்லந்து வலிமை பொருந்திய இராணுவக்கோட்டையாக மாறியது, சோவியத் யூனியனைத் தாக்குவதற்கு முதல் தரமான போர்த் தளமாகியது.

பின்லந்துடன் பரஸ்பர உதவி ஒப்பந்தம் செய்து கொள்ள, மாஸ்கோ அரசு விரும்பியது. லெனின்கிராடின் பாதுகாப்புக்காக, கிரான்ஸ்டட் என்ற இடத்தில், கடற்கடைத் தளம் கட்ட, சோவியத் திட்டமிட்டது. எனவே, பின்லந்துக்குச் சொந்தமான சிறிய நிலப் பகுதியை சோவியத் கேட்டது. அதற்குப் பதிலாக, சோவியத் துக்குச் சொந்தமான நிலப்பரப்பைத் தர சோவியத் இசைந்தது.

பின்லந்து அரசில் ஆதிக்கம் வகித்த பாசிச வெறியர்கள், சோவியத் கோரிக்கையை மறுத்துவிட்டார்கள். எனவே, நவம்பர் இறுதியில் பின்லந்தும் சோவியத் யூனியனும் போரில் இறங்கின.

இங்கிலாந்து, பிரான்சு நாடுகளிலுள்ள சோவியத் விரோதிகள், தாங்கள் எதிர்பார்த்த ''புனிதப் போர்'' நெருங்கிவிட்டதாகக் கொம்மாளம் அடித்தார்கள். மேற்கே ஜெர்மனியை எதிர்த்து நடத்தும் போர் தவறான

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போர் என்றும், உண்மையான போர் கிழக்கில் நடைபெறுகிறதென்றும், அவர்கள் கொக்கரித்தார்கள். இங்கிலாந்து, பிரான்சும், அமெரிக்க நாடுகளில் சோவியத்துக்கு எதிரான பிரச்சாரம் மிக மும்முரமாக நடந்தது. "பின்லந்துக்கு உதவி செய்" என்ற கோஷம் எங்கும் ஒலித்தது. நாஜிகளுடன் போர் செய்யத் தங்களிடம் போதிய ஆயுத பலம் இல்லையென்று சொன்ன இங்கிலாந்தும் பிரான்சும் பின்லாந்துக்கு ஏராளமான போர்க் கருவிகளை அனுப்பின. அமெரிக்கப் பத்திரிகைகளும் பிறவும் பின்லாந்துக்கு வெற்றி, ரஷ்யாவுக்குச் சேதம் என்று பிதற்றின. எனினும், மூன்று மாதங்கள் கடும் போரிட்டபின், செஞ்சேனை வெற்றி பெற்றது; 'தகர்க்க முடியாத' மானர்ஹீம் கோட்டை தூள் தூளாகியது.

மேற்கில் நிலவி வந்த அமைதி திடீரென்று குலைந்தது. மீண்டும் புயல் வீசத் தொடங்கியது. 1940 ஏப்ரல் 9-இல், ஜெர்மன் படைகள் டென்மார்க், நார்வே ஆகிய இரு நாடுகளுக்குள் புகுந்தன. டென்மார்க் எவ்வித எதிர்ப்புமின்றி ஒரே நாளில் அடிபணிந்தது. அந்த மாதம் இறுதியில் நார்வே வீழ்ச்சியுற்றது.

பிரிட்டனை மிக மோசமான நிலைமைக்குக் கொண்டு வந்தபிறகு, பிரதம மந்திரி சேம்பர்லேன், தன் பதவியிலிருந்து விலகினார். சர்ச்சில் பிரதமரானார். அன்றே ஜெர்மன் இராணுவம் ஹாலந்து, பெல்ஜியம், லக்சம்பர்க் ஆகிய நாடுகளைக் கைப்பற்றியது.

மே 21-இல், ஜெர்மன் படைகள் மிக வேகமாக முன்னேறி இங்கிலீஷ் கால்வாயை அடைந்து பிளாண்டர்சிலுள்ள நேசநாட்டுத் துருப்புகளைத் தனிமைப்படுத்தியது. பிரான்சு பீதியுற்றது. நாடெங்கும் ஐந்தாம் படைகள் வேலை செய்தன. இராணுவ அதிகாரிகள் துரோகச் செயலில் இறங்கினர். நாடு ஐந்தாம்படை ஆதிக்கத்திற்குள்ளாகியது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''.........பாசிஸ்டுகள் நாட்டிலும் இராணுவத்திலும் செல்வாக்குப் பெற்றிருந்தனர். ஹிட்லருடைய வேலையைச் சுலபமாக்குவதற்கு, அரசியல் சதி நடைபெற்றது. கம்யூனிச எதிர்ப்புப் போர்வை, அந்தச் சதியை மறைக்கும் மாயத்திரையே அன்றி, வேறல்ல.........வேய்காண்ட், பெட்டெயின், லவால் ஆகியோர் சிறந்த ஐந்தாம்படைத் தலைவர்கள். ஜூன் 12, 1940-இல், நடந்த மந்திரிசபைக் கூட்டத்தில் வேய்காண்ட், விரைவில் போரை முடிக்கும்படி அரசாங்கத்தை வற்புறுத்தினார். பாரிசில் கம்யூனிசப் புரட்சி தோன்றி விட்டதென்பதே அவருடைய விவாதம்'' என்று, 'துரோகத்தின் வெற்றி' என்ற நூலில் குறிப்பிட்டிருக்கிறார் பிரெஞ்சு ஆசிரியர்.

மே, 29. பிரிட்டிஷ் இராணுவம் டன்கர்க்கலிருந்து வெளியேறியது.

ஜூன், 10. பிரான்சு, இங்கிலாந்து ஆகிய இரு நாடுகள் மீதும், இத்தாலி போர் அறிவிப்புச் செய்தது.

ஜூன், 14. பாரிஸ் வீழ்ச்சியுற்றது. நாஜிக் கைப்பாவையான வேய்காண்டுக் கும்பல் ஆட்சி பீடத்தில் அமர்ந்தது.

ஜூன், 22. ஜெர்மனியும், பிரான்சும் உடன்படிக்கை செய்து கொண்டன.

பிரான்சு வீழ்ச்சியுற்றதும், சோவியத் யூனியன் செஞ்சேனையை மேலும் பலப்படுத்தியது. ஜூன் மத்தியில் நாஜி ஜெர்மனி பால்டிக் நாடுகளைத் தாக்கலாம் என்பதை எதிர்பார்த்து செஞ்சேனை, எஸ்தோனியா, லாட்வியா, லிதுவேனியா ஆகிய நாடுகளில் புகுந்தது.

ஜூன், 27. புரட்சிக்குப் பிறகு ருமேனியா கைப்பற்றிக் கொண்ட பெசரேபியா, வடக்குப் புகோவினா என்ற ரஷ்யப் பகுதிகளையும் செஞ்சேனை கைப்பற்றியது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1941 மார்ச் 1. பல்கேரியாவை ஜெர்மனி கைப்பற்றி நாஜித் தளமாக்கியது.

ஏப்ரல் 6. யுகோஸ்லோவேகிய மக்கள் நாஜிகளுக்கு ஆதரவாயிருந்த அரசாங்கத்தைக் கவிழ்த்துவிட்டுப் புதிய அரசாங்கம் அமைத்தார்கள். சோவியத் அரசாங்கம், அப் புதிய சர்க்காருடன் அனாக்கிரமிப்பு ஒப்பந்தம் செய்தது. அன்றே, நாஜி ஜெர்மனி யுகோஸ்லோவேகியாவுடன் போர் தொடுத்தது.

மே, 5. ஸ்டாலின், சோவியத் ரஷ்யாவின் பிரதமரானார்.

1941 ஜூன் 22-ல், எவ்வித முன்னறிவிப்புமின்றி ஹிட்லர் சோவியத் யூனியனைத் தாக்கினான்.

இத்தாலி, ருமேனியா, ஹங்கேரி, பின்லந்து ஆகிய நாடுகள் சோவியத் ரஷ்யாவுக்கு விரோதமான, நாஜி ஜெர்மனியுடன் சேர்ந்து கொண்டன. ஐரோப்பிய எதிர்ப் புரட்சிச் சக்திகள் ஒன்று பட்டு, சோவியத் யூனியனுக்கு எதிரான "புனிதப் போரில்" ஈடுபட்டன. தளகர்த்தன் மாக்ஸ் திட்டம் செயலுக்கு வந்தது. 1941 டிசம்பர் 7-இல், ஜப்பான் அமெரிக்காவைத் தாக்கியது. நாஜி ஜெர்மனியும், பாசிஸ்டு இத்தாலியும், அமெரிக்கா மீது போர் அறிவிப்புச் செய்தன. முகமூடி அகன்றது. பாசிசத்தின் கோர உருவம் வெளிப்பட்டது. சோவியத் ரஷ்யாவுக்கு விரோதமாக உருவாக்கப்பட்ட, அச்சு நாடுகளின் இரகசியப் போர், சுதந்திர மக்களுக்கு விரோதமான உலகப் போர் ஆகியது.

"1936-இல், ஜப்பான் ஜெர்மனியுடன் மூன்றாவது அகில எதிர்ப்பு ஒப்பந்தம் செய்தது. அந்த ஒப்பந்தம் சோவியத் யூனியனுக்கு விரோதமானதென்பது வெளித் தோற்றம். ஆனால், அதன் உண்மை நோக்கம் வேறு. உலக மக்களுக்கும், சிறப்பான கிரேட் பிரிட்டன், பிரான்சு,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அமெரிக்கா நாடுகளுக்கும் விரோதமாக, பாசிச சங்கத்தை அமைப்பதுதான்'' என்று அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்ட் 1941 டிசம்பர் 15-இல் பேசினார்.

இரண்டாவது உலகப் போர், உலக பாசிசத்திற்கும் முன்னேற்றமான மனித சமுதாயத்தின் ஒன்றுபட்ட இராணுவத்திற்கும் இடையே நடைபெறும், இறுதிப் போர் என்ற முடிவான கட்டத்தை அடைந்தது.

O

## அத்தியாயம் 19

# மூன்றாவது அகிலத்தின் மீது அமெரிக்க எதிர்ப்பு

அமெரிக்கா, நாஜி ஜெர்மனிக்கு விரோதமான ஆங்கிலோ சோவியத் கூட்டு முன்னணியில் சேர்ந்துவிடாதபடி பார்த்துக் கொள்வதே, அச்சு நாட்டின் இரகசிய அரசியல் தந்திரமாக இருந்தது. 1918-ஆம் ஆண்டிலிருந்து, அமெரிக்க மக்கள் சோவியத் எதிர்ப்புப் பிரச்சாரத்தைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். ''ரஷ்யப் புரட்சி; (கொலைகாரர்களாலும், கொள்ளைக் கூட்டத்தார்களாலும் தூண்டப்பட்டு) குண்டர்கள் செய்யும் குரூரச் செயல்கள்'', ''செஞ்சேனை கட்டுப்பாடில்லாத கீழ்மக்களின் கூட்டம்''; ''சோவியத் பொருளாதாரம் நிலையற்றது''; ''சோவியத் தொழிலும் விவசாயமும் மிகக் குழப்பான நிலையிலிருக்கின்றன'', ''மாஸ்கோ கொடுங்கோலாளரை எதிர்த்துப் புரட்சி செய்ய, மக்கள் காலத்தை எதிர்நோக்கி இருக்கிறார்கள்'' என்பன போன்ற பொய்ப் பிரச்சாரம் இடைவிடாது நடந்தது. நாஜி ஜெர்மனி, சோவியத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ரஷ்யாவைத் தாக்கியதும், சோவியத் யூனியன் வீழ்ந்துவிடுமென்று அமெரிக்கப் பத்திரிகைகள் கொக்கரித்தன.

''முப்பதே நாட்களில் ஹிட்லர் ரஷ்யாவை ஆட்சி செய்வார்''—1941 ஜூன் 24, மார்ட்டின் டைஸ்.

''செம்படை மிக விரைவில் வீழ்ச்சியுறும். அது தடைப்படுமானால், பைபிளில் காணப்படுகின்ற அற்புதங்களைக் காட்டிலும் மிகப் பெரும் அற்புதம் நடந்தாக வேண்டும்''—நியூயார்க் போஸ்டு, 1941 ஜூன் 27.

''ரஷ்யா ஒழிந்தது. நாஜி இராணுவத்தின் மின்னல் தாக்குதலில் அது அழிந்து விடும். அதை அமெரிக்காவினாலும், கிரேட் பிரிட்டனாலும் காப்பாற்ற முடியாது.'' அமெரிக்கன் நியூயார்க் ஜர்னல், 1941 ஜூன் 27.

''சோவியத் ரஷ்யாவின் பொருளாதார முன்னேற்றத்தை, அமெரிக்க மக்கள் தெரிந்து கொள்ள முடியாதபடி இருபது ஆண்டுகளாக ஏன் மறைக்கப்பட்டிருக்கிறது என்பது தெளிவாகவில்லை. ஸ்டாலின், ஹிட்லரை எதிர்த்து நிற்க முடியாது என்பதே பெரும்பான்மையோரின் ஒன்றுபட்ட கருத்து. நம்மவரில் சிறந்த அறிவாளிகள் கூட, நம்பிக்கை இழந்து விட்டனர். நாஜிகள் மிக விரைவில் ரஷ்யாவை அடிமைப் படுத்திவிடுவர் என்று அவர்கள் எண்ணினார்கள். ஏன்? எப்படி? இவ்வளவு காலமும் ரஷ்யாவைப் பற்றி அமெரிக்க மக்கள் தெரிந்து கொள்ளாதவாறு இரும்புத் திரையிடப்பட்டிருந்தது என்று 'ஹெறாஸ்டன் போஸ்டு' நவம்பர் 20, 1941-இல், 'ரஷ்யாவைப் பற்றிய அறியாமை' என்ற தலையங்கத்தில் குறிப்பிட்டது.

1918 முதல் அமெரிக்க மக்களுக்கும் சோவியத் மக்களுக்கும் இடையே மாபெரும் சுவர் ஒன்று எழுப்பப்பட்டது. பிற்போக்கு அரசியல் வாதிகளும், வர்த்தகர்களும், வெள்ளை ரஷ்ய அகதிகளும், எதிர்ப் புரட்சி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஏஜண்டுகளும், அச்சு நாடுகளின் வேவு, பிரச்சார இலாகாக்களின் பிரதிநிதிகளும் ஒன்றுசேர்ந்து, சோவியத் மக்கள் மீது ஒரு செயற்கை வெறுப்பையும் பயத்தையும் உண்டாக்கினர்.

ரஷ்யப் புரட்சி எழுந்ததும், வெள்ளை ரஷ்யர்கள் அமெரிக்காவுக்கு ஓடிப் போய், சோவியத் ரஷ்யாவுக்கு விரோதமான பிரசாரங்களைச் செய்தார்கள். அமெரிக்காவுக்கு எதிரான பாசிஸ்டு இரகசியப் போர்ப் பிரச்சாரமும் அத்துடன் சேர்ந்து நடைபெற்றது.

1924-இல் நாஜி சங்கங்கள் அமெரிக்காவில் நிறுவப்பட்டன. அவற்றின் தலைமைக் காரியாலயம் சிகாகோவில் இருந்தது. அதன் பெயர் 'நாஜி டியூட்டோனியா சங்கம்'. அதே ஆண்டில் காப்டன் சிட்னி சார்ச் ரெயிலியும், அவனுடைய கூட்டாளியான வெள்ளை ரஷ்யர்களும், போல்ஷ்விசத்திற்கு எதிரான சர்வதேச சங்கத்தின் கிளை ஒன்றை அமெரிக்கரவில் அமைத்தார்கள். நாஜி வெறியர்களான 'ருடால்ப் ஹெஸ்', ஆல்பிரட் ரோசன் பேர்க்' ஆகிய இருவரின் கட்டளைப்படி அந்த நாஜி சங்கம், சோவியத்துக்கு விரோதமாக அமெரிக்காவில் பிரச்சாரம் செய்துவந்தது.

## கம்யூனிசத்திலிருந்து அமெரிக்காவைக் காப்பது

''கம்யூனிச ஆபத்தைத் தடுப்பதற்காக,'' சர்வதேச இயக்கம் ஒன்றைத் தொடங்குவதென்று, 1931-இல், ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. 'நாஷனல் சிவிக் பெடரேஷன்' என்ற ஒரு அமைப்பு அமெரிக்காவில் தோன்றியது. அதன் கர்த்தா ஈஸ்லி.

1933-இல், மற்றொரு அமைப்பு எழுந்தது. அதன் பெயர் சர்வதேசக் கமிட்டியின் அமெரிக்கக் கிளை. கம்யூ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



-னிசத்திலிருந்து உலகைக் காப்பதே அதன் நோக்கம். ஈஸ்லி கமிட்டியின் தலைவன். தலைமை அலுவலகம் பெர்லின் நகரில் இருந்தது. நாஷனல் சிவிக் பெடரேஷன் உறுப்பினரில் பலர், அதிலும் உறுப்பினராயினர்.

'ஜெர்மனியில் கம்யூனிசம்' என்ற நூல், ஆயிரக் கணக்கில் அக்கமிட்டியால், அமெரிக்காலில் வழங்கப் பட்டது. அமெரிக்கா சோவியத் யூனியனை அங்கீகரிக்கும் கருத்துக் கொண்டிருப்பதால், இந்நூலை அமெரிக்கர்கள் படிக்கவேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. ''கம்யூனிசத்தை எதிர்த்து ஜெர்மனி, ஜீவ மரணப் போரில் இறங்கியிருக்கிறது. அமெரிக்காவைப் போன்று ஜெர்மனியிலும் கம்யூனிஸ்டுகள் அழிவு வேலையைச் செய்து வருகிறார்கள்'' என்று அதில் எழுதப்பட்டிருந்தது.

1939-ஆம் ஆண்டுக்குள். எழுநூற்றைம்பதுக்குக் குறை வில்லாத பாசிஸ்டு சங்கங்கள் அமெரிக்காவில் தோன்றின. அமெரிக்காவை கம்யூனிசத்திலிருந்து காப்பாற்றப் போவ தாகப் பறைசாற்றிக்கொண்டு, அமெரிக்க அரசாங்கத்தைக் கவிழ்த்துவிட்டு, பாசிஸ்டு ஆட்சியை அமைத்து, சோவியத் ரஷ்யாவுக்கு விரோதமாக அச்சு நாடுகளுடன் கூட்டுறவு ஏற்படுத்த அவை சதிசெய்தன.

''இந்நாட்டில் இரண்டாவது உள்நாட்டுப் போர் எழுந்தால், அது அமெரிக்க அரசைக் கவிழ்ப்பதற்காக அல்ல; மாஸ்கோவின் கிளை அலுவலகமாக்கும் நோக் குடன் அமெரிக்க அரசைக் கைப்பற்றியிருக்கும் யூத கம்யூனிஸ்டுகளை அகற்றுவதற்காகத்தான்'' என்று, நாஜி வெறியன் வில்லியம் டட்லி பெல்லி 1936- நவம்பர் 18-இல், கூறினான். ''ரஷ்யா மீது ஜெர்மனி தொடுத் திருக்கும் போர், கிறித்துவ மதத்திற்காக நடைபெறும் போர். நாத்திகக் கம்யூனிசம் ரஷ்யாவில் பிறந்து, நாத்திக யூதர்களின் மடியில் வளர்ந்தது என்பதை நாம் அறிவோம்''

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்று, கிறித்துவ மதப் பத்திரிகையான 'சோஷியல் ஜஸ்டிஸ்' (சமூக நீதி) ஜூலை 7, 1941-இல் எழுதியது.

## தனிக் கழுகு

ஹிட்லர் ஐரோப்பாவை அடிமைப்படுத்திய பிறகு, சோவியத் யூனியனைத் தாக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதில், 1940-ஆம் ஆண்டு இறுதியில் முனைந்திருந்தான். அப்பொழுது அமெரிக்காவில் ஒரு புதிய குழந்தை பிறந்தது. அதன் பெயர். ''அமெரிக்க முதல் கமிட்டி.'' பத்திரிகைகள், ரேடியோ, பொதுக்கூட்டங்கள் மூலம், அது சோவியத் ரஷ்யாவுக்கும் பிரிட்டனுக்கும் விரோதமாகப் பிரச்சாரம் செய்தது.

அமெரிக்க இராணுவத்தின் கட்டுப்பாட்டைச் சீர்குலைப்பதற்கான சதியின் ஏஜண்டு என்று, ஜூலை 1942-இல், அமெரிக்க நீதித்துறை அமெரிக்க முதல் கமிட்டியின் மீது தீர்ப்புக் கூறியது.

டோக்கியோ— பெர்லின் பிரச்சாரகர்களின் பிரச்சாரங்களை எதிரொலிப்பதற்காகப் பத்திரிகைகளைப் பயன்படுத்தும் போலி தேச பக்தர்களால், போர் முயற்சிகள் தடைப்படக்கூடாதென்று, ஜனாதிபதி ரூஸ்வெல்ட் எச்சரித்தார்.

இரத்த வெறி பிடித்தக் கொடிய பாசிசத்தையும், உலகப் பிற்போக்குச் சக்திகளையும் மேற்கு ஜனநாயக நாடுகள் எதிர்ப்பதற்கு, ரஷ்யப் புரட்சி ஒரு புதிய தோழனைக் கொடுத்தது. சோவியத் ரஷ்யாதான் அந்தப் புதிய தோழன். அந்தப் புதிய கூட்டாளி கிடைத்தது தற்செயலாக அல்ல; அது வரலாற்றின் நிகழ்ச்சி. கால் நூற்றாண்டுகளாகச் சுதந்திரப் பிரியர்களிடையே நிலவி வந்த பகைமையும், கருத்து வேறுபாடும் நீங்கி அவர்கள் ஒன்றுபட்டதானது, தடுக்க முடியாத நிகழ்ச்சியேயாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


இரண்டாவது உலகப்போரின் பிரசவ வேதனையிலிருந்து ஐக்கிய நாடுகளின் சங்கம் என்ற குழந்தை பிறந்தது. வாழ்க்கைப் போரில், மக்கள் தங்கள் தோழர்கள் யார், பகைவர்கள் யார் என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்கிறார்கள். இரண்டாவது உலகப் போர், பல பொய்களையும் தவறுகளையும் அம்பலப்படுத்தியது.

போர் பல விநோதங்களை மக்களுக்கு எடுத்துக் காட்டியது. பாசிஸ்டுகளின் உதவியால், அதிகாரத்தைக் கைப்பற்ற ஐரோப்பாவிலும், ஆசியாவிலும் ஐந்தாம் படைகள் புற்றீசல் போல் வெளிக்கிளம்பியதைக் கண்டு உலகம் திடுக்கிட்டது. நெடுங்காலமாக, அச்சு நாடுகள் செய்துவந்த சதியை அறியாத மக்கள், அச்சு நாடுகளின் வெற்றியைக் கண்டு வியப்புற்றனர்.

இரண்டாவது உலகப் போரில், சோவியத் ரஷ்யா அதி அற்புதமாக விளங்கியது. அதைச் சூழ்ந்திருந்த திரை திடீரென்று விலகியது. சோவியத் நாடு பிரகாசித்தது. அதன் அமைப்பு, தலைவர்களின் பேராற்றல், பொருளாதார உறுதி, இராணுவ வலிமை, மக்கள் தியாகம் ஆகிய அனைத்தும், உலக மக்களின் உள்ளத்தைக் கவர்ந்தன. உலக முன்னேற்றத்திற்காகவும், ஜனநாயகத்திற்காகவும் போரிட்ட இராணுவங்களில், ஸ்டாலின் தலைமையில் திரண்ட செஞ்சேனை மிக வலிமை பொருந்தியது என்ற பெரிய உண்மையை, இரண்டாவது உலகப் போர் வெளிப்படுத்தியது.

"நாகரிகம் நிலைபெற்றிருப்பதற்கான நம்பிக்கை, வீரம் பொருந்திய செஞ்சேனையைப் பொறுத்திருக்கிறது என்ற உண்மையைத் தற்கால உலக நிலை நமக்கு எடுத்துக் காட்டுகிறது. என்னுடைய வாழ்நாளில், பல போர்களில் ஈடுபட்டிருக்கிறேன். பல போர்களைக் கண்டிருக்கிறேன். ஆனால், இதுவரை தோல்வியுறாமல் வெற்றி மேல் வெற்றி அடைந்து பகைவனுக்குச் சரியான புத்தி புகட்டி, அவனைத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தனது சொந்த நாட்டுக்குத் திரும்பி ஓடும்படி செய்த தீரச் செயலை, நான் அந்தப் போர்களில் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை. உலக வரலாற்றில் இதுவே மிகப்பெரிய இராணுவ வெற்றி'' என்று, செஞ்சேனையின் பெருமையைப் பற்றி 1942 பிப்ரவரி 23–இல், அமெரிக்க சேனாதிபதி டக்ளஸ் மக் ஆர்தர் அமெரிக்க மக்களிடம் தெரிவித்தான்.

உலக மக்கள் இரண்டாவதாக அறிந்த பெரிய உண்மை, சோவியத் யூனியனின் பொருளாதார உறுதி. நெருக்கடியான போர்க்காலத்திலும்கூட, பெருவாரியாகப் பொருள்களை உற்பத்தி செய்து குவித்தார்கள், ரஷ்ய மக்கள்.

''போரில் ரஷ்யா மீளமுடியுமா என்ற நம்பிக்கையில்லாதவனாக நான் ரஷ்யா சென்றேன். அங்கு சென்று பார்த்த பிறகு ஆண், பெண், குழந்தைகள் உள்பட சோவியத் மக்கள் அனைவரும் போரில் ஈடுபட்டிருந்ததைக் கண்டேன். போர்க் கருவி உற்பத்திச் சாலைகளும், ஆலைகளும் மிகத் திறமையாக நடப்பதைப் பார்த்தேன். மக்கள் சோவியத் அரசை மிக ஆர்வத்துடன் ஆதரிப்பதைக் கண்ணுற்றேன். நான் அங்கே போகும்போது ரஷ்யா அமெரிக்காவின் கூட்டாளியாயிருக்கத் தகுதி வாய்ந்ததா? என்று என்னுள்ளே ஒரு கேள்வியை எழுப்பினேன். அங்கே போனபிறகு, அந்தக் கேள்விக்கு விடை கண்டேன். சந்தேகமில்லாமல் தகுதி வாய்ந்தது தான்'' என்று, அமெரிக்கப் போர்க் கருவிகள் உற்பத்திப் போர்டின் துணைத்தலைவனான வில்லியம் பட் அமெரிக்காவில் அறிக்கை விடுத்தான். மூன்றாவது பெரிய உண்மை சோவியத் மக்களின் ஒற்றுமை. எத்தனையோ தேசிய இனங்கள் இருந்தபோதிலும், சோவியத் மக்கள் தங்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


அரசைப் பாதுகாக்க ஒன்றுபட்டு நின்றதானது சரித்திரம் கண்டறியாத விந்தை.

''ஹிட்லர் ரஷ்யாவுக்குச் செய்ததைப் போன்ற தீங்குகளையும் நட்டங்களையும் சமாளித்து, வேறெந்த அரசும் உயிருடன் இருந்திருக்க முடியாது; இருந்ததுமில்லை. அதுமட்டுமல்ல; ஜெர்மன் இராணுவ அரக்கனுக்கு, ரஷ்யா இழைத்த தீங்கைப் போல் வேறு எந்த நாடும் செய்ததில்லை'' என்று, 1943 ஆகஸ்டு 31-இல் பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சில் சோவியத் யூனியனுக்குப் புகழ்மாலை சூட்டினார்.

நான்காவது பெரிய உண்மை, சோவியத் ரஷ்யாவுக்கும், மேற்கு ஜனநாயக நாடுகளுக்கும் ஏற்பட்ட கூட்டுறவு. அது உலக சமாதானத்திற்கு ஒரு புதிய பாதையை அமைத்தது.

''ஜனநாயக நாடுகளுக்கு இருவழிகள் தான் உண்டு. ஒன்று புது உலகை அமைக்கும் புனிதப் பணியில் ரஷ்யாவுடன் கூட்டுறவு கொள்வது. நம்முடைய கொள்கைகளில் நமக்கு நம்பிக்கை இருக்குமானால், நடைமுறைக்கு நல்ல வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. மற்றொன்று, ஐரோப்பியப் பிற்போக்காளரோடும், ஜனநாயக விரோதிகளோடும், தொடர்பு கொள்வது. இரண்டாவது வழியால் விளையும் பலன் ஒன்றே ஒன்றுதான். சோவியத் ரஷ்யாவைத் தனித்து நிற்கச் செய்வது'' என்று நியூயார்க் ஹெரால்டு டிரிபூன் 1943 பிப்ரவரி 11இல் எழுதியது.

''ரஷ்யாவின் வருங்காலத்திலும், உலகம் முழுமைக்கும் அதனால் ஏற்படவிருக்கும் நலன்களிலும், மிகுந்த நம்பிக்கையுடன் சோவியத் ரஷ்யாவிலிருந்து திரும்பி வருகிறேன். எனக்குத் தெரிந்தவரையில், நமது வெற்றிக்குப் பிறகு ஒருவரையொருவர் சந்தேகிப்பதைத் தவிர நாம் வேறெவ்விதத்திலும் பயப்படுவதற்கு ஆதாரமே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இல்லை. சமாதானத்திற்காகவும், மக்களின் வாழ்க்கையை உயர்த்துவதற்காகவும் நாம் நேச நாடுகளுடன் சேர்ந்து வேலை செய்தால், நாம் இதுவரை கண்டறியாத நல் வாழ்வை நோக்கிச் செல்வோம்'' என்று, அமெரிக்கப் போர்க்கருவி உற்பத்தி இலாகாத் தலைவன் டோனால்டு நெல்சன், சோவியத் ரஷ்யாவிலிருந்து அமெரிக்கா திரும்பியதும் ஒரு அறிக்கை விடுத்தான்.

இருபத்தைந்து ஆண்டுகளாக, ஜனநாயகத்திற்கும் சோவியத் ரஷ்யாவுக்கும் விரோதமாக நடைபெற்ற இரகசிய சதிகளுக்கும் எதிர்ப் புரட்சி சூழ்ச்சிகளுக்கும் கொலைகளுக்கும் பகைமைக்கும், மனித வர்க்கத்தை அடிமைப்படுத்த அச்சு நாடுகள் தொடுத்த உலகப் போருக்கும், சரித்திரப் புகழ்பெற்ற டெகரான் மகாநாடு சரியான பதில் கொடுத்தது.

அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட், பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சில், சோவியத் யூனியனின் தலைவர் ஜோசப் ஸ்டாலின் ஆகிய மூன்று தலைவர்களும் முதல் தடவையாக டெகரானில் சந்தித்துப் பேசி, மூன்று வல்லரசுகளின் 'பிரகடனம்' ஒன்றை வெளியிட்டார்கள்.

அந்த அறிவிப்பின்படி மூன்று வல்லரசுகளும் ஒன்றுபட்டு, நாஜிசத்தை ஒழித்துக் கட்டுவதென்றும், போரில் பாழ்பட்ட உலகில் நிரந்தர சமாதானத்தை நிலைநாட்டுவதென்றும் உறுதியளிக்கப்பட்டது. அதே மூன்று தலைவர்களும் யால்டா எனும் இடத்தில் பிப்ரவரி 1945இல் கூடி, நாஜி ஜெர்மனியைத் தோற்கடிப்பதற்கான திட்டங்களை வகுத்தனர்.

1945 ஏப்ரல் 12இல் சான்பிரான்சிஸ்கோ நகரில் மகாநாடொன்று நடைபெற்றது. அதற்கு முன்னர் ஜனநாயகத் தலைவர் ரூஸ்வெல்ட் இறந்துபோனதால், ஜனாதிபதி ட்ரூமன் மாநாட்டில் கலந்துகொண்டார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


அவர் அச்சு நாடுகளின் ஆக்கிரமிப்புப் போரை முறியடித்து, ரூஸ்வெல்ட் விரும்பியபடி பிரிட்டன், சோவியத் ரஷ்யாவுடன் ஒன்றுசேர்ந்து, சமாதானத்தை உலகில் நிலைநாட்டுவதென்றும் உறுதி கூறினார்.

மே 8, 1945இல், நாஜி ஜெர்மனி சரணடைந்தது. ஐரோப்பாவில் போர் முடிவுற்றது. "செஞ்சேனையின் அரும்பெரும் செயல்களை நேரில் கண்ட நாம், அதற்கு என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருப்பதைப் போல், வருங்கால சந்ததியாரும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றனர்" என்று சர்ச்சில் ஸ்டாலினுக்குச் செய்தி அனுப்பினார்.

நான்கு ஆண்டுகளாக, நாஜி ஜெர்மனிக்கும் சோவியத் ரஷ்யாவுக்கும் நடந்த பயங்கரப் போரைப் போல், சரித்திரம் என்றும் கண்டதில்லை. சரித்திரப் புகழ்பெற்ற போர் 1945, மே 2இல் முடிவுற்றது. அன்று, செஞ்சேனை நாஜிக் கோட்டையின் இதயமான பெர்லினைக் கைப்பற்றிச் செங்கொடியை அதன் மீது பறக்கவிட்டது.

விடுதலைக் கொடிகள் ஐரோப்பாவெங்கும் பட்டொளி வீசிப் பறந்தன.

★

## அத்தியாயம் 20

## போரா? சமாதானமா?

இரண்டாவது உலகப் போர், மனித வர்க்கத்திற்கு விளைவித்த இன்னல்கள் அளவு கடந்தன. இரண்டு கோடி மக்கள் போரில் இறந்தனர். கோடிக்கணக்கான ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் பசியாலும் நோயாலும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நாஜி சிறைக்கூட்டங்களிலும் உயிர் நீத்தார்கள். லட்சக் கணக்கான மக்கள் வீடுவாசல்களை இழந்து நாடோடிகளாயினர். அழகுத் தேவைகளின் உறைவிட மாகத் திகழ்ந்த பட்டணங்கள் பல பாழ்பட்டன. பல நூற்றாண்டுகளாக, சிறப்புற்றோங்கிய கலைக் களஞ்சி யங்கள் எரிந்து சாம்பராயின. செல்வம் கொழிக்கும் பண்ணைகள் பாலைவனங்களாகின. போர் முடிவில், பஞ்சமும் பிணியும் துன்பமும் வறுமையும் தலைவிரித் தாடின.

1917-ஆம் ஆண்டில் எழுந்த ரஷ்யப் புரட்சிக்குப்பின், பிற்போக்குச் சக்திகள் சோவியத் ரஷ்யாமீது கொண்ட பகைமையும், பொய்ப் பிரச்சாரமும், இரகசியச் சதிகளுமே இத்தகைய மாபெரும் இன்னல்களுக்கும், மனித அழி வுக்கும் வித்துக்களாக இருந்தன. அம் மாபெரும் சதி சோவியத் மக்களை மட்டும் எதிர்த்துச் செய்யப்பட்டதல்ல; அது உலக மக்களின் ஜனநாயக ஆர்வங்களுக்கு விரோத மாக நடைபெற்றதாகும். அந்தச் சதி, இரத்த வெறி பிடித்த கொடிய பாசிசத்தைப் பாலூட்டித் தாலாட்டி வளர்த்தது. மனித வர்க்கத்தின் விரோதியான அந்த பாசிசம், இரண்டாவது உலகப் போரையே உண்டாக் கிற்று.

நிரந்தரமான உலக சமாதானமும் உலகப் பாதுகாப்பும் சோவியத் யூனியன், பிரிட்டன், அமெரிக்கா ஆகிய வல்லரசு களின் கூட்டுறவைப் பொறுத்திருக்கிறதென்பதை நாம் இரண்டாவது உலகப் போரிலிருந்து கற்றுக் கொண்டோம். எனினும், போர் முடிந்ததும் சோவியத் எதிர்ப்புப் புயல் திடீரென்று கிளம்பி, சமாதானத்தின் அடிப்படையையே அசைக்கத் தொடங்கியது.

முதல் உலகப் போருக்குப் பின் நடந்ததைப் போன்று, மறுபடியும் ஐரோப்பிய மக்களும், காலனி நாடுகளில் உள்ள மக்களும், தங்கள் தங்கள் உரிமைகளுக்காகவும், விடுதலைக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


காகவும் கிளர்ந்தெழுந்தார்கள். மீண்டும் சர்வ தேசப் பிற்போக்குச் சக்திகளும், ஏகாதிபத்தியமும், தங்களுடைய நலன்களைப் பாதுகாப்பதற்காகவும், மக்களின் எழுச்சிகளை அடக்கி ஒடுக்குவதற்காகவும் ஒன்றுபட்டன. மறுபடியும் ''போல்ஷ்விக் ரஷ்யாவுக்கு'' விரோதமான போர் முழக்கங்களை அவை ஒலிக்கத் தொடங்கிவிட்டன.

இரண்டாவது உலகப்போர் முடிந்து ஆறு மாதங்கள் ஆவதற்குள், சர்ச்சில் மீண்டும் சோவியத் எதிர்ப்பில் முனைந்துவிட்டார். இங்கிலாந்தில் அவருடைய டோரிக் கட்சி படுதோல்வியுற்றபின், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பிடிப்பிலுள்ள நாடுகள் விடுதலைக் கிளர்ச்சியைத் தொடங்கினதும், ''போல்ஷ்விசத்தின் ஆபத்து'' என்று சர்ச்சில் திரும்பவும் கூச்சலிட ஆரம்பித்தார். ரஷ்யக் கம்யூனிசத்தினால் கிறிஸ்த்துவ நாகரிகத்திற்கு ஆபத்து; எனவே, சோவியத்துக்கு எதிராக பிரிட்டிஷ் அமெரிக்கக் கூட்டுறவு வெகு அவசியம் என்று, சர்ச்சில் 1946 மார்ச்சு 5-இல் அமெரிக்க மக்களுக்குப் போதித்தார். பிரிட்டனிலும், அமெரிக்காவிலும் சோவியத் எதிர்ப்புப் பிரச்சாரம் மீண்டும் தொடங்கியது. மூன்றாவது உலகப் போர் வெடித்துவிடுமோ என்ற அச்சம் மக்களின் உள்ளத்தில் புகுந்தது.

1946 மார்ச் 20-இல், அமெரிக்க செனட் அங்கத்தினர் கிளாட் பெப்பர், மற்றொரு போரினால் விளையும் ஆபத்தைக் குறித்து எச்சரித்தார். போர் பற்றி சோவியத் யூனியன் அஞ்சுவதற்குக் காரணம் உண்டு.

அவர் சொன்னதாவது :

''அணுகுண்டு கிடைக்கப் பெறாமையினாலும், நல்ல துறைமுக வசதி இல்லாமையினாலும், அமெரிக்காவுக்கும் தனக்கும் இடையே வர்த்தக உறவைப்பற்றிய பேச்சு வார்த்தைகூட நிகழாததாலும், முதலாளிக் கூட்டங்களும் பிற்போக்காளர்களும், 'ரஷ்ய ஜுரம்' கண்டவர்களும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நிறைந்திருக்கும் நாடுகள், தன் வாழ்க்கைத் தத்துவத்தை ஏற்றுக்கொள்ளாதென்று நினைத்து, ரஷ்யா பலவகையிலும் பயப்படுகிறது.

''போர் என்ன என்பது ரஷ்யாவுக்குத் தெரியும். எனவே, அதன் பயம் வெறும் கற்பனை அல்ல. அது துன்பக்கேணியிலிருந்து இப்பொழுதுதான் வெளிவந்திருக்கிறது. மிருகத்தனமான பாசிச அரக்கர்களை எதிர்த்துத் தாக்கி, அவர்களை முறியடித்த அறப்போரில், அது கோடிக்கணக்கான மக்களையும், ஏராளமான செல்வங்களையும் பறிகொடுத்திருக்கிறது. அதன் உயிர்ச்சேதம், நம் தேசத்தைவிட 50 மடங்கு அதிகம். கடந்த கால நிகழ்ச்சிகளை ரஷ்யா மறந்துவிடாமல் நினைவில் இறுத்தியிருப்பதினால், அதன் பயம் அதிகரித்திருக்கிறது. 1919-இல் பிரிட்டன், பிரான்ஸ், சீனா, அமெரிக்கா, ஜெர்மனி, ஜப்பான் உள்பட பதினைந்து நாடுகள், இளம் சோவியத் யூனியனைத் தாக்கின. அந்தக் கொடிய துரோகத்தை ரஷ்யா எப்படி மறக்க முடியும்?

''பிற நாடுகளின் இராணுவங்கள் சோவியத் மண்ணிலிருந்து விரட்டி அடிக்கப்பட்ட பிறகும், முதலாளித்துவ நாடுகள் ரஷ்யாவுக்கு விரோதமாகச் செய்த பிரச்சாரங்களையும், இரகசியச் சதிகளையும், நெடுங்காலப் பகைமையையும் அது மறந்துவிட முடியுமா? சோவியத் விரோதி ஹிட்லர் எப்படி வளர்க்கப்பட்டான்; ஹிட்லர் சோவியத்தைத் தாக்குவான் என்பதை எப்படி உலக வல்லரசுகள் நம்பின என்ற விசயத்தைச் சோவியத் யூனியன் மறந்துவிடவில்லை. மூன்றாவது அகில எதிர்ப்பு உடன்படிக்கையின் பெயரால், எப்படி ஜெர்மன், ஜப்பான், இத்தாலி அச்சு, சோவியத் ரஷ்யாவை அழிக்கச் சதி செய்தது என்பதையும், அந்த அச்சு நாடுகளின் ஆக்கிரமிப்புக் கொள்கையை வலிமையுள்ள எந்த நாடும் எதிர்க்கவில்லை என்பதையும், சோவியத் யூனியன் மறந்து விடவில்லை.''

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ரஷ்யாவுக்கு எதிராக சர்ச்சில் விரும்பும் ஆங்கிலோ அமெரிக்கக் கூட்டுறவிலுள்ள பேராபத்தைப்பற்றி பெப்பர் வற்புறுத்தியதாவது:

"இந்த அச்சத்தின் நெருக்கடியிலிருந்து மீள்வதற்குரிய வழி யாது? ஐக்ய நாட்டு அமைப்பும் சமாதானமும் நிலைப்பதெப்படி? அந்த அமைப்பு தோன்றக் காரணமாயிருந்த ரூஸ்வெல்டின் வழியைப் பின்பற்றி பிரிட்டன், ரஷ்யா, அமெரிக்கா ஆகிய மூன்று வல்லரசுகளும் மீண்டும் ஒற்றுமைப்படுவது தான் நெருக்கடியைத் தீர்ப்பதற்குரிய நேர்பாதையாகும்.

அமெரிக்க அன்னியநாட்டுக் கொள்கைகளை உருவாக்கும் பொறுப்புள்ள அரசியல் வாதிகளின் காதில், செனெட்டரின் வார்த்தைகள் ஏறவில்லை. சோவியத் எதிர்ப்புப் பிரச்சாரம் குறைவதற்குப் பதிலாக அதிகமாயிற்று.

1947 தொடக்கத்தில், ஐக்ய நாடுகளின் சங்கத்தின் முதலாவது கூட்டம் நடந்த இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, குறிப்பிடத் தகுந்த அமெரிக்கர்களில் சிலர், சோவியத் மீது உடனடியாகப் போர் தொடுக்கவேண்டும் என்று கூச்சலிட்டார்கள்.

1948 மார்ச் 24-இல், அமெரிக்காவுக்கு விரோதமாகச் செயலாற்றுபவர்களைக் கண்காணிப்பதற்கான கமிட்டியில் எர்லி பேசினார். அவர் பென்சில்வேனியா கவர்னராக இருந்தவர். அவர் குறிப்பிட்டதாவது:

"அணுசக்தியைக் கட்டுப்படுத்துவது குறித்து, அமெரிக்கா சொற்படி சோவியத் கேட்கவில்லையானால், சோவியத் யூனியன் மீது அணுகுண்டுகளைப் பொழிய வேண்டியதுதான்."

"உடனடியாகவா?" என்று பார்னல் தாமஸ் கேட்டார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''உடனடியாகத்தான்'' என்றார் எர்லி.

ஹிட்லரின் பிதற்றல்களுக்குப் பின்னால், 1947 தொடக்கத்தில்தான், சோவியத் ரஷ்யாவைப் பயமுறுத்தும் சொற்கள் அமெரிக்காவிலிருந்து கிளம்பின. அந்தத் திமிர் பிடித்த சொற்கள் உலக மக்களின் சிந்தனைகளைக் கிளறின.

## பகைமைப் போக்கு

போர் முடிந்ததும் உலகில் சமாதானமும், பாது காப்பும் என்றென்றும் நிலைபெறுவதற்கான சர்வதேச ஸ்தாபனம் ஒன்றை 1945 பிப்ரவரியில், பிரிட்டன், அமெரிக்கா, சோவியத் யூனியன் ஆகிய மூன்று வல்லரசு களும் கிரிமியா மகாநாட்டில் தோற்றுவித்தன. அது சரியாக நடைபெற வேண்டுமானால், அம்மூன்று வல்லரசு களிடையிலும் சமாதானத்தை விரும்பும் மற்ற நாடு களிடையிலும் என்றென்றும் கூட்டுறவு நிலைபெற்றிருக்க வேண்டும் என்பதை ரூஸ்வெல்ட், ஸ்டாலின், சர்ச்சில் ஆகிய மூன்று தலைவர்களும் ஏற்றுக்கொண்டார்கள். நேச நாடுகளுக்கிடையே ஒற்றுமைக் குறைவு ஏற்பட்டு விடக்கூடாதென்று, ரூஸ்வெல்ட் அடிக்கடி எச்சரித்தார். அவர் இறந்தபிறகு, ஜனாதிபதி ட்ரூமன் ரூஸ்வெல்டின் எச்சரிக்கையை எதிரொலித்தார்.

''உலகிலுள்ள பிற்போக்குச் சக்திகள் நேச நாடுகளின் ஒற்றுமையைக் குலைக்க முயற்சிக்கும். அச்சு நாடுகளின் இராணுவ இயந்திரம் ஐரோப்பாவில் நொறுக்கப்பட்ட போதும், அவை நம்மைப் பிளவு செய்ய முயற்சித்தன. ஆனால், அவை தோல்வியுற்றன. அவை மறுபடியும் முயற்சி செய்யும். அவை இப்பொழுதுகூட முயற்சி செய்து கொண்டுதான் இருக்கின்றன. நம்மைப் பிளவுபடுத்தி வெற்றி பெறுவதே அவற்றின் திட்டம். ஒரு நேச நாடு மற்றொன்றைச் சந்தேகித்து— பகைத்து, ஒதுக்கிவிடும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



படியாக அவை இன்னும் முயற்சிக்கின்றன. உங்கள் ஒவ்வொருவர் சார்பாகவும் நான் பேசுகிறேன். நேச நாடுகள் ஒற்றுமையுடன் இருக்கும். அவற்றைப் பிளவு படுத்த முடியாது......'' என்று ஜனாதிபதி ட்ருமன், ஐக்கிய நாடுகளின் சான்பிரான்சிஸ்கோ மகாநாட்டில் ஜூன் 26, 1945–இல் பேசினார்.

ஜனாதிபதி ட்ருமன் பேசிக்கொண்டிருக்கும்பொழுதே அவருடைய நிர்வாகம் ஐக்கிய நாடுகளிடையே பிளவு ஏற்படும்படியான வழியைப் பின்பற்றியது.

சான்பிரான்சிஸ்கோ மகாநாட்டிலேயே நேச நாடு களுக்குள் கருத்து வேறுபாடு தோன்றியது.

அர்ஜெண்டைனா, ஐக்கிய நாடுகளின் சங்கத்தில் அங்கம் வகிக்கலாமா கூடாதா என்ற கேள்வி எழுந்த போது, பிரிட்டிஷ் அமெரிக்கப் பிரதிநிதிகள் அர்ஜெண் டைனாவை ஆதரித்தார்கள். சோவியத் பிரதிநிதி மாலட் டோவ் எதிர்த்தார். ஆங்கிலோ அமெரிக்கப் புதிய கூட்டுறவின் ஆதரவால், அர்ஜெண்டைனா ஐக்கிய நாடு களின் சங்கத்தில் அங்கம் வகித்தது. ஒன்பது மாதங்கள் கழிந்ததும் 1946 பிப்ரவரியில், அமெரிக்க சர்க்கார் அறிக்கையொன்று வெளியிட்டது. அர்ஜெண்டைனா சர்க்காரின் நாஜி, பாசிசத் தன்மையும், போரில் எதிரி களுடன் ஒத்துழைத்ததும், நாஜி ஜெர்மனியின் உதவியால் பாசிச ஆட்சியை அமைக்க அந்த சர்க்கார் முயற்சித்தது மான துரோகச் செயல்கள், அவ்வறிக்கையின் மூலம் அம்பலப்படுத்தப்பட்டன.

அமெரிக்காவும், பிரிட்டனும் அர்ஜெண்டைனாவை ஆதரித்தது, உலகிலிருந்து பாசிசத்தை வேரோடு களைந் தெறிவது என்ற அடிப்படைக் கொள்கைக்கு முற்றிலும் மாறுபட்டதாகும். உண்மையில் அந்நாடுகள் ஒரு பாசிச அரசுக்காக வக்காலத்து வாங்கிக் கொண்டன. இவ்வாறாக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆங்கிலோ அமெரிக்க அரசுகளின் புதிய அரசியல் கொள்கை முதலில் வெளியாயிற்று. அது ரஷ்ய உறவை அறுத்துக் கொள்ளும் கொள்கையே. சில மாதங்களில் அக்கொள்கை மேலும் வலுவுற்றது.

'பாட்ஸ்டாம்', 'யால்டா' மகாநாடுகளின் ஒப்பந்தப்படி ஜெர்மன் இராணுவத்தைக் கலைத்துவிடவேண்டும்; போருக்குக் காரணமாயிருந்த பாசிச ஜெர்மானியர்களைத் தண்டிக்க வேண்டும்; போர்க் கருவிகள் உற்பத்தி செய்யப்படும் ஜெர்மன் இயந்திர சாலைகளை மூடிவிட வேண்டும், நாஜிசத்தைப் பூண்டோடு ஒழித்துவிட வேண்டும்.

ஆனால் இந்த முக்கியத் தீர்மானங்கள் ஜெர்மனியின் பிரிட்டிஷ் அமெரிக்கப் பகுதிகளில் நிறைவேற்றப் படவில்லை.

நாஜி ஜெர்மனி சரணடைந்த பிறகும் சுமார் ஐந்து லட்சம் போர் வீரர்கள் அடங்கிய ஜெர்மன் படை ஜெர்மனியின் பிரிட்டிஷ் பகுதியில் இருந்தது. அமெரிக்கப் பகுதியிலும் ஆயிரக்கணக்கான பாசிச வெறியர்களை அமெரிக்க இராணுவம் படை திரட்டியது. நாஜி ஜெர்மனியின் 'கார்ட்டெல்' இயந்திரம் (மாபெரும் தொழில் முதலாளிகளின் தொழிற் குழு), கலைக்கப்படாமல் சீர் திருத்தப்பட்டது.

அமெரிக்காவின் போக்கைக் கண்டித்து, அமெரிக்க நிதிச் செயலாளராயிருந்த ஹென்ரி மார்கன் தா, 1946 மே, 1-ல், ரேடியோவில் பேசியதாவது :

''ஜெர்மனியின் போர் வெறியை அடக்க முயற்சி எதுவும் செய்யப்படவில்லை. கியூபெக், யால்டா, பாட்ஸ்டாம் மகாநாடுகளில் நிறைவேறிய நேச நாடுகளின் ஒப்பந்தங்களைப் பேர்ன்ஸ் நிராகரிக்கப் போகிறாரா என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை, பாட்ஸ்-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



டாம் உடன்படிக்கையைக் கசக்கி எறிவதுதான் பேர்ன்ஸின் நோக்கமாயிருந்தால், வெர்செயில்சில் நாம் செய்த தவறுகளையே திரும்பவும் செய்து, மூன்றாவது உலகப் போருக்கு அடித்தளமிடுகிறோம் என்று நான் எச்சரிக்கிறேன்.''

1946 செப்டம்பர் 6-ல், அமெரிக்க அரசாங்க செயலாளர் ஜேம்ஸ் பேர்ன்ஸ் ஜெர்மனி சம்பந்தமான புதிய திட்டத்தை விளக்கிப் பேசினார். அதைக்கேட்ட ஜெர்மன் முதலாளிகள் அமெரிக்காவும், பிரிட்டனும் மேற்கு ஜெர்மனியை ரஷ்யாவுக்கு விரோதமாகத் தயார் செய்கின்றன என்று மகிழ்ச்சியடைந்தார்கள். பேர்ன்ஸின் பேச்சு, 'யால்டா, பாட்ஸ்டாம் ஒப்பந்தங்களை அடக்கம் செய்த இடத்தின் மீது எழுப்பப்பெற்ற கல்லறை' என்று, பிராங்கோ ஸ்பெயின் புகழ்ந்தது.

1947 ஜனவரியில் பெர்ன்ஸுக்குப் பதில் அமெரிக்க அரசாங்கச் செயலாளராக பதவி ஏற்ற ஜார்ஜ் மார்ஷலும் அதே கொள்கையைத்தான் கையாண்டார். அவருடைய உதவிக் காரியதரிசி டீன் அக்கீசன் பேசியதாவது :

''ஐரோப்பா, ஆசியா ஆகியவற்றின் தொழிற் சாலைகளான ஜெர்மனியையும், ஜப்பானையும் நாம் மறுநிர்மாணம் செய்ய வேண்டும். இவ்விரண்டு கண்டங் களின் இறுதி வெற்றி இதைப் பொருத்திருக்கிறது...''

தூரக் கிழக்கில் அமெரிக்கா, இராணுவ வெறியர்களை யும் பிற்போக்காளர்களையும் தழுவியது. அது சீன கோமிண்டாங் சர்க்காரின் 7,00,000 துருப்புகளுக்குப் பயிற்சியும், போர்க் கருவிகளும் தந்தது. 1947 வரை அது சியாங்-கே-ஷேக்'குக்கு 400 கோடி டாலர் பெறுமான உதவி அளித்தது.

பிராங்டெய்லர் சீனா சென்று திரும்பியதும், 'நாம் சீனாவை அடுத்த போரின் ஸ்பெயினாக மாற்றிக் கொண் டிருக்கிறோம்' என்று எச்சரித்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இரண்டாவது உலகப் போருக்குப்பின் சீனாவில் என்ன நடந்ததோ அதேமாதிரி, ஜப்பானிடமிருந்து விடுவிக்கப்பட்ட பசிபிக் தீவுகளிலும் நடந்தது. கிழக்கிந்தியத் தீவுகளில் பிரிட்டிஷ், டச்சுத் துருப்புகள், அமெரிக்கப் போர்க் கருவிகளால் இந்தோனேஷிய விடுதலை இயக்கத்தை மிருகத்தனமாக நசுக்கின. பிலிப்பைன்ஸ் தீவில், டோக்கியோவின் பொம்மை அரசில் அங்கம் வகித்த மனுவேல் ரொக்சாஸ், அமெரிக்க ஆதரவினால் தலைவனாகி, சேனாதிபதி 'டக்ளஸ் மக் ஆர்தர்' அவனிடம் ஒப்படைத்த போர்ச் சாதனங்களால் அந்நாட்டுப் பாசிச எதிர்ப்பு இயக்கத்தை முறியடிக்க முனைந்தான். தென் கொரியாவில் அமெரிக்க இராணுவ அரசாங்கம், ஜப்பானியரோடு ஒத்துழைத்த கொரிய மக்களின் விரோதிகளை, முக்கியமான பதவிகளில் அமர்த்தியது. தொழிற்சங்கவாதிகள் — முற்போக்காளர்கள் ஆகியோருக்கு எதிராகக் கடுமையான அடக்குமுறை கையாளப்பட்டது. ரஷ்யாவுக்கு எதிரான கொள்கையால், ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் உள்ள பிற்போக்குச் சக்திகளுக்கும், பாசிசத்திற்கும் அமெரிக்க உதவி மிகுதியாகக் கிடைத்தது. அதே காலத்தில் மக்களின் விடுதலை இயக்கங்களின் மீது, அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் பகைமை அதிகமாகியது.

## ட்ரூமன் கொள்கை

1947 மார்ச் 12-இல், அமெரிக்காவின் சோவியத் எதிர்ப்புக் கொள்கை உச்ச நிலையை அடைந்தது. துருக்கிக்கும் கிரேக்க அரசாங்கத்திற்கும் 400,000,000 டாலர்களைக் கடனாகக் கொடுக்கும் கோரிக்கையை, ட்ரூமன் காங்கிரஸ் முன் வைத்தார். ஐரோப்பாவில் போல்ஷ்விசம் பரவாமல் தடுப்பதற்காக என்ற உண்மையை அவர் சொல்லவில்லை. எனினும், அவர் பேச்சு அதைத் தெளிவாக்கியது.

www.tamilarangam.net



''ட்ரூமன் கோரிக்கை, சோவியத் ரஷ்யாவை வெளிப் படையாகப் போருக்கு அழைப்பதாகும்'' என்று, 'சிகாகோ டெயிலி நியூஸ்' குறிப்பிட்டது.

அமெரிக்க உபதலைவராயிருந்த ஹென்ரி வாலஸ், மார்ச் 13 இல், ரேடியோ மூலம் ட்ரூமன் கோரிக்கைக்குப் பதிலளித்தார் :

''நம்மை எதிர்நோக்கி நிற்பது கிரேக்க நெருக்கடி அல்ல, அமெரிக்க நெருக்கடிதான். உலக மக்களுக்கு உதவி செய்வது நமது நோக்கமாயின், நேச நாடுகளின் நிவாரண வேலையையும் மறுநிர்மான நிர்வாகத்தையும் மடிய விடுவானேன்? ஐரோப்பாவில் வீடின்றித் தவிக்கும் லட்சக்கணக்கான மக்களுக்கு உதவி செய்யாதிருப்பானேன்?

''ஜனநாயகமில்லாத துருக்கிக்கும் கிரேக்க நாட்டுக்கும் உதவி செய்வது எப்படி உலக விடுதலைக்கு உதவி செய்வ தாகும்? முதலாவது உலகப் போரில் துருக்கி நமது விரோதி. இரண்டாவது உலகப் போரில் அது நேச நாடு களுக்கு உதவ மறுத்தது. ஜெர்மனியாலும் நேச நாடு களாலும் அது கொழுத்தது. அதன் நடுநிலைமைக் கொள் கையால், போர் சில மாதங்கள் நீடித்தது.

''கிழக்கும் மேற்கும் மோதுகிறது என்று ட்ரூமன் சொல்லும்போது, சோவியத் ரஷ்யாவுக்கு எதிராகப் போரிட நாம் எத்தனிக்கிறோம் என்றுதான் சொல்லு கிறார். ஒருவரும் போரை விரும்பவில்லை. நாம் சமாதானப் பாதையிலிருந்து விலகினால்தான் போர் வரும். ரூஸ்வெல்ட் நேர் பாதையில் சென்றார். செழிப்பும் அமைதியும் வரும் காலத்தில் இருக்குமென்று அவர் நம்பினார். ஆனால் ட்ரூமன் பேச்சு அதற்கு மாறானதாக இருக்கிறது. நாம் எதிர்பார்க்க வேண்டியது பஞ்சமும் போரும் என்று அவர் சொல்கிறார்.''

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


ஆயினும், இத்தகைய எதிர்ப்புகளுக்கிடையே ட்ரூமனின் கோரிக்கை இறுதியாக காங்கிரசால் ஏற்கப்பட்டு, இரு சபைகளிலும் நிறைவேறிற்று.

ட்ரூமனின் புதிய கொள்கையை மிகப் பிற்போக்குவாதியான சர்ச்சில் மனப்பூர்வமாக ஆதரித்தார். தான் ஒரு ஆண்டுக்கு முன் சொன்னதையே ட்ரூமன் உறுதிப்படுத்தியிருக்கிறார் என்று அவர் திருப்தி அடைந்தார். அவர் அப்பொழுது 'லைப்' என்ற அமெரிக்கப் பத்திரிகையில் எழுதியதாவது :

''1944 -45 இல், கிரேக்க விவகாரங்களில் எனது கொள்கை தவறோ என்று நினைத்தேன். ஆனால், இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அமெரிக்கா தன் முழு ஆற்றலோடு கையாளுகிற திட்டத்தையே, நான் அப்பொழுது கையாண்டேன் என்று இப்பொழுது எனக்குத் தெரிந்து விட்டது. இது எனக்கு மிகத் திருப்தி.''

1918 இல், ஏகாதிபத்திய நாடுகள், முக்கியமாக ரஷ்யாவின் மூலப் பொருள்களைக் கொள்ளையடிக்க, அதன் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டுப் போரிட்டன. 1947 இல், மத்திய கிழக்கிலுள்ள அளவற்ற புதை பொருள்களைக் கைப்பற்ற, அவை கம்யூனிசப் பூச்சாண்டி காட்டி, பிற நாடுகளில் எதிர்ப்பு அரண்கள் அமைக்கின்றன.

''பேச்செல்லாம் துருக்கி - கிரீஸைப் பற்றித்தான். ஆனால், அந்தரங்க நோக்கம் சற்று தெற்கிலுள்ள எண்ணெய்'' என்று, துருக்கி - கிரேக்க நாடுகளுக்குக் கடன் கொடுப்பதற்கான ட்ரூமன் கோரிக்கையைப் பற்றி 'டைம்' பத்திரிகை 24—4—1947-ல் எழுதியது.

## அமெரிக்கா எங்கே போகிறது?

வாலஸ், ட்ரூமனின் கொள்கையைக் கண்டித்தார். அது அமெரிக்கப் பத்திரிகைகளில் இருட்டடிப்புச் செய்யப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


பட்டது. உலகில் சமாதானம் நிலவ வேண்டுமானால் அமெரிக்கா, பிரிட்டன், சோவியத் யூனியன் ஆகிய மூன்று நாடுகளிடையே மீண்டும் நேசப்பான்மை ஏற்பட வேண்டும் என்ற ரூஸ்வெல்ட் கொள்கையை, வாலஸ் அடிக்கடி வற்புறுத்தினார்.

வாலஸ், ''தேசத் துரோகி'' என்று அமெரிக்கா பறை சாற்றியது. உப தலைவராயிருந்த வாலஸைக் கைது செய்யவேண்டுமென்று, செனேட் உறுப்பினர்களில் சிலர் கூச்சலிட்டனர்.

1930-இல், ஐரோப்பாவில் நிகழ்ந்ததைப் போல், 1947-இல், அமெரிக்காவில் நடைபெற்றது. ஜனநாயகம் நசுக்கப்பட்டது; பாசிசம் தலைதூக்கியது. அக்கொடிய பாசிசத்திற்கு, கம்யூனிசத்தினின்றும் போல்ஷ்விக் ஆக்கிரமிப்பிலிருந்தும் நாட்டைக் காப்பாற்றப் போவதான முகமூடி அணியப்பட்டது.

அமெரிக்காவில் சோவியத் எதிர்ப்பு நிறுவனங்களில் ஒன்று, அமெரிக்கத் துரோகச் செயல் கமிட்டி. பெயரளவில் பார்னெல் தாமஸ் அதன் தலைவன். உண்மையில் அதை நடத்தினவன் அதன் உறுப்பினர்களில் ஒருவனான ராங்கின். அவன் சோவியத் எதிர்ப்பு வீரன். அவனும் கமிட்டியும் சோவியத் யூனியனைப் பற்றி கண்மூடித் தனமாகப் பிரச்சாரம் செய்தன. ''சோவியத் ஏகாதிபத்தியம் உலக ஆதிக்கத்திற்காகச் சதி செய்கிறது''; ''அமெரிக்காவின் மீது படையெடுக்கச் செஞ்சேனை திட்டங்கள் வகுக்கின்றது'' என்ற குற்றச்சாட்டுகளைக் கமிட்டி சோவியத் யூனியன் மீது சுமத்தியது. சோவியத் ரஷியாவுக்கு விரோதமாக டிராட்ஸ்கியவாதிகளும், மற்றும் கம்யூனிச விரோதிகளும் கமிட்டியின் முன் பொய் சாட்சியம் கூறினர். புல்லிட் என்ற சோவியத் விரோதி, அமெரிக்கக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சட்ட விரோதமாக்க வேண்டுமென்று வற்புறுத்தினார். ராங்கினுடைய நோக்கத்தையும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கருத்தையும் விளக்கிக் காட்ட, அவனுக்கும் புல்லிட்டுக்கு மிடையே நடந்த உரையாடலின் ஒரு பகுதியைக் கீழே காண்க :—

ராங்கின் : ''ரஷ்யாவில் மனித உடல்களைத் தின்றார்கள் என்பது உண்மையா?''

புல்லிட் : ''பெற்றோர்களால் உண்ணப்பட்ட குழந்தையின் எலும்புக்கூடு ஒன்றைப் படத்தில் பார்த்தேன்.''

ராங்கின் : ''ரஷ்யாவில் மக்கள் அடிமைகளைப் போல் நடத்தப்படுகிறார்கள். அப்படித்தானா?''

புல்லிட் : ''இன்று ரஷ்யாவில் இருக்கின்ற அடிமைகளைப் போல், அவ்வளவு அதிகமாக உலகில் இது வரை என்றும்—எங்கும் இருந்ததில்லை.''

ராங்கின் : ''கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினர்களில், அறுபது சதவிகிதம் அன்னியர் என்று நீங்கள் சொன்னீர்கள். அவர்களில் யூதர்கள் எத்தனை சதவிகிதம்? மாஸ்கோவில் புரட்சிக் கலை பயிலும் பொருட்டு, நீக்ரோக்களைத் தெரிந்தெடுக்கக் கம்யூனிஸ்டுகள் தென் பகுதிக்குப் போனது உண்மைதானா? பாலங்களை வெடி வைத்துத் தகர்க்க அவர்கள் நீக்ரோக்களுக்குக் கற்றுக் கொடுப்பது உண்மையா?''

ட்ருமனின் கொள்கையைப் புல்லிட் தனது வாக்கு மூலத்தில் முழுமனத்துடன் ஆதரித்தான்.

''சோவியத் யூனியனில் அணுகுண்டுகள் இருந்தால், அவை இதற்குள் அமெரிக்காவில் போடப்பட்டிருக்கும்; 'உலக ஆதிக்கமே சோவியத் திட்டம்', 'இறுதியாக அமெரிக்காவைத் தாக்குவதே அதன் நோக்கம்', ஸ்டாலின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தானாக நிற்கமாட்டார். அவரைத் தடுத்து நிறுத்த வேண்டும்......'' என்று புல்லிட் சாட்சி சொன்னான்.

''ரஷ்யர்கள் விரைவில் அணுகுண்டு செய்து விடுவார்கள். இன்றிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்குள், பத்து சதவிகித அமெரிக்கர்களாவது உயிருடன் இருக்க முடியுமா என்பது சந்தேகந்தான்'' என்று, பென்சில்வேனியா கவர்னராயிருந்த எர்ல், கமிட்டியின் முன் சாட்சி சொன்னார்.

அமெரிக்கத் துரோக விசாரணைக் கமிட்டி சோவியத் ரஷ்யாவுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்வதோடு, அமெரிக்கக் கம்யூனிஸ்டுகளை அடக்கி ஒடுக்குவதையும் தன் முக்கிய வேலையாகக் கொண்டிருந்தது.

அமெரிக்க மக்கள் போரை விரும்பவில்லை. மூன்றாவது உலகப் போர் தடுக்க முடியாததாகிவிடுமோ என்று, லட்சக்கணக்கான அமெரிக்கர்கள் அச்சமுற்றனர். ''நமது அன்னிய நாட்டுக் கொள்கை சமாதானத்தை நோக்கிச் செல்கிறதா? அல்லது போரை நோக்கிச் செல்லுகிறதா?'' என்று டவுன் ஹால் கூட்டம் ஒன்றில் ரேடியோ மூலம் கேட்ட பொழுது, அமெரிக்கக் கொள்கை போரை நோக்கிப் போகிறது என்று பத்துக்கு ஏழு நபர்கள் பதில் சொன்னார்கள்.

''போர் என்ற வார்த்தையைக் கேட்டதும், மக்கள் நடுங்குகிறார்கள். அணுகுண்டு போர் என்றால் என்ன என்பது மக்களுக்குத் தெரியும். அணுகுண்டு போரில் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் அழிந்துவிடுவார்கள்'' என்று, தலை சிறந்த விஞ்ஞானி ஆல்பெர்ட் ஐன்ஸ்டின் மதிப்பிட்டுக் கூறுகிறார்.

சமாதானத்தை நிலைநாட்டுவது எப்படி? என்ற கேள்வியே ஒவ்வொருவரிடமிருந்தும் எழுகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஏப்ரல் 9, 1947. குடியரசுக் கட்சியின் சார்பாகத் தலைவர் பதவிக்குப் போட்டியிட்ட ஸ்டாசென் என்ற அமெரிக்கர், மாஸ்கோவில் ஸ்டாலினைச் சந்தித்தார். "தற்கால உலகில், இரண்டு வெவ்வேறு பொருளாதார அமைப்புகள் நேசப்பான்மையோடு இருக்க முடியுமா?" என்று, ஸ்டாசென் ஸ்டாலினிடம் கேட்டார்.

"நிச்சயமாக இரு அமைப்புகளும் நேசப் பான்மையுடன் இருக்க முடியும். போரில் ஒற்றுமையுடன் இருக்க முடியுமானால், ஏன் சமாதான காலத்தில் ஒற்றுமையுடன் இருக்க முடியாது" என்று, ஸ்டாலின் பதில் சொன்னார்.

அவர் மேலும் கூறியதாவது: — "கூட்டுறவுக்கு வழி இருந்தால் மட்டும் போதாது, மனமும் வேண்டும். வழி எப்பொழுதும் உண்டு. ஆனால் விருப்பம் எப்பொழுதும் இருக்காது. ஒரு கட்சி கூட்டுறவை விரும்பவில்லையானால், மோதலும்—போரும் உண்டாகும். ரஷ்யா கூட்டுறவை விரும்புகிறது.

"நமது அரசியல் அமைப்புகளைக் குறித்து நாம் ஒருவருக்கொருவர் அவதூறு சொல்லவேண்டிய அவசியமில்லை. அவரவருக்கு விருப்பமுள்ள அமைப்பைப் பின்பற்ற, ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. எந்த அமைப்பு சிறந்ததென்பதை, வரலாறு கூறும். நேசப்பான்மையுடன் இருப்பதற்கு, ஒரே தன்மையான அமைப்புகள் வேண்டுமென்பதில்லை. மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு அமைப்பை, மற்றொரு அமைப்பு மதித்தாக வேண்டும். இந்த அடிப்படையில்தான் நாம் ஒன்றுசேர முடியும். போரில் நாம் நேசப்பான்மையுடன் ஒன்றுபட்டு, விரோதியைத் தோற்கடித்து, வெற்றிக்கொடி நாட்டினோம்."

பிலடெல்பியா குடியரசுத் தலைவனாயிருந்தவனும், பாங்கருமான ஜெய்கூக் என்பவன், ஸ்டாசென் கூடச் சென்றிருந்தான். அவன் பின்னால் கூறியதாவது:—

"ஸ்டாலினைப் பார்த்துக் கொண்டிருந்தேன். வெறுக்கத் தகுந்தவர், ஆபத்தானவர் என்று சொல்லப்படுபவர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்த மனிதனாக இருக்க முடியுமா? என்ற கேள்வி என் உள்ளத்தில் எழுந்தது. அவரை அப்படிக் கருத முடியாது. ஜோசப் ஸ்டாலினும் ரஷ்ய மக்களும், அமெரிக்காவின் நட்பைப்பெற மிக ஆவலுடன் இருக்கிறார்கள் என்ற அபிப்பிராயத்துடன் நான் ரஷ்யாவிலிருந்து திரும்பினேன். உலகில் சமாதானம் நிலவ வேண்டுமென்பதை அவர்கள் ஒப்புக் கொள்கிறார்கள்.''

பொதுவாழ்விலிருந்து ஓய்வுபெற்ற கர்னல் ரெயிமாண்டு ராபின்சை, மைக்கேல் சேயர்ஸ் — அல்பெர்ட் இ.கான் என்ற இரு ஆசிரியர்களும் சந்தித்துப் பேசிய பொழுது, அவன் சொன்னதாவது :

''லெனின் முதலிய ரஷ்யப் புரட்சித் தலைவர்களின் தலைமையில் ரஷ்யத் தொழிலாளிகளும், விவசாயிகளும் திரண்டெழுந்தபொழுது, தொன்றுதொட்டுச் சகித்து வந்த கொடுமைகளிலிருந்து தாங்கள் விடுதலை அடையப் போகிறோம் என்ற நம்பிக்கை அவர்கள் கண்களில் ஒளி வீசியது, எனக்கு இன்னும் நினைவிருக்கிறது. சோவியத் ரஷ்யா எப்பொழுதும் உலக சமாதானத்தை விரும்புகிறது. போர் மூண்டால் தனது அரும் பெரும் ஆக்க வேலைகள் அழிந்து போகாவிட்டாலும், தேங்கி நின்று விடும் என்று ஸ்டாலினுக்குத் தெரியும். ரஷ்ய மக்கள் எப்பொழுதும் சமாதானத்தையே விரும்பினார்கள். கல்வி, பொருள் உற்பத்தி, பரந்த செழிப்புள்ள நாட்டைப் பண்படுத்துவது ஆகிய செயல்களிலேயே அவர்கள் கருத்துக் கொண்டிருந்தார்கள். அன்னிய நாட்டிலாகா மந்திரி லிட்வினோவ், கூட்டுப் பாதுகாப்புக்காக மிகத் திறமையுடன் வேலை செய்து வந்தார். ஹிட்லர், முசோலினி ஆகிய இரு பாசிச அரக்கர்கள் சம்பந்தமாக பிரிட்டனும், பிரான்சும் கையாண்ட கொள்கையினால் கூட்டுப் பாதுகாப்பு அசாத்தியமாகியது.

''சோவியத் ரஷ்யா எந்த நாட்டையும் சுரண்டவில்லை. எதையும் சுரண்ட விரும்பவில்லை. நிறம், மதம், தேசீய இனம், வர்க்கம் ஆகிய பிரிவுகளால் ஏற்படும் பூசல்களை, ஸ்டாலின் கொள்கைகள், சோவியத் பூமியில் இருந்து அறவே ஒழித்துவிட்டன. சோவியத் மக்களின் ஒற்றுமையும், நேசப் பான்மையும் உலக சமாதானத்திற்கு வழி காட்டுகின்றன.''

★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உலகத்திற்கு சமாதானத்தையும் ஜனநாயகத்தையும் போதிக்கின்ற அமெரிக்காவும் பிற ஏகாதிபத்தியங்களும், இளம் சோசலிச சோவியத் யூனியனை ஒழித்துக் கட்ட என்னென்ன அக்கிரமங்களிலும் இழிதகைமை நடவடிக்கைகளிலும் ஈடுபட்டார்கள் என்பதை புட்டு புட்டு வைக்கிறது கிடைத்தற்கரிய இச்சிறிய நூல்.

ஓர் அயோக்கியனின் அகராதியில் உள்ள அனைத்து நடவடிக்கைகளிலும் ஏகாதிபத்திய சதிகாரர்கள் ஈடுபட்டனர்.

O

இரும்புத் திரை நாடு! தீயவர்களின் சாம்ராஜ்யம்! பஞ்சத்தையும் பசியையும் மட்டுமே கம்யூனிசம் வழங்குகிறது! லெனின் ஒரு ஜெர்மன் ஏஜண்டு; சர்வாதிகாரி! மக்கள் மிருகங்களைப் போல பக்குவப்படுத்தப் படுகிறார்கள்! உலகத்திற்கே நாசத்தை விளைவிக்கும் சக்திகள்! இப்படி அடுக்கடுக்கான அவதூறுப் பிரச்சாரங்கள் ஏராளம்! ஏராளம்!

O

ஏகாதிபத்திய ஏஜண்டுகளிடமும் கட்சிக்குள் ஒளிந்திருந்த முதலாளித்துவப் பாதையாளர்களிடமும் இரக்கம் காட்டாததற்குத்தான் ஸ்டாலினை கொடுங்கோலன் என்று ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களது எடுபிடிகளும் சித்தரிக்கிறார்கள். ஆனால் அதற்காக நாம் பெருமைப் படுவோம்.